இனம்

இனம் இனத்தைச் சேரும்

ISSN : 2455 - 0531

Mail Id: inameditor@gmail.com

editor@inamtamil.com

UAN.TN03D0061112

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

International E-Journal of Tamil Studies

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:4 இதழ்:15 நவம்பர் 2018 Vol. 4 Issue : 15 November 2018



த.சத்தியராஜ்

ச.இராமலட்சுமி

ப.கிருஷ்ணமூர்த்தி

சி.சாவித்ரி

சு.பேச்சியம்மாள்

மு.ஜெகதீசன்

கி.சங்கரநாராயணன்

இரா.இராமகுமார்

க.பாலாஜி

தி.நிரஞ்சனி

கி.ஜெகதீசன்

ரா.தக்ஷஷாயினி

ஜீ.பால்ராஜ்

பா.கவிதா

Inam ISSN : 2455 - 0531

UAN.TN03D0061112

இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

An Internationally Refereed e_ Journal of Tamil Studies

பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)

ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

இதழாக்கமும் வெளியீடும்

முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்
09600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

நவம்பர் *2018* **மலர்** : 4 **இதழ்** : 15

November 2018 Volume IV Issue 15

உள்ளே ...

தமிழ்ச் செவ்வியல்

பாண்டிய நாடும் மரபிலக்கண உருவாக்கங்களும்
Pāndiyaā's kingdom vastly introduced cause of authentic grammars
த.சத்தியராஜ் | 4

நற்றிணையில் சமுதாயச் சூழலும் தொழில் மாந்தரும்
Social environment and occupation in Nattrinai
முனைவர் ச.இராமலட்சுமி | 12

மருதனிளநாகனார் பாடல்கள் காட்டும் பண்டைய வழிபாட்டு முறைகள்
Ancient religious rituals and performance through the marutaṉiḷanākaṉ songs
முனைவர் ப.கிருஷ்ணமூர்த்தி | 17

ஒப்பீட்டு நோக்கில் திருக்குறளும் சுமதி சதகமும்
A comparative study of Thirukkural and Sumathisadagam
முனைவர் சி.சாவித்ரி | 23

சங்க இலக்கியத்தில் உரல், உலக்கையின் பயன்பாடு
Mortar and pestle are still employed in parts of Tamil Classical Literature.
முனைவர் சு.பேச்சியம்மாள் | 40

ஐங்குறுநூற்று மருதத்திணைப் பாடல்களில் பரத்தமை ஒழுக்கம் மறுத்தல்
Ainkurunuru Maruthathinai Paadalkalil Parathamai Olukkam Maruthal
முனைவர் மு.ஜெகதீசன் | 49

வினாப் பெயர்கள்: இலக்கணிகளின் பார்வைகளும் பதிவுகளும்
Interrogative Nouns: Grammarian's Perspectives and Observations
முனைவர் கி.சங்கர நாராயணன் | 64

...

தற்கால இலக்கியம்

மனதை மயக்கும் தாலாட்டு
Mind-blowing roller

முனைவர் இரா.இராமகுமார் | 69

வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்

சமூக வரலாற்றுப் பின்புலத்தில் பாண்டிய நாட்டு நீரியல் மேலாண்மை இனக்குழுக்கள் (மள்ளர் - மடையர் - மடைச்சியர்)
SOCIO-HISTORICAL BACK GROUND OF WATER RESOURCE MANAGEMENT TRIBES IN THE LAND OF KING PANDIAS [Mallar-Madaiyar-Madichiyar]

முனைவர் க. பாலாஜி | 75

சமயங்கள் கூறும் விலங்குகளின் தெய்வீகத் தன்மைகளும், மீறப்படும் விதங்களும் - விலங்குரிமை ஒழுக்கவியலை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு
Divine characteristics of the animals, and the breach of the animals - a study based on animal ethics

திரவியராசா நிரஞ்சினி | 86

நீக்கப் பெற்றது.

முனைவர் கி.ஜெகதீசன் | 97

விவேகானந்தரின் ஆளுமை பற்றிய சிந்தனைகள்: ஒரு மெய்யியல் ஆய்வு
The thought of the personality by Viveganandar: A Philosophical Approach

தக்ஷ்ஷாயினி ராஜேந்திரன் | 101

கிராமியக்கலைகளின் மறைவினால் இன்றைய சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள்
In present society to the problems faced by the disappearance village art

ஜீ.பால்ராஜ் | 112

நூல் மதிப்பீடு

தமிழனின் தத்துவம் திருக்குறள் அறம் (பொருளும் விளக்கமும்) பரிமேலழகர் இங்கே திருத்தப்படுகிறார்
Unspecific: The philosophy of Tamil is the Thirukkural Charity (Meaning and explanation) Parimelazhakar is edited here

முனைவர் பா.கவிதா | 120

•••

மதிப்பிடப்பெற்றது

பாண்டிய நாடும் மரபிலக்கண உருவாக்கங்களும்

Pāndiyaā's kingdom vastly introduced cause of authentic grammars

த.சத்தியராஜ்
தமிழ் உதவிப் பேராசிரியர்
இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி (த.)
கோயம்புத்தூர் - 641 028
9600370671, neyakkoo27@gmail.com

Abstract: Cēra, Chōla, Pāndiyaā governance on Tamilnadu in 6000B.C. to fading kingdom governed. This governability priority give importance to classical literature and authentic grammars. Nevertheless Pāndiyaā's kingdom's participated the most. The Pāndiyaā's kingdom vastly introduced cause of authentic grammars. So, this article explain and idendifies the Pāndiyaā's kingdom authentic grammars.

Keywords: Pāndiyaā's kingdom's, authentic grammars, Cēra, Chōla, Pāndiyaā governanc, பாண்டிய அரசு, மரபிலக்கண உருவாக்கம்

தமிழ்நாட்டை ஆண்ட மூன்று பெருவேந்தர்களும் இலக்கிய இலக்கண உருவாக்கத்துக்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர். எனினும், இம்மூவருள் பாண்டிய அரசு மட்டுமே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்துள்ளது. ஏனெனில் இவ்வரசுதான் தமிழ் இலக்கியங்களை உருவாக்குவதற்குச் சங்கம் எனும் அமைப்பை ஏற்படுத்தியிருந்தது. ஆகையால் அவ்வரசும் அந்நாடும் நேரடியாகவும் மறைமுகமாகவும் இலக்கண உருவாக்கத்திற்குக் களம் அமைத்துத் தந்தது எனலாம். அதனடிப்படையில் பாண்டிய நாட்டு மரபிலக்கண உருவாக்கங்களை இக்கட்டுரை அடையாளப்படுத்த முயலுகிறது.

> *"உலகில் உருக்கொள்கின்ற ஒவ்வொரு சிந்தனை மரபிற்கும் குறிப்பிடத்தக்க நோக்கமுண்டு. அறிவு வளர்ச்சியோடு தொடர்புடைய இலக்கண உருவாக்கமும் அத்தகையதே. மொழி, இலக்கியம் கற்க உதவுதல், மொழிச் சிதைவைத் தடுக்க முனைதல், மொழியில் வளர்ந்து வரும் புதிய பரிமாணங்களை ஏற்று மொழிவளர்ச்சிக்குத் துணைநிற்றல் என உலக அளவில் இலக்கண உருவாக்க நோக்கங்கள் பல்வேறு வகையாக அமைகின்றன"* (2004:167).

இந்த உருவாக்க நோக்கம் மரபிலக்கண அமைப்பை உருவாக்க முனைகிறது எனலாம்.

மரபிலக்கண வரிசையில் வருபவற்றை வரையறுப்பது எப்படி? ஏனெனில் இலக்கண உருவாக்கங்கள் செய்யுள் வடிவிலும் உரைநடை வடிவிலும் நிகழ்ந்துள்ளன. குறிப்பாகத் தமிழ் இலக்கண மரபை வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் எழுதிய அறுவகை இலக்கணம் வரையிலும் நீட்டித்துப் பார்க்கலாம் என சு.இராசாராம் கருதுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

> *"மரபின் காலநீட்சியைத் தலைமுறைவழிக் கணிப்பர் சில அறிஞர். ஒரு மரபு குறைந்தது மூன்று தலைமுறைகளாவது நிகழ்வில் இருக்க வேண்டும். இக்கால அளவுக்குக் குறைந்த ஒரு சமூகச் செயற்பாடு குறிப்பிட்ட கால வழக்கமாகக்*

கருதப்படுமே தவிர மரபாகக் கருதப்படாது. இவ்வளவு முறையும் அறிவியல் நோக்கில் மிகத் துல்லியமாக அமைவதாகக் கொள்ள முடியாது. ஏனெனில் ஒரு தலைமுறை எத்தனை ஆண்டுகளைக் கொண்டது என்பதில் இன்னும் கருத்து வேறுபாடு உள்ளது. பெரும்பான்மையோர் கருத்திற்கிணங்க முப்பது ஆண்டுகள் ஒரு தலைமுறை எனும் கணக்கில் மரபின் காலநீட்சியைக் கணக்கிடலாம்.

தமிழ் இலக்கண மரபின் காலநீட்சியை எவ்வாறு வரையறை செய்வது? இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கண ஆய்வு அணுகுமுறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இம்மாற்றங்கள் நம் பழைய இலக்கணங்களை மரபிலக்கணங்கள் என வகைப்படுத்தக் கட்டாயப்படுத்தின. நூற்றாண்டுகளாக ஓர் ஆழமான மொழி சார்ந்து பிந்திய சந்ததியினரின் அந்தந்தக் காலத் தேவைகளுக்கு ஏற்ப மாற்றங்களை உள்வாங்கிப் பகுப்பாய்வும் நூலாக்கமுமாக வளர்ந்து வந்த ஒரு பாரம்பரியத்தின் தொடர்ச்சி என்கிற வகையில் தமிழ் இலக்கணங்களை மரபிலக்கணங்கள் என நாம் அழைத்து வந்தோம். கி.பி. இரண்டாம் நூற்றாண்டு(த்) தொடங்கி இருபதாம் நூற்றாண்டு வரை கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளை இம்மரபின் கால நீட்சியாக நாம் தீர்மானிக்கலாம். தொல்காப்பிய இலக்கண மரபிற்கு முந்திய அகத்திய இலக்கண மரபையும் இக்கால நீட்சிக்கு உட்படுத்துவோமேயானால் இரண்டாயிரம் ஆண்டு(க்) காலநீட்சி அறிவியல் சார்ந்த கணிப்பு எனக் கூறலாம். இம்மரபிலக்கணக் காலநீட்சியில் தொல்காப்பியம் முதலாக வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் எழுதிய அறுவகை இலக்கணம் உட்பட அனைத்து இலக்கணங்களையும் அடக்கலாம் (2010:111-112).

இந்தப் புரிதலின் அடிப்படையிலும்,

- *முன்னூல் கருத்துக்களைச் சுருக்கிக் கூறும் முகத்தானும்*
- *அவ்வக்காலத்து ஆட்சியாளர்/மன்னர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும்*
- *விரிந்த இலக்கண நூல்களை உணராதவர்களுக்குச் சுருங்கக் கூறும் பொருட்டும்*
- *புத்தியால் வலியோரன்றி எளியோரும் உணரத் தொகைவகை விரியால் இயற்றப்படும் நோக்காலும்*
- *முன் இலக்கணங்களை அறிந்து அதில் விரிந்துள்ள கருத்துக்களையும் விதிவிலக்குகளையும் எளிதாய்த் தெரியும் முகத்தானும்*
- *இலக்கணங்களுக்கிடையேயுள்ள கருத்து மாற்றங்களை விளக்கிப் புத்துரை தரும் பொருட்டும்*
- *தமிழ் மொழியை வடமொழி இலக்கணத்துடன் ஒப்பிட்டு வழங்கும் நோக்கிலும்*
- *இலக்கண, இலக்கியங்களிலும் உரைகளிலும் காணப்பெறும் குற்றமற்ற இலக்கண விதிகளைக் கல்வி வல்லார்க்கு ஆக்கக் கூறும் வகையிலும்*
- *ஐந்திலக்கணங்களைக் கல்லாதவரும் கற்றுணரும்படித் தெளிவாய் விளக்கத் துணிந்தவரின் நோக்கமாயும்*

- *விரிவானது என அஞ்சுபவர்கள் கற்றற்கு ஏதுவாகவும் மொழியியல் கோட்பாட்டுப் புதுமை, தாய்மொழி அமைப்புப் புதுமை என்பவற்றை வெளிக்காட்டும் நோக்கத்துடனும் மரபிலக்கணங்கள் தோற்றம் பெற்றுள்ளனவாகப் பாயிரங்கள் குறிப்பிடுகின்றன*

என எச்.சித்திரபுத்திரன்(2003*:68-69)* கூறும் மரபிலக்கணங்களின் தோற்றம் பற்றிய பாயிரக் குறிப்புகள் அடிப்படையிலும் மரபிலக்கண உருவாக்க நோக்கங்களையும் மரபிலக்கணத் தன்மையையும் அறியமுடிகின்றது. இவ்வாய்வின் எல்லை கருதி, பாண்டிய நாட்டு மரபிலக்கணங்கள் எவைஎவை? இவை பாண்டிய நாட்டில் இயற்றப் பெற்றவையா? இலக்கணக் கலைஞர்களுக்கு எங்கிருந்து தூண்டல், துலங்கல்கள் கிடைத்தன? எனக் கேள்விகள் எழுகின்றன. எனவே,

1. பாண்டிய நாட்டு உருவாக்கம்
2. பாண்டிய நாட்டுப் புலவர்களின் உருவாக்கம்
3. பாண்டிய நாட்டுச் சிந்தனைவழி உருவாக்கம்

என மூன்று வகைகளில் மரபிலக்கண உருவாக்கங்களை அறிய முற்படுவோம். பாண்டிய நாட்டில் உருவாக்கம் பெற்ற, பெறக் காரணமாயிருந்த சூழல்களை வைத்துக்கொண்டு, தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், வீரசோழியம், அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், மாறனலங்காரம், சிதம்பரச் செய்யுட்கோவை, பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து, தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம், பிரபந்த தீபிகை, சுவாமிநாதம், முத்துவீரியம் ஆகியவற்றை இனங்காணலாம்.

இதற்கான அடிப்படைச் சான்று எங்கிருந்து கிடைத்தது? என்னும் வினாவை எழுப்பினால் தற்போது நமக்குச் சான்றாக இருப்பது சிறப்புப்பாயிரம். அதைமட்டும் வைத்துக்கொண்டு உறுதிப்படுத்த இயலாது என்பதால் இலக்கண வரலாற்று நூல்கள் துணைமைச் சான்றுகளாகக் கொள்ளப்படுகின்றன.

அதற்கு முன்பு பாண்டிய நாட்டின் எல்லையை வரையறுத்துக் கொள்வோம். அதாவது பாண்டியர்கள் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தற்போதைய கேரளத்தின் தென்பகுதி ஆகியவற்றைத் தலைமையிடங்களாகக் கொண்டு ஆட்சிசெய்து வந்துள்ளமையை வரலாறு காட்டுகின்றது. எனவே இப்பகுதிகளுக்குள் உருவாக்கம்பெற்ற இலக்கணங்களைப் பாண்டிய நாட்டு உருவாக்கும் என்றும், இப்பகுதிகளுக்குள் பிறந்தோரின் உருவாக்கங்களைப் பாண்டிய நாட்டுப் புலவர்களின் உருவாக்கம் என்றும், இப்பகுதியில் வாழ்ந்தோரின் அறிவின் தூண்டலால் எழுந்தவற்றைப் பாண்டியர் சிந்தனைவழி உருவாக்கம் என்றும் இங்குப் புரிந்துகொள்ள வேண்டும்.

பாண்டிய நாட்டு உருவாக்கம் எனக் கூறுவது பொருந்துமா? ஏனெனில், பாண்டியர் பகுதிகளைச் சோழர்களும் சேரர்களும் பல்லவர்களும் இன்னும் பிற அரசுகளும் ஆட்சி செய்துள்ளமையை வரலாறு காட்டுகின்றது. பாண்டிய மரபையே முற்காலப் பாண்டியர், பிற்காலப் பாண்டியர் என வரலாற்று அடிப்படையில் பிரித்துப் பார்ப்பதும் கவனிக்கத்தக்கது.

எனவே, இன்று பாண்டியநாடு என்று சொன்னால் குறிப்பிட்ட சில பகுதிகளை மட்டுமே அடையாளப்படுத்திக் காட்டுவோம். அந்த நோக்கில் இங்கு அடையாளப்படுத்தப்பெறும் இலக்கண நூல்களும் அடங்கும்.

சில நேரங்களில் சூழலும் சமூகப் பயன்பாடும் நூல் உருவாக்கத்திற்குத் துணைநிற்கும். *"பொதுவாக இலக்கியக் கல்வி நோக்கு என்பது கலை கலைக்காகவே என்ற வாதத்தின் ஒரு வடிவமே. சமூகத்தில் அந்த இலக்கிய(க்) கல்விக்கு ஆதரவு இருந்தால் இலக்கியக் கல்வியைப் பரிணமிக்க முடியும். ஏதோ ஒருவகையில் இலக்கணமோ அல்லது இலக்கியமோ கற்பதற்கு(ச்) சமூக ஆதரவு இருக்கவேண்டும். அதாவது இலக்கியத்துக்கும் இலக்கணத்துக்கும் சமூகப் பயன்பாடு உண்டு(செ.வை.சண்முகம் 1932:42)... நூல் உருவாக்கத்துக்கு(க்) காலச்சூழல், வாழ்க்கை உணர்வு முதலியன துணைசெய்கின்றன என்பதை மறுக்கமுடியாது" (செ.வை.சண்முகம் 1932:132).* இப்புரிதலில் மேற்காட்டிய வகைப்பாட்டின்படிப் பாண்டிய நாட்டு உருவாக்கங்களை விளங்கிக்கொள்ளலாம்.

1. பாண்டிய நாட்டு உருவாக்கம்

பாண்டிய நாட்டில் இயற்றப்பட்ட இலக்கணப் படைப்புகளைப் பாண்டிய நாட்டு உருவாக்கம் எனக் குறிப்பிடலாம்; இவ்வரிசையில் தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், மாறனலங்காரம், பாப்பாவினம், சிதம்பரச் செய்யுட்கோவை, பிரபந்த தீபிகை, இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம் ஆகியன வருகின்றன.

தொல்காப்பியம் (கி.மு.5ஆம் நூ. - தொல்காப்பியர்) பாண்டிய நாட்டு உருவாக்கம் என்பதை *"நிலந்தருதிருவிற் பாண்டியன் அவையத்து"* எனும் பனம்பாரனார் பாடிய சிறப்புப்பாயிரம் கூறுவதாலும், *"இரண்டாம் சங்கத்தின் இறுதியிலும் மூன்றாம் சங்கத்தின் தொடக்கத்திலும் வாழ்ந்தவன் முடத்திருமாறன் என்னும் நிலந்தருதிருவிற் பாண்டியனாவான். இப்பாண்டியன் அவையில் தொல்காப்பியம் இயற்றப்பெற்றது என்பது பனம்பாரனார் பாயிரத்தால் தெரிகிறது"* (சோம.இளவரசு, 2003:34) எனும் குறிப்பாலும் உறுதிப்படுகின்றது.

இறையனார் அகப்பொருள் (கி.பி.7ஆம் நூ. - இறையனார்) *"ஒரு காலத்தில் பாண்டிய நாடு பன்னீராண்டு பஞ்சத்தால் வாடியது. அரசன் அறிஞர்களையெல்லாம் வளமுள்ள நாட்டுக்கு அனுப்பிவிட்டான். பஞ்சம் தீர்ந்தது. அரசன் நான்கு பக்கங்களிலும் ஆள் அனுப்பி அறிஞர்களை அழைத்து வரச்செய்தான். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், யாப்பதிகாரம் வல்ல புலவர்களே கிடைத்தனர். அரசன் வருந்தினான். இதனை அறிந்து மதுரை இறைவன் களவியல் செய்தான்' இவ்வாறு இந்நூல் கூறுகிறது"* (சோம.இளவரசு, 2003:74) என்ற கருத்துவழிப் பாண்டிய நாட்டில் இயற்றப்பட்ட நூல் என்பது வெளிப்படை.

அகப்பொருள் விளக்கமும் (கி.பி.12 - நாற்கவிராச நம்பி) பாண்டிய நாட்டு உருவாக்கம் என்பதை, *"...இவர் புளியங்குடி உய்யவந்தானெனும் முத்தமிழாசானின் புதல்வர். இவரே ஆசிரியரும் ஆவர். புளியங்குடி என்னும் ஓர் ஊர், பாண்டிய நாட்டில் பொருநையாற்றின் வடகரையில் உள்ளதென்று ஒருசாராரும், தொண்டை நாட்டில் உள்ளது என்று மற்றொரு*

சாராரும் கூறுகின்றனர். பாண்டிய நாட்டில் உள்ள புளியங்குடியே ஊராய் இருத்தல் கூடும் என்று அறிஞர் கருதுகின்றனர்... இந்நூலின் சிறப்புப்பாயிர உரை, இந்நூல் குலசேகர பாண்டியன் காலத்தது என்று கூறுகிறது. இங்குக் குறிக்கப்பெறும் குலசேகரபாண்டியன் முதல் சடையவர்மன் குலசேகரனே ஆவான்" என சோம.இளவரசுவும் **(2003:142-143)**, "*...இவரூராகிய புளியங்குடி தொண்டை நாட்டதென்றும், நெல்லை நாட்டதென்றும் கூறுவர், பொருநையாற்றின் வடகரையில் உள்ள புளியங்குடியே இவரூர் என்றும் வலியுறுத்துவர்"* என இரா.இளங்குமரனும் **(1999:320)** சுட்டிக்காட்டுகின்றனர்.

மாறனலங்காரம் **(கி.பி.1548)** எனும் நூலை இயற்றியவர் திருக்குருகைப்பெருமாள் கவிராயர். இவர் ஆழ்வார்திருநகரியைச் சார்ந்தவர். இவ்வூர் தூத்துக்குடி உட்பட்ட பகுதியில் வருகின்றது. எனவே, இவர் படைத்த நூல்களும் பாண்டிய நாட்டுப் பகுதியைச் சார்ந்ததாகக் கருதப்படுகின்றது. இவர் மாறனகப்பொருள் **(கி.பி.1552)**, பாப்பாவினம்**(கி.பி.16ஆம் நூ.)** ஆகிய இலக்கணப் பனுவல்களையும் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரபந்த தீபிகை**(கி.பி.19ஆம் நூ.)** எனும் நூல் முத்துவேங்கட சுப்பையர் அவர்களால் இயற்றப்பெற்றது. இவர் வேம்பத்தூரைச் சார்ந்தவர். அவ்வூர் சிவகங்கைக்கு உட்பட்ட பகுதியைச் சார்ந்தது.

சிதம்பரச் செய்யுட் கோவை **(கி.பி.17ஆம் நூ.-குமரகுருபரர்)**, "*இந்நூலின் ஆசிரியர் குமரகுருபர சுவாமிகள், இவர் சைவப் பெரியார். திருநெல்வேலி மாவட்டத்தில், தாமிரபரணி ஆற்றங்கரையில் உள்ள கைலாசபுரத்தில் தோன்றியவர். வேளாள மரபினர்"* **(சோம.இளவரசு, 2003:175)** எனும் குறிப்புவழிப் பாண்டிய நாட்டுப் பகுதியில்தான் உருவாக்கப் பெற்றுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

பிரயோக விவேகம் **(கி.பி.17ஆம் நூ.)** தூத்துக்குடிக்கு அருகாமையில் உள்ள ஆழ்வார்திருநகரியில் வாழ்ந்த புலவர் சுப்பிரமணிய தீட்சிதரால் இயற்றப்பெற்றது **(இரா.இளங்குமரன், 1999:357)** என்பது குறிப்பிடத்தக்கது.

இலக்கணக்கொத்து **(கி.பி.17ஆம் நூ.-சுவாமிநாத தேசிகர்)**, சுவாமிநாதம் **(கி.பி.19ஆம் நூ.-சுவாமி கவிராயர்)** ஆகிய இரண்டும் பாண்டிய நாட்டு உருவாக்கங்களே என்பதைப் பின்வரும் கருத்துக்கள் சுட்டிக்காட்டும்.

> *"இவர் திருநெல்வேலிப் பகுதியினைச் சார்ந்தவர். வேளாள வகுப்பினர். அக்காலத்தில், திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த சுசீந்திரத்தில் சின்னப் பண்டாரமாக இருந்த மாசிலாமணி தேசிகரிடம்' சந்நியாசம் பெற்றுக் குட்டித் தம்பிரானாக விளங்கினார். அப்போது திருவாவடுதுறைச் சீடர்களுள் ஒருவராகிய மயிலேறும் பெருமாள் பிள்ளை என்பார் சிறப்புற்றுத் திகழ்ந்தார்; இவர் திருநெல்வேலி நகரினர். இவர் அடிக்கடி சுசிந்தரம் வருதல் வழக்கம். ஒருநாள் இவர் சுசீந்திரம் வரும் போது சாமிநாத தேசிகரைக் கண்டு, அவரது அறிவாற்றல்களை எண்ணி மகிழ்ந்து, சாமிநாத தேசிகரைத் தம்முடன் திருநெல்வேலிக்கு அழைத்துச் சென்றார். கல்வி கற்பித்தார். சாமிநாத தேசிகரும்*

> *தமிழ் நூற்களைக் கசடறக் கற்றுத் தேர்ந்தார். பின்னர் மயிலேறும் பெருமாள் பிள்ளை அவர்கள் செப்பறையில் வாழ்ந்த கனகசபாபதிக் குருக்களைக் கொண்டு வடமொழியும் கற்பிக்க ஏற்பாடு செய்தார். தேசிகரும் வடமொழியில் வல்லவரானார்"* **(சோம.இளவரசு, 2003:191)**

இது இலக்கணக் கொத்துக்குரியது.

> *"... கல்லிடையூர் என்பது திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கல்லிடைக் குறிச்சியாகும்"* **(சோம.இளவரசு, 2003:208).**

இது சுவாமிநாதத்திற்குரியது.

வீரமாமுனிவர் எழுதிய தொன்னூல் விளக்கம்(கி.பி.1730), கொடுந்தமிழ் இலக்கணம்(1728), செந்தமிழ் இலக்கணம்(1730) ஆகிய மூன்றும் பாண்டிய நாட்டுப்பகுதிகளுக்குள்தான் இயற்றப்பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் இவர் அம்பலக்காடு, மதுரை காமநாயக்கன்பட்டி, குருக்கள் பட்டி, இராமநாதபுரம், ஏலாக்குறிச்சி, கோனான்குப்பம், ஆவூர், திருச்சி, மணப்பாடு ஆகிய இடங்களில் ஊழியம் செய்தவர் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. சான்றாக, கீழ்வரும் கருத்தைக்காட்டலாம்.

> *"...மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் அவரது தமிழ்ப் புலமையின் தகைமையினைப் பாராட்டி வீரமா முனிவர் எனச் செந்தமிழால் செப்பினர்"* **(சோம.இளவரசு, 2003:197)**

இது தொன்னூல் விளக்கத்திற்கானது.

2. பாண்டிய நாட்டுப் புலவர்களின் உருவாக்கம்

பாண்டிய நாட்டுப் புலவராகப் புத்தமித்திரனார்(வீரசோழியம்) கருதப்படுகிறார். சிலர் சோழநாட்டுப் புலவர் என வாதிடுவதும் உண்டு. அவர் பாண்டிய நாட்டுப் புலவரே எனச் சோம.இளவரசு குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

> *"இந்நூல் இயற்றியவர் புத்தமித்திரனார் என்னும் புலவர் பெருமான் ஆவர். இவர் பொன்பற்றி என்னும் ஊரினர். 'பொன்பற்றிமன் புத்தமித்திரனே' என்னும் இந்நூற் பாயிரம் இதற்குச் சான்று தரும். இவ்வூர், மிழலைக் கூற்றத்தினைச் சார்ந்தது என்பது, 'எழில் மிழலைக் கூற்றத்துப் பூண் புகழ்ப் பொன்பற்றி காவலனே' என்பதால் விளங்கும். இம் மிழலைக் கூற்றம் பாண்டி மண்டலத்தில் இருந்த உள்நாடுகளுள் ஒன்றாகும். சிலர், சோழ மண்டலத்தில் கும்பகோணம் தாலுகாவில் இருந்த மிழலைக் கூற்றத்தினையும் ஒன்றாகக் கருதி மயங்கி, மிழலைக் கூற்றம் சோழ மண்டலத்துள்ள ஓர் ஊர் என்பர். இம் மயக்கத்தினை எடுத்துக்காட்டி, மிழலைக் கூற்றம் பாண்டி மண்டலத்து உள்நாடே என்பதனைச் சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் 'மிழலை நாடும் மிழலைக் கூற்றமும்' என்னும் கட்டுரையில் தெளிவாக விளக்கியுள்ளார்.*

....

வீரராசேந்திர சோழன் விரும்பிய வண்ணம், புத்தமித்திரனார் ஐந்து இலக்கணமும் அடங்கிய நூல் ஒன்று இயற்றி, அதனைச் சோழன் மன்னன் பெயரால் வீரசோழியம் எனப் பெயரிட்டர்" **(2003:98).**

இக்கருத்து வீரராசேந்திர சோழன் விரும்பியதால் வீரசோழியம் உருவாக்கமானது என்கிறது. அவ்வுருவாக்கம் சோழநாட்டுச் சூழலில் உருவானதா என்பதை அறிய அதன் வழக்குச் சொல்லாடலை அறிதல் வேண்டும்.

3. பாண்டியநாட்டுச் சிந்தனைவழி உருவாக்கம்

பாண்டிய நாட்டில் வாழ்ந்த பேரறிஞர்களின் தூண்டுதலால் இலக்கண விளக்கமும் (கி.பி.17ஆம் நூ.-வைத்தியநாத தேசிகர்) முத்துவீரியமும் (கி.பி.19ஆம் நூ.-முத்துவீர உபாத்தியாயர்) உருவாக்கம் பெற்றன என்பதைப் பின்வரும் கருத்துக்கள் தெளிவுறுத்தும்.

"இந்நூல் இயற்றியவர் வைத்தியநாத தேசிகர் என்னும் புலவர் ஆவார். இவர் திருவாரூரினர்; வன்மீகநாத தேசிகரின் மைந்தர். அகோர முனிவரின் மாணவர். வைத்தியநாத தேசிகர் திருநெல்வேலி செல்லும் வழியில் கயத்தாற்றில் மதுரையை ஆண்ட திருமலை நாயக்கரது காரிய கருத்தராக இருந்த திருவேங்கடநாத ஐயரைச் சந்தித்தார். தேசிகரின் கல்வித் திறமை கண்ட திருவேங்கடநாத ஐயர் தேசிகரைத் தம் மக்களுக்குத் தமிழறிவுறுத்த வேண்டினார். தேசிகரும் ஒப்புக்க(கொ)ண்டு தமிழ் பயிற்றுவித்தார்..." (சோம.இளவரசு, **2003:182-183).**

இது இலக்கண விளக்கத்திற்குரியது.

"... திருநெல்வேலியினைச் சார்ந்த சுப்பிரமணிய தேசிகர் சொல்ல, இவர் தன் பெயரால் முத்துவீரியம் செய்தார் என்பது விளங்குகிறது" (சோம.இளவரசு, **2003:201)**

இது முத்துவீரியத்திற்குரியது.

ஆக, *"ஒவ்வொரு நூலும் காலந்தோறும் எப்படி படிக்கப்பட்டு எவ்வாறு மதிக்கப்பட்டு வந்தது என்று அறிய வேண்டும். இதை அந்த நூலின் கல்வி வரலாறு என்று அழைக்கலாம். ஒரு நூலின் கல்வி வரலாறு அந்த நூலின் வரலாற்றில் ஒரு பகுதியாகக் கருதப்பட வேண்டும். இப்படி ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழ்ந்த புலவர்கள் என்னென்ன நூல்களைப் படித்தார்கள்; எப்படி மதிப்பிட்டார்கள் என்று அறிவது அந்தந்த இலக்கிய இலக்கண வரலாற்றின் ஒரு பகுதியாகக் கருதப்பட வேண்டும். இப்படிப்பட்ட வரலாறே ஒரு காலகட்டத்தில் வாழ்ந்த புலவர்களின் / அறிஞர்களின் கல்விப் பின்னணியைப் புலப்படுத்தி நூல் உருவாக்கம் பற்றி அறிய உதவும்"* (செ.வை.சண்முகம், **1932:137).** அந்த அறிதல் தெளிவானதாக அமையும் என முடிக்கலாம். இது ஒருவகையான தேடல் எனில்,

மரபிலக்கணங்களின் முதல் பதிப்புகளின் முன்னுரை, பதிப்புரை, அணிந்துரை முதலியவற்றைப் பிறிதொரு தேடலாக அமைத்தால் இன்னும் கூடுதல் தகவல் கிடைக்க வாய்ப்புண்டு.

நிறைவாக, தமிழின் மரபிலக்கணங்கள் வரிசையில் வருவனவற்றுள் பெரும்பகுதியைப் பாண்டிய நாடு உருவாக்கித் தந்திருக்கிறது என்பதை அறியமுடிகின்றது. இங்கு அடையாளப்படுத்தப்பெற்ற இலக்கணப் பனுவல்களின் சொல்வளத்தை ஒப்பிட்டு, அதிலிருக்கும் பாண்டியநாட்டு வழக்குச் சொற்களைப் பிரித்தறிந்து, பிற இலக்கணப் பனுவல்களின் வழக்குச் சொற்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சில தெளிவுகள் பிறக்கக் கூடும். இந்நிலைப்பாடே பாண்டிய நாட்டு உருவாக்க எண்ணிக்கையை இன்னும் நீட்டித்துச் செல்லும் அல்லது பாண்டிய நாட்டு உருவாக்கங்கள் இவையே எனத் துணிந்து சொல்லும் சூழலை உருவாக்கித் தரும்.

துணைநின்றவை

- அருள் வி. & இளமாறன் பா. (பதி.), 2008, வண்ணச்சரபம் தவத்திரு தண்டபாணி சுவாமிகள் இயற்றிய ஏழாம் இலக்கணம், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
- அறவாணன் க.ப.,1941, தொல்காப்பிய ஒப்பியல், ஜைன இளைஞர் மன்றம், சென்னை.
- இராசாராம் சு., 2010, இலக்கணவியல் - மீக்கோட்பாடும் கோட்பாடுகளும், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.
- இளங்குமரன் இரா., 1988, இலக்கண வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- இளவரசு சோம., 2003, இலக்கண வரலாறு, மெய்ப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
- இன்னாசி சூ. & விக்டோரியா ஜே.பீ.,(பதி.), 2011, தமிழியல், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
- கோவிந்தராச முதலியார் கா.ர., 2009, குணவீர பண்டிதர் இயற்றிய நேமிநாதம் உரையுடன், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை.
- … (உரை.), 1992, நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம் பழைய உரையுடன், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை.
- … (பதி.), 2011, வீரசோழியம் - மூலமும் பொன்பற்றிக் காவலர் புத்தமித்திரனார் இயற்றிய உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.
- சண்முகம் செ.வை., 1932, இலக்கண உருவாக்கம் (பல்லவ - பாண்டியர் காலம்), மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- …, 1975, சுவாமிநாதம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.
- சுந்தரமூர்த்தி இ., 1981, உவமான சங்கிரகம் அணியிலக்கண ஆராய்ச்சி, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.
- சுப்பிரமணியன் ச.வே. (பதி.), 2009, தமிழ் இலக்கண நூல்கள் (மூலம் முழுவதும்-குறிப்பு விளக்கங்களுடன்), மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
- …., 1978, தொன்னூல் விளக்கம், தமிழ்ப் பதிப்பகம், சென்னை.
- பார்வதி மா. & சித்திரபுத்திரன் எச்.,(பதி.), 2003, நாவாய் பன்னோக்குக் கட்டுரைகள், நியூவிசன் வெளியீடு, தஞ்சாவூர்.

❖ ஜீன் லாறன்ஸ் செ. & பகவதி கு.(பதி.), 2004, தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் இலக்கணம் & மொழியியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

நற்றிணையில் சமுதாயச் சூழலும் தொழில் மாந்தரும்

SOCIAL ENVIRONMENT AND OCCUPATION IN NATTRINAI

முனைவர் **ச.இராமலட்சுமி**
தலைவர் - தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 18
thangamram00@gmail.com

Abstract: Nattrinai illustrates and depicts the way of life, habitat, family structure and different flourishing occupations during the sangam literature period. Moreover the songs emphasize the significance of childbirth and the joy it brings to the family especially the mother. Wide variety of words were employed to uniquely identify the habitat, occupations and industries of the era. Each song vividly describes the nuances of the profession and its intricacies. Among the professions which had detailed portrayals include washing, pottery, jewels, medicine, commerce and astrology.

Keywords: Nattrinai, habitat, occupations, தமிழ்மொழி, நற்றிணை

தமிழ்மொழி வரலாற்றுப் பெருமையும் செம்மொழிச் சிறப்பும் மிக்கது. அம்மொழியில் இலக்கியங்கள் புதிய வடிவங்களாக வந்து கொண்டு இருக்கின்றன. இன்றளவும் சங்க இலக்கியங்கள் என்றும் மாறா இளமையுடன் நம் கருத்திற்கு வளம்சேர்த்து விருந்தளிப்பதைக் காணமுடிகிறது. அந்தவகையில் 'நல்ல' என்னும் அடைமொழியுடன் குறிக்கப்பெறும் நற்றிணையில் இடம்பெறும் சமுதாயச் சூழல்களை இலக்கிய நயத்தோடு காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகிறது.

குடும்பச் சூழல்

குடும்பம் என்னும் அமைப்பு சமுதாயத்தின் வேர் ஆகும். ஆனால் நற்றிணையிலும் பிற இலக்கியங்களிலும் காணப்படும் அமைப்பு தனிக்குடும்ப அமைப்பாகும். நற்றிணையில் கூட்டுக்குடும்பம், கலப்புக் குடும்பம் பற்றிய செய்திகள் காணப்படவில்லை. மகப்பேறுடன் வாழும் தனிக்குடும்ப அமைப்பையே பல பாடல்கள் சுட்டுகின்றன. தலைவனும் தலைவியும் இணைந்து வாழும் இல்லற வாழ்வில் மகப்பேறு என்பது அவர்களுக்கு மகிழ்ச்சியையும் பெருமையையும் அளித்ததை அறியமுடிகிறது. அதுமட்டுமன்றி மகப்பேற்றினை ஒரு சமுதாயக் கடமையாகக் கருதியதைப் புற இலக்கியங்களும் சுட்டுகின்றன. தலைவியின் மகப்பேறு தலைவனுக்கு மட்டுமின்றி அவன் சுற்றத்திற்கே இன்பம் பயத்ததை,

“வாராய் பாண நடுகம் நேரிழை
கடும்புடைக் கடுஞ்சூழ் நம்குடிக்கு உதவி
நெய்யொடு இமைக்கும் ஐயவித் திரள்காழ்

விளங்குநகர் விளங்கக் கிடந்தோட் குறுகி
புதல்வன் ஈன்றெனப் பெயர்பெயர்த்து அவ்வாpத்
திதலை அல்குல் முதுபெண் டாகித்
துஞ்சுதியோ மெல்அம் சில்லோதி" (நற். **370:1-7)**

என்னும் அடிகளில், 'திருந்திய அணிகளை உடைய தலைவி சுற்றத்தார்கள் சூழ ஓம்புகின்ற சிறந்த சூல் அடைந்து மகவு ஈன்றாள். அதனால் நெய்யுடன் கலந்து ஒளிர்கின்ற சிறுவெண்கடுகாகிய திரண்ட விதைகளை மாளிகையெல்லாம் மணம் வீசும்படித் திகழ்கின்ற பாயிலே படுத்திருந்தாள். தலைவன் அவளை நெருங்கி, 'மெல்லிய பலவாகிய கூந்தலை உடையவளே! நீ புதல்வனை ஈன்றதனால் வேறு பெயரும் பெற்று, அழகிய வரிகளும் தேமலும்ம் நிறைந்த அல்குலைக் கொண்டு முதுபெண்டாகித் துயில்கின்றாயோ' என்று கூறுவதனை அறியமுடிகின்றது.

வாழிடங்கள்

சங்க இலக்கியத்தில் மாந்தர்களின் வாழிடம் இல், மனை, நகர், முன்றில், முற்றம், குரம்பை, வரைப்பு, மாடம், குடில், கூரை ஆகிய சொற்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. புல்லாலும், ஈந்திலையாலும் வேயப்பட்ட குரம்பைகள் தனிக்குடும்பங்களின் வாழிடங்களாக இடம்பெற்றுள்ளன. பொதுவாக அவரவர் வசதிக்குத் தக்கபடி வாழிடங்களை அமைத்தும் பொருளாதார நிலையில் பின்தங்கியவர்கள் இயற்கையில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டும் இருப்பிடங்களை உருவாக்கியுள்ளனர்.

அவற்றுள் மனையை, 'தாய்மனை'(நற்.**26:4)** 'கடிமனை'(நற்.**40:1)** 'செழுந்தண் மனை' (நற்.**271:3)** என்றும் குறிப்பிட்டுள்ளனர். கடிமனை, செழுந்தண்மனை, வளமனை, நன்மனை போன்ற அடைச்சொற்கள் மக்களின் செல்வச் செழிப்பை உணர்த்துகின்றன. இம்மனைகள் பாதுகாப்பு மிகுந்தவையாதலால் விழாக்கள் நிரம்பியவையாகக் காணப்படுகின்றன.

தொழில்கள்

மக்கள் தாங்கள் செய்யும் தொழிலையே நம்பி இருந்தனர். ஒவ்வொருவருக்கும் ஒரு தொழில் துணையாக இருந்தது. குறிஞ்சி நிலத்தில் குறவர், முல்லைநிலத்தில் இடையர், மருதநிலத்தில் உழவர், நெய்தல் நிலத்தில் பரதவர் என நில அமைப்பிலே நிபந்தனையின்றிக் கிடைத்ததைக் கொண்டு வாழ்க்கை அமைத்தனர். அந்தணர், அரசர், அளவர், இடையர், இயவர், உப்பு வணிகர், உழவர், எயிற்றியர், கடம்பர், கடைசியர், கம்மியர், களமர், கிணைஞர், கிணைமகள், குறவர், குறத்தியர், குறும்பர், கூத்தர், கொல்லர், கோசர், தச்சர், துடியர், தேர்ப்பாகன், நுளையர், பரதவர், பறையர், பாடினி, பாணர், பாணிச்சி, புலையர், புன்செய் கொல்லர், பூவிலைப்பெண்டு, பொதுவிலை மகளிர், பொருநர், கடையர், மழவர், மறத்தியர், மறவர், மோரியர், யவனர், யாழ்ப்புலவர், யானைப்பாகர், யானைவேட்டுவர், வடவடுகர், வணிகர், வலைஞர், விலைப்பெண்டிர், வேடர் எனப் பல தொழிற்பிரிவுகள்

அக்காலத்தில் இருந்ததை அறிய முடிகிறது. மேலும், அவர்கள் செய்த தொழிலின் அடிப்படையில் அவர்களின் பெயர்கள் அமைந்துள்ளமையை அறியலாம்.

ஐவகை நிலங்களில் வாழ்ந்த குறவர், இடையர், உழவர், பரதவர், எயினர் ஆகியோர் தொழிலில் சிறந்து விளங்கினர். அவர்கள் செய்த அணிகலன் செய்யும் தொழில், தச்சுத்தொழில், நெசவுத் தொழில், சலவைத் தொழில், குயவுத் தொழில், கணியர்(சோதிடம்) தொழில், வணிகத் தொழில் ஆகிய தொழில்கள் சங்கச் சமூகப் பாகுபாட்டில் காணப்படுகின்றன.

அணிகலன் தொழில் செய்வோர்

கம்மியரில் பொன்செய் கம்மியர், செம்புசெய் கம்மியர் என இருவகைப்படுவர். பொன்செய் கம்மியர் பொன்னை உருக்கி அணிகலன்கள் செய்து தருபவர்கள் கம்மியர் எனப்படுவர். இதனை,

“கருங்கால் வேங்கை நாளுறு புதுப்பூப்
பொன்செய் கம்மியன் கைவினை கடுப்ப” **(நற்.313:1-2)**

என்னும் அடிகள் சுட்டும். இவர்கள் பொன்னின் தரத்தை அறிய உரைகல்லைப் பயன்படுத்தியுள்ளனர். இதனைக் கட்டளைக்கல் எனக் குறிப்பர். பொன்செய் கம்மியர் செய்யும் பொன்னணி தாது அளைந்து வரும் வண்டின் தோற்றம் போல் இருந்ததை நற்றிணை குறிப்பிடுகிறது.

செம்புசெய் கம்மியர்

கம்மியரில் பொன் செய்யும் கம்மியர் போன்றே செம்பினைச் செய்யும் கம்மியரும் இருந்து வந்தனர். இவர்கள் செம்பு என்னும் உலோகத்தால் பானை முதலிய கலன்களைச் செய்வதோடு மண்ணால் கலன் செய்து அதில் செம்பை உருக்கி ஊற்றிப் பாத்திரமாக வடிவமைத்துள்ளனர். இதற்குரிய மண்ணைப் படித்துறைகளில் இருந்து எடுத்து வரும் செய்தியை,

“உறுவினைக்கு அசாவா உலைவுஇல் கம்மியன்
பொறியறு பிணைக்கூட்டுந் துறைமணல் கொண்டு” **(நற்.363:4-5)**

என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

குயவுத் தொழில்

மண்ணைக் கொண்டு மண்பாண்டங்கள் செய்பவர் குயவர் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் நொச்சி மாலை அணிந்து தெருக்களில் சென்று ஊரில் நிகழும் விழாக்களை அறிவிக்கும் பணியைச் செய்துள்ளனர். விழாவிற்காக ஊர்மன்றத்தில் கள் முதலிய பலிகளை அளித்தலும் இவர்களின் உரிமைத் தொழில்களாக இருந்திருக்கின்றன.

சலவைத் தொழில்

சலவைத் தொழில் செய்பவர்களைப் புலையர் என்றும் குறித்துள்ளது சங்க இலக்கியம். இவர்களுள் ஆண்பாலைப் புலையன் என்றும், பெண்ணைப் புலைத்தி என்றும் குறிப்பிடுவர். இவர்கள் உவர்நிலப் பகுதிகளில் குழிதோண்டி ஆடைகளைப் பசை தோய்த்துச் சலவை செய்ததையும் விழா நாட்களில் அதிகமான ஆடைகளைச் சலவை செய்து கொடுத்ததையும்

“ஆடுஇயல் விழவின் அழுங்கல் மூதூர்
உடையோர் பான்மையின் பெருங்கை தூவா
வறனில் புலத்தி எல்லித் தோய்ந்த
புகாப் புகர் கொண்ட புன்பூங் கலிங்கம்” **(நற். 90:1-4)**

என்னும் பாடலடிகள் உணர்த்தும்.

கணியர்(சோதிடம்) தொழில்

எதிர்காலத்தையும், நாட்கோள்களையும், கணித்துக் கூறுபவர்கள் கணியர்கள். இத்தொழில் மரபே பிற்காலத்தில் சோதிடக்கலை எனப்பட்டது. கோள்களின் மாற்றத்திற்கு ஏற்ப நன்மை, தீமைகளை ஆய்ந்து மக்களுக்கு உணர்த்தியதால் இப்பிரிவினர் சமுதாயத்தில் நிலைகொள்ள உதவியது. கணியன் காலத்தைக் கணித்துக் கூறுவதைப் போலத் தினை அறுவடைக் காலத்தை வேங்கை அரும்புகள் உணர்த்துவதை,

“சூருடைச் சிலம்பின் அருவியாடிக்
காரரும்பு அவிழ்ந்த கணிவாய் வேங்கை” **(நற்.226:1-3)**

என்னும் அடிகள் குறிப்பிடுகின்றன.

மருத்துவத் தொழில்

மருத்துவன் சங்க இலக்கியத்தில் அறமுடையவனாகப் போற்றப்பட்டு இருக்கிறான். மருத்துவ குணம் வாய்ந்த மரத்தில் அதன் உறுப்புகள் ஒவ்வொன்றும் மருந்தாகப் பயன்படுவது போல மருத்துவனும் மற்றோர் போற்றும் ஒப்புரவாளனாகப் போற்றப்படுவதை,

“மரம்சா மருந்தும் கொள்ளார் மாந்தர்
உரம்சாச் செய்யார் உயர்தவம் வளம்கெட்ட
பொன்னும் கொளார் மன்னர்” **(நற்.1-3)**

என நற்றிணை குறிப்பிடுகிறது.

வணிகத் தொழில்

தமிழ்நாட்டில் வணிகம் என்பது மிகப் பழங்காலந்தொட்டே இருந்து வருகிறது. தொடக்க காலத்தில் கடல் கடந்து வணிகம் செய்து பின்பு பண்டமாற்றுமுறை வழக்கத்தில் இருந்திருக்க வேண்டும். நாணயம் மக்களிடம் புழங்கிய பிறகு வணிகம் அதிகரித்துள்ளது.

பண்டமாற்று முறையில் பெரும்பாலும் மீனும், உப்புமே மாற்றுக்குரியதாக இருந்துள்ளன. பரதவர்கள் உப்பை விளைவிப்பவர்களாகவும், உமணர்கள் உப்பை வாங்கிச் சென்று விற்பவராகவும் இலக்கியங்கள் காட்டுவதை அறிகிறோம். உமணர்கள் தங்கள் நாட்டில் விளைந்த நெல்லைக் கொடுத்து உப்பினை வாங்கிச் சென்றனர். இச்செய்தியை,

''தம்நாட்டு விளைந்த வெண்நெல் தந்து

பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி
நெடுநெறி ஒழுகை நிலவுமணல் நீந்தி
அவண்உறை முனிந்த ஒக்கலொடு புலம்பெயர்ந்து
உமணர் போகலும்'' (நற்.193:2-5)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. மேலும் உமணர்கள் ஓரிடத்தில் இல்லாமல் இடம்விட்டு மாறிச் செல்லும் இயல்புடையவராக இருந்துள்ளதோடு வணிகத்திற்குக் கப்பலைப் பயன்படுத்தியிருக்கின்றனர். நற்றிணையில் கப்பல் 'வங்கம்' என்ற சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது. இதனை,

''கங்கை வங்கன் போகுவர் கொல்லோ
எவ்வினை செய்வர் கொல்'' (நற். 189:5-6)

என்னும் அடிகள் சுட்டும்.

தொகுப்புரை

- சங்க இலக்கியத்துள் ஒன்றான நற்றிணைப் பாடல்கள்வழிப் பண்டைத் தமிழர்தம் குடும்பச்சூழல், வாழ்விடங்கள், தொழில்கள் ஆகியன எவ்வாறு அமைந்திருந்தன என்பதை அறியமுடிகின்றது.
- குடும்பச்சூழலில் மகப்பேறின் முக்கியத்துவமும் பிள்ளை ஈன்ற தலைவியைத் தலைவன் பாராட்டும் விதமும் எடுத்துரைக்கப் பெற்றுள்ளது.
- சங்ககாலத்தில் இல், மனை, நகர், முன்றில், முற்றம், குரம்பை, வரைப்பு, மாடம், குடில், கூரை ஆகிய சொற்களால் வாழ்விடங்கள் குறிப்பிடப்படுகின்றன. அவற்றுள் மனையின் செல்வச் செழிப்பை உணர்த்த வளமனை, நன்மனை, செழுந்தண்மனை என்ற சொற்கள் கையாளப் பெற்றுள்ளன.
- தொழில்களில் சலவைத்தொழில், அணிகலன் செய்யும் தொழில், குயவுத் தொழில், வணிகத்தொழில், கணியர்தொழில், மருத்துவத்தொழில் ஆகியன சங்ககாலச் சமுதாய அமைப்பைக் காட்டுவதாக அமைந்துள்ளன.

துணைநின்றவை

❖ வேங்கடராமன் எச்.,(ப.ஆ.), 1989(மு.ப.), நற்றிணை மூலமும் உரையும், டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, முதற்பதிப்பு,.

- ஜெயசுதா ச., "*சங்க இலக்கியத்தில் சமூக நிலைமையும் தொழிற்சிறப்பும்*", கீற்று, இணைய இதழ்,22(மே-2012)
- https://keetru.com/index.php?option=com_content&view=article&id=19830:2012-2-11-20-05&catid=1475:2012&Itemid=718

மதிப்பிடப்பெற்றது

மருதனிளநாகனார் பாடல்கள் காட்டும் பண்டைய வழிபாட்டு முறைகள்

(Ancient religious rituals and performance through the *marutaṉiḷanākaṉ* songs)

முனைவர் **ப.கிருஷ்ணமூர்த்தி**
தமிழ் உதவிப் பேராசிரியர்
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620 017.
kmtamilvendhan@gmail.com

Abstract: The paper entitled as ***marutaṉiḷanākaṉ pāṭalkaḷ kāṭṭum panṭaiya vaḻipāṭṭu muṟaikaḷ*** (ancient religious rituals and performance through the ***marutaṉiḷanākaṉ*** songs) is dealing with the ancient religious rituals of the Tamil land, especially in the Pandya kingdom, through the songs which were composed by the marutaṉiḷanākaṉ as one of the classical bard of that time in the Tamil Nadu. In those days the people of Tamil land was worshiped both the hero stone and ghost and territorial gods as well. The people worship shows the rituals and beliefs of the Tamil land. The paper concluded the statement that the period of ancient time's people who believes where the spirit of nature was in the rituals and performance were there.

Keywords: Ancient Religious, Marutaṉiḷanākaṉ, மருதனிள நாகனார், மருதத் திணை

அறிமுகம்

சங்க இலக்கியப் பாடல் புனைவில் குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெறுபவர் மருதனிள நாகனார் என்னும் கவிஞர் ஆவார். மதுரை மருதனிளநாகன் என்றும் சில பாடல் பதிவுகள் இவரைக் குறிப்பிடுகின்றன. கலித்தொகையில் மருதக்கலியில் அமைந்துள்ள அனைத்துப் பாடல்களையும்(35) இவர் பாடியுள்ளதால் மருதத் திணைப் பாடல் பாடுவதில் இவர் தனிச்சிறப்புப் பெற்றவர் என்று கூற்று அவ்வளவு பொருத்தமானதாக இல்லை எனலாம்(2007:29). இவர் மற்றத் திணைகளில் அமைந்துள்ள பாடல்களையும் சிறப்பாகவே புனைந்துள்ளார். குறிப்பாகப் பாலைத் திணைப் பாடல்கள் போதுமான கவனத்தைப் பெறும் வகையில் அமைந்துள்ளன எனலாம்.

இவர் பாடியனவாக சங்க இலக்கியத்தில் 77பாடல்கள் இருக்கின்றன. அவற்றில் அகத்தில் 74பாடல்களும் புறத்தில் மூன்று பாடல்களும் அடக்கம். இவற்றில் அகப்பாடல்களைத் திணைமுறையில் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தலாம்.

திணை / நூல்	நற்றிணை	குறுந்தொகை	அகநானூறு	கலித்தொகை
குறிஞ்சி	05	01	03	--
முல்லை	01	01	02	--
மருதம்	01	--	01	35
நெய்தல்	01	01	03	--
பாலை	04	01	14	--

மருதனிளநாகன் பாடிய இப்பாடல்களில் கடவுள் / வழிபாடு / சமயம் தொடர்பான செய்திகள் இடம்பெற்றுள்ள பாடல்களை மட்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அவற்றின்வழிப் பண்டைய தமிழகத்தில் வழிபாட்டு முறைகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை இக்கட்டுரை விளக்குகின்றது.

சமயம்சார் பாடற்குறிப்புகள்

இவருடைய பாடல்களில் நடுகல், கடவுள், தெய்வம், முருகன், மால், ஆலமர் செல்வன் போன்ற சமயம்சார் சொல்லாட்சிகள் காணக் கிடக்கின்றன. மருதக்கலிப் பாடலொன்றில்(28) பலவகைக் கடவுளரையும் அடுக்கிச் சொல்லும் முறையும் காணப்படுகின்றது.

சமயச் சிந்தனையின் முதல் நிகழ்வாக இருப்பது நடுகல் வழிபாடாகும். அச்சத்தின் விளைவாகத் தோன்றிய வழிபாட்டுச் சிந்தனைக்கான முதல் உருவ அமைப்பை நடுகல்லே நமக்குத் தருகின்றது. ‘ஆவி’ வழிபாடு குறித்த தற்கால மானிடவியல் கருத்துகள் பண்டைய சங்க இலக்கியப் பாடல்களில் குறிப்பிடப்படுகின்ற நடுகல்லுடன் பொருந்திப் போவது நமக்கு வியப்பைத் தருவதாகும்.

> *இயற்கைப் பொருட்களிலும் பௌதிகப் பொருட்களிலும் உறைந்துள்ள ஆவிகள் ஆற்றல் மிகுந்தவை; அவையே மனித வாழ்வுக்குக் காரணமாக அமைகின்றன எனத் தொல்பழங்கால மக்கள் நம்பி ஆவிகளை வழிபட்டனர். இந்த ஆவி வழிபாடே சமயத்தின் தோற்றுவாய்...* **(2014:170)**

என்ற இங்கிலாந்து மானிடவியல் அறிஞரின் கோட்பாட்டைப் பக்தவத்சல பாரதி மேற்கோள் காட்டுகின்றார்.

பண்டைய தமிழகத்தில் இந்த ஆவி வழிபாடு நடுகல் வழியாகவே பரவியிருந்தது என்பதற்கு மருதனிளநாகன் பாடல்களில் சில சான்றுகள் இருக்கின்றன.

இயற்கையைக் கண்டு அஞ்சிய மனிதன், தொடர்ந்து தனது இனக்குழுவில் இருந்து இறந்து போனவர்களின் ஆவிக்கும், எதிர்க்குழுவில் இருந்து இறந்து போனவர்களின் ஆவிக்கும் அஞ்சத் தொடங்கினான். இவ்விரண்டு ஆவிகளில் தனது குழுவில் இறந்து போனவரின் ஆவியைத் தனக்கு நல்லது செய்யக்கூடிய கடவுளாகவும், எதிர்க்குழுவில் இருந்து இறந்துபோனவரின் ஆவியைத் தனக்குக் கெடுதல் செய்யக்கூடிய பேயாகவும் எண்ணத் தொடங்கினான் **(2015:44).**

நடுகல் வழிபாடுகள்

மருதனிளநாகன் பாடிய பாலைத் திணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள நடுகற்கள் குறித்த செய்திகளின்வழி, இத்தகைய ஆவி வழிபாடு பண்டைத் தமிழகத்தில் இருந்துள்ளது என்பதை உணர முடிகின்றது.

பெயரும் பீடு மெழுதி யதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்
வேலூன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்

வெருவரு தகுந கானம் **(அகம்.131:10-13)**

என்னும் அகநானூற்றுப் பாடற்பகுதி நடுகல் அமைந்துள்ள பகுதிகளில் நிலவியிருந்த அச்சத்தை வெளிக்காட்டுவதாக இருக்கின்றது. இறந்தவர்களின் பெயருடன் அவர்கள் இறந்ததற்கான காரணத்தையும் அதன் பெருமையையும் குறிப்பிட்டு எழுதப்பட்டிருக்கும் நடுகற்கள், தலைவன் கடந்து செல்லும் பாலைவழியில் காணப்படுகின்றன. அவற்றின் மேல் மயிலிறகு சூட்டப்பட்டு இருப்பது அக்கற்கள் அச்சத்தின் விளைவாக ஏற்பட்ட வழிபாட்டுக்கு உரியனவாக இருக்கின்றன என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது. வழிச்செல்வோருக்கு ஏற்படுகின்ற இவ்வச்சத்திற்கு உவமையாகவே அக்கற்களைச் சுற்றியும் நடப்பட்டிருக்கும் வேல்கள் பாடலில் காட்டப்படுகின்றன. இவ்வேல்கள் வேறுசில சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று இலைவடிவமாகவோ அல்லது முத்தலைச் சூலமாகவோ அமைந்திருக்கக் கூடும். வேலின் இத்தலைப்பகுதிக்குக் கீழே சதுரமான வடிவில் பலகை போன்ற ஒரு தோற்றம் அமைக்கப்பட்டிருக்கும். அதற்குக் கீழேதான் வேலின் கம்புப்பகுதி தொடங்குகின்றது. இவ்வமைப்பு முறை கொண்ட வேலை இப்போதும் சிற்றூர்ப் பகுதிகளில் நாம் காண முடியும். இது போன்ற வேல்கள் நடப்பட்டு இருப்பதைத்தான் மருதனிளநாகன் 'வேலூன்று பலகை' என்று குறிப்பிடுகின்றார். நடுகற்களும் அவற்றைச் சுற்றியும் இருக்கின்ற வேல்களும் என இத்தோற்றம் ஒரு பகைமுனை போன்று இருக்கின்றது என்ற கருத்தின்வழி, அந்நடுகற்கள் வழியைக் கடந்து செல்வோரின் பகைவருடைய நடுகற்களாக இருக்கலாம் என்னும் கருத்துப் பெறப்படுகின்றது.

தனக்கு அல்லது தனது குழுவுக்குப் பகையானவர்கள் / எதிரானவர்களின் நடுகற்கள் பேய்கள் உலவுகின்ற இடமாக இருக்கக் கூடும் என்னும் அச்சத்தை அக்கால இனக்குழு மக்கள் கொண்டிருந்தனர். இதற்கு இன்னுமொரு சான்றை அகநானூற்றிலிருந்து காண முடியும்.

கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென
மருங்கு னுணுகிய பேஎமுதிர் நடுகற்
பெயர்பயம் படரத் தோன்று குயிலெழுத்
தியைபுட னோக்கல் செல்லா தசைவுடை
னாறுசெல் வம்பலர் விட்டனர் கழியுஞ்
சூர்முத லிருந்த வோமையம் புறவு (அகம்.297:6-11)

மறவர்கள் தம்முடைய அம்புகளைத் தீட்டியதனால் விளிம்புகள் மழுங்கி, பேய்கள் நிலையாக உறைகின்ற நடுகற்களில் உள்ள எழுத்துக்களையும் தொடர்ந்து நோக்காமல், திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணமே செல்லும், பாலை வழிக்குப் புதியவர்கள் விட்டுச் சென்ற பொருட்களும் அச்சத்தைத் தருகின்ற காடு' என்கிறார் மருதனிள நாகன்.

இங்குப் பேய்கள் நிலையாகத் தங்கி வாழ்கின்ற நடுகற்கள் என்னும் பொருளுள்ள பாடற் பகுதி ஆய்வுக்குரியதாகும். நடுகற்களில் தெய்வங்கள் அல்லது பேய்கள் உறைகின்றன என்று கொண்டாலும், அது குறிப்பிட்ட இரண்டு இனக்குழுக்களுக்கிடையேயுள்ள உறவைப் பொறுத்து அமைகின்றது. ஆனால், இவ்விரண்டு குழுக்களிலும் சாராத புதியவர்களுக்கு அந்நடுகற்கள் எவ்விதத்தில் நன்மை அல்லது தீமை செய்யும் என்னும் வினா நம்முள் எழுகின்றது. இந்த ஐயத்தைப் போக்குவதற்காகவே 'பேஎமுதிர் நடுகல்' என்று அழுத்தமாகக் கூறுகிறார் கவிஞர். இனக்குழு மக்களுக்கே அல்லாமல் எல்லோருக்குமே அச்சத்தைத் தருகின்ற பேய் ஒன்று (அல்லது பல) அவ்விடத்தில் நிலையாகத் தங்கியிருக்கின்றது என்னும் பொருளைத் தருகின்ற முறையில் பாடல் அமைகின்றது. எனவே அத்தகைய நடுகற்கள் யாருடைய, என்ன செயலுக்கானது என்பது மேலாய்வுக்குரியதாகும்.

மற்றொரு பாடலில் நடுகற்களுக்கு விருப்பத்துடன் செய்யப்படும் வழிபாடுகள் சுட்டப்படுகின்றன.

பிடிமடிந் தன்ன குறும்பொறை மருங்கி
னட்ட போலும் நடாஅ நெடுங்க
லகலிடங் குயின்ற பல்பெயர் மண்ணி
நறுவரை மஞ்ச ளீர்ம்புறம் பொலிய
வம்புகொண் டறுத்த வார்நா ருரிவையிற்
செம்பூங் கரந்தை புனைந்த கண்ணி
வரிவண் டார்ப்பச் சூட்டிக் கழற்கால்
இளையர் (அகம்.269:6-12)

என்ற பாடற்பகுதியில் நடுகற்களுக்கு, அவற்றில் எழுதப்பட்டிருக்கும் பெயர்கள் மறையும்படி ஈரமான மஞ்சளைப் பூசியும், கரந்தைப் பூக்களாலான மாலையையும் அணிவித்துத் தமது புகழ் நிலைக்கும்படி அவற்றை வேண்டியிருக்கிறார்கள் என்பது தெரிய வருகின்றது.

தமக்கான நன்மையைக் கருதிக் கரந்தை மறவர்கள் வழிபாடு நடத்தியதைக் கொண்டு, அந்நடுகற்கள் அவர்களுடைய முன்னோருடையது என்றும், தமது நன்மைக்கான இறந்தவர்கள் என்பதால் அவர்கள் நடத்தியது தெய்வ வழிபாடு என்றும் அறியலாம்.

பிற வழிபாட்டு முறைகள்

மருதனிளநாகனின் இப்பாடல்களின்வழியாகப் பண்டைத் தமிழகத்தில் நிலவியிருந்த தொல்சமய வழிபாட்டு முறைகள் நமக்குத் தெரிய வருகின்றன. ஆயினும், திருப்பரங்குன்றத்தை, முருகன் அசுரனைக் கொன்ற செய்தியுடன் அவர் மற்றொரு பாடலில் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

தண்பரங்குன்று என்று பண்டைக்காலத் தமிழர்களால் அழைக்கப்பெற்ற திருப்பரங்குன்றத்தில், அங்குக் குடிகொண்டிருக்கும் முருகனுக்குப் பல்வகையான வழிபாடுகளும் நடைபெற்று வந்ததைச் சங்க இலக்கியங்களின் பிற பாடல்களும் சுட்டிக் காட்டுகின்றன. சான்றாக, பத்துப்பாட்டில் ஒன்றான திருமுருகாற்றுப்படை,

கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
சூரர மகளி ராடுஞ் சோலை **(முருகு.38-41)**

என்ற பகுதி, பூக்களைத் தூவி முருகனுக்கு நடந்த வழிபாட்டையும்

... *தோள் பெயரா*
நிணந்தின் வாய டுணங்கை தூங்க
யிருபே ருருவி னொருபே ரியாக்கை
யறுவேறு வகையி னஞ்சுவர மண்டி
யவுணர் நல்வல மடங்கக் கவிழிணர்
மாமுத றடிந்த மறுவில் கொற்றத்
தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய் **(முருகு.55-61)**

என்ற பகுதி, குருதிப் பலியுடன் முருகனுக்கு நடந்த வழிபாட்டையும் குறிப்பிட்டுக் காட்டுகின்றது. அனைத்துத் தரப்பு மக்களும் வழிபடக்கூடிய கடவுளாக முருகன் இருந்தான் என்பதற்குச் சான்றுகளாக இவை அமைகின்றன. பலவகையான பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் உடைய மக்கள் தத்தமக்கேற்றவாறு முருகனுக்கு வழிபாடுகள் நிகழ்த்தினர் என்பதை அறிய முடிகின்றது.

முடிவுரை

மேற்கண்ட சான்றுகளைத் தொகுத்துக் காணும்போது, தமிழகத்தில் நிலவிய வழிபாட்டு முறைகள் படிமலர்ச்சி நிலையில் அமைந்திருந்தனவா என்பதில் ஐயம் ஏற்படுகின்றது

(2014:173). இயற்கை வழிபாடு, ஆவி வழிபாடு, உயிர்ப்பாற்றல் வழிபாடு என்ற மானிடவியல் அறிஞர்தம் படிமுறைகள் ஒரே காலத்தில் நிகழ்ந்திருந்ததை மருதனிளநாகன் பாடல்கள் காட்டுகின்றன. எனினும், ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றியவுடன் அந்த ஒன்று அழிந்துவிட வேண்டுமென்பதில்லை என்ற முன்முடிவுடன் அணுகும்போது, இவ்வழிபாட்டு முறைகளைக் கால வரிசைக்குள் கொண்டுவர முடியும் என்பதும் நாம் அறியவேண்டிய ஒன்றாகும்.

துணைநின்றவை

- சரவணன் ப., **2015,** *சங்க காலம்,* கிழக்கு பதிப்பகம், சென்னை.
- சாமிநாதையர் உ.வே.(ப.ஆ)., **1956,** *பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியருரையும்,* கபீர் அச்சுக்கூடம், சென்னை.
- செயபால், இரா.(உ.ஆ)., **2007,** *அகநானூறு,* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- பக்தவத்சல பாரதி., **2014,** *திராவிட மானிடவியல்,* காலச்சுவடு பதிப்பகம், நாகர் கோவில்.
- **…………., 2007,** *கலித்தொகை மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்,* திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

ஒப்பீட்டு நோக்கில் திருக்குறளும் சுமதி சதகமும்

A comparative study of Thirukkural and Sumathisadagam

முனைவர் **சி.சாவித்ரி**
உதவிப்பேராசிரியர்
இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
savithritamiluniversity@gmail.com

Abstract: The connection of antiquity had been appeared between the Thamizh, Telugu society. Thereby it also reflected in the field, literature. Hence, the present paper aims to point out the modification occur between the two different language literature Thirukkural and Sumathisadagam.

Keywords: Thamizh, Telugu, literature, சுமதிசதகம், கெடுதல், திருவள்ளுவர், திருக்குறள்

இந்திய இலக்கியத்தில் அறநூல்களுக்குத் தனிச்சிறப்பிடம் உண்டு. மக்கள் நலமுடன் வாழவேண்டுமென்ற சிந்தனையில் அந்தந்த மொழிகளில் அறநூல்கள் காணப்படுகின்றன. தமிழில் திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறளையும், தெலுங்கில் பத்தெனவால் (கி.பி.12ஆம் நூ.) இயற்றப்பெற்ற சுமதிசதகம் என்ற அறநூலையும் ஒப்பிடுவதாக இக்கட்டுரை அமைகிறது. இவ்விரு நூல்களின் காலம், நூல் தோன்றியதற்கான காரணம், நூலின் கட்டமைப்பு, நூலில் உள்ள கருத்தியல்கள், அக்கருத்தியல்களை வெளிப்படுத்தக் கையாண்ட உத்திகளையும் விளக்கப்பட்டுள்ளன. மேலும், இரு நூல்களிலும் காணப்படும் கருத்தியல் ஒற்றுமை, கருத்தியல் வேற்றுமை, வேற்றுமையில் ஒற்றுமை, ஒற்றுமையில் வேற்றுமை, பிறமொழித் தாக்கம் போன்ற செய்திகளையும் விளக்குவதாக அமைகிறது.

காலம்

திருக்குறளின் காலம் கி.பி.2ஆம் நூற்றாண்டு அல்லது கி.பி.3ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என்பர். தமிழறிஞர்கள் கி.மு.31 என்று கூறுகின்றனர். சுமதி சதகம் பத்தென என்ற பத்ரபூபதி எனும் மன்னனால் இயற்றப்பட்டதாகும்(சுமதி சதகம், தமிழ் மொழிபெயர்ப்பு:2003)

தேவை

சமூகத்தில் தவறுகள் நிகழும்போது நீதி நூல்கள் தோன்றுகின்றன, இவ்விரு நூல்களும் சமுதாய நல்லொழுக்கங்களுக்காகத் தோன்றியவையாகும். மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்கமுறைகளின் முழு வடிவமே அறம் என்று கூறுவார். ஒழுக்கக் குறைவு ஏற்படும்போதுதான் ஒழுக்கத்தை நிலைநிறுத்த வேண்டிய தேவை ஏற்படுகிறது. அப்போதுதான் நீதி நூல்கள் வடிவமைக்கப்படுகின்றன. ஆக மக்களுக்கு அறிவு புகட்டும் விதத்தில் உருவானவைதான் நீதி நூல்கள்.

கருதுகோள்

1. அறத்தை எந்த வகையிலும் எடுத்துரைக்கலாம் என்ற எண்ணத்தில் இரு மொழி புலவர்களும் பல்வேறு உத்திகளை கையாண்டுள்ளார்கள்.
2. சுமதி சதகத்தில் தமிழ் மற்றும் சமஸ்கிருத மொழித் தாக்கம் உள்ளதாகத் தெரிகிறது.

நூலின் அமைப்பு முறை

எந்த ஒரு படைப்பினை எடுத்துக் கொண்டாலும் அதன் அமைப்பு முறையை புறம், அகம் என்று இரு வகையாகப் பகுத்துக் காணலாம். அதன் அடிப்படையில் இரு மொழி அற நூல்களின் புற அமைப்பினைக் கீழ்க்காணும் அட்டவணை வாயிலாக எடுத்துக்கூறப் பட்டுள்ளது.

திருக்குறள்													
அறம்					பொருள்							இன்பம்	
பகுதி	பாயிர.	இல்லற.	துறவற.	ஊழிய.	அரசிய.	அமைச்.	அரணியல்	கூழிய.	படையி.	நட்பிய.	குடியி.	களவியல்	கற்பியல்
அதிகாரங்கள்	1-4	5-24	25-37	38	39-63	64-74	75	76	77-78	79-95	96-108	109-115	116-133
குறள்	40	200	130	10	250	110	10	10	20	170	130	70	180

1. அரசியல் = 250
2. இல்லறம் = 200
3. கற்பியல் = 180
4. நட்பியல் = 170
5. குடியியல் = 130
6. துறவறம் = 130
7. அமைச்சியல் = 110
8. களவியல் = 70
9. பாயிரம் = 40
10. படையியல் = 20
11. ஊழியல் = 10
12. அரணியல் = 10
13. கூழியல் = 10

மொத்தம் = 1330

வடிவம்

- ஈரடி - குறட்பா
- முதலடியில் நான்கு சீர்கள், இரண்டாமடியில் மூன்று சீர்கள்
- ஒவ்வோர் அதிகாரத்திலும் பத்துக் குறள்கள்

மேற்கூறிய அட்டவணையின் வாயிலாகப் புறக் கட்டமைப்பை ஆராயும்பொருட்டுக் கீழ்க்கண்ட விளக்கங்கள் தெளிவுபடும்.

- திருவள்ளுவர் எந்த அறத்தை அதிகம் வளியுறுத்திக் கூறுகிறார் என்பதையும்
- அவர் வாழ்ந்த காலகட்டத்தில் சமுதாயத்தில் எந்த விசயத்துக்கு அறம் அதிகம் தேவைப்பட்டது என்பதனையும்,

மேற்காணும் கருத்துக்கணிப்புப் பட்டியலை வைத்து ஆய்வுத் தலைப்புகளைத் தெரிவு செய்யவும், கருதுகோள்கள் அமைத்துக் கொள்ளவும் பயன்படுகிறது.

மேலே கூறிய கருத்துக்கணிப்பை ஆதாரமாக்கிக் கொண்டு 'திருக்குறளில் இல்லறம்' 'திருக்குறள் காட்டும் அரசியல் சிந்தனைகள்' இது போன்ற பல ஆய்வுத் தலைப்புகளை அமைத்துக் கொள்ள இயலும்.

சுமதி சதகம் - புறக் கட்டமைப்பு

1. சதகம் என்றால் நூறு. சுமதி சதகம் நூற்று எட்டுப் பாக்களைக் கொண்டது.
2. நான்கு அடிகளை உடையது.
3. 'கந்தம்' என்ற பா வகையால் அமைக்கப்பட்டது.
4. ஒன்று மற்றும் மூன்றாம் அடியில் முச்சீரும், இரண்டாவது மற்றும் நான்காவது அடியில் ஐந்து சீர்களும் கொண்டது.
5. அனைத்துப் பாக்களிலும் நான்காவது அடியில் கடைசிச் சீர் 'சுமதி' என்று இருக்கும். இதற்கு 'மகுட்டம்' என்று பெயர்.
6. இதில் பால் பகுப்போ, அதிகாரப் பகுப்போ இல்லை.
7. பாடல்களில் சொல்லப்பட்ட கருத்தினை வைத்துச் சில பிரிவுகளாகப் பகுக்கப்பட்டன. அதனை ஆதாரமாகக் கொண்டு அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது.

எண்	தலைப்புகள்	பாக்களின் எண்கள்	மொத்தம்
1	நற்பொருள்	67	1
2	மனத்தூய்மை	70	1
3	நன்மக்கள்	5,21,48,108	4
4	அற்பன், சான்றோன்	4,14,15,26,93	5
5	அஞ்சுதல்	31,63	2
6	பண்புடைமை	3,6,8,11,13,17,19,32,36,44,47,54,56, 66,68,69,71,73,74,86,97,103,105	23
7	கெடுதல்	29,34,41,58,85	5
8	நீசம்	50,51	2

9	மூடன்	7,23	2
10	செல்ல தகா இடம்	25,35,39,52,53,61,75,76,96	9
11	சினம்	49	1
12	இடவலிமை	22	1
13	செல்வம்	20,24,37,43,45,46,57,59,82, 106	10
14	அறிவுடைமை	1,9,10,60,65,72,91,94,98	9
15	துரோகம்	2,62,80	3
16	துன்பம்	27	1
17	பயனுடைமை	33,64,77	3
18	நட்புறவு	38,78,79,81	4
19	பொருள் பெண்டிர்	40,42,55,83,100,101	6
20	இன்னாசெய்யாமை	16	1
21	மானம்	28	1
22	ஊழ்வினை	84	1
23	கற்புடைமை	107	1
24	வலிமை	87	1
25	அரசுடைமை	88,89,90,92,95	5
26	கல்லாமை	102	1
27	இனியவை கூறல்	99	1
28	சாதி	12,18,30,104,109	5
		மொத்தம் =	108

அகக் கட்டமைப்பு

அகக் கட்டமைப்பு பொருள் அடிப்படையில் அமைந்திருப்பது. இதில் நூல்களில் சொல்லப்பட்ட செய்திகளை எடுத்துரைக்கும் நிலையில் ஆசிரியர்கள் தமக்கென ஒரு பாணியைக் கையாண்டிருப்பார்கள். அதனைத்தான் அணுகுமுறை என்று சொல்லப்படுகிறது. அந்த அணுகுமுறையில் பல உத்திகளைக் கையாண்டிருப்பார்கள். அந்த அடிப்படையில்தான் இருமொழி நூல்களிலும் அறக்கருத்துக்கள் எடுத்துக் கூறுவதற்கு ஆசிரியர்கள் பல உத்திகளைக் கையாண்டதாகத் தெரிகிறது. அவற்றை விரிவாகப் பார்க்கலாம்.

அணுகுமுறை

எந்த ஒரு படைப்புகளானாலும் படைப்பாளன் தனக்கே உரிய பாணியில் சில உத்திகளைக் கையாண்டு இருப்பான். அந்தவகையில் இருமொழி நூல்களின் அறக்கருத்துக்களை எடுத்துரைக்கும் அணுகுமுறையை ஆராய்ந்து பார்க்கும்போது பதின்மூன்று வகையான உத்திகளைக் கையாண்டு உள்ளதாகத் தெரிகின்றது. அவை,

1. அறிவுறுத்தல்
2. ஒப்பிடுதல்
3. பலன் கூறல்
4. நேர்படக் கூறல்
5. மறைமுகமாகக் கூறல்
6. செய்தி வாக்கியமாகக் கூறல்
7. செய்தி வாக்கியம் + ஒப்பீடு
8. செய்தி வாக்கியம் + பலன்
9. அறிவுறுத்தல் + ஒப்பீடு
10. ஒப்பீடு + பலன் கூறல்
11. பலன் + அறிவுறுத்தல்
12. கருத்திற்கு தொடர்பு படுத்திக் கூறல்
13. கருத்திற்கு தொடர்பில்லாமல் கூறல்

மேற்காணும் பதின்மூன்று வகையான உத்திகளை சுமதி சதகக்காரர் கையாண்டுள்ளதைத் திருக்குறளோடு ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்றது.

1.அறிவுறுத்தல்

அறிவுறுத்தல் என்பது கட்டளை வாக்கியமாக அமைந்திருப்பது. இதில் போ, போகாதே, செய், செய்யாதே, இரு, இருக்காதே என்பன போன்ற பல்வேறு சொற்களால் பொருளை வெளிப்படுத்தக் கூடியதாக அமைகின்றன. இந்த உத்தியை இரு நூலாசிரியர்களும் கையாண்டுள்ளனர்.

சான்று :

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை ***(குற்றம் கடிதல் : 9)***

(எப்போதும் தன்னைத் தானே மிகவும் உயர்வாக வியந்து எண்ணிக் கொள்ளக்கூடாது; நன்மை விழையாச் செயல்களைச் சிந்திக்கவும் கூடாது)

appiccuvaaDu vaidyuDu
eppuDu eDategaka paaRu eeRunu dvijuDun
joppaDinayuura uNDumu
coppaDakunnaTTi uura jorakumu sumati! (7)

(கடன் தருபவனும், நோய்வாய்ப்பட்டால் மருந்து தருவதற்காக மருத்துவனும், வற்றாத நதியும் பார்ப்பனரும் இல்லாத ஊரில் குடியேறாதே).

குறளில் கூடாது என்ற வார்த்தையும், சுமதி சதகத்தில் குடியேறாதே என்ற வார்த்தையும் பயன்படுத்தியதால் இவை அறிவுறுத்தல் என்ற உத்திக்குச் சான்றாகக் கூறலாம்.

2.ஒப்பிடுதல்

ஒப்பிடுதல் உத்தியை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. உவமைகளை முன்னால் கூறிப் பின்பு கருத்தைச் சொல்லுதல்
2. கருத்தை முன் கூறி பின்னரே உவமையைப் பயன்படுத்துதல்

2.1.*உவமைகளை முன்னால் கூறி பின்பு கருத்தை சொல்வது :*

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை ***(பொறையுடைமை :1)***

இந்தக் குறட்பாவில் முதலில் உவமையைச் சொல்லி, பின்பு அறம் சொல்லப்பட்டிருக்கிறது.

kasugaaya kaRaci cuucina
masalaka tana vagarugaaka madhuram bagunaa?
pasa kalagu yuvatu lunDaga
pasi baalala ponduvaaDu paSuvura sumathi.

(விளையாத பிஞ்சுக்காய்களைக் கடித்துத் தின்றால் துவர்ப்பே மிகுமன்றி இனிமை இருக்காது. அதுபோன்றே பசை மிக்க இளநங்கையர் இருக்க, அவரை விடுத்துப் பக்குவமற்ற இளம்பேதையரை நாடுகின்றவன் விலங்கே ஆவான். (முன்னாளில் அதிபாலிய விவாஹம் நடந்து வந்ததை நினைவுகூர்கிறது)

2.2.கருத்தை முன் கூறிப் பின்னரே உவமையைப் பயன்படுத்துதல்

கருத்தை முன் கூறி அதை மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறல். அதாவது செய்தி முன்னும் ஒப்பீடு பின்னும் வரும் நிலை.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனிருப்பக் காய்கவர்ந் தற்று ***(இனியவை கூறல் : 10)***

(இனிய சொற்கள் ஏராளமாக இருக்கையில், அதற்கு மாறாகக் கடுஞ்சொல்லைக் கூறுதல், கனிகள் இருக்கையில் காயைத் தின்பதற்கு ஒப்பாகும்)

uttamaguNamulu niicunaku
etteRakununa kaluganeerpu eyyeDalan taa
ettina karagi poosina
ittaDi bangkaara magunee yilaloo sumati!

(அற்பர்களுக்கு நற்குணங்கள் அமையாது. பித்தளையைக் காய்ச்சி உருக்கினாலும் தங்கமாகுமா?)

இரண்டு பாக்களிலும் முதல்வரி செய்தியைக் கூறும் நிலையிலும் இரண்டாம் வரி அதற்கு ஒப்புமையைக் கூறும் வண்ணமும் அமைந்துள்ளதால் இதனைக் கருத்து முன்னும், உவமை பின்னும் கூறும் உத்தி எனலாம்.

3.*பலனைக் கூறல்*

ஒரு குறளில் ஒரு கருத்தைச் சொல்லி அதற்கான பலனையும் சேர்த்து கூறல். இது இரண்டு நூல்களிலுமே பயன்படுத்தப்பட்டுள்ளன.

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும் ***(இன்னா செய்யாமை : 9)***

(ஒருவன் பிறர்க்கு முன்னர் துன்பம் செய்தால், அவனுக்குப் பின்னர் அத்துன்பம் பிறர் செய்யாமல், தானே அவனைத் தேடிக்கொண்டு வரும்)

Oka uuriki oka karaNam
Oka tiirpariyaina gaaka nogi taRacu nainan
Gakavikalu gaaka yuNDunee
Sakalambunu koTTu vaDaka sahakamu sumathi (22)

(ஒரு ஊருக்கு ஒரு கணக்குபிள்ளை, ஒரேவொரு நியாயம் வழங்குபவனும் இருக்கவேண்டும். அப்படி இன்றி பலபேர் புகுந்து அதிகாரம் செலுத்தத் தொடங்கினால் ஊர் தாறுமாறாகி, எல்லாமே கெட்டுப் பாழ்பட்டு அமைதியிழந்து அல்லலுறுதல் இயல்பேயாகும்.

4.*நேர்படக் கூறல்*

நேர்படக்கூறல் எனப்படுவது ஒரு கருத்தினை வெளிப்படையாகக் கூறுதல். இதை இரண்டு நூல்களும் பின்பற்றியுள்ளன.

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளபடும் ***(தெரிந்து வினையாடல் :1)***

(நன்மைகளையும் தீமைகளையும் நன்கு ஆராய்ந்து பார்த்து நன்மையைச் செய்து முடிக்கும் தன்மையுடையவனையே ஆட்கொள்ள வேண்டும்)

Iccunatee vidya raNamuna
Joccunatee magatanambu sukaviisvarulan
Meccunatee neerpu vaaduku
Vaccunathee kiiDu summu vasudhanu sumatii! (11)

(பிறருக்கு ஈவதே கல்வி (தனக்கு வேண்டிய நலன்களைத் தருவதே கல்வி). போர்க்களம் புகுவதே ஆண்மை. புலவரால் போற்றப்படுவதே நல்லாற்றல் ஆகும். விவாதங்கள் கேட்டினைத் தரும்)

5.*மறைமுகமாகக் கூறல்*

அஃறிணைப் பொருள்களின் தன்மையை நேரடியாகக் கூறிச் செல்வது. இதில் அறிவுறுத்தலோ, ஒப்புமையோ இருக்காது. பெரும்பாலும் இது செய்தி வாக்கியமாகவே இருக்கும். இவ்வுத்தி திருக்குறளில் கையாளப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் சுமதி சதகத்தில் காணப்படுகின்றது. அதனைக் காட்டும் பாடல் வருமாறு:

Kanakapu simhaasanamuna
Sunakamunu kuurcunNDa beTTi subha lagnamunan
Donaraga paTTamu kaTTina
venukaTi guNameela maanu vinaraa sumathi! (26)

(பொற்சிம்மாசனத்தில் சுபமுகூர்த்தத்தில் நாயை உட்காரவைத்துப் பட்டம் கட்டினாலும், தன் இயல்பான முந்தைய குணத்தை விட்டுவிடாது. அதுபோலத்தான் அற்பர்களை உயர்பதவியில் அமர்த்துவது ஆகும் என்பது கருத்து. தத்தம் இயல்புபடியே மனிதர்கள் இருப்பார்கள்.)

ஒரு கருத்தினை நேரடியாகக் கூறாமல் மறைமுகமாகக் கூறுவது. அதாவது அஃறிணைப் பொருள்களை வைத்து அறத்தைக் கூறும் நிலை. இது சமஸ்க்ருத மொழியில் உள்ள ஹிதோபதேசத்தின் தாக்கமாக இருக்கலாம்.

6.*செய்தி வாக்கியமாகக் கூறல்*

ஒரு செய்தியை இதுதான் இப்படித்தான் என்று திருத்தமாகக் கூறல். இதில் உண்மை நிலை அப்படியே தெரியவரும். இந்த உத்தி இரு நூல்களிலும் கையாளப்பட்டுள்ளது என்பது தெரியவருகின்றது.

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு ஈயப் படும் **(கேள்வி : 2)**

karaNamu saadai yunnanu
kari mada muDiginanu paamu karavaka yunnanu
dhara teelu miiTakunnanu
gara maruduga lekkagonaru gadaraa sumati ! (31)

(கணக்குப்பிள்ளை அப்பாவியாக இருந்தாலும், யானைக்கு மதம் இல்லாவிட்டாலும், பாம்பு கடிக்காமல் இருந்தாலும், தேள் கொட்டாவிட்டாலும் மக்கள் அவற்றைப் பொருட்படுத்த மாட்டார்கள். (ஆதலின் மனிதன் தன் வலிமையைக் காட்டவேண்டும். இல்லாவிட்டால் பிறர் எளிதாகக் கருதி இடையூறு செய்வார்கள்.)

7.*செய்தி வாக்கியம் + ஒப்பீடு*

ஒரு செய்தியை நேரடியாகக் கூறி அச்செய்தியினை மற்றொரு பொருளோடு ஒப்பிடுதல்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்

பழித்த தொழித்து விடின் **(கூடா ஒழுக்கம் : 10)**

(சான்றோர் பழித்த தீயொழுக்கத்தை விட்டு விலகிவிட்டால், தவத்திற்குரிய புறக்கோலங்களாகிய மொட்டை அடித்தல், முடி வளர்த்தலும் வேண்டாம்.

daggaRa koNDemu seppeDu
preggaDa palukulaku raaju priyuDai maRi taa
neggu praja kaacarinjcuTa
boggulakai kalpa taruvu boDucuTa sumati! (58)

(பக்கத்தில் இருந்துகொண்டு புறங்கூறிக் கோள்மூட்டும் அதிகாரிகளை நயந்து மன்னன் அவர்கள் பேச்சைக் கேட்டுக் குடிமக்களை அலைக்கழித்துத் தீமைபுரிதல் என்பது வேண்டுவதை எல்லாம் தரும் கற்பக மரத்தை வெட்டிக் கரிக்காக நாசப்படுத்துவது போலாகும்.)

8. *செய்தி வாக்கியம் + பலன்*

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள ***(சுற்றந் தழால் : 7)***

(காக்கை, கிடைத்த உணவை மறைக்காமல் தன் இனத்தைக் கூவியழைத்தே உண்ணும்; அத்தகைய தன்மை உடையவர்க்கே, செல்வங்கள் பலவுமுண்டு)

Dhiirulaku cuuyu meelathi
Saarambagu naarikeeLa salilamu bhangkin
Gauravamunu maNi miidaTa
Bhuumi skhaavahamu nagunu bhuviloo sumatii ! (60)

(நல்ல அறிவுடையவர்களுக்குச் செய்த உதவி சாரமான (வேரினில் ஒருநாள் ஊற்றிய) நீரைத் தருவது போல பின்னாளில் நிச்சயமாக உதவும் பெருமையும் இன்பமும் கிடைக்கும்)

9.*அறிவுறுத்தல் + ஒப்பீடு*

திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங் கில் ***(சொல்வன்மை : 4)***

(ஒருவர் சொல்ல நினைப்பதைச் சொல்லின் திறனை அறிந்து சொல்ல வேண்டும். அந்தச் சொல் வன்மையினும் சிறந்தனவாக, அறமும் பொருளும் இல்லை)

Paniceeyu neDala daasiyu
Anubhavamuna rambha mantra yaaloocanalan
Dana bhukthi yeDala talliyu
Nana dana kulakaanta yuNDa naguraa sumatii! (70)

(மனைவியானவள் கணவனுக்குப் பணிவிடை செய்யும்போது வேலைக்காரியாகவும், இன்ப நுகர்வில் ரம்பையாகவும், ஆலோசனை கூறும்போது மந்திரியாகவும் உணவு பரிமாறும்போது தாயாகவும் அமைந்து கணவனை மகிழ்வித்தல் வேண்டும்)

10.பலன் + அறிவுறுத்தல்

வேண்டின் உண்டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல ***(துறவு : 2)***

(துறவை மேற்கொண்டபின், இப்பிறவிலேயே அடையும் இன்பங்கள் பலவாம். அவற்றைப் பெறவிரும்பினால், வாய்த்தபோதே துறக்கவேண்டும்)

11. ***ஒப்பீடு + பலன் கூறல்***

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பலர்க்கு ***(தவம் : 7)***

(தீயிலிட்டுப் பொன்னைச் சுடச்சுடப் புடம்போடும் அளவிலும் ஒளிவிடுவது போலத் தவத்தில் துன்பம் வருத்திட வருத்திட ஞானம் என்பது பிறக்கும்)

Kamalamulu niiTa baasina
Kamalaaptuni rasmi sooki kamalina bhankin
Tamatama nelavulu tappina
Tama mitrulee StrulauTa tadhyamu sumati ! (28)

(தாமரை நீரில் இருக்கும்போது தாமரை மணாளனாகிய சூரியனின் கதிர்கள் பட்டுப் பொலிவுறும். அதே தாமரை நீரை விட்டு நீங்கி நிலத்தில் கிடந்தால் அதே கதிர்கள் பட்டு வாடிப்போகும். அது போன்றே தத்தம் நிலை தாழ்ந்து போனால், அதே நண்பர்களே பகைவர்களாவார்கள். ஆதலின் தம் நிலை தெரிந்து நடந்து கொள்ளவேண்டும்)

12.*வினா வாக்கியமாகக் கூறல்*

வினா வாக்கியமாகக் கூறும் உத்தியினைப் பல இடங்களில் இருவரும் கையாண்டுள்ளார்கள்.

குறிப்பின் குறிப்புணரா ஆயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண் ***(குறிப்பறிதல் : 5)***

(ஒருவரின் முகக்குறிப்பை கொண்டு, அகக்குறிப்பை உணராவிட்டால், ஒருவன் தான் பெற்றுள்ள உறுப்புகளுள் கண்களால் ஆகிய பயந்தான் என்ன?)

Uttama guNamulu niicuna
ketteRaguna Kaluga neercu neyyeDalandaa
ettinjci kaRagi poosina
ittaDi bangaara magunee ilaloo sumati ! (14)

(அற்பர்களுக்கு நற்குணங்கள் அமையாது, பித்தளையைச் காய்ச்சி உருக்கினால் தங்கமாகுமா?)

13.*தொடர்பு நிலையில் கூறல்*

சொல்ல வந்த சிந்தனைக்கும் பாடலில் உள்ள செய்திக்கும் தொடர்புபடுத்திக் கூறும் நிலை. இவ்வுத்தி இரு நூல்களிலும் காணப்படுகிறது.

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வான்என்று
அப்பால்நாற் கூற்றே மருந்து ***(மருந்து : 10)***

(நோயுற்றவன், நோய் போக்கும் மருத்துவன், அவனின் மருத்துவ முறை, உடனிருந்து உதவுபவன் என, மருத்துவ முறை அந்த நான்கு கூறுகளை உள்ளடக்கியது).

appiccuvaaDu vaidyuDu
eppuDu edategaka paaRu eeRunu dvijuDun
joppaDina yuuranunDumu
coppaDanaTTi yuura jorakumu sumathi! (7)

(கடன் தருபவன், மருத்துவன், இடையுறாமல் நீரோடும் ஆறு, அந்தனன் இருக்கும் ஊரானால் அங்கு சென்று வாழ்வாயாக, அப்படி இல்லாத ஊருக்குச் செல்ல வேண்டாம்)

14.*தொடர்பற்ற நிலையில் கூறல்*

இவ்வுத்தி திருக்குறளில் இருப்பதாகத் தெரியவில்லை. சுமதி சதகக்காரர் பல இடங்களில் இவ்வுத்தியைக் கையாண்டுள்ளார்.

alluni manjci tanambunu
gollani saahithyavidya koomalinijamun
bolluna danjcina biyyamu
tellani kaakulu leevu teliyura sumatii (8)

ஒரே பாவில் ஐந்து பொருள்களைக் கூறி இவை உலகத்தில் இல்லை என்று கூறியுள்ளார். இப்பாவில் சொல்லப்பட்ட ஐந்து பொருள்களும் ஒன்றோடொன்று தொடர்பற்றவையாக இருந்தாலும் இவற்றை உலகத்தில் இல்லாத பொருள்கள் என்ற நிலையில் கூறியுள்ளார்.

கருத்தியல் ஒப்பீடு

இரு மொழி நூலாசிரியர்களும் கூறியது அறக் கருத்துக்களே ஆனாலும், அக் கருத்துக்களை ஒப்பீட்டு ஆராயும் பொருட்டு அவ்வொப்பீட்டினை -

1. கருத்தியலில் ஒற்றுமை
2. கருத்தியலில் வேற்றுமை
3. கருத்தியல் ஒற்றுமையில் வேற்றுமை
4. கருத்தியல் வேற்றுமையில் ஒற்றுமை

என்ற நான்கு தலைப்புகளின் கீழ் ஆராயப்பட்டுள்ளன. அவற்றின் விளக்கங்கள் கீழ் வருமாறு:

1.*கருத்தியல் ஒற்றுமை*

எந்தவோர் ஒப்பீட்டாய்வை மேற்கொண்டாலும் அதில் பெரும்பான்மையாகவோ அல்லது சிறுபான்மையாகவோ ஒற்றுமைகள் காணப்படுவது என்பது இயல்பேயாகும். அந்த

வகையில் திருக்குறள் மற்றும் சுமதி சதகம் இரு நூல்களிலும் பல இடங்களில் ஒன்றுபட்டே காணப்படுகிறன. அவற்றில் சில -

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு ***(அறிவுடைமை : 3)***

எது 'அறிவு' என்பதற்கு வள்ளுவர் சொன்ன இந்தக் கருத்தையே சுமதி சதக்ககாரரும் -

Vinadagu nevvaru ceppina
Vinainantanee veega paDaka vivarimpadagun
Kani kalla nijamu talisina
manujuDepoo niitiparuDu mahiloo sumati!

(யார் என்ன சொன்னாலும் கேட்டு, சினம் கொள்ளாமல் நன்கு ஆராய்ந்து உண்மை எது, பொய் எது என்று எண்ணிப் பார்த்து அதற்குத் தக்க நடப்பவனே அறிவுடையவன்)

இதில் சிறு வேறுபாடு என்னவென்றால் வள்ளுவர் 'அறிவு' என்று கருத்தாகச் சொன்னதை சுமதி சதகக்காரர் 'அறிவுடையவன்' என்று உயர்திணையைப் பயன்படுத்தியுள்ளார். இருப்பினும் 'உண்மை அறிதல்' என்ற கருத்தை இருவரும் ஒரே விதமாகவே கூறியுள்ளார் எனலாம்.

2.கருத்தியல் வேற்றுமை

இரு மொழி நூல்களிலுமே கூறப்பட்டுள்ள சாதிச் சிந்தனை மற்றும் பொருள் பெண்டிர் விசயத்தில் இருமொழி ஆசான்களிலும் கருத்து வேறுபாடு தெரிகிறது. வள்ளுவர் எந்த ஒரு பாவிலும் சாதிப்பெயரைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. பொதுநிலையில் மட்டுமே கூறிச் சென்றுள்ளார். இவர் 'பெருமை' என்ற அதிகாரத்தில் 'சாதி' என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் அனைத்து உயிர்கள் என்றும், மேல்நிலை, கீழ் நிலை என்றும், பெரியோர் சிறியோர் என்றும் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

சான்று:-

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழில்லார் கீழல் லவர் ***(பெருமை : 3)***

(மேல்நிலையில் இருப்பினும் மேன்மைப் பண்பிலாதவர் மேலானவர் அல்லர். கீழ் நிலையில் இருப்பினும் கீழ்மைப் பண்பிலாதவர் கீழானவரல்லர்)

இக்குறளில் வள்ளுவர் எங்கேயும் சாதிப்பெயரைக் குறிப்பிடவில்லை. மாறாக மேலோர், கீழோர் என்ற சொற்களை அனைத்துச் சாதியினரையும் பொதுநிலையில் வைத்து கூறியதாகத் தெரிகிறது. ஆகையால் தான் குறள் 'உலகப் பொதுமறை' என்றழைக்கப் பெற்றது.

சுமதி சதகக்காரர் பெரும்பாலான பாக்களில் பல இடங்களில் சாதிப்பெயரைக் கூறியுள்ளதை அறியமுடிகிறது. குறிப்பாக பிராமணர்(7), குயவர்(12), யாதவர்(18), காப்பு

(செட்டியார்), பறையர், பொற்கொல்லர், அம்பட்டன்(104), வேசரபு ஜாதி(109) என்று சாதிப் பெயர்களைப் பயன்படுத்தியுள்ளார். சான்றுக்கு ஒன்று -

அரசன் என்பவன் யார்யாரோடு நட்புக் கொள்ளக் கூடாது என்பதைக் குறிக்கும் ஒரு பா -

mee lenjcani maalinyuni
maalalu agasaalavaani mangali hitugaa
neelina narapati raajyamu
neela galasi poovu gaani negadu sumati ! (104)

(நன்மையை எண்ணாதவன், பறையர், பொற்கொல்லன், அம்பட்டன் இவர்களோடு நட்புக் கொண்ட அரசனின் ராஜ்ஜியம் மண்ணோடு மண்ணாகி விடுமே அன்றிச் சிறந்து விளங்காது).

மேற்கண்ட பாவில் சுமதி சதகக்காரர் நன்மையைக் கருதாதவனோடு சேர்த்து மூன்று சாதியினரையும் குறிப்பிட்டுள்ளார். வள்ளுவத்திற்கு மாறாக சாதிப்பெயர்களைப் பயன்படுத்திய நிலையில் வள்ளுவரில் இருந்து சுமதி சதகக்காரர் வேறுபட்டு நிற்கின்றார். ஆக இது வேற்றுமை என்று கூறலாம். மேலும் திருவள்ளுவர் காலத்தில் சாதிப் பாகுபாடு இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் சுமதி சதக்கக்காரர் காலத்தில் சாதியைப் பற்றிய சிந்தனை மிக அதிகமாகவே உள்ளதை சுமதி சதகத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

3.ஒற்றுமையில் வேற்றுமை

படைப்பிலக்கியங்களை ஒப்பாய்வு செய்யும் நிலையில் இருநூல்களுக்கிடையே கருத்து ஒற்றுமை இருப்பினும், அக்கருத்துக்களை எடுத்துரைக்கும் பாங்கில் வேற்றுமைகள் இருக்கக் கூடும். அந்நிலையில் சில கருத்துகள் இருமொழி ஆசான்களுக்கிடையே ஒன்றுபட்டு இருந்தாலும், அக்கருத்துக்களை எடுத்துக்கூறும் வகையில் இருவருக்கும் இடையில் வேற்றுமை காணப்படுகிறது எனலாம். சான்றாக -

ஈன்ற பொழுதும் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் ***(மக்கட்பேறு : 9)***

Putroosahamu tanDriki
putruDu janminjcinapuDe puTTadu, janulaa
putruni kanukoni pogaDaga
putrootsaahamu naaDu pondura sumatii ! (108)

(விவேகத்துடன் கூடிய தந்தைக்கு மகன் பிறந்த மாத்திரத்திலேயே மகிழ்ச்சி கிட்டாது. அந்த மகனைப் பார்த்து மக்கள் அவன் குணங்களை மெச்சி, போற்றி புகழும்போதுதான் தந்தைக்கு மகன் பிறந்த மகிழ்ச்சி கிடைக்கும்)

வள்ளுவர் தாய் என்று சொன்னதை சுமதி சதகக்காரர் தந்தை என்று சொல்லியிருக்கிறார். இருவரும் ஒரே கருத்தினைச் சொல்ல வந்தாலும் பலன் கிட்டுவதில் யாருக்கு மகிழ்ச்சி என்பதில் இருவரும் வேறுபடுகின்றனர். வள்ளுவர்,

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் ***(மக்கட்பேறு : 7)***

(தந்தை தன் மகனுக்குச் செய்யும் நன்மையாவது, சான்றோர் அவைக்களத்துள் அம்மகனை முதன்மை வாய்ந்தவனாக இடம்பெறச் செய்தலாகும்)

என்று கூறிய இந்தக் குறளின் அடிப்படையில் சுமதி சதகம் தந்தை என்று கூறியிருக்கலாம்.

4.வேற்றுமையில் ஒற்றுமை

இருமொழி நூல்களையும் ஆராய்ந்து பார்க்கும்போது மிகக் குறைவான எண்ணிக்கையில் கருத்தியல் வேறுபட்டு இருந்தாலும் அறத்தை விளங்கவைக்கும் நிலையில் இருவரும் ஒரே உவமைகளைக் கையாண்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அத்தகு பாக்கள் -

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று ***(இனியவை கூறல் :10)***

kasugaaya kaRaci cuucina
masalaka tanavagaru madhuram bagunaa?
vasa galugu yuvatu lunDaga
pasibaalala pondh vaaDu pas'uvura sumathi ! (32)

(விளையாத பிஞ்சுக்காய்களைக் கடித்துத் தின்றால் துவர்ப்பே மிகுமன்றி இனிமை இருக்காது. அது போன்றே பசைமிக்க இளநங்கையர் இருக்க அவர்களை விடுத்து பக்குவமற்ற இளம்பேதையரை நாடுகின்றவன் விலங்கே ஆவான்)

மேற்கூறிய இருவரின் பாக்களிலுமே கருத்து வேறுபட்டு இருக்கிறது. வள்ளுவர் இனிய சொற்கள், தீய சொற்கள் என்று இருவகைச் சொற்களைப் பற்றிப் பேசுகிறார். தெலுங்கு கவி சிறுமிகளையும், வயது வந்த கன்னியரையும் பற்றியும் பேசுகிறார். இருவரும் சொல்ல வந்த செய்தி வேறானாலும் இருவரும் தம் கருத்துக்களை விளங்கவைக்க எடுத்துக்கொண்ட உவமைகள் ஒன்றாகவே அமைந்துள்ளன. வள்ளுவர் காய், கனியை வரிசையாக தீய சொற்கள், இனிமையான சொற்களுக்கும் உவமப்படுத்தியுள்ளார். அதே உவமையைத் தெலுங்கு கவி சிறுமிகளுக்குக் காயையும், வயது வந்த கன்னியருக்குக் கனியையும் ஒப்புமைப்படுத்திக் காட்டியுள்ளார். இந்த இடத்தில் வள்ளுவர் சொன்ன கருத்து உள்ளுறை உவமையாக எடுத்துக் கொண்டால் சுமதி சதகம் கூறியதையே வள்ளுவர் உள்ளுறை உவமையாகச் சொல்லி இருக்கலாம் என்று எண்ணலாம்.

பொது மகளிர்

பொதுமகளிரைப் பற்றி இருவரும் கூறியிருந்தாலும் வள்ளுவர் 10பாக்களிலும், சுமதி சதககாரர் ஐந்து (40,55,83,100,101) பாக்களிலும் கூறிச் சென்றுள்ளார். பொதுமகளிரின் பண்புகள், அவர்களால் உண்டாகும் தீமைகள், பொதுமகளிரை நாடிச் செல்பவரின் பண்புகள், அவர்களுக்கு ஏற்படும் தீய விளைவுகள், பொதுமகளிரிடம் செல்லாதவரின் பண்புகள்

போன்றவற்றையும், மேலும் சடலம், பேய் போன்றவற்றுக்கு அவர்களை ஒப்புமைப்படுத்திக் கூறும் நிலையும் வள்ளுவர் பாக்களில் தெரிகிறது.

தெலுங்குப் புலவர் பொதுமகளிரைப் பற்றி ஐந்து பாக்களில் சொல்லி இருந்தாலும், அப்பாக்களில் அவர்களின் அன்பு, சத்தியம் போன்ற பண்புகள் எப்படிப்பட்டவை என்பதையும், அவர்களுக்குள்ள பொருளாசை பற்றியும் உவமைகளோடு எடுத்துக் கூறியுள்ளார். ஒரு பாவில் மட்டும் பொதுமகளிரை உவமைக்குப் பயன்படுத்தியுள்ளார். இது போன்று பொதுமகளிரை உவமைக்குப் பயன்படுத்தியதைக் குறளில் காணமுடியவில்லை.

பொதுவாக இருமொழிப் புலவர்களும் பொதுமகளிரை நம்பலாகாது என்ற கருத்தினையே முன்வைத்துள்ளார்கள்.

மொழிபெயர்ப்பும் தழுவல்களும்

இருமொழி நூல்களையும் ஆராய்ந்து பார்க்கும்போது திருக்குறளின் அமைப்பு முறையை உற்றுநோக்கும்போது அந்நூலுக்கு முன்பே செம்மையான இலக்கிய வளம் இருந்திருக்கக்கூடும் என்ற எண்ணம் தோன்றுகிறது. கருத்துக்களின் வெளிப்பாடு, தெளிவு, ஒழுங்குமுறை இவையெல்லாம் அவற்றுக்குக் காரணங்களாகின்றன. அப்படி இருக்கும்போது வள்ளுவர் தனக்கு முன் உள்ள நூல்களைப் பின்பற்றியும், அல்லது முன்னோர்களின் அறக் கருத்துக்களைக் கேட்டோ இந்நூலை அமைத்திருக்கலாம் என்ற எண்ணப்பாடு தோன்றுகிறது.

ஆனால், தெலுங்கு நூலான சுமதி சதகத்தில் ஆசிரியர் சமஸ்கிருததில் உள்ள நீதி நூல்களான ஹிதோபதேசம் மற்றும் சாணக்கியனின் நீதிமாலிகாவினையும் பல இடங்களில் பின்பற்றியுள்ளார் என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன. பத்தென ஹிதோபதேசத்தில் உள்ள சுலோகத்தை அப்படியே தெலுங்கு மொழியில் மொழிபெயர்த்துள்ளார் எனலாம். சான்று -

Tatra mitra na vastavyam yatranaasti catushTayam
RuNadaataa ca vaidyaSca Srootriya: sujalaanadii (hitoo : 116)

(நண்பனே! கடன் தருபவன், மருத்துவன், வேதம் அறிந்த பண்டிதன், நல்ல நீர் உள்ள நதி - இவை நான்கும் எந்த இடத்தில் இல்லையோ அங்கே குடியேறாதே!)

இதே அறத்தை சாணக்கியனும் கூறியுள்ளார். அது என்னவென்றால் - 'செல்வந்தன், ஞானி, தன் மக்களைக் காக்கும் அரசன், நீர் வசதி மட்டுமல்லாமல் மருத்துவரும் இல்லாத ஊர் ஒரு நாள் கூட குடியேறத் தகுந்தது அல்ல' என்றார். சாணக்கியனின் அர்த்தசாத்திரமும், ஹிதோபதேசத்தைப் போலவே ஒத்த கருத்து உடையதாக இருப்பினும் சாணக்கியன் பார்ப்பனருக்குப் பதிலாக ஞானியையும், கூடுதலாக அரசனையும் சேர்த்துள்ளார். இதற்குக் காரணம் சாணக்கியன் பிராமணனாக இருப்பினும் அவர் அறிவைத்தான் நம்புகிறார். அது மட்டுமல்ல, பேரரசனுக்குச் சிறந்த ஆலோசகராய் இருந்த்தாலோ என்னவோ ஊரென்றால் அரசனும் இருக்கவேண்டும் என்று சொல்லி இருக்கலாம். ஆனால் பத்தென ஹிதோபதேசத்தில் உள்ள இது தொடர்பான சுலோகத்தை மட்டுமே தெலுங்கில் மொழிபெயர்த்திருக்கலாம். அந்தப் பா -

appiccuvaaDu, vaidyuDu
eppuDu eDategaka paaRuneeRunu dvijuDun
joppaDina yuura yuNDumu
joppaDakunnaTTi yuura jorakumu sumati! (7)

அதன் அடிப்படையில் நீதியை தாமாகவும் சொல்லலாம், பிறர் எடுத்துரைத்த கருத்துக்களையும் எடுத்துக் கூறலாம் என்பது தெளிவாகிறது.

தழுவல்

சுமதி சதகக்காரர் பல இடங்களில் ஹிதோபதேசத்தையும், சாணக்கியனின் நீதிமாலிகாவையும் தழுவிப் பாடல்கள் அமைத்துள்ளார் என்பதற்குச் சான்றாக ஹிதோபதேசத்தில் 'இல்லாள்' எப்படி இருக்க வேண்டும் என்பதற்குச் சொன்ன சுலோகம் -

Kaaryeeshu mantri, karaNeeshu daasi, ruupeeshu lakshmii:, Kshamayaa dharitri, sneeheeshu maataa, sayaneeshu veSyaa satkarmanaarii (hitoopadeesam)

ஆலோசனை கூறுவதில் மந்திரியாகவும், பணிவிடை செய்வதில் வேலைக்காரியாகவும், வடிவத்தில் மகாலட்சுமி போன்றும், பொறுமையில் பூமியைப் போலவும், அன்பு காட்டுவதில் தாயாகவும், படுக்கை அறையில் விலைமகளாகவும் இருப்பவள் நல்ல இல்லாள் என்று ஹிதோபதேசம் கூறுகிறது. இதனை அப்படியே தழுவி சுமதி சதகக்காரர் இயற்றிய பாடல் பின்வருமாறு -

paniceeyuneDa daasiyu
anubhavamuna rambha mantri yaaloocanalan
tanabhukthi yeDala talliyu
nana tanakula kaanta yuNa naguraa sumatii (70)

(பணிவிடை செய்யும்போது பணிப்பெண்ணாகவும், அனுபவத்தில் ரம்பையாகவும், யோசனை கூறுவதில் மந்திரியாகவும், உணவு பரிமாறும்போது தாயாகவும் குலப்பெண் என்பவள் செயல்படவேண்டும்.)

வடிவம், பொறுமை, அன்பு இப்பண்புகளைத் தவிர ஹிதோபதேசத்தில் சொல்லப்பட்ட மற்ற விசயங்களையும் சேர்த்துக் கூறியுள்ளார்.

சுமதி சதகக்காரர் சாணக்கியரையும் பின்பற்றியுள்ளார் என்பதற்குச் சான்று -

dhanamu leeni vaanini veeSya, tanaraleeni
reeni prajalunu, palamulu leeniceTlu
pakshulunu, tinna yiNTanee paakulaaDa
kuNDa atithulu veegameviDuvavalayu (2-16)

(பணமில்லாதவனை விலைமகளும், தோல்வியுற்ற அரசனை மக்களும், பழங்கள் அற்ற மரத்தினைப் பறவைகளும், உண்ட வீட்டை விருந்தினரும் உடனடியாக விட்டுவிட வேண்டும்.)

என்ற பாவின் கருத்தமைப்பினைப் பின்பற்றி சுமதி சதகம் குறிப்பிட்டுள்ள பாடல் -

akkaraku raani cuTTamu
mrokkina varamiini veelpu, mooharamuna taa
nekkina baarani kurramu
grakkuna viDuvanhka valayu gadaraa sumathii ! (2)

இப்பாடல் சாணக்கியனைப் பின்பற்றி அதே உத்தியில் உலகத்தில் புறந்தள்ள வேண்டிய செய்திகள் நான்கினைத் தொகுத்துக் கூறியுள்ளது.

திருக்குறள் உலகப் புகழ்பெற்ற நீதிநூலாகும். இது மொழிபெயர்ப்பு நூல் அன்று. சுயபடைப்பாக எண்ணப்படுகின்ற திருக்குறளின்மீது மனுஸ்ம்ருதி, சாணக்கியரின் அர்த்தசாத்திரம், காமந்தகனின் நீதி சாத்திரம் போன்ற சமஸ்கிருதப் படைப்புகளின் தாக்கம் இருக்கிறது என்பதும், திருவள்ளுவர் சமஸ்கிருத மொழி அபிமானி என்பதும் சில ஆய்வாளர்களின் எண்ணமாக உள்ளது(சி.ஆர்.சர்ம, 1993:57). எது எப்படியிருந்தாலும் உலக நிகழ்வுகள் அனைத்தையும் ஒன்றே முக்கால் அடியில் சுருக்கி சொன்ன வித்தகர் வள்ளுவர்.

துணை நின்றவை

❖ திருக்குறள், தெளிபொருள், சிவசங்கரன்.வ., பொதிகைப் பதிப்பகம், சென்னை. 6 - ஆம் பதிப்பு, 2014
❖ பத்தெனா, சுமதி சதகம், 2003, பாலசரஸ்வதி புக் டிப்போ, சென்னை. (தெலுங்கு)
❖ ஜகந்நாத ராஜா மு.கு., 2002, சுமதி சதகம், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
❖ சர்ம சி.ஆர்.,1993, துலனாத்மக சாஹித்யம், கட்டுரைத் தொகுப்பு, லக்ஷ்மீ நாராயண க்ரந்தமாலா, மதுரை.
❖ கார்த்திகேயன் ஆ., 2005, தமிழ் பிராகிருத உறவுகள், அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர்.
❖ சுப்பராஜு.என்.வி.கே, 1981(நா.ப.), ஹிதோபதேசம், வித்யாநிலய ப்ரசுரண, பீமவரம். பிரபாகர்ராவு.யல்லாப்ரகட, 2013, சாணக்ய நீதி மாலிகலு, கௌடிண்ய ப்ப்லிகேஷன்ஸ், ஹைதராபாத்.
❖ புல்லெல ஸ்ரீராம சந்த்ருடு, 2010(ஆ.ப.), சாணக்ய நீதி ஸூத்ராலு, சஸ்க்ருத பாஷா ப்ரசார சமிதி, ஹைதராபாத்.

மதிப்பிடப்பெற்றது

சங்க இலக்கியத்தில் உரல், உலக்கையின் பயன்பாடு

Mortar and pestle are still employed in parts of Tamil Classical Literature

முனைவர் சு.பேச்சியம்மாள்
தமிழ் உதவிப்பேராசிரியர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி, spetchi29@gmail.com

Abstract: The peripheral world around us is meaningful for our everyday life with numerous innumerable contaminations with us. This means that there is no "world without material". How is this article written under the title "Furnace and Crane in Sangam Literature"? How are the fiberglass factories produced? What are they used for? That is to understand both the old and the living people's lives.

Keywords: Sangam Literature, fiberglass factories, உரல், உலக்கை

முன்னுரை

பண்பாடு என்பது பண்படுதல் என்ற சொல்லிலிருந்து தோன்றிய வழக்காகும். மனிதன் செய்யும் ஒவ்வொரு செயலிலும் பண்பாடு என்பது மறைந்திருக்கிறது. அது அனிச்சைச் செயலாக, தத்தமக்கான சூழ்நிலை ஏற்படும்போது, மனிதரிடமிருந்து தானே வெளிப்படுகிறது. இப்பண்பாடு ஒவ்வோர் இனம், சமூகம், மொழி சார்ந்து சில சிறப்புப் பண்புகளைக் கொண்டு அமைகின்றது. ஒரு சமூகத்தின் பண்பாட்டினைப் பல வழிகளில் தெரிந்து கொள்ளலாம். மக்களிடம் மேற்கொள்ளப்படும் களப்பணி, கல்வெட்டுகள், அரசு ஆவணங்கள், இலக்கியங்கள், தொல்லியல் ஆய்வுகளின் மூலம் கிடைக்கும் புழங்குபொருட்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு சமூகப் பண்பாட்டினைக் கட்டமைக்க முடியும். அவ்வகையில் சங்க இலக்கியங்களில் பயின்று வரும் புழங்குபொருட்களான உரலையும் உலக்கையும் அடிப்படையாகக் கொண்டு சங்ககாலப் பண்பாட்டினைக் கட்டமைப்பதை நோக்கமாகக் கொண்டு அமைகின்றது இக்கட்டுரை. இப்பொருள்சார் பண்பாட்டின் மூலம் சங்க இலக்கியத்தில் உரலும் உலக்கையும் என்ற புழங்குபொருள்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன? எவ்வாறு எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்ற இரண்டு நிலைகளைப் புரிந்துகொண்டால் புழங்குபொருள் பண்பாட்டை முழுவதுமாகப் புரிந்துகொள்ள இயலும் என்ற நோக்கில் இக்கட்டுரை அமையப் பெற்றுள்ளது.

பொருள்சார் பண்பாடு

பொருள்சார் பண்பாட்டில் முதன்மை பெறுபவை புழங்குபொருட்களாகும். பொருட்களைக் கொண்டு மீட்டெடுக்கப்படும் மக்களின் பண்பாட்டை வெளிக்கொண்டுவர முடியும். அத்தகைய பண்பாடே பொருள்சார் பண்பாடாகும். பண்பாட்டைப் பொருள்சார் பண்பாடு(Material Culture), பொருள்சாராப் பண்பாடு(Nomaterial Culture) என்று

இருவகைகளாகப் பிரிக்கின்றனர். மக்கள் அவரவர் தேவைகளுக்காகச் செய்துகொள்ளும் அனைத்து வகையான பயன்பாட்டுப் பொருட்களும் பொருள்சார் பண்பாட்டில் அடங்கும். இயந்திரங்கள், கருவிகள், மரச்சாமான்கள், வீட்டுப்பொருட்கள், உடைகள், அணிகலன்கள், அலங்காரப் பொருட்கள், கலைப்பொருட்கள், வழிபாட்டுப் பொருட்கள், கட்டடங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், சாலைகள், வேளாண் நிலங்கள், எழுதுகோல், அழகுப் பொருட்கள், போர்க்கருவிகள் போன்ற எண்ணற்ற பொருட்கள் பொருள்சார் பண்பாட்டைச் சேர்ந்தவை. ஒரு பண்பாட்டைச் சேர்ந்த பொருட்கள் அதற்கென்று பொருளையும் பயன்பாட்டையும் நிலையாகக் கொண்டு அப்பண்பாட்டிலேயே நிலைபெற்றிருக்கும்.

பொருள்சார் பண்பாட்டில் இடம்பெறும் அனைத்துப் பொருட்களும் புழங்கு பொருட்களேயாகும். புழங்குபொருட்கள் என்பவை மனித வாழ்வோடு மிக நெருங்கிய தொடர்புடையவை. காலமாற்றத்திற்கேற்பப் புழங்குபொருட்களை மாற்றி வடிவமைத்துக் கொள்கிறோம். இவ்வாறு மாற்றுவது புழங்குபொருட்களை மட்டுமல்ல அதனூடே வளரும் பண்பாட்டையும் சேர்த்துத்தான் மாற்றி உருவாக்குகிறோம்.

புழங்குபொருட்கள் மனிதன் தேவைக்காக மனிதனால் உருவாக்கப்பட்டவை. எனவே, பண்பாட்டில் பொருளின் தேவை நீடிக்கும் வரை பொருளும் பண்பாட்டிலேயே நிலைத்திருக்கும். எனவே புழங்குபொருளையும் பண்பாட்டையும் தனித்தனியே பிரித்தறிவது கடினம். ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்று பொருளும் பண்பாடும் அமைகின்றன. புழங்குபொருட்கள் மீது மனிதன் தன் கருத்துகள், விழுமியங்கள், மதிப்பீடுகள் இவற்றை ஏற்றிப் பார்க்கும்போது பொருள் பண்பாடு சார்ந்ததாக மாற்றம் பெறுகிறது. இப்புழங்குபொருட்களைச் சாதாரண நாட்களில் ஒரு பயன்பாட்டிலும், சடங்கியல் சூழலில் வேறொரு பயன்பாட்டிலும் கையாளுகின்றனர். சான்றாக, மஞ்சள் கயிறு என்பது கையில் கட்டும்போது காப்புக் கயிறாகவும் கழுத்தில் அணியும்போது தாலி என்றும் பயன்பாட்டில் பயன்படுத்தப்படுகிறது. இதற்கு மிகச் சுருங்கிய விளக்கமாக பக்தவத்சலபாரதி பண்பாட்டின் கண்ணாடியாக விளங்குபவையே புழங்குபொருட்கள் என்று கூறுகின்றார்.

ஆதிகால மனிதன் முதன்முதலில் கல்லைக் கொண்டு தனக்குத் தேவையான பொருள்களைச் செய்து கொண்டான். கல்லைத் தொடர்ந்து இயற்கை சார்ந்த பொருட்களைப் பழக்கப்படுத்தினான். முக்கியமாக மரங்களை அறுத்துப் புழங்குபொருட்கள் செய்ய ஆரம்பித்தான். இக்காலத்தைத்தான் ஆராய்ச்சி அறிஞர்கள் கற்காலம் என்றார்கள். சிந்துசமவெளி மக்களிடம் உரல், தண்ணீர் தெளிக்கும் பாத்திரங்கள் குவளைகள் அனைத்துமே மரங்களால் இருந்துள்ளன.

உரலின் அமைப்பு

கேழற்பன்றி உரல் போலும் தலையுடையது (புறம்.152,3-4) யானை உரல் போன்ற கால்களை உடையது (பதி.43,3-4, குறு.232,4, கலி.13-6) என்று உரலின் அமைப்பு சங்க இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வுரலில் சிறிய உரல், பெரிய உரல் பயன்பாட்டில் இருந்துள்ளதை "***சிறிய உரல் பிடியின் முழந்தாளை ஒக்கும்***" (பெரு.53,54) என்று கூறுகிறது.

பாறை உரல்

குறிஞ்சி நிலத்தில் புலியைக் கொன்ற யானையின் மருப்பினாலும் சந்தன மரத்தினாலும் செய்த உலக்கையால் ஐவனத்தைப் பாறையாகிய உரலிலே இட்டுத் தலைவியும் தோழியும் குற்றியுள்ளனர்(கலி.43,2-4). கதிரைப் பாறைகளில் குவித்து வைத்ததோடு குழி அமைத்துக் குற்றியுள்ளனர்.

சந்தன மர உரல்

குறிஞ்சிக்கலியில் தலைவி தினைப்புனத்தில் முற்றித் தாழ்ந்த கதிரை உருவி சந்தனமரத்தால் செய்யப்பெற்ற உரலிலே பெய்து, யானைக்கொம்பால் ஆன உலக்கையை என்னிடத்தும், நின்னிடத்தும் உயர்த்திக் குற்றிநின்று மருந்தில்லாத நோயைச் செய்தவனுடைய பயன் தருகின்ற மலையை வாழ்த்தி நாம் நம் கருத்திற்கு வேண்டியவாறெல்லாம் அழைத்துப் பாடக் கடவோம் என்று தோழியுடன் உடன்பட்டாள். அக்காலத்தில் உலக்கைப்பாட்டுப் பாடும் வழக்கம் இருந்ததையும், சந்தன உரல், தந்தம் உலக்கை பயன்படுத்தப் பெற்றமையும் இவ்விலக்கியம் சான்று பகர்கின்றது. இதனை *“முகைவளர் சாந்துரல் முத்தார் மருப்பின்*

வகைசால் உலக்கை வயின்வயின் ஓச்சிப்” **(68)**

எனும் அடிகள் அக்காலத்தில் உரல் உலக்கை எப்பொருட்களால் பயன்படுத்தப் பெற்றது என்பதைத் தெரிவிக்கின்றன.

நில உரல்

முல்லை நிலத்தில் வன்புல இருக்கையில் மன்றத்தின் விளாமரத்தின் நிழலுடைய முற்றத்தில் தோண்டிய நிலவுரலில் புல்லரிசியைச் சொரிந்து வயிரம் பாய்ந்த (பொன்னால்) உலக்கையால் குற்றி வாய்முறிந்த பானையே இழந்த அடுப்பில் வைத்து ஆக்கிய சோற்றை வாடிய ஊன் புழுக்கலோடு தேக்கிலையில் குவித்து உண்ட பதிவைக் காணலாம். முல்லை நில மக்கள் முற்றத்தில் தோண்டப்பட்ட நில உரலில் தானியங்களைக் குற்றியுள்ளனர். சங்க காலத்தில் முல்லை நில மக்கள் நில உரலையும், குறிஞ்சி நில மக்கள் பாறை உரல், சந்தனமர உரலையும் பயன்படுத்தியுள்ளனர் என்பதைப் பாடல் மூலம் அறிய முடிகிறது.

உரலில் இடிக்கப்பட்ட பொருட்கள்

சங்க இலக்கியத்தில் உரலில் இடிக்கப்பட்ட பொருள்கள் வெண்நெல், அவல் (பதி.29,1-2), தினை (புறம்.328,3), அரிசி (அகம்.393,5-11), ஐவனநெல் (கலி.43.1-7),(புறம்.159,15-19), மூங்கில் நெல் (கலி.41.1-4), மிளகு (பதி.41.20-21), எறும்பு ஈட்டிய நெல் (பெரு.95,97,100), வயலில் விளைந்த நெற்கதிர், வரகரிசி (அகம்.393.3.8-11), பசிய அவல் (குறுந்.238.1-3), புல்லரிசி (பெரு.94-97), முற்றி தாழ்ந்த தினைக் கதிர் (கலி.40.3-7), உலர்ந்ததினை (புறம்.333.9-13), தோரை நெல் (மது.286-288), வரகு (373), மிளகு (பதி.20,21), குறிஞ்சி நில பாறை உரலில், உலர்ந்த வரகு, அவல் தினை, தோரைநெல், கடுகு, ஐவன நெல்,

மலைநெல், இடித்து உணவாகவும் விருந்தோம்பலும் செய்துள்ளனர். முல்லைநில உரலில் வரகு, நெல் எயிற்றியர் அளிக்கும் புல்லரிசி, வரகு, அரிசி போன்றவற்றை உரலில் குற்றியுள்ளனர். மகளிர் வள்ளைப்பாட்டுப் பாடிக்கெண்டு தினையைக குற்றுவர் (மலை.342) உரல் இடிக்கும் பெண்களான, குறுந்தொடி மகளிர் (புதுமணப் பெண்) (அகம்.141.16-21), இடையர் (அகம்.393.8,10-16), மருத நிலத்தில் உள்ள சிறு பெண்கள் (அகம்.286.1-5), ஒண்டொடி மகளிர் (குறு.238.1-3), தலைவி தோழி ஆகியோர் தானியங்களைக் குற்றும்போது நிலத் தலைவனையும் (கலி.41.1-4), முருகனையும் குடியினர் பெருமையையும் மருந்தில்லாத நோய் செய்தவனுடைய மலையையும், வானம் பெய்வித்த மலையையும்(கலி.40.3-7) பாடுகின்றனா.

மரத் திரிகை

(வரகரைக்கும் எந்திரம்) முல்லை நிலமக்கள் உறையும் இல்லின் முன், யானையின் காலை ஒத்த திரிமரம் - வரகு திரிகை - நாட்டு நிற்கும் பந்தா் இருக்கும் (பெரு.185-187). தோ்க்கால் மணலை அறுத்துக்கொண்டு ஓடும் ஒலி, சுழலும் திரிமரத்திரிகையின் ஒலியை ஒக்கும் (அகம்.224,13-14) மனைக்கிழத்தி, பதமாகக் காய்ந்த வல்சியை மரத்திரிகையில் பெய்து சுற்றுவர் (அகம்.324,12)

உரல் இடிக்கும் இடம்

முல்லை நில விளாமர நிழலின் முற்றத்தின் நில உரலில் காஞ்சி மர நிழலில், சுரம் பொருந்திய சிற்றூரில், மான் கட்டிய விளாமர முற்றத்தில் தோண்டிய இடத்திலும் வயல் வரப்பிடத்துப் புதிய வைக்கோல் வேய்ந்த குடிலின் முற்றத்தே அவல் இடித்தலும் (பெரு.225-227) பாலைநிலத்தில், உப்பு வணிகர் செல்லும் வழியிலும் தானியங்களைக் குற்றி உணவாக்கிச் சமைத்துள்ளனர்.

உலக்கையின் வகைகள்

உலக்கை என்னும் சொல்லிற்கு, தானியங்களை உரலில் இட்டு இடிக்க அல்லது குத்தப் பயன்படும், முனையில் இரும்புப்பூண் பொருத்தப்பட்ட உருண்டை வடிவ, நீண்ட மரச் சாதனம் என்று பொருள் கூறப்பட்டுள்ளது (க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, 2000:151.) பழங்காலத்தில் ஆண்கள் வேட்டையாடச் சென்ற நிலையில் பெண்கள் இருப்பிடத்திலேயே விதைகளைக் கொண்டு உற்பத்தி செய்யப் பழகினர். உற்பத்திப் பொருள்களை உணவுப் பண்டமாக மாற்றப் பாறைகளின் சிறிய குழிகளை உரலாகவும் உருண்டையான நீண்ட மரக்கட்டைகளை உலக்கையாகவும் பயன்படுத்தியுள்ளனர். பிற்காலத்தில் கட்டையின் இரு முனைப்பகுதியிலும் இரும்புப் பூண் மற்றும் வெண்கலப் பூண்களைப் பூட்டினர். (பூண் - வளையம்) ஒரு முனையில் சமமானதும் மற்றெரு முனையில் சிறிது குழிந்த பூணும் பூட்டப்பட்டன. இதனால் சிதையாமலும், விரிசலடையாமலும் நீண்ட காலம் பயன்பட்டன.

வயிரம்(பொன்) பாய்ந்த உலக்கை (சிறு.193-195), தொடி(வளை)மாண் உலக்கை (புறம்.399,1-3), (பதி.24,19),(அகம்.398,10-16), யானை கொம்பால் செய்த உலக்கை (கலி.40,3-7), மிளகினை இடிக்கும் உலக்கை (பதி.41,20-21), வெள்ளி பூண் உலக்கை (அகம்.286,1-5),

கருங்கால்(கருங்காலி மரம்) உலக்கை (குறு.238,1-3), குறுங்கால் உலக்கை (பெரு.95) சங்க கால மக்கள் பொன் வெள்ளியால் பூட்டப்பட்ட உலக்கையைப் பயன்படுத்தியுள்ளனர். இரும்பு பூண் மாட்டப்பட்ட உலக்கையைப் பயன்படுத்தியதாக தெரியவில்லை.

சந்தன மர உலக்கை

குறிஞ்சிக்கலியில் ஐவனமாகிய வெண்ணெல்லைப் பாறையாகிய உரலிலே சொரிந்து, புலியைக் கொன்ற மதத்தான் மயங்கின புகரை உடைய யானையினது தலையேந்தின கொம்பாலும், இனமான வண்டுகள் ஒலித்துத் தாது ஊதுஞ் சந்தன மரத்தினாலும் பண்ணின உலக்கைகளாலே குற்றி, முருகனைப் புகழுவோம் போல அழகுபெற்ற மேகம் உண்டாகின்ற தலைமையினை உடைய பயனை உடைத்தாகிய மலைநாட்டை உடையானைப் பாடுவோம் என்று குறிப்பிடுகின்றது.

> *"வேங்கை தொலைத்த வெறிபொறி வாரணத்*
> *தேந்து மருப்பின் இனவண் டிமிர்பூதுஞ்*
> *சாந்த மருப்பின் இயன்ற உலக்கையால்*
> *ஐவன வெண்ணெல் அறையுரலுட் பெய்திருவாம்"* **(69)**

எனும் பாடல் அடிகள் சந்தன உலக்கையினைப் பயன்படுத்தியமையைப் பறைசாற்றுகின்றன. இவ்விதம் சங்க இலக்கியத்தில் சந்தன மரத்தின் பயன்பாடு பல்வேறு நிலைகளில் பயன்பெற்றவற்றை அறிய முடிகிறது.

பாசவல் (பச்சை அவல்)

"பெருஞ்செய் நெல்லின் வாங்குகதிர் முறித்துப் பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கை **(அகம்.141.17-18)** *"பாசவல் இடித்த கருங்காழ் உலக்கை"* ஈரம் உலராத பச்சரிசியை நெல்லின் கதிரோடு எடுத்து முறித்து உதிர்த்து இடித்துப் பெறுவதை பாசவல் என்பர். பாசவல் என்பது பச்சையான அவல் ஆகும். இடிசல் என்ற சொல் நொறுங்கிய அரிசி முதலிய கூலங்களைக் குறிக்கிறது. இடிப்பு என்ற பெயர்ச்சொல் மாவைக் குறிக்கிறது. மின்னால் இடி என்ற சொல்லும் மாவைக் குறித்திருக்கிறது. *"இடிபு இடிகை நொறுங்கல் நொற்றி ஆட்டம் இடிபு நுந்தை எனவும் ஒட்டிக் கொள்க"* **என்று தொல்காப்பியம் எழுத்ததிகாரம், 76ஆம்** நூற்பாவிற்கு இளம்பூரணர் உரையில் ***"இடிபு"*** என்ற தொழிற்பெயர் வரும். உரல் உலக்கைக் கருவிகள் தம் வாழ்வில் பயன்பாட்டுக்கு வந்தபின் கூலங்களையும் அதில் போட்டு இடித்துள்ளனர்.

கூலங்களை மட்டுமின்றி கிளிஞ்சல்களை உரலிலிட்டு இடித்துச் சுண்ணம் செய்யும் தொழிலும் வழக்கில் இருந்துள்ளது. *"பலர்தொகுபு இடித்த தாதுஉகு வண்ணத்தர்"* **(மதுரை 399).** *"ஏந்தின முலையினர் இடித்த சுண்ணத்தர்"* **(சிலம்.57)** ***அஞ்சனப்பூமி அரிதாரத்து இன்னிடியில்"*** என்று சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம் குன்றக்குரவையில் இரண்டாம் அடியில் ***"இடியில்"*** என்னும் சொல் சுண்ணப் பொடியைக் குறிக்கும். ***"மென்தினை நுவணையுண்டு"***

(ஐங்.285) இடித்த தினை மா குறிக்கப்படுகிறது. நுவணை என்பது நுவணம் என்றும் திரிந்து இடித்த மாவைக் குறிக்கிறது.

"***காயங் கொண்டன மாவிருந்து***" **(மலை.126)** அரிசியைப் புடைப்பதை நெல்லைப் பக்கம் நாவுதல் என்றே சொல்வார்கள். அதன் பொருள் கொழித்தல். கொழிக்கும் வினையில் அளவுவாரியாகத் திண்மத் துகள்கள் சில பிரித்து துகள்கள் பறந்து போக, அரிசியும் கல்லும் தனித்துப் பிரிக்கப்படுகிறது. அதாவது கொழித்தல் வினையில் மூன்று வினைகள் கிடைக்கிறது. ஒன்று கல், இரண்டு அரிசி, மூன்று நாம் ஒதுக்கும் துகள். நாவு என்னும் சொல் கல்லைக் குறிப்பதில்லை. நாவு பொடியையைக் குறித்திருக்க வேண்டும் என்பது திருநெல்வேலி வட்டாரவழக்கைக் கொண்டு முடிவு செய்யப்படுகிறது. மருத நிலத் தொண்டி நகரில் பச்சை அவலிடித்த உலக்கையை நெல் வயலின் வரப்பில் சாய்த்து வைத்துவிட்டு ஒண்டொடி மகளிர் விளையாடினர் என்கிறது குறுந்தொகை(குறு.**238,1-4**).

அவல் எறிந்த உலக்கையை வாழை மரத்தில் சார்த்திவிட்டு மகளிர் வள்ளை கொய்வர் **(பதி.29,1-2)**, வைக்கோல் வேய்ந்த குடிலின் முற்றத்தே அவலிடிப்பதனால் எழும் உலக்கை ஓசையைக் கேட்டுப் பக்கத்திலுள்ள கிளி அஞ்சும் **(பெரு.225-227)**. புதுமணப்பெண் (குறுந்தொடிமகளிர்) பிற பெண்களுடன் கொணர்ந்த நெற்கதிரை அவலாகக் குற்றும் உலக்கையிடிக்கஞ்சிய குருகு வாழை மடலில் தங்காது மாமரத்திற்குப் பறந்து செல்லுமாம் **(அகம்.141,14-21)**.

அரிசி

அன்னையர் வரகைப் பண்ணை வெண்பழத்தின் அரிசிபோலத் திரிகையிலிட்டும் உரலில் இட்டும் குற்றித் தீட்டியும் வெண்மை ஆக்கியுள்ளனர் **(அகம்.393,5-11)**, தீட்டபெற்ற வரகரிசியுடன் ஆட்டுத் தயிரையும், ஈயலையும் சேர்த்துச் சமைத்த இனிய புளிச்சோற்றில் வெண்ணெய் கிடந்து உருக, அதனை ஏவல் இளையர் உண்டபின்னரை உண்ண வருமாறு இரவுக்குறி வரும் தலைவனிடம் கூறித் தோழி மணத்தை விரைவுபடுத்தினாள்**(அகம்.394,2-7)**.

ஐவனம் (மலைநெல், மூங்கில் நெல்)

குறிஞ்சி நிலகொல்லையில் செழித்து வளர்ந்த சிற்றூரில் ஐவன நெல்லை **(மது.286-288)** பாறை உரலில் **(நற்.373,2-4)** கொடிச்சி தன் தந்தையின் முகில் தவழும் பெரிய மலை வளத்தைப் பாடி, ஐவனத்தைக் குற்றுகின்ற பதிவு இடம் பெற்றுள்ளது. காட்டில் உள்ள மூங்கில் நெல் அவலிடிக்கும் செவ்வி பெற்றுள்ளது **(மலை.120-121)** வேடர் சுட்டெரித்து உண்டாக்கிய கொல்லையில் ஐவனத்தோடு மலைநெல்லோடு விதைத்து இருட்சியுற அழகு பெற்றுக் கோடை மிகுதியால் ஈன்றலைப் பொருந்தாத தினைக்கு வானம் மலைத்துளியைச் சொரிந்தது என்ற பதிவும் இடம் பெற்றுள்ளது.

எறும்பு சேர்த்த அரிசி

வாடிய நிலத்தில் சிதறிக்கிடக்கும் சிறிய புல்லரிசியை வரிசையாகச் சென்று நுண்ணிய பல எறும்புகள் தம் வளையில் வைக்கத் தாம் விதைத்து விளையாத அவ்வரிசியை மறவர் அகழ்ந்தெடுத்து உண்ணுவர் (அகம்.377,1-4). வெண் பல் எயிற்றியர் பூண்கட்டிய வலிய கோல் செருகிய உளிபோலும் வாயுனையுடைய பாறைகளிலே கரம்பை நிலத்தைக் கட்டிகள் கீழ் மேலாகும் படி கிளறி அங்கு எறும்புகளால் திரட்டி வைக்கப்பட்டிருக்கும் புல்லரிசியை வாரியெடுத்து வருவர் (பெரு.91). உணவு பற்றாக்குறை காரணமாக எறும்பு சேகரித்த அரிசியையையும் குற்றி சமைத்து உணவாக்கியுள்ளனர்.

சோறு சமைத்தல்

சங்ககாலத்தில் ஆடுமகள், வெண்ணெல்லினைப் பூணுடைய உலக்கையால் குற்றி அரிசியைச் சோறாக்கினாள்(புறம்.399,1-2). வரகினைப் பாறையில் குவித்துத் திரிகையிலிட்டுத் திரித்துச் சுளகினால் புடைத்த, வெள்ளி அரிசியை, உரலிலிட்டுத் துவைத்துச் சுனைநீர் உலையில் இட்டு ஆக்கிய சோற்றைப் பாலோடு, புல்லியின் நாட்டினர் பகுத்துண்பர்(அகம்.393,7). அவரை கொய்கின்றவர் கவர்ந்த கதிரினையுடைய வரகினைக் குற்றி வடிக்கப்பட்ட சோற்றையும், வேளைச் செடியின் வெள்ளிய பூவைத் தயிரின் கண் இட்டு, இடைமகள் சமைத்த புளியங்கூழையும் நிறைய உண்டனர் (புற.215,1)

விருந்தோம்பல்

தம்மிடமுள்ள வரகு, தினை ஆகியவற்றை இரவலர் கொண்டமையாலும் குறியெதிர்ப்பைப் பெற முடியாமையாலும் கதிரில் முற்றி உலர்ந்த தினையை உரலில் பெய்து குற்றி, வந்தவரை உண்பிப்பாள் குறிஞ்சி நில மனையாட்டி (புறம்.333,9-13) பூத்த கரும்பையும் காய்த்த நெல்லையும் உடையது கழனி (ஐங்.4,4-5) உறந்தையில் நெற்கதர்கள் விளைந்த கழனியிலே வளர்ந்த கரும்பினது. கருப்பஞ் சாற்றையும் பாலையும் பெய்து கலந்த அவலைப் பாணர் முதலியோர்க்கு உறந்தையில் பகுத்துக் கொடுத்துள்ளனர்(அகம்.237,11-14). உலக்கையாற் குற்றிய மாட்சிமைக்கப்பட்ட அரிசியாக்கிய வெண் சோற்று திரளை அலவன் கலவையோடு தந்து உழவர் பாணரை விருந்தோம்பல் செய்தான் (சிறு.190-195). அரசியை உலரவிட்ட பெருஞ்செந்நெல் அரிசியைக் கொண்டு சமைத்த சோற்றைத் தீஞ்சுவை அமுதொடு புரவலன் பெரும்பாணனுக்கு வழங்கிய பதிவு (பெரு.473-479) இடம் பெற்றுள்ளது. புன்செய் கொல்லைகளையுடைய சீறூர்களில், நெல் விளையாது எருதுகளைப் பிடித்துக் கடாவிடுதலின்றி, இளையர் தம் காலால் மிதித்தெடுத்த வரகுக்குவியலிற் கடன் கொடுத்தார்க்குக் கெடுத்தது போக எஞ்சியவற்றைப் பசித்து வந்த பாணர் உண்டு சென்றததால் குறைந்து போயின. (புற.327,2) குறிஞ்சி நிலத்தில் கரிய காலையுடைய வரகும், பெரிய கதிரையுடைய தினையும், சிறிய கொடியிலுள்ளவாகிய கொள்ளும், பொறிகளையுடைய அவரையும் ஆகிய இந்நான்கல்லது உணவுப்பொருள் வேறில்லை (புற.335,4).

வன்புலமாகிய முல்லை நிலத்தின் விளையும், கருங்கால் வரகு அரிகாலில் வாழும் எலியைப் பிடிப்பதற்குக் குறும் பூழ்ப்பறவைகள் முயலும் (புற.384,4), அதியமான் மகன்

பொகுட்டெழினி, திறைகொடாத மன்னரின் அரிய மதிலை வஞ்சியாது பொருதழித்துப் போர்க்களந்தோறும் வெள்ளிய வாயினையுடைய கழுதை நிரையைப் பூட்டி உழுது வெள்ளை வரகும்(கவடியும்) குடைவேலும் விதைப்பான் (புற.392,10) தினைக் கொல்லையை உழுவோர், வரகின் வைக்கோலை மேலே வேய்ந்த, நறுமணமிக்க காட்டு மல்லிகையையுடைய வலிய இருப்பிடங்களில், மெல்லிய தினைமாவை முறைப்படி விருந்தினர்க்குப் பகுத்து அளித்து உண்டனர் (பதி.30,22), முல்லை நிலச் சீறூர்க்கண் வாழ்வோர், பூளைப்பூவை யொத்த வரகரிசிச் சோற்றை, அவரை விதைப்பருப்பினை மிகவும் இட்டுத் துழாவுதலால் இனிமையுடைய மூரலொடு (பருப்புச் சோறு) விருந்தினர்க்கு அளிப்பர் (பெரு.193).

விளையாட்டும் வள்ளையும்

குறுமகளிர் காஞ்சிமர நிழலில் தமர் வனம்பாடி மெல்லிய கரும்பாகிய உலக்கையால் வெண்மணலைக் குற்றி விளையாடினர் (அகம்.286,1-5) ஆம்பல் தண்பாற் செய்த வளையலணிந்த மகளிர் அவலை வாயிற்பெய்து தின்று கொண்டு புனல் பாய்ந்தாடுவர் (புறம்.63,12-13), அவல் எறிந்த உலக்கையை வாழை மரத்தில் சார்த்திவிட்டு மகளிர் வள்ளை கொய்வர் (பதி.29,1-2) தொண்டி நகரில் பச்சை அவலிடித்த உலக்கையை நெல்வயலின் வரப்பில் சாய்த்து விட்டு மகளிர் விளையாடினர்(குறு.238,1-4).

"பாஅடி உரல பகுவாய் வள்ளை
ஏதில மாக்கள் நுவறலும் நுவல்ப" **(குறு.89,1-2)**

என்று தலைவி வள்ளைப்பாட்டுப் பாடியதைக் குறுந்தொகை உணர்த்துகின்றது.

"தினைகுற்று மகளிர் இசைபடு வள்ளையும்" **(மலைபடு.342)**

என்று வயலில் தினை அறுக்கும் மகளிர் பாடும் வள்ளைப்பாட்டின் இனிமையினை மலைபடுகடாம் புகழ்கின்றது. கலித்தொகையில்தான் வள்ளைப்பாட்டுக் குறித்து அதிகப் பாடல்களும் செய்திகளும் காணப்பெறுகின்றன. முற்றிய தினைக்கதிர்களைச் சந்தன மரத்தால் ஆன உரலில் இட்டு முத்து நிறைந்த யானைத் தந்தத்தால் குற்றியதனை

"முகைவளர் சாந்துரல் முத்தார் மருப்பின்
வகைசால் உலக்கை வயின்வயின் ஓச்சி" **(கலி.40,4-5)**

என்ற பாடலடியும் மூங்கில் நெல்லினை பாறை உரலில் இட்டு யானைத் தந்தத்தால் குற்றியதை,

"பாடுகம் வாவாழி தோழி வயக்களிற்றுக்
கோடுலக்கை யாகநற் சேம்பின் இலைசுளகா
ஆடுகழை நெல்லை அரையுரலும் பெய்திடுவோம்
பாடுகம் வாவாழி தோழிநற் றோழிபாடுற்று" **(கலி.41,1-4)**

என்ற பாடலடிகளும் உணர்த்துகின்றன. கலித்தொகையின் 42 வது பாடல் தலைவன் செய்த கொடுமையினை வள்ளைப்பாட்டாக பாடத் தோழியினைத் தலைவி அழைப்பதாக அமைந்துள்ளது. 43 வது பாடல் முருகனைப் பாடுவதுபோல் தலைவனை வள்ளைப்பாட்டால் பாடுவோம் வாவென்று தோழி தலைவியை அழைப்பதாக அமைந்துள்ளது. இவ்வாறு காலமாற்றத்தால் வள்ளைக் கூத்து வள்ளைப்பாட்டாக மாறியுள்ளதற்குச் சங்கச் செய்யுங்கள் சான்று பகர்கின்றன.

பண்டமாற்று

முல்லை நில மக்கள் கரும்பையும் அவலையும் பண்டமாற்றாகக் கொடுத்துவிட்டு மான் தசையையும் கள்ளையும் பெற்றுள்ளனர் (பொருந.216-217).

முடிவுரை

விஞ்ஞானத்தின் விளைவால் நாளும் தொழில் பெருகிப் புழங்குபொருள் வகையிலும் பயன்பாட்டிலும் புதுமை உருவாகி வருகின்றது. வாழ்க்கை முன்னேற்றம் கருதி நாம் அனைவரும் அதனை அவாவி நிற்கின்றோம். இத்தகைய சூழலில் சங்ககால மக்களால் உற்பத்தி செய்யப்பெறும் புழங்குபொருட்களும் அடிப்படை மரபுகளில் எவ்வாறு நிலைத்து நின்றன என்பதை அறிய முடிகிறது. மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான ஊடாட்டமே மனித வாழ்க்கையாக இருக்கின்றது. எனவே மனிதன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இயற்கையில் இடைக்கின்ற வளங்களை தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திப் பல பொருட்களை உற்பத்தி செய்திருக்கிறான். அப்புழங்குபொருட்கள் அவர்களுடைய தொழிலுடனும் பண்பாட்டு அம்சங்களுடனும் தொடர்புடையனவாகவே காணப்படுகின்றன. எனினும் நாட்டார் பண்பாட்டை உணர்த்தும் புழங்குபொருள்கள் நம் வாழ்க்கை முறைகளுள் தகுந்த இடத்தைப் பிடிக்காமல் அழிந்து கொண்டிருப்பதனைக் குறிப்பிட வேண்டியது அவசியமான ஒன்றாகும்.

துணைநூற்பட்டியல்

- சிவசுப்பிரமணியன் ஆ., 1999 (இ.ப.), மந்திரமும் சடங்குகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
- சிவத்தம்பி கா. 1994, தமிழ்ச் சமூகமும் பண்பாட்டின் மீள்கண்டுபிடிப்பும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.
- பரமசிவன் தொ. 2001, பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.
- பாரதி, பக்தவத்சல, 2003 (மூ.ப.), பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- லூர்து தே., 2000, நாட்டார் வழக்காற்றியல் கோட்பாடுகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை.
- ஸ்டீபன் ஞா. (தொ.ஆ.), 1999, தமிழகப் பண்பாட்டு நிலைக்களங்கள் (பண்பாட்டு வேர்களைத் தேடி...) நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை.

❖ **..., 2008, கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, தமிழ் - தமிழ் ஆங்கிலம், கிரியா வெளியீடு, சென்னை.**

மதிப்பிடப்பெற்றது

ஐங்குறுநூற்று மருதத்திணைப் பாடல்களில் பரத்தமை ஒழுக்கம் மறுத்தல்

Ainkurunuru Maruthathinai Paadalkalil Parathamai Olukkam Maruthal

முனைவர் **மு.ஜெகதீசன்**
உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி - 12.
99441 59409, jeganntamil@gmail.com

Abstract: Ainkuruguru was edited by Koodalur kilar, which contain 500 limerick poems of 100 each, and each 100 millets are sub - divided into 10 headings which contain 10 songs each. In which Maruthathinai has writer by Oorampokiyar which contain 100 songs. Heroine wrote this poem by angry on her Hero who went for Adultey (பரத்தமை) which was accepted by the society but not by her. later her friend (தோழி) make compermise on her Oodal (ஊடல் fit of sulkiness and between lover or husband and wife), At first she pull her hero outside the gate and then she open the gate by his love on him, And then Kaamakilathi (காமக்கிழத்தி) a women kept for satisfying a men's sexual desires who is called a concubine), even she is also a Parathamai, she select only one hero and make a life with him. She is much similer to Kaamakilathi; and make more love on her hero, and if her hero is searching for another Parathai. She won't accept and make angry on him, Even she is belong to Parathai, women by her mind and Oodal (ஊடல்). In conclusion, this song's meaning, and concept tell about the especially of Oodal. And mentioned the characters and personality of Parathamai pirithal, Kamakkilathi, Oodal, opening and closing the gate of maruthathinai. Also we can understand the complete meaning of the above by using the grammer of Tholkkappiyam.

Keywords: Tholkkappiyam, pirithal, Kamakkilathi, Oodal, காமக்கிழத்தி, பரத்தமை, ஊடல்

மருதம் என்பது வயல் பகுதியைப் பற்றிய பெயராகையால் அது முதற்பொருளால் வந்த பெயர் என்றும், மருத மரம் மிகுதியால் வந்த பெயராகையால் கருப்பொருள் பற்றிய பெயர் என்றும், ஊடியும் கூடியும் போகம் நுகர்தலாலும் வந்த பெயராகையால் அது உரிப்பொருளால் வந்த பெயர் என்றும் கொள்ளலாம். ஐங்குறுநூற்று மருதத்திணை நூறு பாடல்களைக் கொண்டது. இவை பத்துப் பத்தாகத் தொகுக்கப்பட்ட தொகுதியாகும். வேட்கைப் பத்து, வேழப் பத்து, கள்வன் பத்து, தோழி கூற்றுப் பத்து, தோழிக்கு உரைத்த பத்து, புலவிப் பத்து, கிழத்திக் கூற்றுப் பத்து, புனலாட்டுப் பத்து, புலவி விராய்ப் பத்து,

எருமைப் பத்து எனப் பத்துத் தலைப்புக்களில் பத்துப்பத்துப் பாடல்களாகப் பாடப்பட்டுள்ளன. இப்பாடல்களுள் பரத்தமை எனும் அகத்துறை ஒழுக்கம் முதன்மைப்படுகிறது.

சங்க காலத்தில் பரத்தமை ஒழுக்கத்தை மருதநிலத் தலைவன் விரும்பிச் செல்வது இயல்பாக இருந்துள்ளது. அவ்வாறு விரும்பிச் சென்ற தலைவன் மீது தலைவி கோபம் கொண்டுள்ளாள். இக்கோபத்தினை ஊடல் என்னும் உணர்வால் வெளிப்படுத்தியுள்ளாள். பரத்தமை ஒழுக்கம் என்பது சங்கச் சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட தவறாக இருந்ததில்லை. ஆயினும் தாம் அன்புற்ற கணவன் பிற பெண்டிரை நாடிச் செல்வதைத் தலைவி மறுத்துள்ளாள். அதனைக் குற்றம் என்றும் கடிந்துள்ளாள். அவ்வொழுக்கம் கூடா ஒழுக்கம் என்றும் சுட்டியுள்ளாள். ஆகையால் அவ்வொழுக்கத்தினை நாடிச் செல்லுகையில் அவள் தலைவனைத் தடுக்கவில்லை. மாறாக அவ்வொழுக்கத்தில் ஈடுபட்டு மீண்டு இல்லம் நாடி வருகையில் ஊடல் என்னும் அன்பால் இல்லம் ஏற்பதை மறுக்கிறாள். தலைவன் பரத்தமை ஒழுக்கம் விரும்பி நாடிவதும்; அதனை அறிந்து ஊடல் கொண்ட தலைவி, அவனை இல்லத்திற்குள் அனுமதி மறுப்பதும்; வாயில்கள் தலைவனை இல்லமேற்கத் தலைவியிடம் அனுமதி கோருவதும்; தலைவன் தன் தவற்றை உணர்ந்தவேளையில் அவனை மீண்டும் இல்லத்தில் அனுமதிப்பதும் மருதத்திணைப் பாடல்களில் மையப்பொருளாகப் பாடப்பட்டுள்ளது.

புலத்தலும் ஊடலும்

மருதத் திணையின் உரிப்பொருள் ஊடலும் ஊடல் நிமித்தமுமாகும். வயல், வயல் சார்ந்த பகுதியில் வாழும் மக்களுக்குள் எழும் அகஉணர்வில் ஊடல் உணர்வு மருதத்திணையில் முதன்மைப் பாடுபொருளாகிறது. ஊடல் என்பது நீட்டித்த பிணக்கம் ஆகும். தலைவனும் தலைவியும் திருமணத்திற்குப் பின்பு இல்லறம் நடத்தும் கற்புக் காலத்தில் தலைவன் பரத்தைமை ஒழுக்கம் விரும்பித் தலைவியைப் பிரிதல் காரணமாகவும், தலைவன் பரத்தமை விரும்பி ஒழுகாத பொழுது அவ்வொழுக்கம் நிகழ்த்தியதாகக் கற்பித்துக் கூறுதல் காரணமாகவும், தலைவிக்குள் நிகழும் சிறு ‘கலாம்’ ஊடல் வயப்பட்டதாகும். தலைவியின் இத்தகைய உணர்வினைப் புலத்தல், புலவி, பிணக்கம், துனி, முனிவு, கலாம் ஊடல் என வகைப்படுத்துவர். இவற்றுள் தலையாயது ஊடலாகும். இவை *“ஒத்த உணர்வினைக் குறித்த பொதுச்சொல்லாயினும், இவற்றுள் நுண்ணிய வேறுபாடுகள் உள்ளன”*[1] என இளம்பூரணர் குறிப்பிடுகிறார். இவ்வூடலைப் பேராசிரியர், *“புணர்ச்சியில் வந்த மகிழ்ச்சி குறைபடாமற் காலங்கருதிக் கொண்டுய்ப்பதோர் உள்ள நிகழ்ச்சியாகும்”*[2] என விளக்கமளிக்கிறார்.

புலத்தல் என்பது தலைவன் தலைவியிடம் நிகழும் சிறு பிணக்கம் ஆகும். அப்புலத்தல் நீட்டித்தல் ஊடல் ஆகும். தனது நெஞ்சில் நிறைந்து நின்ற ஊடல் மிகும்போது துனியாக வெளிப்படுகிறது. மேலும் இவ்வுணர்வினை *‘முனிவு மெய்ந் நிறுத்தல்’*[3] காலம் என்பதைத் தொல்காப்பியர் மெய்ப்பாட்டு உணர்வாகக் குறிப்பிடுகிறார். புலவி, பிணக்கம், புலத்தல், துனி, கலாம் போன்ற உணர்வுகள் ஊடலுக்கு முந்தைய குறிப்புகளாகிறது. இவ்வுணர்வுகளில் உச்சபட்ச உணர்வுப் புலப்பாடு ஊடலாக அறியமுடிகிறது. ஊடல் என்பது உள்ளத்தில் நிகழும் உணர்வினைக் குறிப்பு மொழியாலும் கூற்று மொழியாலும் புலப்படுத்துவதாகும்.

ஐங்குறுநூற்றில் மருதத்திணைப் பாடல்களில் பரத்தமை பிரிவில் உற்ற ஊடல் வாயில்களிடம் நிகழும் கூற்றில் வெளிப்படுகிறது. இவ்வுணர்வு தலைவியின் கற்பினையும் தலைவன் கற்பு நெறி நிற்றலையும் வலியுறுத்தவே பாடப்பட்டுள்ளது. கற்பு வாழ்வில் தலைவன் நிகழ்த்தும் பரத்தமைப் பிரிவில் ஊடல் உணர்வானது பெண்மையில் புலப்படும் நெறியாக உள்ளது. தலைவன் பரத்தமைப் பிரிதலைத் தலைவி விரும்பாமையைக் குறிக்கிறது.

பரத்தமை

சங்கச் சமூகத்தில் பரத்தமை என்பது ஓர் ஒழுக்கமாகும். இவ்வொழுக்கத்தில் ஈடுபடுகின்ற பெண்கள் பரத்தை, சில்லை, தூர்தை, பதிலியர், தமியலர், கூத்தர், கடைக்களி மகளிர், புறவீதி மகளிர், பூவலை, பெண்டு, பெண்டிர் முதலாயின மற்றும் பிற சொற்களிலும் அழைக்கப்பட்டனர். பல்வேறு சொற்களால் அழைக்கப்பட்ட மகளிரைப் பரத்தை என்றொரு பொதுச்சொல்லில் அழைத்தனர். பரத்தையரை இழிந்த பெயர் அல்லது குறியீட்டுப் பெயர்களைக் கொண்டே அழைக்கின்றனர். ஆடவரின் பரத்தையர் ஒழுக்கத்தைச் சங்கச் சமூகத்தில் இல்லறப் பெண்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

கற்பு வாழ்வில் ஈடுபட்ட தலைவன் தன் இல்லாளைப் பிரிந்து பரத்தையருடன் புனலாடிப் புணர்ந்து இன்புறுதலை இல்லாளும் அவள் சுற்றத்தாரும் மறுத்தனர்; கடிந்தனர். பரத்தமைக் குலம் சங்கச் சமூகத்தில் மறுக்கப்படவில்லை. தலைவன் இவ்வொழுக்கம் புரிவதைத் தலைவி ஏற்றுக்கொள்ளவில்லை. தலைவி, தோழி, பாணன், பாங்கற் கூட்டம் ஆகியோர் இவ்வொழுக்கம் விரும்பிய தலைவனை இடித்துரைத்துள்ளனர்; கழறியுள்ளனர். இவ்வொழுக்கம் தவறெனச் சுட்டியுள்ளனர். தலைவியுடன் புலத்தல், ஊடல் நீங்கி இல்லறம் மேற்கொள்வதற்கு நீங்கி வாழ்வதற்கு வாயிலாய்ச் செயல்பட்டனர்.

தொல்காப்பியம் பரத்தமை, பரத்தை குறித்த சொல்லாட்சியையும், அச்சொல் நிகழிடம், சூழல், உணர்வுகள், இயல்புகளுக்கு இலக்கணம் வகுக்கிறது. தலைவன் பரத்தையரை ஒழுக நேர்வதற்குத் தலைவி பூப்பெய்துதல், குழந்தைப் பேற்றுக்குப் பருவம் எய்துதல் ஆகிய சூழலைச் சுட்டுகிறது.

"பூப்பின் புறப்பா டீரறு நாளும்
நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான"[4]

இச்சூழலில் பரத்தையிற் பிரிந்த போதும் மீண்டும் தலைவன் தன் இல்லம் சேர்வான் என்பது குறிப்பு. இங்கு பரத்தமைப் பிரிவு என்பது இயல்பென உணர்த்தப்படுகிறது. இப்பரத்தமைப் பிரிவு அனைத்துச் சமூகத்திற்கும் பொதுவானதாகும்.

"பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே
நிலத்திரி பின்றஃ தென்மனார் புலவர்"[5]

இங்கு, *"தொல்காப்பியர் நால்வர் என்றது நால்வருணத்தாரைக் குறித்தது"*[6] என்பர் இளம்பூரணர். நச்சினார்க்கினியர் தம் விளக்கமாக, *"அந்தணர் நால்வரும், அரசருக்கு மூவரும், வணிகர்க்கு இருவருமாகிய தலைவியின் ஊடற்குரியரென்பதூவும், அவர்பால் தந்தந் தலைவர் ஊடற் தீர்த்தற்குரிய வாயில் விடுவரென்பதூஉம், அவர் வாயின் மறுத்தலும் நேர்தலும் உடையரென்பதூஉம், ஏனைப் பரத்தையர்க்கு வாயில்விடுதல் இன்றென்பதூஉம் கூறியவாறாயிற்று"*[7] எனக் கூறுகிறார். நால்வர் என்பது தொல்காப்பியர் வகுத்த நானிலக் கொள்கையில் பகுக்கப்பட்ட தலைவர்களைச் சுட்டியது என்பது மரபார்ந்த கருத்தாகிறது. பரத்தையர் பிரிவு காரணமாகப் பாணர் முதலியோரை வாயிலாக அனுப்புதல் மருதநிலத் தலைவனுக்கே சிறப்புடையது. ஆயினும் நானிலத்தில் குறிப்பிடப்படும் தலைவனுக்கும் ஒப்பானதாகிறது. ஆக நால்வர் என்பது தமிழக அனைத்து நிலச் சமூகத்தினையும் சார்ந்த ஆடவர்க்கு உரித்தான ஒழுக்கம் என்றே கருதமுடிகிறது.

பரத்தையிற் பிரிவு தலைவி பூப்பெய்திய காலம் மட்டுமன்றித் தலைவன் பொருளீட்டிய காலங்களிலும் நிகழ்ந்துள்ளது. இதனை, *"பொருவிறப்பு என்பர். பொருவிறப்பு என்னையே வென்பது இனிப் பரத்தையர்மாட்டுப் பிரியுமேயெனின் இவன் கண்டார்கண் தாழ்வானாம். ஆகலான் தலைமகன் மாட்டே கிடந்த அன்பிலன் ஆயினனாம் அல்லதூஉங் கண்டுழியெல்லாம் உள்ளத்தை சொரீஇ உள்ளத்தின் வழி ஒருமாகலான் நிறையிலினாம் நிறையிலானது பொருவிறப்பு"*[8] என இறையனார் அகப்பொருள் உரை குறிப்பிடுகிறது. பரத்தையர்கள் தலைவன் வரவினை எதிர்நோக்கியதும் பொருளீட்டுதல் தொடர்பானதாகும். ஆனால் தலைவன் பரத்தமை ஒழுக்கம் விரும்புதல் இன்பத்தின் பாற்பட்டதாகும்.

இந்திரவிழா என்னும் அடையாளம்

நிலவுடைமைச் சமூகம் முகிழ்த்ததாகக் கருதப்பட்ட மருத நிலத்தில் நிகழ்த்தபெறும் இந்திர விழா முதலிய விழாக்களில் பரத்தையர்கள் கூடுவதும் புதிய பரத்தையரைப் பட்டம் கட்டுவதும் மரபும் இயல்புமாக இருந்தது.

"இந்திர விழவிற் பூவி னன்ன
புன்றலைப் பேடை வரிநிழ லகவும்
இவ்வூர் மங்கையர்த் தொகுத்தினி
எவ்வூர் நின்றன்று மகிழ்நநின் றேரே" **(ஐங்.62)**

மருதநிலத்தில் இந்திரவிழாப் போன்று பல்வேறு விழாக்களும் நிகழ்த்தப்பட்டுள்ளன. பரணர், மருதனிளநாகனார், அஞ்சில் அஞ்சியார், பாவைக்கொட்டியார், ஔவையார் ஆகியோர் பாடல்களில் அதன் குறிப்புக்கள் உள்ளன. இவ்விழாக்களில் பரத்தையர்கள் வலம் வருதலும், தலைவன் பரத்தமை ஒழுக்கத்தில் ஈடுபடுதலுமான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

பரத்தையிற் பிரிதல் என்பது புறப்பெண்டிரிடம் விரும்பித் தலைவியைப் பிரிதல் என்பதாகும். பரத்தையர்தம் கண் அன்பினைக் கண்ட ஆடவர் தாழ்ந்து நிறையில்லாமல் செல்வர். தலைவியை விட்டு நீங்கி ஆடல் காண்பர்; பாடல் கேட்பர். பரத்தையர்தம் ஆடை

அணிகலன்களின் வனப்பால் தலைவனது உள்ளம் கவரும் இயல்புடையோராவர். மருதநில விழாக்களில் மக்களும், அரசர்களும், படைத்தளபதிகளும், தலைவர்களும் ஒன்றிணைந்த வேளைகளில் பரத்தையர்களின் ஆடல் அரங்கேற்றம் நிகழ்ந்துள்ளது. அச்சூழலில் பரத்தையர்கள் இயல்பாகவே பிறரை நயப்பிக்கும் வனப்புடையர். ஆடல் தகைமையாலும், பாடல் குரலாலும் ஆடவர்களைத் தம் வசப்படுத்துவர். இந்நிகழ்வுக்குச் சிலம்பதிகாரத்தில் மாதவியின் ஆடல் அரங்கேற்றமும் வரிசை பெற்றதும் சான்றாகும்.

இந்திர விழா வேத்தியல், பொதுவியல் நிலையில் நிகழ்த்தப்பட்டது. ஆடல், பாடல், நாட்டியம், இசை முதலான கலைகளில் சிறந்த நுட்பங்களைக் கற்ற பரத்தையரின் அரங்கேற்றம், பரத்தையர்களைச் செல்வந்தர்கள் நாடுவது ஆகியன இயல்பான நிகழ்வாகக் கருதப்பட்டது. மருத நிலத்தில் நிகழ்த்தப்பட்ட பல்வேறு விழாக்களே பரத்தமைத் தொழிலையும், ஒழுக்கத்தினையும் அங்கீகரிக்கப்பட்ட மரபாக்கியன. பரத்தமையால் தலைவன் பிரிதலால் தலைவியர் புலப்பதும், ஊடுவதும் வழக்கமானது. இப்பரத்தையர்களுள் தன்னை நாடிவந்த தலைவனை மணந்து தன்னுள் வாழ்க்கை நடத்துபவள் காமக்கிழத்தியாவாள்.

காமக்கிழத்தி

மருதப்பாடல்களில் பரத்தை கூற்றாக வருவனவற்றுள் பெரும்பாலானவை காமக்கிழத்தி கூற்றாக அமைந்தவை. தலைவி பரத்தையரைப் பழித்துக் கூறுதல் இயல்பு; அதுபோலப் பரத்தையரும் தலைவியைப் பழித்துள்ளனர். அவற்றில் காமக்கிழத்தியே அத்தகைய உரிமை பூண்டவளாகிறாள். காரணம், தலைவனை மணமுடித்து அவன்பால் அன்பும் உரிமையும் உடையவளாவதேயாகும். *இவள் பரத்தையர் சேரியில் வாழ்ந்தாலும் பொருளுக்காகத் தலைவனை நாடுபவளாக இருந்தபோதிலும் பலரைப் புணராமல் ஒருவனைப் புணர்ந்து மணமுடித்துத் தன் கற்பினை நிலைநாட்டுபவளாகிறாள். சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் மாதவி காமக்கிழத்திக்குச் சான்றாகிறது. பேகன் தன் மனைவியான கண்ணகியை விடுத்து பரத்தையரை மணமுடித்துத் தன் இல்லம் திரும்பாமலே வாழ்ந்தது நினைவுகூறத்தக்கதாகும். பேகன் மணம்முடித்த பரத்தை, மணம்முடித்தலுக்குப் பின் காமக்கிழத்தியாகிறாள்'* என்பதை புறநானூற்றுப் பாடலொன்று உணர்த்துகிறது. இந்நிகழ்வுகள் காமக்கிழத்தி என்பவளைக் **'கிழத்தி'** என ஒருசாரார் குறிப்பதற்குச் சான்றாகிறது.

''காமக்கிழத்தியைக் கிழத்தியினின்று வேறுபடுத்திக்காட்ட ***'காம'*** *என்று அடை கொடுத்துத் தொல்காப்பியர் கூறியுள்ளார். காமம் காரணமாகத் தலைவனுக்கு வரைந்து கொடுக்கப்பட்டவள் காமக்கிழத்தி''*[10] என அ.சீநிவாசன் குறிப்பிடுகிறார். காமக்கிழத்தி கிழத்தியிலிருந்து சிறிது வேறுபட்டவள். அவள் வரைந்து கொடுக்கப்பட்டவள் அல்ல; காமம் காரணமாக பரத்தையரிடம் சென்ற தலைவன் மீது ஆறாக் காதல் கொண்டு ஒத்த மனத்ததால் கருத்தொருமித்து மணமுடித்ததில் கிழத்தியாக மாறுகிறாள். தலைவன் மீது அன்புறவு கொண்டு வாழும் பரத்தை காமக்கிழத்தி எனப் அழைக்கப்பட்டுள்ளாள். சமூகத்தில் தலைவியின் மதிப்புறு அளவுக்கல்லாமல் ஒரு குறிப்பிட்ட உரிமையும் பரிவும் பெற்றுக் காமக்கிழத்தி வாழ்ந்துள்ளதால் காமக்கிழத்தியின் உணர்வுகளைக் கூற்றாகப் பதிவு செய்துள்ளனர்.

- *தலைவன் பிறரோடு சேர்தலை அறிந்து புலக்குமிடத்தும்,*
- *மனைவி காமக்கிழத்தியை இகழ்ந்து பேசும் பொழுதும்,*
- *தலைவனின் புதல்வனைத் தழுவி வாயிலாகக் கொண்டவிடத்தும்,*
- *மனைவியை ஒத்தவள் என்ற கருத்தினால் பிற மகளிரைவிடத் தன் உரிமை கோரியவிடத்தும்,*
- *தலைவனுடன் விளையாடும் (புனலாடுதல்) பொழுதும்,*

இன்னபிற கூற்றுகளையும் தொல்காப்பியர்வழி அறியமுடிகிறது.[11] இக்கூற்றுக்களால் பரத்தையர் பகுதிகளில் காமக்கிழத்திக்குக் கிழத்திக்கு ஈடான தன்மையும், குணமும், சமூக மதிப்பும் இருந்துள்ளதை உணரமுடிகிறது. இதனால் கிழத்திக்கு அடுத்த நிலையால் பரத்தையரிலிருந்து வேறுபட்டவளாகவும் காமக்கிழத்தி கருதப்பட்டுள்ளாள் என்பது துணிபு. இக்காமக்கிழத்தி தலைவியைப் பழித்தல், தலைவனுடன் வாடா ஊடல் கொள்ளல், தலைவனைக் கழறுதல் போன்ற உரிமைகளைப் பெற்றுள்ளாள். இத்தகைய வரையறைச் செய்திகளால் காமக்கிழத்திக்குச் சங்க காலத்தில் நிலையான இடம் உண்டென்பது அறியத்தக்கதாகும்.

ஐங்குறுநூற்றில் மூன்று பாடல்கள் காமக்கிழத்தி கூற்றாகப் பாடப்பட்டுள்ளன. மணம்முடித்தல், புனலாடுதல், தலைவனைப் பிரிந்தபோது ஆற்றாமையுறுதல் போன்ற உணர்வுகளில் பாடப்பட்டுள்ளன.

“அம்ம வாழி தோழி மகிழ்நன்
ஒண்டொடி முன்கை யாமழப் பிரிந்துதன்
பெண்டி ரூரிறை கொண்டன னென்ப
கெண்டை பாய்தர் வவிழ்ந்த
வண்டுபிணி யாம்ப னாடுகிழ வோனே” (ஐங்.40)

என்ற பாடலில் காமக்கிழத்தி தன்னைப் பிரிந்து தன் தலைவியை நாடிச்சென்ற தலைவனை எண்ணித் துன்புறுதல் உரிப்பொருளாகிறது. ஆம்பல்மலரில் தேனை உண்ட வண்டு பிற மலர்களை நாடிச் சென்ற போதிலும் மீண்டும் ஆம்பல் மலரின் தேனைத் தேடி வருதலைப் போல, தலைவன் தன்னை நாடி வருவான் என நம்பிக்கை கொண்டு தன் தோழியிடம் கூறுகிறாள் என உணரமுடிகிறது.

பரத்தை காதலில் அலரும் மணம்முடித்தலும்

பரத்தையருள் பலரைத் தலைவன் புணருகையில் ஒரு பரத்தையின் மீது ஆறாக்காதல் கொண்டு மணம்முடித்த மரபும் உண்டு. களவில் தலைவன் தலைவி சந்தித்து தாமுற்ற களவினை வளர்க்கையில் அலருக்கு அஞ்சியுள்ளனர். ஆனால் கற்பில் ஈடுபட்ட தலைவன் பரத்தையிடம் செல்கையில் பரத்தைப் பெண்டிருடன் களவு மேற்கொள்கிறான். அத்தகைய சூழலில் அலர் ஏற்பட்டபோது பரத்தையர்கள் அலரை விரும்பியுள்ளனர். காமக்கிழத்தியான பின்பும். அலர் என்பது, *“இன்னானோடு இன்னாளிடை இதுபோலும்பட்டதென விளங்கச் சொல் நிற்கும் தன்மைத்தது.”*[12] இது மெல்லிய பெரிய பழிச்சொல்லாகும். இதனைப் *“பரத்தமையால்*

கற்பில் அலர் பரவும்”[13] என வ.சுப. மாணிக்கனார் குறிப்பிடுகிறார். கற்பில் அலரைப் பரத்தையர் உருவாக்க நினைக்கின்றனர். தலைவனை மணம்முடித்தல், புனலாடுதல் போன்றவை இவ்வலரை உருவாக்கும் நிகழ்வுகளாகும்.

“பஞ்சாய்க் கூந்தற் பசுமலர்ச் சுணங்கிற்
றண்புன லாடித்தன் னலமேம் பட்டனள்
ஒண்டொடி மடவர னின்னோ
டந்தர மகளிர்க்குத் தெய்வமும் போன்றே” (ஐங்.76)

“புதுப்புன லாடி யமர்த்த கண்ணள்
யார்மக ளிவளெனப் பற்றிய மகிழ்ந
யார்மக ளாயினு மறியாய்
நீயார் மகனை யெம்பற்றி யோயே” (ஐங்.79)

என்ற பாடல்களில் தலைவன் வேறொரு பரத்தையரை நாடுவதைத் தடுப்பதற்கும், பிற பரத்தையர் இவனைத் தம்பால் ஈர்க்க முயற்சிக்காமல் இருப்பதற்கும், தலைவன் தம்முடன் உறவாடுகிறான் என்பதைத் தலைவிக்கும் பரத்தைக்கும் அறிவித்தற்கே பரத்தையர் அலரை விரும்பியுள்ளமை கூறப்பட்டுள்ளது.

“நறுவடி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
நெடுநீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்” (ஐங்.61)

என்ற பாடலடிகளில் தீம்பழம் பொய்கையில் விழும் ஓசை அலர் என உள்ளுறையால் உவமிக்கப்படுகிறது.

“பேரூ ரலரெழ நீரலைக் கலங்கி
நின்னொடு தண்புன லாடுதும்” (ஐங்.77)

“பலரிவ ணெவ்வாய் மகிழ்ந வதனால்
அலர்தொடங் கின்றா லூரே மலர
தொன்னிலை மருதத்துப் பெருந்துறை
நின்னோ டாடின டண்புன லதுவே” (ஐங்.75)

என்ற பாடலடிகள் பரத்தையருடன் தலைவன் புனலாடுதலைக் குறிப்பிடுகின்றன. இப்புனலாடுதல் பரத்தையர்க்கும், தலைவிக்கும் தலைவனது பரத்தமை ஒழுக்கம் அலர்ப்படும் வாய்ப்பாகிறது. தலைவன் பரத்தையரை நாடிய சூழலில் அப்பரத்தையர் அவனைத் தலைவிபால் செல்லவிடாமல் தம் அழகில் மயங்கித் தம்முள் இருப்பதற்கு இவ்வலர் குறிப்புக்கள் காரணமாகின்றன.

“நல்லோர் நல்லோர் நாடி

வதுவை யயர விரும்புதி நீயே" (ஐங்.61)

எனத் தலைவனைப் பழித்துத் தலைவி கூற்றுரைக்கிறாள். இக்கூற்று அலரால் எழுந்த கருத்தோட்டமாகும். தலைவனுடன் ஊடலுற்றிருந்த போதிலும் அவன் பரத்தையருள் பலரை மணம்முடித்தலைத் தலைவி விரும்பாமல் துன்புறுகிறாள் என்பதை உணர்த்துகிறது. எனினும் பரத்தையர் சமூகத்தில் அலரைக் கண்டு அஞ்சாமல் அவ்வலரை விரும்பி ஏற்றுள்ளனர் எனத் தெரிகிறது.

காமக்கிழத்தியின் ஆற்றாமை

பரத்தைமைத் தொழிலை மேற்கொண்ட போதிலும் தலைவன் ஒருவனையே புணர்ந்து மணந்த பரத்தை காமக்கிழத்தியாவாள். தலைவன் தன்னை விட்டு நீங்காமல் இருப்பதற்கான காரண காரியங்களில் இயங்குபவள். தன் அழகுநலத்தை உயர்த்தித் தலைவியைவிடத் தனது முக்கியத்துவத்தினை நடத்தைகளில் வெளிக்காட்டுபவள். காமக்கிழத்திக்கும் தலைவிக்கான குணவியல்புகள் இருந்துள்ளன. தலைவியின் ஊடலைத் தீர்க்கும் வாயிலாகவும் இயங்கியுள்ளாள். தலைவன் பிரிந்த சூழலில் ஆற்றாமையால் இவளும் துன்பமெய்துவாள். இவள் பெறும் துன்பத்தினைத் தலைவி நகையாடுகிறாள்.

"ஒருநா ணம்மில் வந்ததற் கெழுநாள்
அழுப வென்பவவன் பெண்டிர்
தீயுறு மெழுகின் ஞெகிழ்வனர் விரைந்தே" (ஐங்.32)

என்ற பாடலில் தலைவன் பிரிந்த பொழுது எழுநாள் அழுதல் என்பது பண்டைய பரத்தையருள் மரபாகயிருத்தலை இகழ்ச்சிப் பொருண்மையில் குறிப்பிடுகிறாள். எழு என்பதற்கு எழுதல், எழும், எழு எனப் *பொருட்படுத்துகையில் "எழுகின்ற நாளெல்லாம் (விடிகின்ற நாளெல்லாம்) எனப் பொருள் உண்டு. எழு நாள் என்பதற்கு அன்றுதொட்டு எழுநாள் காறும் அழுவாராயின்"*[14] என பொ.வே.சோமசுந்தரனார் தம் உரையில் குறிப்பிடுகிறார். தீயில் உருகுகின்ற மெழுகைவிட உருகுவதாக அவர்களின் ஆற்றாமை இகழப்படுகிறது. தலைவன் உடனுள்ள பொழுது இன்புற்றும், பிரிந்த பொழுது கலங்கியும் இருப்பர் என இவர்களின் வருத்தம் தலைவிக்கு இகழ்ச்சிப் பொருளாகிறது. காமக்கிழத்தி தன்னைத் தலைவியாகப் பாவித்த பொழுதும் தலைவியின் கருத்தில் அவள் பரத்தையாவாள். தலைவன் பிரிந்த பொழுதில் அவனது முயக்கமும் இன்பமும் எண்ணிக் காமக்கிழத்தி ஆற்றாமையால் துன்புறுகிறாள்.

"தன்சொலு ணர்ந்தோ ரறியல னென்றும்
தண்டளிர் வெளவு மேனி
ஒண்டொடி முன்கை யாமழப் பிரிந்தே" (ஐங்.38)

"வெம்முலை யடைய முயங்கி நம்வயின்
திருந்திழைப் பணைத்தோண் ஞெகிழப்

பிரிந்தன னாயினும் பிரியலன் மன்னே" (ஐங்.39)

"ஒண்டொடி முன்கை யாமழப் பிரிந்துதன்
பெண்டி ரூரிறை கொண்டன னென்ப" (ஐங்.40)

என்பதான பாடலடிகளில் தலைவனுடனான முயக்கம் இன்றித் தனது மேனியை வருத்தி நம்மை அழ வைத்துப் பிரிந்து சென்றான் என அவளது கூற்றில் துன்பம் புலப்படுகிறது.

பிரிந்த தலைவனை எண்ணிப் புலம்பும் பரத்தை தலைவியிடத்துச் சினம் கொள்கிறாள். தலைவன் தனக்கானவன் என நம்பிக்கை கொள்கிறாள். தன்னைப் புணர்ந்த தலைவனைத் தனது எச்சில் என வசைமொழிகிறாள்.

"குருகுடைத் துண்ட வெள்ளகட் டியாமை
அரிப்பறை வினைஞ ரல்குமிசைக் கூட்டும்
மலரணி வாயிற் பொய்கை யூரநீ
என்னை நயந்தனெ னென்றிநின்
மனையோள் கேட்கின் வருந்துவள் பெரிதே" (ஐங்.81)

என்ற பாடலில் அமைந்த உள்ளுறை உணரத்தக்கது. குருகு உண்ட ஆமையின் எஞ்சிய எச்சில் உணவைப் பறைத்தொழிலை உடையவர்கள் இரவு உணவாகக் கொண்டனர். இச்செயல் பரத்தையரைப் புணர்ந்த தலைவனது எச்சில் உடலை தலைவி கூடுவாள் என்பதை உணர்த்துவதாகும். குருகு எச்சில் பட்ட ஆமையின் உடல், பரத்தையின் எச்சிலான தலைவனின் உடலுக்கு ஒப்பானதாகிறது. தலைவனைப் புணர்வதால் தலைவி பறைத்தொழில் புரிவோருக்கு ஒப்பானவளாகிறாள் என்பது பரத்தைக் கூற்றால் உணரத்தக்கது. பகலில் பரத்தையைப் புணரும் தலைவன் இரவில் தலைவியைப் புணர்வான். தலைவன் தலைவி இடையே நிகழும் இரவுப் புணர்ச்சியானது பரத்தையின் எச்சில் புணர்ச்சி எனப் பரத்தை சுட்டுகிறாள். இக்கூற்றில் தலைவியைப் பழித்துத் தன்னை மேம்படுத்திக் கூறுவதைக் காணமுடிகிறது. சமூகத்தில் தனது தொழிலால் இழிந்த நிலையிலுள்ள பரத்தை, தன்னைப் புணர்ந்து பிரிந்த தலைவனைத் தன்னால் உரிமையோடு பெறமுடியாமல் தலைவியைப் பழிப்பதில் அவளது உள்ளப்பாங்கு புலப்படுகிறது.

காமக்கிழத்தி பரத்தை போல் தலைவியைப் பழித்துக் கூறுவதாகவோ இடித்துரைப்பதாகவோ அமையவில்லை. மாறாகத் தலைவனைப் பழிக்கிறாள்; ஊடுகிறாள். தன் தோழியிடம் தன் ஆற்றாமை உரைக்கிறாள்; பாங்காயினர்க்குத் தலைவனைத் தன்வசம் இருத்திக்கொள்வேன் எனச் சூளுரைக்கிறாள். தலைவி போல் தலைவனுக்கோ, தோழிக்கோ, பாங்காயினர்க்கோ புறமொழி கூறுகிறாள். வாயில்களான தோழிக்கோ, பாங்காயினர்க்கோ உரைக்கும் தன் மொழிகளைத் தலைவிக்கோ, தலைவனுக்கோ உரைப்பதாகவே கருதுகிறாள். இந்நிலையில்,

"யாண ரூரநின் மனையோள்
யாரையும் புலக்கு மெம்மைமற் றெவனோ" (ஐங்.87)

எனத் தான் தலைவனுடன் புலந்துள்ளதை எடுத்துரைக்கிறாள். தலைவனின் பிரிவால் தலைவியின் புலத்தலும், ஊடலும் மிகுதிப்பட காமக்கிழத்தி தன் ஆற்றாமை, வேட்கை முதலானவற்றைக் கட்டுப்படுத்தி,

"எம்மிவ ணல்குத லரிது
நும்மனை மடந்தையொடு தலைப்பெய் தீமே" (ஐங்.86)

எனத் தலைவனை இல்லம் செல்ல பணிக்கிறாள். தன்னைத் தலைவியாகப் பாவித்தாலும், சமூகத்தில் இல்லற அமைவினை உணர்ந்து தலைவியின் பண்பை மேன்மைப்படத் தலைவனுக்கு எடுத்துரைக்கிறாள்:

"பெண்டென விரும்பின் றவடன் பண்பே" (ஐங்.89)
"அன்ன தாகலு மறியாள்" (ஐங்.90)

எனும் கூற்றுக்கள் நினைக்கத்தக்கன.

தலைவியின் புலத்தலும், ஊடலும் தலைவனுக்கு மட்டுமல்ல தனக்குமானதாகக் காமகிழத்தி தெளிந்துள்ளாள். 'எம்மொடு புலக்குமவன் புதல்வன் தாயே' (ஐங்.90) என மொழிகிறாள். இக்காமகிழத்தி சமூகச்சூழல், பரத்தையர் இயல்பு, தலைவனது பண்பு, தலைவியின் ஆற்றாமை, தாயை ஒத்த மனைவியின் பண்பு ஆகியவற்றை உணர்ந்த பெண்மை பெற்றவளாகிறாள்.

"மகிழ்நன் மாண்குணம் வண்டுகொண் டனகொல்
வண்டின் மாண்குண மகிழ்நன்கொண்டான்கொல்" (ஐங்.90)

என்பதான ஆடவர் இயல்புணரும் அவள் தலைவனுக்கு இல்லறநெறி உணர்த்துகிறாள்.

"தண்டுறை யூரனை யெவ்வை யெம்வயின்
வருதல் வேண்டுது மென்ப
தொல்லேம் போல்யா மதுவேண் டுதுமே" (ஐங்.88)

எனத் தலைவி தலைவன் மீதான கோபத்தினைப் புலப்படுத்தினாலும், 'யாமது வேண்டுதுமே' என்ற கூற்று தலைவி தலைவனுடன் வாழ விரும்பும் கொள்கையை உணர்த்துகிறாளாகத் தெரிகிறது. தலைவி தன்னை ஏற்காத நிலையை உள்ளுறையாகத் தலைவனுக்கு உணர்த்துகிறாள்.

'கரும்பு குணிலா மாங்கனி யுதிர்க்கும்' (ஐங்.87) எனக் கரும்பினைக் கொண்டு மாங்கனிகளை உதிர்க்கும் செயல் கூறப்படுகின்றது. கரும்பும், மாங்கனிகளும் இனிப்புச் சுவையைத் தருவன. இரு சுவைகளில் தற்போதைய தேவை என்பது முக்கியத்துவம் பெறுகிறது. மாங்கனி எனும்போது கரும்பு தேவையற்றதாகி விடுகிறது. தலைவியும், காமக்கிழத்தியும் இன்பம் தருபவர்கள்தாம். காமக்கிழத்தி இனியவளாயினும் தலைவி

எனும்போது அவள் கரும்புக்கு ஒப்பாகி தேவையற்றவளாகிறாள். மாங்கனி தலைவிக்கு ஒப்பாகிறது. தலைவி உயர்வுடையவளாகிறாள். தலைவியும் காமக்கிழத்தியும் தலைவனின் அன்பையும் உரிமையையும் பெறுதலுக்கான போராட்ட நிலையைப் பாடல்களில் காணமுடிகிறது.

பரத்தையின் போலியன்பு

பரத்தையரது அன்பு நிரந்தரமில்லாதது. தீயிலிட்ட மெழுகைவிட எளிதில் நெகிழ்ந்து விடுவது. அப்பரத்தையர்களில் நல்லவர் நல்லவர் எனத் தேடி வதுவை புரிய தலைவன் விரும்புகின்றான் (ஐங்.61). அவர்களோடு வாழ்வதால் அவன் ஊரிலிருந்தும் இல்லாத நிலையினன் ஆகின்றான். பரத்தையர்க்கு அஞ்சுகிறான் (ஐங்.54, 15). தலைவி நலத்தை விடப் பரத்தையர் நலம் அவனுக்குப் பெரிதாகின்றது (ஐங்.57). தலைவனுக்கு நிகராக இல்லாத பரத்தையர் தலைவனுக்கு நிகராகத் தம்மைப் பாவித்து (ஐங்.67) பொருளாசையில் தலைவனை நாடுகின்றனர் (ஐங்.88). அன்பு செலுத்துகின்றனர். இவ்வன்பு பொருளாசையில் எழுந்தது. இதனை உணர்ந்த தோழி பரத்தையரது அன்பானது போலியன்பு எனத் தலைவனுக்குக் கூற்றுரைக்கின்றாள்.

வாயில்கள்

வாயில்கள் அகமாந்தர்களின் இல்வாழ்வினை நல்வழிப்படுத்துபவர்கள்; அவர்களின் நோக்கமும் முயற்சியும் அதுவாகிறது. திணைப் பாடல்களில் வாயில்களின் கூற்றைவிட வாயில்களை முன்னிறுத்திய கூற்றுக்களே மிகுதி. கற்புப் பாடல்களில் இடம்பெறும் வாயில்கள் மாந்தர்களின் புலத்தல், ஊடல், வாயில் மறுத்தல், வாயில் நேர்தல் ஆகியவற்றில் நிகழும் சிக்கலை விளக்குகிறது. அக இலக்கியத்தில் வாயில்கள் பன்னிருவர்[15] எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இப்பட்டியலில் புதல்வன் இல்லை. புதல்வன் கூற்று நிகழாதாதலால் தொல்காப்பியர் கூறவில்லை போலும். எனினும், புதல்வனை முன்னிறுத்திய நிமித்தங்கள் தலைவன், தலைவி, தோழி, காமக்கிழத்தி ஆகியோரிடம் நிகழ்ந்திருக்கிறது. தொல்காப்பியர் குறிப்பிடும் வாயில்கள் பன்னிருவரையும் முன்னிறுத்திக் கூற்றுகள் நிகழுவதால் புதல்வனையும் வாயில்எனக் கருத இடமளிக்கிறது. இவ்வாயில்கள் தலைவியின் மாண்புகளைத் தலைவனுக்கு உரைத்தல், தலைவனின் பிரிவில் தலைவியின் நிலை உணர்தல், நல்லனவற்றை உரைத்தல், அல்லனவற்றைக் கடிதல், அறத்தினை எடுத்துரைத்தல், நிமித்தம் கூறல், ஊடல் தணிவித்தல், செலவழுங்கல் முதலானவற்றை நிகழ்த்துகின்றன. இவற்றால் தலைவன் தலைவியரின் சூழல் சார்ந்த உள்ளப்பாங்கும், தேவைகளோடு சார்ந்த சமூக இயக்கமும் உணரப்படுகின்றன. கற்பு வாழ்வில் பரத்தையர் குலம் விரும்பிய தலைவனால் தலைவி ஊடல் உணர்வுகொள்ளல், தலைவனின் நெறி தவறிய ஒழுக்கத்தினால் வருந்துவதைத் தேற்றவும் மட்டுப்படுத்தவும், ஒழுக்கத்தினை அறிவுறுத்தவும் வாயில்கள் முயல்கின்றனர். இவ்வாயில்கள் சமூகநிலை, புறத்தொழுக்கம், பொதுமைத் தன்மை, பரந்த மனப்பான்மை ஆகியவற்றில் தலைவனின் ஒழுக்கத்தினைச் சுட்டிக்காட்டுகிறது.

"அணிநடை யெருமை யாடிய வள்ளல்
மணிநிற நெய்த லாம்பலொடு கலிக்கும்
கழனி யூரன் மகளிவள்
பழன வூரன் பாயலின்றுணையே" **(ஐங்.96)**

என்ற பாடலில் பரத்தமை ஒழுக்கம் நாடிய தலைவனால் வருந்திய தலைவி தலைவனைக் கணடதும் அவனோடு புலக்காமல் அகமும் புறமும் மலர்ந்து ஏற்றுக்கொண்டாள். இதனைக் கண்ட வாயில்கள் தலைவியின் பெருந்தன்மையைக் கண்டு வியந்ததைக் காணமுடிகிறது.

மாந்தர்களின் இன்பம் பொருந்திய இல்வாழ்க்கையே பயனாகக் கருதி வாயில்கள் செயல்பட்டனர். தலைவன் தலைவியரிடையே ஊடகமாகவும், முரண்களைக் களைபவர்களாகவும் வாயில்கள் செயல்பட்டுள்ளனர். *'வாயில் கிளவி வெளிப்படக் கிளத்தல்'*[16] என்பதான ஒழுங்குமுறை சமூகத்திற்கு அடிப்படை. இதனை, *'குற்றங் காட்டிய வாயில்'*,[17] *'கூறிய வாயில் கொள்ளாக் காலையும்'*[18] என வாயில்களைப் பற்றித் தொல்காப்பியர் வரையறுக்கின்றார். சங்கச் சமூகத்தில் பரத்தையரை நாடுதல் ஆடவர்களின் பொதுவியல்பு. இதற்கு விலக்கான சமூகம் இல்லை. பரத்தை பிரிவில் நிகழும் வாயில்களின் கூற்றுக்கள் பரத்தைக்கும் தலைவிக்குமான முரண்களைக் குறிக்கின்றன. பரத்தை தலைவியைக் குறித்த செய்தியும், தலைவி பரத்தமை குறித்த செய்தியும் வாயில்களின் கூற்றில் வெளிப்படுகின்றன. தலைவியைத் தவிர மற்றைய சூழல்களுக்குத் தொடர்பு கொள்ள வாயில்கள் தேவையற்றனவாகத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. வாயில் மறுத்தலும், நேர்தலும் தலைவியின் உரிமையாக அமைந்தது. மருத நிலத்தில் தலைவியை முன்னிறுத்தியே ஒழுங்குமுறைச் சமூகக் கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு அடிப்படையாகப் புலத்தலும், ஊடலும், வாயில் மறுத்தலும் அமைகின்றன.

வாயில் மறுத்தல்

பரத்தமை ஒழுக்கம் நாடிய தலைவன் மீண்டு தன் இல்லம் வந்து மனையாளாகிய தலைவியுடன் சேர்ந்து வாழத் தலைப்பட்டுள்ளான். இச்சூழலில் தலைவியின் ஊடலைத் தணிப்பதற்குத் அவளது நிலைப்பாட்டை அறிதற்குப் பாணன், அறிவன், பாங்கன் போன்றோரைத் தூதாக அனுப்பி அறியமுற்படுகிறான். தலைவி தன் ஊடலால், பரத்தமை நாடிய தலைவனைத் தன் இல்லம் சேர்க்க மறுத்துரைகிறாள். இது வாயில் மறுத்தல் நிகழ்வாகும். மேற்குறித்த வாயில்கள் தலைவனுக்காக வாயில் வேண்டுகையில் பரத்தரையது அன்பு போலியன்பென உணர்த்தல், தலைவியின் பழமைநலம் கூறல், தலைவன் உரைத்த சூளை நினைவுறுத்தல் போன்ற சூழல்களைப் புலப்படுத்துகின்றனர். இதனைக் *காய்தல், உவத்தல், பிரிதல், பெட்டல்*[19] முதலான உணர்வு வகைப்பாட்டில் தொல்காப்பியம் வரையறுக்கின்றது.

ஐங்குறுநூற்றில் பரத்தமை ஒழுக்கம் குறித்த வாயில் மறுத்தல் பாடல்களில் தலைவியின் 'காய்தல்' உணர்வில் அமைதலைக் காணமுடிகிறது. இவ்வுணர்வு தலைவனது சூளால் உருவானது. சூளானது உறுதிமொழி. 'பிரியலன்' (ஐங்.18), 'நீங்கேன்' (ஐங்.22), 'கடனன்று'

(ஐங்.30) என்றிவ்வாறு உரைக்கும் சூள் தலைவிக்குத் தலைவன் மீது நம்பிக்கையை உண்டாக்கியது. ஆயின் தலைவன் பரத்தமை ஒழுக்கம் கொள்கையில் அவன் உரைத்த சூள் பொய்த்தலின் வாயில் மறுத்தல் நிகழுகிறது.

வாயில் நேர்தல்

ஐங்குறுநூற்றின் மருதத் திணையில் தலைவன் பரத்தையிற் பிரிதல் தொடர்பில் அவனுக்கு வாயில் மறுத்தலாக 62 பாடல்கள் உள்ளன. வாயில் நேர்தலாக 3 பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. வாயில் நேர்தலுக்குத் தலைவன் தலைவியரின் ஆற்றாமை காரணமாக அமைகின்றது. 'மகிழ்மிகச் சிறப்ப மயங்கினள்' (ஐங்.42), 'நின் மார்புநனி விலக்கல் தொடங்கி யோளே' (ஐங்.42) என்பதான தலைவனின் கூற்றுக்கள் ஆற்றாமையை உணர்த்தித் தலைவியின் அன்பின் ஏற்பைப் பெறுவன. பிரிவில் தலைவி நோயுறுவதும் தலைவன் வருத்தமுறுவதும் அவர்தம் அன்பில் விளைவதாகும். தலைவன் வாயில் நேர்ந்ததால் வாயிலாய் வந்தோரிடம் மேன்மை பெற்றான்.

பொய்கைப் பூவின் தண்ணியள், நோய்க்கு மருந்தாகிய பணைந்தோளள் (ஐங்.99) எனத் தலைவியைத் தலைவன் வாழ்த்துகிறான். குளத்தில் இருந்த எருமை தன் கொம்பில் பகன்றைக் கொடியையும் மலரையும் சேர்த்துத் தொடுத்திருந்ததைக் கண்ட எருமைக் கன்று வெருண்டது. எருமையல்ல என எருமைக் கன்று தவறாகப் புரிந்து வெருண்டது தலைவிக்கு ஒப்பாகித் தலைவனை அவள் தவறாகப் புரிந்துகொண்டாள் என்பது குறிப்பாகிறது. 'எருமை கழனியில் நெற்கதிரையும், முயிறு குடம்பையும் ஒருசேர கலைத்தல்' (ஐங்.99) புலத்தலையும், ஊடலையும் ஒரு நிகழ்வில் கலைத்தற்கான குறிப்பாக ஒரு பாடலில் கூறப்பட்டுள்ளது. புலத்தலையும் ஊடலையும் தீர்த்தற் பொருட்டுக் களவுக் குறிப்புக்கள் அமைதல் நினைவு கூரத்தக்கதாகும். 'புனலாடு புணர்துணை யாயினள்' (ஐங்.72), 'ஒண்ணுத லரிவை பண்ணை பாய்தல்' (ஐங்.73), 'பண்ணை பாய்வோ டண்ணறுங் கதுப்பே' (ஐங்.74), 'நல்ல சொல்லி மணந்தினி' (ஐங்.22), 'தேற்றஞ் செய்துநப் புணர்ச்சியவளின் (ஐங்.23), 'எவ்வந் தீர நினக்கு மருந்தாகியயான்' (ஐங்.59), 'இவள் பாணர் நரம்பினு மின்கிளவியள்' (ஐங்.100) என்பவற்றால் களவுக் காலத்தில் வாழ்ந்த அன்பான வாழ்வை மீண்டும் வாழ்வோம் என்னும் தலைவனின் உள்ளத்தை உணரலாம்.

முடிவுரை

இந்திரவிழா என்பது பொதுமக்களின் விழாவாக இருந்தபோதிலும் வேந்தன் முதலிய உயர்ந்தோர்கள் நடன, நாட்டியக் கலைகளை நிகழ்த்துவதும் பரத்தையரை அரங்கேற்றுவதும் வழக்கமாக இருந்துள்ளது.

காமக்கிழத்திக்கும் பரத்தைக்கும் வேறுபாடு இருந்துள்ளது. காமக்கிழத்தி பரத்தைச் சமூகத்தில் வாழ்ந்த போதிலும் தலைவிக்கு ஒத்தவளாகவே இருந்துள்ளாள். தலைவனுடன் கழறுதல், ஊடல், தலைவியைப் பழித்தல் போன்ற மனைவிக்குண்டான செயல்களில் தன்னைத் தலைவிக்குப் போட்டியாக ஈடுபடுத்திக் கொண்டவள்.

பரத்தையர்கள் தலைவனுடன் இணைந்திருப்பதில் புலப்படும் அலரை விரும்பியுள்ளனர். தலைவனுடன் மணம்முடித்தல், புனலாடுதல் போன்ற நிகழ்வுகளால் அலரைத் தாமே ஏற்படுத்தியுள்ளனர். இவ்வலர் பிற பரத்தையர் தலைவனை நாடாமல் இருக்கத் துணைபுரிந்துள்ளதாக எண்ணியுள்ளனர்.

தலைவி தலைவன் மீது ஊடலுற்ற போதிலும் அவன் மீதான அன்பினால் பிரிவுத் துயருற்று ஆற்றாமையுற்றாள். எனினும் பரத்தமை ஒழுக்கத்தைத் தலைவனுக்குத் தவறெனச் சுட்டிக்காட்டுதற்கும், சமூக ஒழுக்கத்தினை உணர்த்துவதற்கும் தன்ஆற்றாமையைக் கட்டுப்படுத்துகிறாள். தலைவனிடத்தில் ஊடலை நீட்டித்துள்ளாள் எனப் பாடல்களின்வழி அறிய முடிகிறது.

தலைவனது பரத்தமை ஒழுக்கத்தால் ஊடலுற்ற தலைவி வாயில்மறுத்தலிலும், வாயில்நேர்தலிலும் அவளது அன்பு புலப்படுகிறது. தனது அன்பினைச் சுட்டிக்காட்டவும் தலைவனது அன்பினை எண்ணுவதற்கும் களவுக்கால நினைவுகள் பாடல்களில் உரிப்பொருளாகப் பாடப்பட்டுள்ளன. கற்பு வாழ்வினைப் புலப்படுத்தும் மருதத்திணையில் களவுப் பாடல்கள் இடம்பெற்றிருப்பது வாயில்நேர்தற்குக் காரணிகளாக அமைந்துள்ளதை அறியமுடிகின்றது.

சான்றெண் விளக்கம்

1. மு.அருணாசலம்பிள்ளை, தொல்காப்பியம் அகத்திணையியல் உரைவளம், ப.178.
2. க. வெள்ளைவாரணன், தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம், ப.907.
3. தொல். பொருள்., நூற்.267.
4. தொல். பொருள்., நூற்.185.
5. தொல். பொருள்., நூற்.156.
6. க. வெள்ளைவாரணன், தொல்காப்பியம் கற்பியல் உரைவளம், ப.92.
7. மேலது. ப.94.
8. ராவ்பகதூர் பவானந்தம்பிள்ளை (ப.ஆ.), இறையனார் களவியல் உரை, ப.191.
9. புறம். 144.
10. அ. சீநிவாசன், பழசும் புதுசும், ப.35.
11. தொல். பொருள்., நூற்.149.

INAM : INTERNATIONAL E-JOURNAL OF TAMIL STUDIES

12. வை. சாத்தையா, சங்க இலக்கியத்தில் அம்பலும் அலரும், ப.12.
13. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப. 234.
14. பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ.), ஐங்குறுநூறு, ப.60.
15. தொல். கற்பு., நூற்.191.
16. தொல். பொருள்., நூற்.237.
17. தொல். பொருள்., நூற். 99.
18. தொல். பொருள்., நூற்.109.
19. தொல். பொருள்., நூற்.145.

துணை நூற்பட்டியல்

- அருணாச்சலம்பிள்ளை மு., தொல்காப்பியம் அகத்திணையியல் உரைவளம், பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 21, இரண்டாம் பதிப்பு 1994.
- வெள்ளைவாரணன் க., தொல்காப்பியம் பொருளியல் உரைவளம், பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 21, முதற்பதிப்பு 1983.
- இளம்பூரணர் (உ. ஆ.), தொல்காப்பியம் பொருளதிகாரம், கழகவெளியீடு, சென்னை - 1, 1969.
- நமச்சிவாயமுதலியார், கா. (ப. ஆ.), இறையனார் களவியல் என்னும் இறையனார் அகப்பொருள், 130, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை, 1943.
- துரைச்சாமி ஔவை. சு., புறநானூறு, கழக வெளியீடு, சென்னை - 18, மறுபதிப்பு 2007. சீநிவாசன், அ. பழசும்புதுசும், கவிதாபதிப்பகம், மதுரை, 1980.
- சாத்தையா வை., சங்க இலக்கியத்தில் அம்பலும் அலரும், வைஜெயந்தி பதிப்பகம், 11/எல்பார்க்கசு, ஈ.வெ.ராசாலை, புத்தூர், திருச்சிராபள்ளி, 1995.
- மாணிக்கம் வ.சுப., தமிழ்க்காதல், மெய்யப்பன்பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம்- 1, இ. ப. 2005.
- சோமசுந்தரனார் பொ.வே. (உ. ஆ.), ஐங்குறுநூறு, கழகவெளியீடு, திருநெல்வேலி - 6, மு. ப.1961.
- நச்சினார்க்கினியர் (உ. ஆ.), தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் கற்பியல், பொருளியல், கழகவெளியீடு, சென்னை- 18, 2000.

மதிப்பிடப்பெற்றது

வினாப் பெயர்கள்: இலக்கணிகளின் பார்வைகளும் பதிவுகளும்

Interrogative Nouns: Grammarian's Perspectives and Observations

முனைவர் **கி.சங்கர நாராயணன்**
உதவிப் பேராசிரியர், தமிழ்மேம்பாட்டுச் சங்கப்பலகைத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம், மெரினா வளாகம், சென்னை - 5
krksankaraatamil@gmail.com

Abstract: This Paper attempts to examine the perspectives and observations of Tamil traditional grammarians in regard to the Interrogative Nouns and to trace on the development of their views Chronologically, i.e. right from Tolkappiyam The Modern Literary corpus will also be used to find out whether there are any Significant development are noticeable in the use of Interrogative Nouns.

Keywords: Tolkappiyam, Literary corpus, வினாப் பெயர், இலக்கணி

வினாப் பெயர்களின் வருகை, அமைப்பு முறைகள் குறித்த இலக்கணிகளின் பார்வைகளையும் பதிவுகளையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

தொல்காப்பியம் திணை அடிப்படையில் பெயர்களை மூன்றாகப் பிரிக்கின்றது. அவையாவன,

1. உயர்திணைப் பெயர்
2. அஃறிணைப் பெயர்
3. ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமைய (விரவுப் பெயர்)

தொல்காப்பியம் (தொல்.162-165), அவன், இவன், உவன், அவள், இவள், உவள், அவர், இவர், உவர், யான், யாம், நாம், யாவன், யாவள், யாவர் என்னும் பெயர்களும், ஆண்மையடுத்த மகன் என்னும் கிளவி (ஆண்மகன்), பெண்மையடுத்த மகள் என்னும் கிளவி (பெண்மகள்), பெண்மையடுத்த இகர இறுதி (பெண்டாட்டி), நம் ஊர்ந்துவரும் இகரமும் ஐகாரமும் (நம்பி, நங்கை), முறைப்பெயர் சுட்டா மகன், மகள், மாந்தர், மக்கள் என்னும் பெயரும், ஆடூஉ, மகடூஉப் பெயர், சுட்டெழுத்தை முதலாக உடைய அன்னும் ஆனும் (அன்னன், அன்னான்), சுட்டெழுத்தை முதலாக உடைய பெண்டென் கிளவி (அன்னள், அன்னாள்), ஒப்பொடு வரும் கிளவி (கண்ணன்னன்), எல்லாரும், எல்லீரும், பெண்மையடுத்த மகன் என்னும் கிளவி (பெண்மகன்), நிலப்பெயர் (மதுரையான்), குழுப்பெயர் (சங்கத்தான்), குடிப்பெயர் (சேரன்), வினைப்பெயர் (தச்சன்), உடைப்பெயர் (பொன்னன்), பண்புகொள் பெயர் (கரியன்), பல்லோர்க் குறித்த முறைப்பெயர் (தாயர், தந்தையர்), பல்லோர் குறித்த சினைப்பெயர் (குருடர், செவிடர்), பல்லோர் குறி;த்த திணைப்பெயர் (வேட்டுவர்), கூடிவரும் வழக்கின் ஆடியல் பெயர் (செவ்வணியர், வெள்ளணியர்), எண்ணியற்பெயர் (பதின்மர்) என்ற உயர்திணைப் பெயர்களைக் குறிப்பிடுகின்றது.

"அவ்வழி
அவன் இவன் உவனென வரூஉம் பெயரும்
அவள் இவள் உவளென வரூஉம் பெயரும்
அவர் இவர் உவரென வரூஉம் பெயரும்
யான்யாம் நாமென வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவ ரென்னும்
ஆவயின் மூன்றோடு அப்பதி னைந்தும்
பாலறி வந்த உயர்திணைப் பெயரே" **(தொல்.சொல்.162)**

"யாதுயா யாவை யென்னும் பெயரும்" **(தொல்.சொல்.167)**

தொல்காப்பியம் **(தொல்.167-171)**, அது, இது, உது, அவை, இவை, உவை, அஃது, இஃது, உஃது, அவ், இவ், உவ், யாது, யா, யாவை என்னும் பெயர்களும், பல்ல, பல, சில, உள்ள, இல்ல, வினையாலணையும் பெயர் (உழுதது), பண்புப் பெயர் (கரியது), இனைத்து எனக் கிளக்கும் எண்ணுக்குறிப்பெயர் (ஆயிரம் தந்தான்), ஒப்பின் ஆகிய பெயர்நிலை (கண் போன்றது) ஆகிய அஃறிணைப் பெயர்களைக் குறிப்பிடுகின்றது.

விரவுப்பெயர்களாகத் தொல்காப்பியர் **(தொல்.174-179)**, இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர், முறைப்பெயர், தாம், தான், எல்லாம், நீயிர், நீ என்பனவற்றைக் குறிப்பிடுகின்றார். மேலும்,

இயற்பெயர் - பெண்மை இயற்பெயர், ஆண்மை இயற்பெயர், பன்மை இயற்பெயர், ஒருமை இயற்பெயர்

சினைப்பெயர் - பெண்மை சினைப்பெயர், ஆண்மைச் சினைப்பெயர், பன்மைச் சினைப்பெயர், ஒருமைச்சினைப்பெயர்

சினைமுதற்பெயர் - பெண்மை சுட்டிய சினைமுதற்பெயர், ஆண்மை சுட்டிய சினைமுதற்பெயர், பன்மை சுட்டிய சினைமுதற்பெயர், ஒருமை சுட்டிய சினைமுதற்பெயர்

முறைப்பெயர் - பெண்மை முறைப்பெயர், ஆண்மை முறைப்பெயர்

நேமிநாதம் **(நேமி.55)**, எவன், எவள், எவர், யாவன், யாவள் என்ற உயர்திணை வினாப்பெயர்களையும், எது, எவை, யாது, யாவை, இவை முதலிய அஃறிணை வினாப்பெயர்களையும் குறிப்பிடுகின்றது **(நேமி.57)**.

நன்னூல், எவன், ஏவன், யாவன் என்பனவற்றை ஆண்பால் வினாப்பெயர்களாகவும் **(நன்.276)**, எவள், ஏவள், யாவள் என்பனவற்றைப் பெண்பால் வினாப்பெயர்களாகவும் **(நன்.277)**, எவர், யாவர் என்பனவற்றைப் பலர்பால் வினாப்பெயர்களாகவும் **(நன்.278)**, எது, ஏது, யாது என்பனவற்றை அஃறிணை ஒன்றன்பால் வினாப்பெயர்களாகவும் **(நன்.279)**, எவை,

ஏவை, யாவை என்பனவற்றை அஃறிணை பலவின்பால் பெயர்களாகவும் (நன்.280) நன்னூல் சுட்டுகின்றது.

இலக்கண விளக்கம் (இல.வி.177), எவன், ஏவன், யாவன் என்னும் உயர்திணை வினாப்பெயர்களையும், எது, ஏது, யாது, எவை, ஏவை, யாவை என்னும் அஃறிணை வினாப்பெயர்களையும் (இல.வி.180-181) குறிப்பிடுகின்றது.

தொன்னூல் விளக்கம் (தொ.வி.65), எது, ஏது, யாது என்ற உகர ஈற்று வினாப்பெயர்களைச் சுட்டுவதைப் பின்வரும் நூற்பா விளக்குகின்றது.

“எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏ இரு வழியும் வினா ஆகும்மே
எவன் என் வினா வினைக் குறிப்பு இழி இருபால்” (தொ.வி.சொல்.102)

சுவாமிநாதம் (தொ.வி.39), எவன், யாது என்னும் வினாபெயர்களைக் குறிப்பிடுகின்றது.

முத்துவீரியம், எவன், யாவன் என்னும் ஆண்பால் வினாப்பெயர்களையும் (மு.வீ.477), எவள், யாவள் என்னும் பெண்பால் வினாப்பெயர்களையும் (மு.வீ.479), எவர், யாவர் என்னும் வினாப்பெயர்களையும் (மு.வீ.481), யாது என்னும் ஒன்றன்பால் வினாப்பெயரையும் (நூ.482) குறிப்பிடுகின்றது. தமிழ்நூல் (தமிழ்.54), எவள் என்னும் வினாப்பெயரினை மட்டும் சுட்டுகின்றது.

தென்னூல் (தென்.86,88), உயர்திணைப் பெயரில் வினாவெழுத்துக்கள் என்று குறிப்பிடுகிறதே தவிர, எந்த எழுத்துக்கள் என்பதைச் சுட்டவில்லை. அஃறிணைப்பெயரில் எது, யாவை என்பனவற்றைக் குறிப்பிடுகின்றது.

தமிழ்க் காப்பு இயம் (த.கா.இ.97-100), யாவன், யாவள், யாவர், யாது, யாவை ஆகிய ஐந்தும் முறையே ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பாலுக்கு உரிய வினாவெழுத்தாகும் என்கிறது. மேற்கூறிய ஐந்தின் மருவிய நிலையாக எவன், எவள், எவர், எது, எவை என்பனவற்றைக் குறிப்பிடுகின்றது. ஏன், எங்கே என்னும் இரண்டு பெயர்களும் ஐம்பால் மூவிடத்திற்கும் உரியனவாகும் என்கிறது.

Who என்னும் வினாப்பெயர் உயர்திணைக்கும் **what** என்னும் வினாப்பெயர் அஃறிணைக்கும் உரியனவாக வழக்கில் வரையறை செய்யப்பட்டிருக்கிறது என்றும் மு.வ. சுட்டுகிறார் (2003:53).

மேலும், யாரை என்னாமல் யார் என்று குறுகிய வடிவில் சொல்லை வழங்குவதால், முயற்சிக் சுருக்கத்தோடு காலச் சிக்கனமும் ஆயிற்று என்கிறார் யெஸ்பர்ஸன் (மு.வ.,2003:223).

தற்காலத் தமிழில் வினாப் பெயர்கள்

தடுப்பது எது?
எதையும் தாண்டாததால் இருந்த இடத்திலேயே நான் இருப்பதாகவும் அர்த்தமில்லை.
ஏன் ஊர்ஊராக அலைய வேண்டும்?
அவ எப்படி ஆளு
கடிதமா, கடிதம் எழுதியவரா உயிருடன் இருக்க வேண்டியது எது?
யார் யார் எந்தெந்த அளங்களுக்குப் போக வேண்டும்
யார் என்ன கொடுக்க போகிறார்கள்?
யார் யாருக்கு அடிபட்டது?
எதுக்கு அழுதே
எத்தனை
என்ன பெரியாளு?

வினாப் பெயர்களில் எது, எதை, ஏன், எப்படி, யார், யாரு, எதுக்கு, எத்தனை, என்ன போன்ற வினாப் பெயர்களின் வருகை முறைகள் தற்காலத் தமிழில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. வினாப்பெயர்களை இலக்கணிகள் உயர்திணை, அஃறிணை என்ற பிரிவாகவும், ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்ற பிரிவாகவும் பிரித்து இலக்கணம் வகுத்துள்ளமையை அறியமுடிகின்றது. தற்காலத் தமிழின் மொழிநிலை, பல புதிய இலக்கண மாற்றங்களையும், வளர்ச்சி நிலைகளையும் கொண்டு திகழ்வதோடு, புதிய இலக்கணக் கூறுகளைக் கொண்டு அமைவதும் கவனிக்கத்தக்கது. இலக்கண உலகில் மொழிநிலையில் ஏற்படும் இவ்வகை மாற்றங்கள், வளர்ச்சிகள், புதிய போக்குகள் போல்வனவற்றைத் தொடர்ந்து காணுவது, பதிவு செய்வது பிற்காலத்தில் மொழிஆய்வுகளுக்குப் பெரிதும் பயன்படும்.

துணைநின்ற நூற்கள்

- அழகேசன் சு., (உ.ஆ.), **2003,** நன்னூல் சொல்லதிகாரம், சுதாபதிப்பகம், தூத்துக்குடி.
- …, (ப.ஆ.), **2008,** தொல்காப்பியம், சுதாபதிப்பகம், தூத்துக்குடி.
- ஆறுமுக நாவலர், **1939,** இலக்கணச் சுருக்கம், வித்யா நுபாலன அச்சகம், சென்னை.
- …, **1971,** நன்னூல் - காண்டிகையுரை, வித்யா நுபாலன அச்சகம், சென்னை.
- இளம்பூரணர் (உ.ஆ.), **1963,** தொல்காப்பியம் - சொல்லதிகாரம், கழக வெளியீடு, சென்னை.
- இளவரசு சோம. (ப.ஆ.), **1990,** நன்னூல் - விருத்தியுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.
- காசுமான் மி., **1998,** தமிழ்த்தாய் சொல்லிலக்கணம், காசுமான் பதிப்பகம், நந்தன் காடு, மார்த்தாண்டம்.
- காசுமான் மி., **2005,** தமிழ்க் காப்பு இயம், காசுமான் பதிப்பகம், நந்தன் காடு, மார்த்தாண்டம்.
- குணவீர பண்டிதர், **1956,** நேமிநாதம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.

- ❖ கோபாலையர் தி.வே.(ப.ஆ.), **1990,** இலக்கணக் கொத்து, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
- ❖ கோவிந்தராச முதலியார் கா.ரா.(கு.உ.), **1973,** நேமிநாதம், கழக வெளியீடு, சென்னை.
- ❖ சங்கர நமச்சிவாயர் (உ.ஆ.), **1991,** நன்னூல் - விருத்தியுரை, உ.வே.சா.நூல் நிலையம், சென்னை.
- ❖ சண்முகம் செ.வை.(ப.ஆ.&உ.ஆ.),**1975,** சுவாமிநாதம், மொழியியல் துறை வெளியீடு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.
- ❖ சரவணத்தமிழன் த., **1996,** தமிழ்நூல், தமிழன் பதிப்பபகம், இயற்றமிழ்ப் பயிற்றகம், திருவாரூர்.
- ❖ சுந்தர மூர்த்தி,கு (ப.ஆ.), **1972,** முத்துவீரியம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
- ❖ சுப்பிரமணியம் ச.வே., **1978**(ஆ), தொன்னூல் விளக்கம், தமிழ்ப் பதிப்பகம், அடையாறு, சென்னை.
- ❖ சேனாவரையர் (உ.ஆ.)**1997,** தொல்காப்பியம் - சொல்லதிகாரம், கழக வெளியீடு, சென்னை.
- ❖ தண்டபாணிசுவாமிகள், **1990,** ஏழாமிலக்கணம், பூவை.கலியாண சுந்தரமுதலியார் பதிப்பு,இந்து தியாஜிகல் யந்திர சாலை, தஞ்சாவூர்.
- ❖ தண்டபாணிசுவாமிகள், **1991,** அறுவகை இலக்கணம், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்.
- ❖ தமிழண்ணல், **2006,** தொல்காப்பியம் சொல்லதிகாரம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- ❖ தமிழன் த.ச., **1996,** தமிழ்நூல், தமிழன் பதிப்பகம், திருவாரூர்.
- ❖ தாமோதரம் பிள்ளை (ப.ஆ.), **2008,** வீரசோழியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
- ❖ தெய்வச்சிலையார் (உ.ஆ.), **1962,** தொல்காப்பியம் - சொல்லதிகாரம், கழக வெளியீடு, சென்னை.
- ❖ நாகராசன் ப.வெ.(ப.ஆ., உ.ஆ.), **1991,** அறுவகை இலக்கணம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
- ❖ பாலசுந்தரம் ச., **1991,** தென்னூல், தாமரை வெளியீட்டகம், தஞ்சாவூர்.
- ❖ மு.வ., **2003,** மொழி வரலாறு, சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம், திருநெல்வேலி.

மதிப்பிடப்பெற்றது

மனதை மயக்கும் தாலாட்டு

Mind-blowing roller

முனைவர் **இரா.இராமகுமார்**
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்
கன்னியாகுமரி மாவட்டம் - 629 701
9994054671, drrksir121314@gmail.com

Abstract: All the folk songs are depending their situations only. But Thallattu is recites relationship in mother and the child. Its analysis so city psychology. In this article describes what happens and role of Thallattu in the society.

Keywords: Thallattu, folk songs, தாலாட்டு, வாய்மொழி

அறிமுகம்

நாட்டுப்புறப் பாடல்கள் கிராமத்து மக்களால் நீண்டகாலமாக வாய்மொழியாகப் பாடப்பட்டு வருபவையாகும். இப்பாடல்களைப் பாடியவர் யாரென்றோ, தோன்றிய காலம் எதுவேன்றோ அறிந்து கொள்ள முடியாததாக உள்ளது. மனதை மயக்கும் இவ்விசைப் பாடல்கள் எளிமையாகவும் இனிமையாகவும், கற்பனை வளமும், கவிநயமும் பொதிந்தனவாக அமைந்திருக்கும். இயற்கை அன்னை தன்னை முகம் பார்க்கத் தேர்ந்தேடுத்த தெளிவான கண்ணாடியாக இவை அமைந்திருப்பதோடு, ஏட்டில் எழுதாத கவிகளாக வலம் வருகின்றன. நாட்டார் பாடல்களில் ஓசை ஓங்கியிருக்கும், உணர்ச்சி வெளிப்பட்டிருக்கும், தொடை நயங்கள் சொற்களில் ஒளிந்திருக்கும். எனினும் இலக்கண வரம்பிற்கு உட்படாமலும் இருக்கும் என்பதனை மறுப்பாரிலர். மனிதனின் வாழ்வியல் அம்சங்களோடு இணைந்ததாக வெளிப்படும் நாட்டார் பாடல்களைத் தாலாட்டுப்பாடல், விளையாட்டுப்பாடல், காதற்பாடல், தொழிற்பாடல், சமய நிலைசார் பாடல், ஒப்பாரிப் பாடல் என பொதுவாகப் பிரித்து வகைப்படுத்தினாலும், தாலாட்டுப் பாடலுக்கு மட்டும் தனி மகிமை உண்டு எனலாம்.

தாலாட்டு

தாய்மையின் வரப்பிரசாதமாக அமைவது தாலாட்டாகும். குழந்தையின் அழுகையை நிறுத்தவும், உறங்க வைக்கவும் பாடப்படும் பாட்டு தாலாட்டு ஆகும். நாட்டார் பாடல் வகைகளில் ஒன்றான தாலாட்டு வாய்மொழி இலக்கியங்களாக வழங்கிவந்தன. தற்போது தாலாட்டுக்கள் நாட்டாரியல் ஆய்வாளர்களால் சேகரிக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளன. தாலாட்டுப் பாடல்கள் கிராமிய மக்களின் வாழ்வியலோயோடும், அவர்களின் உணர்வுகளோடும் இரண்டறக் கலந்த நாட்டுப் பாடல் வகைகளில் ஒன்றாகும்.

குழந்தைகளை மகிழ்ச்சிப்படுத்தும் அல்லது உறங்கச் செய்யும் சூழலில் பொதுவாகத் தாயினால் தாலாட்டுப் பாடல் பாடப்படுகின்றது. "தால்" என்ற சொல்லுக்கு நாக்கு என்று பொருள். நாவினை ஆட்டிப் பாடுவதால் தாலாட்டு என்று பெயர் பெற்றது. நாவினால் ஓசை எழுப்பி குழந்தையை உறங்க வைப்பதே தாலாட்டுதல் எனவும் கூறுவர்.தாலாட்டுப் பேச்சு வழக்கில் ரோராராட்டு, ஆராட்டு, ராராட்டு, ஓராட்டு, தாராட்டு என்றெல்லாம் வேறு பெயர்களால் வழங்கப்படுகின்றன. இவை நாவினை ஆட்டிப் பாடும்போது எழும் ஒலியால் பெற்ற பெயர்கள். பாடலமைப்பாலும், பொருண்மையாலும், பாடப்படும் சூழலாலும் தாலாட்டினைத் தனி வகையாகக் கருத இடமுண்டு. இதனைக் குழந்தையின் தாய், பாட்டி, அத்தை, சகோதரி, செவிலி முதலியோர் பாடுவர். ஆண்கள் தாலாட்டுப் பாடுவதில்லை. விதிவிலக்காகச் சில நேரங்களில் பாடுவதுண்டு என்பது வெள்ளிடைமலை.

தாலாட்டுப் பாடல்கள் இனிமையான இசையை உடையன. இவ்விசையில் மயங்கி குழந்தை மெய்மறந்து உறங்குகின்றது. தாய் தன் குழந்தையை மடியிலோ, தோளிலோ, கைகளிலோ, தொட்டிலிலோ வைத்து ஆட்டிய வண்ணம் தாலாட்டுவதே வழக்கம். ஆராரோ ஆரிரரோ என்ற சந்தத்தின் மூலம் ஓசை எழுப்புவதால் இது ஆராட்டுதல் என்றும் சொல்லப்படும்.

தாலாட்டின் தொடக்கத்திலும் இடையிலும் முடிவிலும் ராராரோ, ஆராரோ, ஆரிரரோ என்ற பதங்கள் பயன்படுத்தப் படுகின்றன. நீலாம்பரி என்ற இன்பமூட்டும் இராகத்திலேயே தாலாட்டுப் பாடல்கள் பெரும்பாலும் பாடப் படுவதுண்டு. எனினும் யதுகுலகாம்போதி, சகானா, ஆனந்தபைரவி போன்ற இராகங்களிலும் இவை இசைக்கப் படுகின்றன. தாலாட்டுப் பாடல்களில் குழந்தையின் அருமை, அதன் விளையாட்டுப்பொருள்கள், உறவின் பெருமை, குலப் பெருமை போன்றவை எடுத்துரைக்கப்படுகின்றன. பக்தி இலக்கியங்களிலும் இறைவனை குழந்தையாக பாவித்துத் தாலாட்டுக்கள் பாடப்பட்டுள்ளன.

இலக்கியங்களில் தாலாட்டு

தாலாட்டுப் பாடல்கள் தாய் தன் மகளுக்கு அளிக்கும் நன்கொடை எனலாம். பக்தி இலக்கியங்கள் மற்றும் சிற்றிலக்கியங்களில் தாலாட்டுப் பாடல்கள் சிறப்பிடம் பெற்றுள்ளன. முத்தொள்ளாயிராத்தில் ‘‘ஊமன் தாரட்ட உறங்கிற்றே’’ என்னும் தொடரில் தாலாட்ட என்பதைத் தாராட்ட என இயம்பப்பட்டுள்ளது. கம்பர் தாம் இயற்றிய கம்பராமாயணத்தில் ‘‘பச்சைத் தேரைத் தாலாட்டும் பண்ணை ‘‘ என்று தாலாட்டு என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். தாலாட்டுப் பாடல் ஓசையின் இனிமையைத் திருஞானசம்பந்தர்,

> “பண்ணமரும் மென்மொழியார்
> பாலகரைத் தாலாட்டும் ஓசை கேட்டு
> விண்ணவர்கள் வியப் பெய்தி
> விமானத்தோடும் இயும்மிழலை யாமே”

என்று விதந்து கூறியுள்ளார். இறைவனைத் தாலாட்டும் விதமாகப் பெரியாழ்வார்,

"மாணிக்கம் கட்டி
மணிவயிரம் இடைகட்டி
ஆணிப் பொன் னாற் செய்த
வண்ணச் சிறுதொட்டில் - பேணி
உனக்குப் பிரமன் விடுதாந்தான்
மாணிக் குறளனே! தாலேலோ!
வையம் அளந்தானே தாலேலோ!"

என்றும், குலசேகர ஆழ்வார் இராகவனை,

"தேவரையும் அசுரரையும்
திசைகளையும் படைத்தவனே!
யாவரும் வந்தடி வணங்க
அரங்நகர்த் துயின்றவனே!
காவேரிநல் நதிபாயும்
கணபுறத்தென் கருமணியே!
ஏவரிவெம் சிலைவலவா!
இராகவே தாலேலோ"

என்றும் தாலாட்டியுள்ளனர்.

தாயின் அன்பையும், குழந்தையைச் சுற்றி எழும் கற்பனையையும் பாடலாக வழங்கும் பாட்டுருவம் தாலாட்டாகும். சமூகத்தில் அனைத்துத் தரப்பினரும் தங்கள் இல்லங்களில் பிறந்த குழந்தைகளுக்குத் தமிழிசையால் அமுதூட்டித் தாலாட்டுகிறார்கள். காட்டு வெள்ளம் போல் வரும் தாயின் மன எழுச்சியைத் தாலாட்டில் கண்ட ஆழ்வார்கள் பிற்காலக் கவிஞர்கள் முதலியோர் இப்பாடல் வகைக்கு மெருகேற்றி, பிள்ளைத் தமிழாகவும், தேவர் தேவியர் தாலாட்டுகளாகவும், யாப்பிலக்கணக் கட்டுக்கோப்பில் அடக்கிப் பாடல்கள் இயற்றியுள்ளனர். தெய்வத் தாலாட்டிற்கு விளைநிலமாக அமைந்தது நாட்டுப்புற மாந்தர்களின் தாலாட்டுக்களே என்றால் அக்கூற்று மிகையில்லை.

தாலாட்டுப்பாடல்கள் - பாடுபொருள்

காற்றிலே கலந்து வாய் மொழியாக இசைக்கப்படும் தாலாட்டுப் பாடல்களில் பல்வேறு செய்திகள் உள்ளுறைப் பொருளாக்கப்படுகின்றன . இப்பாடல்களில்

1. குழந்தை
2. குழந்தைக்கு வேண்டிய சாதனங்கள்
3. உறவினர்கள்

என மூன்று வகைப்பாட்டினில் தாலாட்டும்போது செய்திகள் எடுத்துரைக்கப்படுகின்றன.

1.குழந்தையை மையப்பொருளாகக் கொண்ட பாடல்களில் இருவகை நிலைகள் காணப்படுகின்றன.

அ. குழந்தையின் அழகு, எதிர்காலம் இவற்றைப் பாராட்டுதல்

ஆராரோ ஆரிராரோ சாமி
ஆறுலட்சம் வண்ணக்கிளி
செம்பவளத் தொட்டிலிலே
சீராளக் கண்ணுறங்கு
மாம்பழ மேனியனே - நீ
மயங்கிக் கண்ணுறங்கு.....

ஆ. குழந்தையைப் பெறத் தாய் செய்த நோன்பு கூறுதல்

பத்து மாசம் தவமிருந்தேனே
பட்ட வலியெல்லாம்
உடன் மறந்தேனே
உனக்கு நோவுமுன்னு
ஒருக்கழிச்சுப் படுத்தேனே
கருவாய் இருந்த உன்னை
உருவாய் நினைத்திருந்தேனே....

2.குழந்தைக்கு வேண்டிய சாதனங்கள் குறித்துப் பாடப்படும் பாடல்களும் இரு நிலைகளில் பாடப்படுகின்றன.

அ. சாதனங்களின் அழகு, வேலைப்பாடு ஆகியவற்றைப் பாராட்டல்

மாணிக்கத் தொட்டிலிலே
வயிரங்களைக் கோர்த்திடுவேன்
தங்கச்சிமிழிலே தங்கமே
பால் புகட்டிடுவேன்
கொஞ்சி மகிழும் போது
முத்துக்கள் உதிர்ந்திடுமோ
என் சொத்தே ஆரமுதே
அழகுக்கு அழகு சேர்த்த ஆபரணமே
பாலகனே தூங்கிடடா
பாரமுதே தூங்கிடடா.....

ஆ. சாதனங்களைச் செய்தவர்களுக்கும் பரிசாக அளித்தவர்களுக்கும் நன்றி கூறல்.

தச்சனுக்குத் தங்கமுண்டு
தொட்டிலை தந்ததாலே.

மாமனுக்கும் பங்குண்டு
மாவிலைக் கட்டியதாலே.
பட்டப்பாட்டினை அறிவாரில்லை
பட்டாடைத் தந்தவனை மறப்பாரில்லை.
கொடியோடு வந்தானே
உறவுக் கொடி தந்தானே.
கெட்டிக்காரா நீ தூங்கு
கேட்டதெல்லாம் நான் தாரேன்.
தொப்புள் கொடிக்காரா நீ தூங்கு
பார்த்ததெல்லாம் வாங்கித் தாரேன்.

3. உறவினர்களை மையமாகக் கொண்ட பாடல்களில்உறவினர்களின் செயல் வீரம், ஈகைத் திறன், சொல் வளத்தைப் பாராட்டும் விதமாக தாலாட்டு இசைக்கப்படுகின்றன.

இதயமாக நீ இருந்ததால்
இன்னல் செய்ய ஆள்ளில்லை.
தாயாக மாறியதால்
மாமியார் கொடுமையும் எனக்கில்லை.
சேயாக தவழ்ந்ததால்
மாமனாரும் சீண்டவில்லை.
நாத்தனாரும் நெருங்கி வந்தாள்
நாள் முழுவதும் கொஞ்சி மகிழ்ந்தாள்.
வத்தி வைத்த சித்தியும்
சித்தப் பிரம்மையானாள்.
கத்திய கொழுந்தனும்
வையித்தியனாக மாறினான்.
மாற்றம் செய்தாய் கண்மணியே
ஏமாற்றாமல் நீ உறங்கு.
பட்டம் தந்த பாரிஜாதமே
பயப்படாமல் நீ உறங்கு.....

இவ்வாறு உட்கூறுகளும் தாலாட்டுப் பாடல்களில் இடம்பெற்றுச் சமூகத்தின் நிலைகளை விளக்கும் கருத்துகளாக உருவெடுத்துள்ளன.

நிறைவுரை

நாட்டுப்புறப் பாடல்களில் தாலாட்டுப் பாடல் வடிவம் அனைத்து இன மக்களிடமும் இசைக்கப்பட்டு வருகின்றது. இன்றைய காலக்கட்டத்தில் தாலாட்டுப் பாடுவது அருகி வருகின்றது என்பது மறுக்கவியலாத உண்மையாகும். எதிர்காலத்தில் இப்பாட்டினை இசைக்காமல் மறந்து விடவும் வாய்ப்புள்ளது. பொதுவாக நாட்டார் பாடல்கள் மண்ணோடு பிணைந்ததாக, மக்களின் உண்மையான வாழ்வை எடுத்துரைப்பனவாக உள்ளன. நவீன

தொடர்பு சாதனங்கள் மேலைநாட்டுக் கலாச்சார மோகம் என்பனவற்றின் காரணமாக மருவிக் கொண்டு வருகின்றன. சமூகத்தின் வரலாற்று மூலங்களை அறிவதற்கு நாட்டார் இலக்கியங்களின் பங்களிப்புத் தேவையென்பதனால் இவற்றைப் பாதுகாப்பது இன்றைய சமூகத்தினரின் தார்மிகக் கடமையாகும்.

துணைநின்ற நூல்கள்

- சக்திவேல் சு., **2014** , நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- இராமசுப்பிரமணியம் வ.த., **2009**, பன்னிரு திருமுறைகள் மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
- தேவி ஜெ., **2014**, பெரியாழ்வார் திருமொழி, கலைஞன் பதிப்பகம், சென்னை.
- பெரியண்ணன் கோ., **2009**, நாடுபோற்றும் நாட்டுப்புறப்பாடல்கள், ஜோதி புத்தக நிலையம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

சமூக வரலாற்றுப் பின்புலத்தில் பாண்டிய நாட்டு நீரியல் மேலாண்மை இனக்குழுக்கள் (மள்ளர் - மடையர் - மடைச்சியர்)

SOCIO-HISTORICAL BACK GROUND OF WATER RESOURCE MANAGEMENT TRIBES IN THE LAND OF KING PANDIAS [Mallar-Madaiyar-Madichiyar]

முனைவர் **க. பாலாஜி**
தமிழ் உதவிப்பேராசிரியர்
பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 014. balajiand@gmail.com

Abstract: The invention of this paper is to reveal that there are so much of Tribes in Indian subcontinent. In which the Main and Ancient Tribes are Mallar (pallar) and Madaiyar. The Author has got a strong evidence to prove that they were Master's in Agriculture and water resource Management. Recently found one Archaeological evidence in kizadi [sivagangai] excavation. Read the word by Archaeologist `Madaichi' is written on the earthen pots in the Thamizhi [Tamil Brami] method. The some evidences are Palaeography and the inscriptions on the earthen wares, inscriptions, literature etc. which are found historically.

Keywords: Mallar, pallar, Madaichi, Thamizhi, Brami, inscriptions, மள்ளர், மடையர், மடைச்சியர்

நாடோடி இனங்களாக வாழ்ந்து கொண்டிருந்த ஆதிவாசிச் சமூகங்கள் நிலையான நீரிடங்களை மையமிட்டுத் தத்தம் புலம்பெயர்வுகளை வரையறுத்துக் கொண்டன எனலாம். ஆய்வாளர்கள் ஒரு வரலாற்றை எழுத அல்லது மறுகட்டமைப்புச் செய்ய முற்படும் பொழுது நதிக்கரையில் அமைந்த தொல்நாகரிகங்களே அகழ்வாராய்ச்சிகளில் மிகுதியான தரவுகளை வழங்கியுள்ளன.

ஓர் இனத்தைப் பண்பாடு மிக்க முதிர்ந்த இனமென்று மொழிவதற்கு அவ்வினத்தின் நீரியல் மேலாண்மையினை முதன்மைக் காரணியாகக் கொள்ள முடியும். இதனடிப்படையில் பாண்டியநாட்டு வேளாண் இனக்குழுக்களின் நீரியல் அறிவினைத் தொல்லெச்சத் தரவுகளோடு நோக்கும்பொழுது இந்தியத் துணைக்கண்டத்தின் தொல் இனக்குழுக்களாக இவர்களை முன்னெடுத்துச் செல்ல முடியும். இலக்கியத் தரவுகளும் தொல்லியல் தரவுகளும் குறிப்பிடுகின்ற பல்வேறு இனக்குழுக்களில் நீரோடும் நீரை மையமிட்ட வேளாண்மையோடும் மிகுந்த தொடர்புடைய தொல் இனங்களாக மள்ளர் [பள்ளர்], மடையர், உழவர், கடைஞர், கடைசியர், கரையர், நீராணிக்கர், நீர்க்கட்டியார், நீர்ப்பாய்ச்சியார், நீர்வெட்டியார், ஆற்றுக் காலாட்டியர், குடும்பர் ஆகியோர் அறியப்படுகின்றனர். பிற்காலங்களில் குளங்களை மட்டும் காத்து வந்தோரைக் குளத்துப் பள்ளர்கள், குளக்காப்பாளர்கள் என்றழைத்தனர். மேற்குறித்த

இனங்கள் அனைத்தும் மள்ளர் இனத்தின் கிளை இனங்கள் என்பார் குருசாமி சித்தன். இவ்வினங்களின் பருவகால நீர்மேலாண்மையினையும் வேளாண் நுட்பங்களையும் நோக்கும்பொழுது இவர்கள் யாவரும் தொன்மையான ஒரு வேளாண் சமூக மரபைச் சார்ந்த கிளை இனங்கள் என்ற முடிவுக்கு வரமுடியும். இத்தொல் இனங்களில் மள்ளர், மடையர் குறித்த நேரடியான இலக்கியப் பதிவுகளையும் தொல்லியல் சான்றுகளையும் எடுத்துக் காட்டி வேளாண்மைசார் நீரியல் மேலாண்மையில் இவர்களுக்கிருந்த பங்கினை வரலாற்றுப் பின்புலத்தில் எடுத்துரைப்பதாக இவ்வாய்வுரை அமைகின்றது.

தொல் தமிழரின் நீர் மேலாண்மை - இலக்கியப் பதிவுகள்

நீர்மேலாண்மை செய்வதில் எகிப்தியர்களைப் போல் நுட்பமான வழிமுறைகளைப் பழந்தமிழர்கள் கையாண்டனர் என பழ.கோமதி நாயகம் `தமிழகப் பாசன வரலாறு' என்ற நூலில் வரலாற்றுச் சான்றுகளுடன் விளக்கியுள்ளார். அதில் பண்டைத் தமிழரின் நீர்மேலாண்மை பற்றிய குறிப்புகள் தொல்காப்பியம் தொடங்கிப் பிற்கால நூல்கள் வரை தொடர்ந்து சுட்டப்பெற்று வந்துள்ளமையினைத் தொகுத்தளித்துள்ளார். ஆற்றின் குறுக்கே கல்லால் அணை கட்டியமையினைக் **கற்சிறை** எனத் தொல்காப்பியமும் மதுரைக்காஞ்சியும் குறித்துச் செல்கின்றன.

வருவிசைப் புனலைக் **கற்சிறை** போல
ஒருவன் தாங்கிய பெருமையானும் [தொல்.பொருள்.புறத்.66-67].

வருபுனல் **கற்சிறை** கடுப்ப இடை அறுத்து
ஒன்னார் ஒட்டிய செருப்புகல் மறவர் [மதுரைக்.725-726].

எங்கெங்கு நிலம் பள்ளமாக இருக்கின்றதோ அங்கெல்லாம் நீர்நிலை அமைய வேண்டும் என்ற இயற்கைசார் நீரியல் அறிவினை அன்றைய தமிழ்ப் புலவர்மரபு நன்கறிந்திருந்தது. புறநானூற்றில் `நீர் சேமிக்கக் கரை உண்டாக்கும் மன்னனே இவ்வுலகில் தம் பெயரை நிலைநிறுத்திக் கொள்வான்' எனக் குடபுலவியனார் எனும் புலவர் பாண்டியன் நெடுஞ்செழியனிடம் கூறுவது இங்குத் தமிழரின் நீரியல் அறமெனக் கொள்ளுதல் வேண்டும்.

நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோரம்ம இவண்தட் டோரே
தள்ளாதோர் இவண்தள்ளா தோரே [புறம்.18.]

ஏரிகள், குளங்கள் மூலம் வேளாண்மை சிறந்து விளங்கியமையினைச் சங்க இலக்கியங்கள் தொடர்ந்து சுட்டி வந்துள்ளன. உ.வே.சாமிநாதையர் பதிப்பித்த பொருநராற்றுப்படை நச்சினார்க்கினியர் உரையின் பிற்சேர்க்கை வெண்பா ஒன்றில் ஏரி பற்றிய குறிப்பொன்று அறியப் பெறுகின்றது.

ஏரியு மேற்றத்தி னானும் பிறர்நாட்டு
வாரிசுரக்கும் வளனெல்லாந் தேரின் [பொருநர்.வெண்.1].

ஒருநாடு வளம் பெறுவதற்கு நீரைத் தேக்கிவைக்கும் குளங்கள் எவ்வளவு முக்கியமானவை என்பதைப் பட்டினப்பாலை சுட்டுகின்றது.

காடுகொன்று நாடாக்கிக்
குளம்தொட்டு வளம் பெருக்கி [பட்டின. 283].

இரவு நேரத்தில் குளங்கள் உடைப்பெடுத்து விடாமல் காவலன் ஒருவனால் பாதுகாக்கப்பெற்ற நிலை அகநானூற்றில் ஒரு தாய் தன் குழந்தையைப் பாதுகாக்க இரவெல்லாம் கண் விழித்திருந்த நிலைக்கு உவமையாகக் கூறப்பெற்றுள்ளது.

பெருங்குளக் காவலன் போல
அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே [அகம்.25].

குளத்துப் பாசனத்தால் விளைவிக்கப்பெற்ற வெண்ணெல் பற்றிய குறிப்பு புறநானூற்றில் குறிக்கப் பெற்றுள்ளது.

குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல் [புறம்.33].

குறைந்த நிலப்பரப்பில் மிகுதியான நீரைச் சேமிக்க ஏரியின் வடிவம் எட்டாம் பிறை போல் இருத்தல் வேண்டுமென்ற நுட்பமான [கணிதவியல்-திரிகோணவிதி] நீரியல் அறிவு தொல்தமிழர்களிடம் இருந்து வந்தமையினை இலக்கியச் சான்றுடன் அறியமுடிகின்றது.

அறையும் பொறையும் மணந்த தனைய
எண்நாள் திங்கள் அணைய கொடுங்கரைத்
தெள்நீர்ச் சிறுகுளம் கீழ்வது மாதோ
தேர்வண் பாரிதன் பறம்பு நாடே [புறம்.118]

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் முத்துநாட்டுக் குறுநில மன்னனான வேள்எவ்வியைப் போரில் வென்று தனது நாட்டுடன் சேர்த்துக் கொண்டதைப் புறப்பாடல் ஒன்று கூறுகின்றது. பாடலில் வழங்கப் பெறும் முத்தூர் என்பது இன்று சிவகங்கைப் பகுதியில் முத்துநாடு என வழங்கப் பெறுகின்றது.

ஓம்பா ஈகை மாவேள் எவ்வி
புலனம் புதவின் மிழலையொடு கழனிக்
கயலார் நாரைப் போர்வில் சேக்கும்
பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர்
குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய [புறம்.24]

இவ்வூரில் உள்ள ஏரி மிகப் பழமையானது என்பது இப்பாடல் மூலம் தெரியவருகின்றது. இன்று இவ்வேரி 42.5 கிராமங்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதாக வருவாய்த்துறை ஆவணங்கள் குறிக்கின்றன [ச.மா.இரத்தினவேல்,நா.கள்ளபிரான், 2013:92].

பிற்காலச் சங்கநூல்களிலும் புறத்திரட்டுகளிலும் நீர்நிலை பற்றிய பதிவுகள் காணப் பெறுகின்றன.

கரை உடை குளமெனக் கழன்று வான்வயிறு அழிவு
வரைவரை தொடுத்த வயங்கு வெள்ளருவி [பரி.7:1-4]
வரைவாய் தழுவிய கல்சேர் கிடக்கைக்
குளவாய் அமர்ந்தால் நகர் [பரிபாடல் திரட்டு:63-64]

திருக்குறள் குளங்களில் அமைக்கப்பெற்ற மதகுகளின் முக்கியத்துவம் பற்றிப் பேசுகின்றது.

அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று [குறள்.523]

குளம் வெட்டி; மரம்நட்டு; சாலைஅமைத்து; உழுவயல் ஆக்கி; கிணறு தோண்டுபவன் சொர்க்கத்திற்குச் செல்வான் எனச் சிறுபஞ்சமூலம் தமிழரின் நீர் மேலாண்மையினை வாழ்வியல் அறமாக எடுத்துரைக்கின்றது.

குளம் தொட்டுக் கோடுபதித்து வழிசீத்து
உளம் தொட்டு உழுவயல் ஆக்கி வளம்தொட்டுப்
பாகுபடும் கிணற்றோடு என்று இவை பாற்படுத்தான்
ஏகும் சுவர்க்கம் இனிது [சிறுபஞ்ச.64].

திரிகடுகத்தில், நீர் வரும் வாய்க்கால் சரியாக அமையவில்லையெனில் அதனால் பயன்பெறும் குளத்திற்கு எவ்விதப்பயனும் இல்லை என வாழ்வியல் அறக் கருத்துகளோடு ஒப்பிடப் பெற்றுள்ளது.

வாய்நன் கமையாக் குளனும் வயிறாரத்
தாய்முலை யுண்ணாக் குழவியும் சேய்மரபில்
கல்விமாண் பில்லாத மாந்தரும் இம்மூவர்
நல்குரவு சேரப் பட்டார் [திரிகடு.34].

பெய்யும் மழைநீரைக் குளங்கள், ஏரிகளில் முறையாகச் சேமித்துப் பயன்படுத்திய நிலையினைச் சிலப்பதிகாரம் சுட்டுகின்றது.

இடியுடைப் பெருமழை எய்தா ஏகப்
பிழையா விளையுள் பெருவளம் சுரப்ப
மழைப்பிணித்து ஆண்ட மன்னவன் [சிலம்பு.26-28].

மணிமேகலைக் காப்பியம் ஏரியின் பெருநீர் மதகின் உள்ளே அமைந்த சிறிய துவாரம் [சுருங்கை-குமிழித் தூம்பு] வழியே வெளிச் செல்லுவதைப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றது.

பெருங்குள மருங்கில் சுருங்கைச் சிறுவழி

இருபெரும் நீத்தம் புகுவது போல
அளவாச் சிறுசெவி அளப்பரு நல்லறம்
உளமலி உவகையொடு உயிர்கொளப் புகும் [மணி.1384-87]

இதில் புத்ததேவனின் பெரும்அறக்கருத்து மக்களின் செவியாகிய சிறிய துவாரத்தின் வழியே சென்று உயிரைக் காத்தருளும் என உவமை செய்கின்றார் சீத்தலைச் சாத்தனார்.

கொறுக்கையூர் காரிநாயனார் இயற்றிய கணக்கதிகாரத்தின் `நீர்வழிச் சூத்திரம்' ஒரு குளத்திலுள்ள நீர் முழுவதும் பாய்ந்து முடிக்க எவ்வளவு நேரமாகும் என்பதை வரையறுக்கின்றது. இதனைப் பழந்தமிழர் நீர்மேலாண்மை நுட்பத்திற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு எனக் கூறலாம்.

ஒரு நாழிகையின் நாளினை ஒல்லா மனத்தின்
வருநாழிகைக் கீந்து மானே - தருமிலக்கம்
சேர்த்ததற்கு வேறான தின்னாழிகைக் கீந்து
பார்த்ததினம் பேரே பகர் [கணக்.35]

பெரும் ஏரியின் ஓர் ஆயக்கட்டிற்கு 4 நாழிகையில் நீர் பாய்ச்சும் மதகு ஒன்று; 6 நாழிகையில் நீர் பாய்ச்சும் மதகு ஒன்று; 12 நாழிகையில் நீர்பாய்ச்சும் மதகு ஒன்று என மூவகை மதகுகளும் ஒன்றுசேரப் பாயும் பொழுது ஆயக்கட்டு முழுவதற்கும் நீர் பாய எவ்வளவு நேரம் ஆகுமென்பதற்கு விடை கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இதனை நாழிகை அடிப்படையில் கணக்கிட்டுப் பார்த்தால் அவ்வாயக்கட்டு 2 நாழிகையில் நிரம்பும் என்பது பதில்.

தொல்தமிழர் நீர் மேலாண்மை குறித்த கல்வெட்டு ஆவணங்கள்

இப்பகுதியின் தேவை கருதி சோழர்கால நீர்மேலாண்மையும் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது.

பாண்டியர்களின் பழமையான கல்வெட்டு [பொ.ஆ.620-650] என்பது மதுரை வைகைக் கரையில் கிடைக்கும் செழியன்சேந்தனின் கல்வெட்டாகும். இது வைகை ஆற்றங்கரையில் `மதகு' கட்டிய செய்தியினையும் `அரிகேசரி' என்ற பெயரில் கால்வாய் ஒன்று வெட்டியதையும் குறிப்பிடுகின்றது. அவ்வாறே பாண்டியன் *ஸ்ரீ*மாறன் *ஸ்ரீ*வல்லபனுக்கு அடங்கிய குறுநில மன்னன் எட்டிச்சாத்தன் என்ற `இருப்பைக்குடிக் கிழவன்' பொ.ஆ.815-862 வரை இருஞ்சேணாட்டை ஆட்சி புரிந்தான். இவன் தனது ஆட்சியின் பெரும்பகுதியை நீர்ப்பாசனப் பணிக்காகச் செலவிட்ட செய்தியினையும் கல்வெட்டால் அறிகின்றோம் [பழ.கோமதிநாயகம், 2010:75,80].

திருமழபாடி கோயில் கல்வெட்டு ஒன்றில் செம்பியன் மாதேவிப் பேரேரியில்`ராஜராஜன் தூம்பு' என்ற பெயரில் மதகு ஒன்று இருந்தது குறிக்கப் பெற்றுள்ளது. ஏரிகளையும் வாய்க்கால்களையும் குமிழித்தூம்பு எனப்பெறும் மதகுகளையும் பேரரசன், அரசி போன்றோர்

பெயரால் அழைத்து அவற்றை மிகுந்த அக்கறையோடு போற்றிக் காத்த சோழர்காலச் சமுதாயப் பண்பை இச்சான்றுகள் மூலம் நாம் அறியலாம் [குடவாயில் பாலசுப்பிரமணியன், 2010: 04].

பொ.ஆ.மு.2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலைக்குளம் கல்வெட்டில் `வேம்பிற்ஊர்' பெரிய ஏரி குறித்த செய்தி கிடைக்கப் பெறுகின்றது [ச.மா.இரத்தினவேல், நா.கள்ளபிரான், 2013:92].

கி.பி.1302-ல் ராமநாதபுரம் மாவட்டம் கருங்குளத்தில் உடைப்பு ஏற்பட்டபோது அதை அடைக்கச் சென்ற பெருந்தேவப்பள்ளன் வெள்ளத்தில் இறந்தான். அவனது தியாகத்தைப் போற்றும் வகையில் அவனுக்கு நினைவுக் கல்லை நட்டு உதிரப்பட்டி நிலமும் அளிக்கப்பட்டது. இந்த விவரங்கள் தமிழ் வளர்ச்சித்துறை வெளியிட்ட `தமிழ்நாட்டு வரலாறு பாண்டியர் பெருவேந்தர் காலம்' நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன (டி.எல்.சஞ்சீவிகுமார், 2016:42). குடவாயில் பாலசுப்பிரமணியன் `இராஜராஜேஸ்வரம்' நூலில் சோழர்காலத்தில் ஏரிகளில் அமைக்கப்பெற்ற குமிழித்தூம்புகளை நிர்வகிக்கவும் நீர் நிரம்பிய காலங்களில் மடையின் அடியாழத்தில் குதித்துக் குமிழியைத் திறந்து விடவும் `குமிழிப்பள்ளன்' என ஒருவர் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். புதுக்கோட்டை மாவட்டம் நாஞ்சூர் ஏரியில் நீர்ப்பங்கீடு செய்வதில் `முறைப்பானை' [துளையிடப்பட்ட செப்புப் பானை] என்ற நுட்பமான நீர்க் கணக்கியல் முறை வழக்கில் இருந்தது. அதனை நிர்வகிக்க `குமிழிப்பள்ளன்' என்ற பணியாள் ஒருவர் இருந்ததாகவும் முறைப்பானையில் துளை இடும் ஊசியின் அளவு குறித்த கல்வெட்டு ஒன்று கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் குறிப்பர் ப.திருமலை. அவ்வாறே மூன்றாம் ராஜராஜ சோழன் காலத்தில் `எதிரிலி சோழ மூவேந்த வேளான்' என்பான் கொள்ளிடமாறு உடைப்பெடுத்து ஊரை அழித்தபோது அதிலிருந்து ஊரைக் காப்பாற்றியதோடு மீண்டும் ஊரைச் சீர்செய்தமைக்காகவும் திருமழபாடி கோயிலில் பல மண்டபங்களை எடுத்தமைக்காகவும் அவனுக்குத் திருமழபாடியிலேயே வீடு அளித்து அரசன் கௌரவித்ததை ஒரு கல்வெட்டு விவரிப்பதாக `கல்வெட்டு சொல்லும் கோயில் கதைகள்' என்ற கட்டுரையில் குறிப்பிடுகின்றார் குடவாயில் பாலசுப்பிரமணியன். அக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் `வேளான்' என்ற பெயர் அந்நிலத்தின் உழுகுடித் தலைவன் ஒருவனைக் குறிப்பதாகக் கருதலாம்.

பழைய இராமநாதபுர மாவட்டப் [திண்டுக்கல்] பகுதியில் எட்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்றில் `கற்கோதி குமிழி செவ்வித்தான் நன்கன் **புள்ளன்'** என்ற தொடர் காணப்படுகின்றது [சொ.சாந்தலிங்கம்,2014:39]. இக்கல்வெட்டுப் பாடத்திற்குக் `கல்லைக் கொத்திக் குமிழித் தூம்பு செய்வித்த நன்கன் **`பள்ளன்'** எனப் பொருள்கொள்வதே பொருத்தமாக அமையும். **புள்ளர்** என்ற மரபினர் பற்றி எந்த இலக்கியக் குறிப்பும் இதுவரை சுட்டவில்லை. குமிழித் தூம்போடு மிகுந்த தொடர்புடைய சமூகமாகப் பள்ளர் சமூகம் விளங்கியமையினை மேற்குறித்த வரலாற்றுச் சான்றுகள் மூலம் அறிகின்றோம். ஏரியின் மதகிற்குக் குமிழித்தூம்பு செய்து கொடுத்த **`நன்கன் பள்ளன்'** என்பவரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பாக இதனை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

மடையர் - மடைச்சியர் நீர்மேலாண்மைப் பதிவுகள்

மடையர், மடைச்சியர் என்ற சொற்கள் ஏரிகள், கண்மாய்கள், பெருங்குளங்கள் முதலான நீரிடங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்து நீர்மேலாண்மை செய்துவந்த தொல்மரபினரைக் குறித்தமைந்தனவாகும். இது மடைத்தொழில் செய்வோரை நேரடியாகக் குறித்தமைகிறது. நீர்மேலாண்மையின் மிக முக்கிய அமைப்பாக ஏரி விளங்குகின்றது. மழைக்காலங்களில் வரும் வெள்ளப்பெருக்கினைத் தடுத்துச் சேமித்து வேளாண்மை செய்வதற்காக மனிதர்களாலும் சிலநேரங்களில் இயற்கையாலும் ஏற்படுத்தப்பெறும் பெரும் நீர்நிலை உருவாக்கம்தான் ஏரி. ஏர்த் தொழிலுக்குப் பயன்படுவதால் ஏரி என்பர் ரா.பி.சேதுப்பிள்ளை. அந்த ஏரிகளில் இருந்து நேரடியாக விவசாய நிலங்களுக்கு நீரைப் பாய்ச்சிவிட இயலாது. மடை என்ற அமைப்பின் மூலமாகத்தான் விளைநிலங்களுக்கு ஏற்றவாறு சிறுகச்சிறுக நீரைப் பாய்ச்ச முடியும். தற்காலத்தில் நவீனத் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் இரும்பு, சிமெண்ட் கட்டுமானத்துடன் கூடிய மடைகள் உருவாக்கப் படுகின்றன. ஆனால் பழங்காலத்தில் மடைகள் மரத்தினால் செய்யப் பெற்றன. அதற்குப் பனைமரங்கள் பயன்படுத்தப் பெற்றன. வைரம் பாய்ந்த பனைமரத்தின் உள்ளீடான சோற்றுப் பகுதியினை நீக்கிவிட்டுத் தூம்புக்குழாய் போலக் குடைந்து விடுவர். பின்பு குழாய்ப்பகுதியைக் களிமண், கோரைப்புல் முதலானவற்றால் அடைத்து ஏரியின் உட்பகுதியில் நீர்வரத்திற்கேற்ப அமைப்பர். பெருவெள்ளக் காலங்களில் ஏரி நிரம்பி வழியும் பொழுது நீச்சல் பயிற்சியும் மடையின் தொழில்நுட்பமும் நன்கு அறிந்த ஒருவர் ஆழமான ஏரியின் உட்பகுதிக்குள் நீந்திச் சென்று மடையின் களிமண் அடைப்பைத் திறந்து விடுவார். இது அவ்வளவு எளிதான காரியமன்று. மூச்சடக்குவது மட்டுமல்லாமல் நீர்ச்சுழலின் வேகம் மடையைத் திறப்பவரையும் உள்ளே இழுத்துச் செல்ல முயலும். அவ்வாறு இறந்தவர்கள் பலர். இத்தொழிலை மேற்கொள்பவர்களை மடையர் என்றழைத்தனர். இவ்வாறு பெருவெள்ளக் காலங்களில் மடைகளிலும் ஏரிகளிலும் ஏற்பட்ட உடைப்பைச் சரி செய்வதற்கும் தொடர்ச்சியான மராமத்துப் பணிக்கும் நீரியல் வேளாண் நுட்பம் நன்கறிந்த குறிப்பிட்ட சில சமூகத்தார் நியமிக்கப் பெற்றிருந்தனர். இந்தப் பணியின் பொழுது உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு மன்னர்கள் நிலங்களை மானியமாக வழங்கியுள்ளனர். அவை பற்றிய சான்றாதாரங்கள் கிடைக்கப் பெறுகின்றன.

சங்ககாலப் பாண்டியர்களின் நீர் மேலாண்மையினை மையமிட்டுத் தோன்றிய இனக்குழுக்களில் மடையர் என்ற இனத்தைப் பற்றிய பதிவு ஒன்று அண்மையில் சிவகங்கை மாவட்டம் `கீழடி’ அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ளது. அங்கு நீள்வடிவச் சுட்ட செங்கற்களால் செய்யப் பெற்ற கட்டுமானங்களையுடைய தொல்நகர நாகரிகம் ஒன்றினைத் தொல்லியல் ஆய்வறிஞர்கள் கண்டறிந்து வெளிப்படுத்தியுள்ளனர். கால ஆராய்ச்சியில் இது சங்ககாலத்தைச் சேர்ந்த நிலப்பகுதி என உறுதி செய்யப் பெற்றுள்ளது. அங்கு கிடைத்த பானை ஓடு ஒன்றில் `மடைச்சி’ என்ற பெண்பாற் பெயரொன்று தொல் தமிழெழுத்து வடிவமான `தமிழி’ எழுத்துப் பொறிப்பில் கிடைத்துள்ளது. இவ்வெழுத்துப்பொறிப்புக் கிடைக்கும் முன்புவரை பிற்காலப் பாண்டியர்கள், சோழர்கள் காலக்கட்டத்தில் [அரசுடைமை - நிலவுடைமை] உருவாக்கம் பெற்ற நீர்மேலாண்மைச் சாதியக்குழுவினராக `மடையர்’ இனத்தைக் கருதி வந்தனர். ஆனால் கீழடி அகழ்வாராய்ச்சியில் இச்சொல் கிடைக்கப் பெற்ற எழுத்துவடிவம் `தமிழி’ என்பதால் சங்க காலத்திற்கும் பெருங்கற்காலத்திற்கும் இடைப்பட்ட

காலப்பகுதிவரை [பொ.ஆ.100 - பொ.ஆ.மு.1000] இத்தரவினை எடுத்துச் செல்ல முடிகின்றது. கீழடி என்ற ஊர் பாண்டிய நாட்டு வைகை ஆற்றுப் படுகையில் அமைந்துள்ளது. பாசனத்திற்கு ஆற்றுநீரை மடைகள் அமைத்துச் சங்ககாலப் பாண்டிய இனக்குழு மக்கள் பயன்படுத்தி வந்தமை இதன்மூலம் தெளிவாகப் புலப்படுகின்றது. சங்ககால நீர் மேலாண்மைத் தொழில்நுட்பமான மடையினை நிர்வகித்து வந்த மடையர் இனத்தின் பெண்ணைப் பற்றிய பதிவு தொல்லியல் சான்றாகக் கிடைத்திருப்பது என்பது நுட்பமான சமூக வரலாற்றுப் பின்புலம் உடையது. இதனை இருநிலைகளில் அணுக வேண்டியுள்ளது.

1.சங்ககாலத்தில் வாழ்ந்த ஒரு பெண்ணின் பெயர் பானை ஓட்டில் தமிழி எழுத்துப் பொறிப்பில் கிடைத்திருப்பது.

2.பெண்களின் நீர் மேலாண்மை சார்ந்த வேளாண் அறிவுப் பின்புலம்.

பானை ஓட்டில் தனது பெயரை எழுதுவதென்பது மடைத்தொழில் செய்துவந்த சங்ககால மகளிரின் கல்விபெறுதல் தொடர்பான சமூக முன்னுரிமை குறித்ததாகும். சங்ககாலம், இடைக்காலம், பிற்காலமெனப் பன்னெடுங்காலமாக வேளாண்மையோடு நீர் மேலாண்மையினைத் தொடர்ச்சியாகச் செய்துவந்த இவ்வுழுகுடிமக்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டதோடு மேல்நோக்கிய சமூகப் படிநிலை அமைப்பிலிருந்து கீழாக விரட்டியடிக்கப்பட்ட நிலையினையும் கவனமாக உற்றுநோக்க வேண்டியுள்ளது.

மள்ளரும் நீர் மேலாண்மைப் பதிவுகளும்

தமிழ்ச்செவ்வியல் நூல்களில் குறிக்கப்பெறும் இனக்குழுக்களில் தொன்மையான வேளாண் சமூக மரபு கொண்ட இனமாக மள்ளர் இனம் அறியப் படுகின்றது. எட்டுத்தொகை நூல்கள் அனைத்திலும் மள்ளர் பற்றிய பதிவு காணப்பெறுவது தனித்த ஆய்வுப்பின்புலம் கொண்டது. பத்துப்பாட்டில் (பெரு.455) ஓரிடத்தில் மட்டும் காணப்படுகின்றது.

மள்ளர்-பெரு.455; நற்.260-3; குறு.31-1,34-5,364-8; ஐங்.94-1, 371-1, 400-1, 432-3; பதி.13-21, 38-10, 43-25,63-13,66-14,81-34,90-44; கலி.106-10; அக.21-13,144-14,185-7,189-5,227-11,316-7; புற.10-9,77-9,78-7,79-5,84-5,89-6,399-20. **மள்ளன்-**ஐங்.383-4; புற.81-5,251-3,399-20. **மள்ள-**திரு.262; பெரு.455; பரி.3-41,3-90; புற.219-2,254-3 [பெ.மாதையன்,2007 :536].

மேற்கண்ட பதிவுகளில் மள்ளர் இன மக்கள் வேளாண் உழுகுடிகளாகவும், போர் வீரர்களாகவும், நீர் மேலாண்மை செய்பவர்களாகவும் காட்டப் பெற்றுள்ளனர். இப்பதிவுகள் தவிர்த்துப் பின்வரும் புறநானூற்றுப் பாடல் மட்டும் இங்கு ஆய்விற்குட்படுத்தப் பெறுகின்றது.

வெள்ளி தென்புலத் துறைய விளைவயற்
பள்ளம் வாடிய பயனில் காலை
இரும்பறைக் கிணைமகன் சென்றவன் பெரும்பெயர்
....

வினைபக டேற்ற மேழி கிணைத்தொடா
மணிகிளர் முன்றிற் றென்னவன் மருகன்
....
கண்மா றிலியரென் பெருங்கிளைப் புரவே[புறம்.388].

மேற்குறித்த புறநானூற்றுப் பாடலைப் பாடிய **`மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்'** என்ற புலவர் **`சிறுகுடிக்கிழான் பண்ணனின்'** உழவுக்குரிய எருதுகளையும் ஏற்றத்தையும் யாழில் இட்டுக் கிணையை இசைத்து நாள்தோறும் பாடேன் ஆயின் `நீங்காத ஆராய்ச்சி மணி கட்டியிருக்கும் முன்றிலுடைய முரசு முழங்கும் பெருமையினையும் யானைப் படையினையும் உடைய பாண்டியன் வழுதியின் வழித்தோன்றலாகிய பண்ணனின் அருள் கிடைக்காமல் ஒழிந்து போவேனாக' எனப் பாடுகின்றார். இதன் மூலம் எருதும் ஏற்றமும் பண்ணனின் மிக முக்கியச் செல்வங்களாகக் கருதப்பெற்றமை அறியப் பெறுகின்றது. ஏற்றம் என்ற நீர்மேலாண்மைக் கருவிக்கு அவ்வேளாண் இனக்குழுவினர் கொடுத்துவந்த முக்கியத்துவத்தினை இப்பாடல் உணர்த்துகின்றது. ஏற்றக்கருவி இல்லையென்றால் அவர்கள் நாடு வளம் பெறாது என்பதை இது சுட்டுகின்றது. இப்பாடலைப் பாடியவர் பாண்டிய நாட்டைச் சேர்ந்த புலவர் மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் என்பது மேலும் ஒரு சிறப்பினைப் பெறுகின்றது. மள்ளர் என்ற இனப்பெயரைத் தனது இயற்பெயராகவும் ஊரையும் தந்தை பெயரையும் பெயருக்கு அடையாகவும் பெற்றுள்ளார். பாடியவனும் பாடப்பெற்றவனும் ஒரே வேளாண் சமூக மரபைச் சார்ந்தவர்களாதலால் பாடுபொருளில் வேளாண்மையும் நீர்மேலாண்மையும் முக்கியத்துவம் பெறுகின்றன. உழுதொழிலையும் நீர்மேலாண்மையினையும் பண்டுதொட்டுச் செம்மையாகச் செய்தவர்களாலேயே இத்தன்மையில் சிந்திக்கவியலும் என்பது கருத்து. கிழான் என்ற சொல் மருதநிலத்தில் பயிர்த்தொழில் செய்து வந்த மள்ளர்களையே பெரிதும் குறித்தமைகின்றது. புலவன் புரவலனான பண்ணனை **`என் பெருங்கிளை'** என விளிப்பது புரவலன் மள்ளரினத்தைச் சார்ந்தவன் என்பதை உறுதிப்படுத்துகின்றது. புலவன் **`தென்னவன் மருகன் பண்ணன்'** என விளிப்பது மள்ளர் இனத்தைச் சார்ந்த பண்ணன் பாண்டியர்களின் வழித்தோன்றல் என்பதை உறுதிப்படுத்துவதாக அமைகிறது. சிந்துவெளி எழுத்துகளை அசைநிலை[*syllable*] வடிவாக வாசித்துள்ள இரா.மதிவாணன் `பண்ணன்' என்ற சொல் சிந்துவெளி நாகரிக முத்திரையில் இரு இடங்களில் குறிக்கப் பெற்றுள்ளமையினைத் தம் நூலில் சுட்டியுள்ளார். **`கா[ன்]பண்ணன்', `காடன் காவச்ச[ன்] பண்ண[ன்]'**என்பதாக அத்தொடர்கள் அமைகின்றன. உழவுத் தொழிலுக்குப் பயன்படும் விலங்கான எருதினையும் நீர்மேலாண்மைக் கருவியான ஏற்றத்தையும் முதன்மைப்படுத்தி ஒரு சங்கப்பாடல் பாடப்பெற்றிருப்பது பாண்டியநாட்டு இனக்குழுக்களான மள்ளர்களின் நீர்மேலாண்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது.

நிறைவுரை

நிலவரைவியல் அடிப்படையில் இன்றைய சிவகங்கைப் பகுதியினைச் சங்ககாலப் பாண்டியர்களின் முக்கியமான அமைவிடமாகக் கொள்ளலாம். சிவகங்கையிலுள்ள கீழடியில் `மடைச்சி'என்ற சொல் `தமிழி'[தமிழ்ப்பிராமி] எழுத்து வடிவில் கிடைத்துள்ளமை தொல்தமிழர்களின் நீர் மேலாண்மையின் தொன்மையைச் சுட்டுவதாக அமைகின்றது.

அச்சொல் ஒரு பெண்பாற் பெயராக அமைந்திருப்பது இன்றைய தமிழர்தம் மேல்/கீழ் படிநிலையுடன் கூடிய வர்க்கப் பின்புலம் கொண்ட சமூகக் கட்டமைப்பைப் பல நிலைகளில் ஆய்வு செய்ய உதவுகின்றது. தமிழி எழுத்துப் பொறிப்பில் இவ்வினக்குழுவினர் சுட்டப் பெற்றுள்ளமையால் தமிழர்தம் நீர்மேலாண்மைப் பண்பாட்டினைச் சங்க காலத்திற்கும் முற்பட்ட காலத்திற்கு எடுத்துச் செல்ல முடியும். மடையர் என்ற சொல்வழக்குப் பிற்காலங்களில் மட்டும் காணப்பெறுகின்றது. சங்க இலக்கியங்களில் சுட்டப்பெற்றுள்ள மள்ளர் இனக்குழுக்களே பிற்காலத்தில் பல கிளை இனங்களாகப் பிரிந்து வேளாண்மையினையும் நீர் மேலாண்மையினையும் தொடர்ச்சியாக செய்து வந்துள்ளன. அதற்கான கல்வெட்டுச் சான்றுகளும் இலக்கியப் பதிவுகளும் கிடைக்கப் பெறுகின்றன. தமிழி எழுத்துப் பொறிப்புள்ள பானை ஓடு; சங்க இலக்கியங்கள்; அற இலக்கியங்கள்; புறத்திரட்டு நூல்கள்; பிற்காலக் கல்வெட்டுகள் எனக் காலவரிசைப்படுத்தப் பெற்ற சான்றாதாரங்கள் அனைத்திலும் மள்ளர்[பள்ளர்], மடையர் குறித்த பதிவுகள் நீர் மேலாண்மையோடு தொடர்புடையதாகக் காணப் பெறுகின்றன. இதன் மூலம் பாண்டிய நாட்டு வேளாண் இனக்குழுவினர் நீரியல் மேலாண்மையின் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளனர் என அறிய முடிகின்றது.

துணை நின்றவை

- **இரத்னவேல் ச.மா.,& கள்ளபிரான் நா.,** *பாசன ஏரிகளைத் தேடி*, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2013.
- **இராமகிருட்டினன் ஆ.,** *தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்*, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1989.
- **காமாட்சி மு.,** “*சங்க* காலம் : தொல்பொருள் ஆய்வுகள்”, சமூக விஞ்ஞானம், மலர்-6, இதழ்-21, சென்னை,2008.
- **குருசாமி சித்தன்,** *தமிழ் இலக்கியத்தில் பள்ளர் [மள்ளர்] தேவேந்திர குல வேளாளர்*, தேவேந்திர மன்றம் வெளியீடு, கோயம்புத்தூர், 1993.
- **கோமதிநாயகம் பழ.,** *தமிழகப் பாசன வரலாறு*, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2010.
- **…,** “சங்ககாலத்தில் பாசனத் தொழில்நுட்பம்”, சமூக விஞ்ஞானம், மலர்-6, இதழ்-21, சென்னை, 2008.
- **சங்கரன் கி.இரா.,** “சங்ககாலத்தில் நீர்ப்பாசனம்”, சமூக விஞ்ஞானம், மலர்-6, இதழ்-21, சென்னை, 2008.
- **சஞ்சீவி குமார் டி.எல்.,** *ஓடும் நீரின் வேரை அறுத்த வேதனை வரலாறு*, தி இந்து வெளியீடு, சென்னை, 2016.
- **சதாசிவப் பண்டாரத்தார்,** *பாண்டியர் வரலாறு*, செண்பகா பதிப்பகம், சென்னை, 2011.
- **சாமிநாதையர் உ.வே.**(மு.ப.), *பத்துப்பாட்டு மூலமும் மதுரை பாரத்துவாசி நச்சினார்க்கினியருரையும்*, கேசரி அச்சுக்கூடம், சென்னை, 1931.
- **சாந்தலிங்கம் சொ.,** “தமிழ்-பிராமி கல்வெட்டுகள் வாசிப்பு ஒரு மீள்பார்வை”, [கல்வெட்டுகளின் வரலாறும் வாழ்வியலும், தமிழ்த்துறைப் பயிலரங்க ஆய்வுக்கோவை, கே.எஸ்.ஆர்.கலை அறிவியல் கல்லூரி], முத்தமிழ் பதிப்பகம், சிவகாசி, 2014.

- **சேதுப்பிள்ளை ரா.பி.,** தமிழகம் - ஊரும் பேரும், தமிழ் நிலையம், சென்னை, **2009.**
- **திருமலை ப.,** *நீர்மேலாண்மையைத் தேடி*, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, **2011.**
- **பரமசிவன் தொ.,** *பண்பாட்டு அசைவுகள்*, காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், சென்னை, **2001.**
- **பாலசுப்பிரமணியன் குடவாயில்,** *இராஜராஜேச்சுரம்*, சுவாமி தயானந்தா அறக்கட்டளை, திருவாரூர்,**2010.**
- **மதிவாணன் இரா.,** *இடைக்கழக சிந்துவெளி எழுத்து படிப்பது எப்படி?*, எழிலினி பதிப்பகம், சென்னை, **2017**
- **மாதையன் பெ.,** *சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம்*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, **2010.**
- **...,***சங்க இலக்கியச் சொல்லடைவு*, தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர், **2007.**
- **வையாபுரிப்பிள்ளை ச.,** *சங்க இலக்கியம் பாட்டும் தொகையும்*, பாரிநிலையம், சென்னை, **1967.**
- **ஜா டி.என்.,** *பண்டையக் கால இந்தியா.*, பாரதி புத்தகாலயம், சென்னை, **2017.**
- **ஜோதிமணி வீ.,** "இலக்கியங்களில் நீராதாராங்களின் பயன்பாடும் நீர்த்தேக்க மேலாண்மையும்", செம்மொழித்தமிழ் [காலாண்டு ஆய்விதழ் : தொகுதி - 4], ராஜா பப்ளிகேஷன்ஸ், திருச்சிராப்பள்ளி, **2016.**
- ***...,*** *கல்வெட்டுகள் வரலாறும் வாழ்வியலும்* [பயிலரங்க ஆய்வுக் கோவை], செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் [சென்னை], கே.எஸ்.ஆர்.கலை அறிவியல் கல்லூரி, திருச்செங்கோடு, **2012.**

மதிப்பிடப்பெற்றது

சமயங்கள் கூறும் விலங்குகளின் தெய்வீகத் தன்மைகளும், மீறப்படும் விதங்களும் - விலங்குரிமை ஒழுக்கவியலை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

Divine characteristics of the animals, and the breach of the animals - a study based on animal ethics

திரவியராசா நிரஞ்சினி
BA (Hons) Eastern University, Sri Lanka.
MA, University of Peradeniya, Sri Lanka.
nironiru03@gmail.com

Abstract: Religions help people to improve their life. It shows good path to everyone. Animals are very important in religious life. Human beings use animals for their benefits since ancient period. Therefore animal's face many suffers and hurting. They face many threats from human such as Killing, persecution, chase and demolish issues. Animal rights ethics had been emerged to explain about these phenomena. Hinduism praises animals are sacred. Hinduism claims many concepts related with devotional recognition such as provide status to animal sand production for animals. Hinduism prohibits animal sacrifice until now. There are very close relationship between human beings and animals in Christianity. Many animal rights violation happen when people use animal for hunting and sacrifices proposes. Buddhism focus about animal production and which has the opposite concept of sacrifices. "Dampapatham" strongly condemn the killing creatures. But it is not prohibited eating meats, so which is criticize by others as big defect of Dhampatham. Islam provides priority for loving animals. It considers essential water, air, trees, Plants, animals and insects as a one family. It focuses entire global creative are created by Allah. So we have to love everything in this world. Allah loves people who love all creatures. But it also kill animals. So this study revealed above concepts related with animal abuses.

Keywords: Dampapatham, Killing, persecution, chase, இந்து சமயம், இஸ்லாம், கிறிஸ்தவம்

ஆய்வுச் சுருக்கம்

மனித வாழ்வினை நல்வழிப்படுத்த சமயங்கள் பெரிதும் உதவுகின்றன. இவ்வாழ்வில் விலங்குகள் பின்னிப்பிணைந்தவை. ஆரம்பகாலம் தொடக்கம் இன்று வரை விலங்குகள் மனித தேவைகளுக்கு பயன்பட்டு வருகின்ற அதேவேளை இன்றைய உலகில் அவை அதிக நெருக்கடிக்குள்ளாகி கொல்லப்படுவது தொடக்கம் துரத்தப்படுதல், துன்புறுத்தல் என முற்றிலும் அழிந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலைப்பாட்டை தெளிவுபடுத்திக் காட்டும்

நோக்கில் விலங்குரிமை ஒழுக்கவியல் தோற்றம் பெற்றது. இந்துமதத்தில் விலங்குகள் தெய்வீகத்தன்மையுடையதாகவும், சிறந்த செல்வமாகவும் போற்றி வழிபடப்பட்டது. விலங்குகளை கௌரவித்தல் தொடக்கம் விலங்குப்பாதுகாப்பு முதலான விடயங்களை எடுத்துக்கூறுகின்றது. ஆனாலும் மிருகபலி என்பது இம் மதத்தில் இன்றுவரை தடை செய்யப்படாததொரு விடயமாக உள்ளமை விலங்குரிமை மீறலாகவே கொள்ளப்படுகிறது. கிறிஸ்தவ மதத்தில் விலங்குகளுக்கு இடையில் நெருக்கமான ஓர் உறவு பேணப்படுகின்ற அதேவேளை தேவை கருதி விலங்குகளைப் பயன்படுத்தல், வேட்டையாடுதல், பலியிடுதல் முதலான செயற்பாடுகளில் விலங்குரிமை மீறல்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மீறப்படுகிறது. பௌத்தமதம் பலியிடுதலுக்கு எதிரான கருத்துக்கள், விலங்கு பாதுகாப்பு முதலான விடயங்கள் தொடர்பாக பேசுகிறது. உதாரணம் பௌத்த நூலான தம்ம பதத்தில் உயிர்க்கொலை வன்மையாகக் கண்டிக்கப்படுவதனைக் காணலாம். ஆனாலும் புலாலுண்ணாமையைக் கண்டிக்காமல் இருப்பது இம்மதத்தில் பாரிய குறைபாடாகவே இருந்து வருகிறது. ஜீவகாருண்யத்திற்கு முதன்மையளிக்கும் மதமாக இஸ்லாம் மதம் விளங்குகிறது. மனித வாழ்விற்கு அவசியமான நீர், காற்று, மரம், செடி கொடிகள், பூச்சியினங்கள,; விலங்குகள் முதலியவற்றை ஒரே குடும்பமாகவே இஸ்லாம் நோக்குகிறது. “படைப்புகள் அனைத்தும் அல்லாவின் குடும்பம் என்பதால் குடும்பத்தின் மீது அன்பு காட்டுபவன் அவனின் படைப்பில் விருப்பத்;திற்குரியவனாக கருதப்படுவான்” என்கிறது.ஆனாலும் இம் மதத்தில் அதிகளவில் மிருகவதை இடம் பெறுகின்றமையைக் காணலாம். இத்தகைய நிலைப்பாடுகளை தெளிவுபடுத்துவதாகவே இவ் ஆய்வு அமைந்துள்ளது.

அறிமுகம்

சமயங்கள் மனித வாழ்விற்கு இன்றியமையாதனவாகும். மனித வாழ்வினை நல்வழிப்படுத்தல், ஒழுக்கரீதியாக ஒருங்கிணைத்தல், மனிதர்களின் மத்தியில் கூட்டுணர்வை வளர்த்தல், உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் முதலான செயற்பாடுகளில் தீவிர அக்கறையுடன் செயற்படுகின்றது சமயம். விலங்குகள் மனித வாழ்வில் பின்னிப் பிணைந்தவை. நவீன இயந்திர கருவிகளின் வருகைக்கு முன்னர் மனிதர்கள் ஆரம்பகாலத்தில் விலங்குகளைப் பயன்படுத்தித் தொழில்களை மேற்கொண்டனர். விவசாய நடவடிக்கைகள் அனைத்தும் எருதுகளையும், காளைகளையும் வைத்து மேற்கொள்ளப்பட்டது. மேலும் விலங்குகளும், பறவைகளும் சூழல் சமநிலைக்கு பெரிதும் உதவின. அவை மனிதனின் பொருளாதார விருத்திக்கும் உதவின. ஆனால் இன்றைய உலகில் விலங்கு உயிரினங்கள் அதிக நெருக்கடிக்கு உள்ளாகி வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. கொல்லப்படுவது தொடக்கம் துரத்தப்படுதல், துன்புறுத்தல் என விலங்குகள் முற்றிலும் அழிந்துபோகும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இந்நிலைப்பாட்டினைத் தெளிவுபடுத்திக் காட்டும் நோக்கில் விலங்குரிமை ஒழுக்கவியல் தோற்றம் பெற்றது.

விலங்குரிமை ஒழுக்கவியலை வளர்க்கும் யோசனையை முன்வைத்தவர்களுள் **Alan Dershowitz, laurence** போன்றவர்கள் முக்கியமானவர்கள். கி.பி **1635, 1641, 1654**களில் முதன்முதலாக விலங்குகளைப் பாதுகாத்தல் தொடர்பான தீர்வுகள் முன்னெடுக்கப்பட்டது.

பதினெட்டாம் நூற்றாண்டில் ரூசோ, இமானுவல் காண்ட், ஜெரமி பென்தம், தோமஸ்ரெய்லர் போன்றோர். விலங்கு ஒழுக்கவியலுக்கு முன்னுரிமை வழங்கினர். பத்தொன்பதாம் நூற்றாண்டு காலப்பகுதியில்(1824) விலங்குகளுக்கான சமூக நிறுவனம் தோற்றம் பெற்றது. 1970இல் விலங்குரிமை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. 1975, 1976களில் விலங்குரிமைச் சுதந்திரங்களுக்கான வெளியீடுகள் இடம்பெற்றன, இருபத்தோராம் நூற்றாண்டில் விலங்குகளுக்கான தனி உரிமை எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலை காணப்படுகிறது. ஆரம்பகாலத்தில் விலங்குகளை பாதுகாத்த மனிதனே இன்று விலங்குகளின் அழிவிற்குக் காரணமாகிறான். மனிதனின் பல்வேறு செயற்பாடுகள் விலங்கினங்கள் அழிந்தும், அருகிக்கொண்டும் வருவதற்குக் காரணமாக உள்ளன.

சமயங்கள் கூறும் விலங்குகளின் தெய்வீகத் தன்மைகளும் அவை மீறப்படும் விதங்களும்

- **இந்து சமயம்**

இந்துமக்களின் நீண்டகால வரலாற்றை நோக்குகையில் இந்துக்கள் இயற்கைக்கும் இயற்கைச் சூழலில் உள்ள உயிரினங்களுக்கும் முன்னுரிமை வழங்கினார்கள். இயற்கையைப் பாதுகாக்கும் நோக்கில் “இயற்கையை இறைவனுக்கு இணையானதாகக் கருதினர். “இயற்கையை அழிப்பது இறைவனை அழிப்பதற்கு ஒப்பானது” என்றனர். வேதகால மக்கள் இயற்கைக்குப் பயந்து இயற்கைச் சக்திகளான மரம், மண், இடி, மின்னல், மழை, மலை, சூரியன், கொடிகள், ஐம்பெரும் பூதங்கள், விலங்குகள், பறவைகள் போன்றவற்றுக்குத் தெய்வ மதிப்புக் கொடுத்து வழிபட்டனர்.

வேதகால மக்களால் விலங்குகள் தெய்வீகத் தன்மையுடையதாகவும், சிறந்த செல்வமாகவும் போற்றி வழிபடப்பட்டன. “இறைவா எங்களது இருகால், நான்கு கால் பிராணிகளை எல்லாம் காப்பாயாக”, “பசுக்களுக்கும் புரவிகளுக்கும் சுகமளி” என வேதகாலத்தில் மக்கள் இறைவனிடம் வேண்டிக்கொண்டனர். இதிலிருந்து விலங்குகளைப் பாதுகாக்கும் பொறுப்பினை மக்கள் இறைவனிடம் வழங்கி இருந்தமை தெளிவாகிறது. மேலும் “இந்திரனே மீண்டும் பசுக்களை எங்களிடத்தே அளிப்பாயாக என்றும், அவை உயிருடன் இருக்கின்றன என நீ கூறினால் நாங்கள் இன்புறுவோம்” எனவும் வேதகாலத்தில் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து வேதகாலத்தில் விலங்குகள் இறைவனிடம் இருந்து பெறும் வரமாகவே விளங்கியுள்ளமை தெரிகின்றது.

விலங்குகளைப் பராமரித்தலை வேதங்கள் எடுத்துக் கூறுகின்றன. “நண்பர்களே பசுவை பண்ணோடு அணுகுங்கள், துன்புறுத்தாமல் அவைகளை பந்தத்திலிருந்து அவிழ்த்து விடுங்கள்’, ‘காலையிலும், மாலையிலும் உன்னை ஏந்தி வரும் குதிரைகளை அவிழ்த்து விடவும்”; என்றும் கூறுகிறது வேதம். இதிலிருந்து விலங்குகளைத் துன்புறுத்தாது, கொல்லாது, பாதுகாத்துப் பராமரிக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. இந்து மதம் பசுவை புனிதமானதாக நோக்குகிறது. இதனால் பசு வதையினை வன்மையாகக் கண்டிக்கிறது. “பசுவை

வீணாகக் கொல்பவன் அப்பசுவுக்கு எத்தனை உரோமங்கள் இருக்கின்றதோ? அத்தனை ஜென்மம் பசுவாகப் பிறந்து பலரால் கொல்லப்படுவான்'' என்றும் மேலும் பசுவை போற்றிப் பேணுவதால் கிடைக்கும் புண்ணியத்தின் அளவு பற்றியும் எடுத்துக் கூறுகிறது.

இயற்கையை மட்டுமன்றி உயிரினங்களையும் இறைவனுடன் தொடர்புபடுத்தி இந்துமதம் நோக்குகிறது. விஸ்ணுவின் தசாவதாரத்தில் திருமால் பல விலங்குகளுடனும், இராமாயணத்தில் இராமன் - குரங்குடனும்(அனுமன்), மகாபாரதத்தில் கண்ணன் பசுக்களுடனும் தொடர்பு கொண்டிருந்தமையைக் கூறலாம்.

விலங்குகளுக்குக் கௌரவத்தை ஏற்படுத்தும் நோக்கில் இந்துமதத்தில் தெய்வங்களின் வாகனமாக விலங்குகளும், பறவைகளும் விளங்குகின்றன. உதாரணம் காளி - சிங்கம், பிள்ளையார் - யானை, சிவன் -காளை, முருகன் - மயில்.

திருமூலர் மிருகங்களைப் பாதுகாப்பதற்கான வழியைக் கூறுகின்றார். உதாரணம்

''யாவர்க்குமாம் இறைவார்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைபிடி''

இந்து சமயத்தின் பாரிய குறைபாடாக இருப்பது மிருகங்களைப் பலியிடுவதாகும். பாதையில் ஊர்ந்து செல்லும் சித்தெறும்பு கூட காலடியில் சிக்கித் தன் சாவைத் தவிர்ப்பதற்கான தன்னாலான அனைத்து முயற்சிகளையும் செய்து வாழ்கின்றது. இதேபோல் உலகில் தோன்றிய அனைத்து உயிரினங்களும் தங்கள் வாழ்நாட்களை நீட்டிக்கப் போராடுகின்றன. ஆனால் மனித இனத்தின் ஒரு சில சக்திகள் தங்களின் சுயநலத்திற்காகவும், நாட்டின் நலனுக்காகவும், பேராசையை அடைவதற்காகவும், மிருகபலிகளை ஆலயத்தில் நடத்தித் தங்களது நேர்த்திக் கடன்களைத் தீர்த்துக் கொள்ள விரும்புகின்றார்கள். அத்தகைய மூடநம்பிக்கைகள் மண்ணோடு மண்ணாகப் புதைக்கப்படல் வேண்டும். இல்லாவிட்டால் சட்டம் மூலம் அது தடை செய்யப்படல் வேண்டும். இந்நிலையில் விலங்குகளின் ஒழுக்கங்கள் மீறப்படுவதனைக் காணலாம்.

- **இஸ்லாம்**

இஸ்லாம் ஜீவகாருண்யத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் மதமாகும். ''மனித வாழ்விற்கு அவசியமான நீர், காற்று, உட்பட கோடிக்கணக்கான மரங்கள், செடிகள், கொடிகள், மலைத்தொடர்கள், மேட்டுநிலங்கள், சமவெளிகள், பள்ளத்தாக்குகள், நீர்வீழ்ச்சிகள், பூச்சியினங்கள், பறவையினங்கள், விலங்கினங்கள் அனைத்தையும் ஒரே குடும்பமாகவே இஸ்லாம் நோக்குகின்றது''. ''படைப்புக்கள் அனைத்தும் அல்லாவின் குடும்பம் என்பதனால் குடும்பத்தின் மீது அன்பு காட்டுபவன் அவனது படைப்பில் மிகவும் விருப்பத்திற்குரியவனாகக் கருதப்படுவான்''. இதனூடாக உயிரினங்கள் மீது அன்பு செலுத்துதலை இஸ்லாம் போதிக்கின்றமையைக் காணலாம்.

உதாரணம் - தாகமான நாய் ஒன்றுக்குத் தண்ணீர் புகட்டிய பெண் ஒருத்திக்கு சுவர்க்கம் கிடைக்கும் என்றும், ஒரு பூனையை அறையில் போட்டுப் பூட்டி அதற்கு உணவோ, நீரோ புகட்டாமல் சித்திரவதை செய்தால் நரகம் கிடைக்கும் என்பதனையும் இஸ்லாமியர்கள் நம்பினர். மனிதன் மனிதர்களுக்கு மட்டுமன்றி ஏனைய உயிரினங்களுக்கும், பணிவிடை செய்யக் கடமைப் பட்டுள்ளான் என்பதில் இஸ்லாம் உறுதியாக உள்ளது.

உதாரணம் - "மலைகளையும், பறவைகளையும் நாம் வசப்படுத்திக் கொடுத்தோம். (17-37) (கதிஸ்)

விலங்கு பாதுகாப்புத் தொடர்பாக வலியுறுத்தினாலும் அதிகளவான சந்தர்ப்பத்தில் மிருகவதை இடம்பெறுவதனை இம் மதத்தில் காணக்கூடியதாக உள்ளது.

விலங்குகளைப் பலியிடுதல்

உதாரணம் - ஹஜ் பெருநாளைக் கொண்டாடுவதற்கு யாத்திரை செல்பவர்கள் யாத்திரையை நிறைவேற்றி முடித்தபின்பு தத்தமது வசதிக்கேற்றவாறு ஆடு, மாடு, கோழி, ஒட்டகம் போன்ற மிருகங்களில் ஒன்றைத் தெரிந்தெடுத்து "குர்பானி" (பலி)" கொடுத்தல்.

- **கிறிஸ்தவம்**

கிறிஸ்தவத்திற்கும் மிருகங்களுக்கும் இடையே மிக நெருக்கமான தொடர்பு காணப்படுகின்றது. உதாரணம் - இயேசுவின் பிறப்பு மாட்டுத் தொழுவத்தில் இடம்பெற்றது.

வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் மக்கள் செய்கின்ற பாவங்களுக்குக் கடவுளால் தண்டனை வழங்கப்பட்டது. இதனால் இக்காலத்தில் மக்கள் தண்டிக்கப்பட்டு இறந்தார்கள். இத்தண்டனையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளும்முகமாக இவர்களால் கடவுளுக்குப் பலி செலுத்தப்பட்டது. பலி செலுத்துவதற்கு ஆடுகள், மாடுகள் போன்ற மிருகங்கள் பயன்படுத்தப்பட்டன. ஆனால் புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்து மனிதர்களின் பாவங்கள் நிமித்தம் பூமிக்கு மனிதனாக வந்து மக்களின் சகல பாவங்களையும் தன் மீது சுமந்து சிலுவையில் தன்னைப் பலியாக ஒப்புக் கொடுத்தார். இதனால் தற்காலத்தில் ஓரளவிற்குப் பலிகள் நிறுத்தப்பட்டமையைக் காணலாம்.

கிறிஸ்தவ மதத்தில் விலங்குகளின் உரிமைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மீறப்பட்டுள்ளதனையும் நாம் பின்வருமாறு காணலாம்.

தேவை கருதிப் பயன்படுத்தல்

விலங்குகளின் தோலைப் பயன்படுத்தி ஆடைகள் உருவாக்கப்பட்டமை தொடர்பாகக் கூறப்பட்டுள்ளது.

உதாரணம் : ஆதாம், ஏவாளுக்காக தேவன் விலங்கின் தோலினால் ஆடைகளை உண்டாக்கினான்.

பலியிடலுக்குப் பயன்படுத்தல்

கிறிஸ்தவ மதத்தின் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பல்வேறு நோக்கங்களுக்காகப் பல்வேறு விதமான மிருக பலிகள் செலுத்தப்பட்டன.

உதாரணம் : தகன பலி, போஜன பலி, சமாதான பலி, பாவ நிவாரண பலி, குற்ற நிவாரண பலி...

தகன பலி என்பது எவருடைய உதவியும் இன்றித் தானாகவே செய்யும் வழிபாடாகும். அறியாமல் செய்த பாவத்திற்கு பிராயச்சித்தம் தேடிப் பக்தியை வெளிப்படுத்துவதற்காக இப்பலி மேற்கொள்ளப்படுகிறது. இப்பலியில் இரவு தொடங்கி விடியற்காலை வரை பலிபீடத்தில் அக்கினி அவிந்து போகாது எரிந்துகொண்டே இருக்க வேண்டும். ஊனம், குறைபாடு இல்லாத காளை, வெள்ளாட்டுக்கிடாய் என்பன பலியிடப்பட வேண்டும்.

போஜன பலி : தேவனுடைய நன்மைகளையும், பராமரிப்பையும் நினைத்துச் செலுத்தப்படுவதாகும். தேவனிடத்தில் பற்றுதலாகவும், பக்தியாகவும் இருப்பதை இப்பலி வலியுறுத்துகிறது.

உணவுக்காகப் பயன்படுத்தல்

ஆரம்பத்தில் சகல உயிரினங்களும் தாவர உண்ணிகளாகவே இருந்தன. ஆனால் நோவாவின் ஜல பிரளயத்திற்குப் பின்னர் விலங்குகள் மாமிச உணவாக உண்பதற்கு அனுமதிக்கப்பட்டது. இதனை வேதாகமம் மிக அழகாக எடுத்துக் கூறுகின்றது. “உங்களைப் பற்றிய பயமும், அச்சமும் பூமியிலுள்ள சகல மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் உண்டாகியிருக்கும். பூமியிலே நடமாடுகிற யாவும், சமுத்திரத்தின் மிச்சங்கள் யாவும் உங்களுக்குக் கையளிக்கப்பட்டன. நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும், உங்களுக்கு ஆகாரமாய் இருப்பதாக! பசும் பூண்டுகளை உங்களுக்குத் தந்தது போல, அவைகள் எல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தேன். மாமிசத்தை அதன் உயிராகிய இரத்தத்தோடு புசிக்க வேண்டாம்.” எனக் கூறப்பட்டது.

கிறிஸ்தவ மதத்தின் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஒருசில மாமிச உணவுகளைத் தவிர அனைத்தும் உணவாக உட்கொள்ளப்பட்டது. இதனைக் கீழ்வரும் கூற்றினூடாக விளங்கிக் கொள்ளலாம்.

“பேதுரு எனும் தேவமனிதன் தேவனை நோக்கி வேண்டிக்கொண்டு இருந்தபோது ஒரு தரிசனத்தைக் கண்டான். வானம் திறக்கப்பட்டிருப்பதையும், நான்கு முனையிலும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டி போல் ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருப்பதாகவும், அதில் பூமியிலுள்ள சகலவிதமான நான்கு கால் ஜீவன்களும், காட்டு மிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருப்பதைக் கண்டான்” அவற்றையெல்லாம் அடித்துப் புசிக்கும்படித் தேவன் கட்டளையிட்டார். அதற்கு பேதுரு தீட்டும், அசுத்தமுமாயிருக்கின்ற யாதொன்றையும் ஒருகாலும் புசிப்பதில்லை” எனக் கூறினான்.

வேட்டையாடுதல்

வேதாகமத்தில் விலங்குகள் வேட்டையாடப்பட்டமைக்கான சான்றுகள் உள்ளன. ஆபிரகாமின் மகன் ஈசாக்கு தன்னுடைய மகனான ஏசாவை ஆசிர்வதிப்பதற்காக விரும்பித் தன் மகனை அழைத்துத் தனக்கு ஒரு மிருகத்தை வேட்டையாடிச் சமைத்துக் கொண்டு வரும்படிக் கட்டளையிட்டான். அதனை ஏசா நிறைவேற்றினான். ஆகையால், "நீ உன் ஆயுதங்களாகிய அம்பறாத் துணியையும், வில்லையும் எடுத்துக்கொண்டு வனத்திற்குப் போய் எனக்காக வேட்டையாடி, அதை ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்து, நான் புசிக்கவும், மரணமடையும்முன், என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கவும் என்னிடத்தில் கொண்டு வா" என்றார்.

- **பௌத்தம்**

பௌத்தமதம் பலியிடலுக்கு எதிராகவும், விலங்குகள், தாவரங்கள், பறவைகள் முதலியனவற்றின் பாதுகாப்புத் தொடர்பாகவும் பேசுகிறது. இம்மதம் பஞ்சசீலக் கோட்பாட்டில் ஒன்றான "கொல்லாமையை வலியுறுத்துகிறது. பௌத்த நூலான தம்மபதத்தில் உயிர்க்கொலை கண்டிக்கப்பட்டிருந்தது. 'எந்த ஒரு பிராணியையும் அடித்துத் துன்புறுத்தாமல், கொல்லாமல், கொலை செய்யாமல் இருக்கின்றவன் யாரோ அவன் தான் சிறந்தவன் என்று கூறுகிறது பௌத்தம்.

பௌத்த மதம் போதித்த அட்டகதைகளில் ஏழு நியமங்களை புத்தர் போதித்ததாகக் கூறப்படுகிறது. அதில் ஏழாவது நியமத்தில் "வலைவீசி விலங்குகளைப் பிடிக்காதவாறு அக்கறை காட்ட வேண்டும்" எனக் கூறப்பட்டுள்ளதாக டி.டி.கோசாம்பி தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் "அந்தணர்களே! பிற உயிர் வருந்துவதற்குரிய எதையும் செய்யாதீர்கள். நான் கூறுவதைக் கேளுங்கள், மேய்ச்சல் நிலத்தில் உள்ள இந்தப் புல்லை மேய்ந்து இந்தப் பெரிய உலகத்தில் உள்ள மக்களுக்கு அவர்கள் பிறந்தது முதல் தன் பாலைத் தரும் இப்பசுவிடம் உமக்கு உண்டான சினம்தான் யாது? உரைப்பீராக" எனும் ஆபுத்திரனின்(மணிமேகலைக் காப்பியம்) கூற்று இம்மதத்தில் உயிர்க்கொலை கண்டிக்கப்பட்டிருந்தமையை வலியுறுத்துகிறது.

அரசன் பிந்துசாரனின் யாகசாலையில் பலியிடுவதற்காகக் காத்திருக்கும் ஆட்டிற்காக புத்தர் பரிவுகாட்டிக் கூறும் ஆறுதலான வார்த்தைகள் விலங்குகள் மீதான அன்பினை வெளிப்படுத்துகின்றன.

மேலும் மடாலயங்களின் வழிகாட்டலின் பத்து வகையான விலங்குகளின் மாமிசத்தை (மனித மாமிசம், யானை, குதிரை, நாய், சிங்கம், புலி, சிறுத்தை, கரடி, கழுதை, புலி) உண்ணுதல் தடை என வலியுறுத்தப்பட்டுள்ளது. சமுதாயச் சீர்கேட்டை எதிர்த்து உலக உயிர்களின் மீது அகிம்சையைப் போதித்து, வேள்விகளையும், பலியிடுதலையும் கண்டித்தலை நோக்காகக் கொண்டு இம்மதம் செயற்பட்டது. புத்த பேரரசனான அசோகன் தான் செய்த உயிர்க்கொலைக்குப் பரிகாரம் தேடுவதற்காக பௌத்த மதத்தைத் தழுவினார். மேலும் சூழல்,

உயிர்களின் பாதுகாப்புப் பற்றிய பிரகடனங்களையும் வெளியிட்டார். இதனைக் கல்வெட்டுக்கள், கற்றூண்கள், அரசாணைகள் முதலியன ஊடாகக் கண்டு கொள்ளலாம்.

எனினும், பௌத்த மதம் பலியிடுதலைக் கண்டிக்காமல் இருப்பது விலங்குரிமை மீறலாகவே பார்க்கப்படுகிறது. இதனைக் கீழ்வரும் செயற்பாட்டின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

உதாரணம் - கோசலநாட்டு மன்னன் சேனாதிபதி பலியிடுதலுக்கு 500எருதுகள், 500காளைகள், 500 பசுக்கள், 500 செம்மறி ஆட்டுக்குட்டிகள் முதலியவைகளைப் பயன்படுத்தியமை.

விலங்குகளின் உரிமைகள் ஒழுக்கவியல் ரீதியாக மீறப்படும் சந்தர்ப்பங்கள்

இயற்கைச் சூழலில் இன்றியமையாததொன்றாக விலங்குகள் விளங்குகின்றன. மனிதர்களுக்கு உயிர்வாழ்தல் எவ்வாறு அவசியமோ அதுபோலவே விலங்குகளுக்கும் உயிர்வாழ்தல் அவசியம். விலங்குகளை மனிதர்கள் உணவு, உடை, பொழுதுபோக்கு, அலங்கார பொருள் உற்பத்தி, ஆய்வுகள் முதலிய விடயங்களுக்குப் பயன்படுத்துகின்றனர். இதனால் விலங்குகள் உடலியல், உயிரியல், உளவியல் ரீதியில் பல்வேறு தாக்கங்களை எதிர்கொள்கின்றன. இத்தகைய செயற்பாடுகள் விலங்குரிமை மீறல்களாகவே கருதப்படுகின்றன.

- **வாழிடங்களை அழித்தல்**

மனிதனின் பல்வேறு நடத்தைகளால் காடுகள் அழிக்கப்படுகின்றன. மனிதன் தனது அடிப்படைத் தேவைகளைப்(உணவு, உடை, உறையுள்) பெற்றுக் கொள்வதற்காகவும், அதிகரித்து வரும் சனத்தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியின் வளர்ச்சியில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவும், பெருந்தோட்ட பயிர்ச்செய்கை, விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் காடுகளை அழிக்கின்றான். விலங்குகளின் வாழிடமான காடுகள் அழிக்கப்படுவதனால் காட்டு விலங்குகள் வாழிடம் இன்றி அழிவடைகின்றன. மேலும் இவ்விலங்குகள் காடுகளை விட்டு வெளியேறும் சந்தர்ப்பத்தில் மக்கள் தமது பாதுகாப்புக் கருதி கொடிய ஆயுதங்கள், நஞ்சு ஊட்டப்பட்ட பீடைகொல்லிகள் முதலியவைகளைப் பயன்படுத்தி அழிக்கின்றனர். இதனால் விலங்குகள் பல்வேறு நிலைகளிலும் பாதிப்பை எதிர்நோக்குகின்றன.

- **சூழல் மாசடைதல்**

சூழல் மாசடைவதால் விலங்குகள் பல்வேறு வழிகளிலும் பாதிப்படைகின்றன. தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் எண்ணெய், கதிரியக்கமுள்ள கழிவுப்பொருட்கள், காடுகளை அழித்தல், அளவுக்கதிகமான பீடைகொல்லிகள் பாவனை முதலிய செயற்பாடுகளால் விலங்குகளின் உயிர் உரிமை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றது.

- **வேட்டையாடுதல்**

ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை வேட்டையாடுவதை மனிதன் பல்வேறு தேவை கருதி மேற்கொண்டான்.

உதாரணம் - திமிங்கலங்களின் உடலிலுள்ள கொழுப்புப் பொருளிலிருந்து கிடைக்கும் எண்ணெய். வன விலங்குகள் - கம்பளி மயிர், உணவு, தோல், கொம்பு, தந்தம், தோல்.

•பலியிடுதல்

சடங்குகளும், நம்பிக்கைகளும் ஒருங்கிணைந்த தொகுப்பே உயிர்ப்பலி ஆகும். அந் நிகழ்வில் சில காலங்களுக்கு புனிதமாக கருதப்படும் விலங்குகள் உணவாக உட்கொள்ளப்படாமல் அக்குறிப்பட்ட உயிரினம் பலியிடப்பட்டு அவற்றின் உறுப்புகள் 'சடங்கு உணவாக' உட்கொள்ளப்படும். இதனால் ''புனித உயிரினத்தில் அடங்கியுள்ள உயிர்ப்புச் சக்தி கைவரப்பெறும்'' என்ற நம்பிக்கை மனிதர்களிடையே காணப்பட்டது. மேலும் புதையல்கள், பாலங்களை அமைத்தல், அநீதிகளில் இருந்து தப்பித்துக்கொள்ளுதல், நேர்த்தியினை நிறைவேற்றுதல், சடங்கு சம்பிரதாயங்களின் போது விரும்பியதைப் பெறுதல், வசிய செயற்பாடுகள் முதலியவைகளின் நிமித்தம் விலங்குகள் பலியிடப்படுகின்றன.

•ஆய்வுகள்

மனிதநலன் கருதிக் கண்டுபிடிக்கப்படும் மருந்துகளை மனிதர்களுக்குப் பயன்படுத்துவதற்கு முன்னர் விலங்குகளுக்குப் பயன்படுத்துவதனைக் காணலாம்.

உதாரணம் - புற்றுநோய் அணுக்களை அழிக்கும் திறன் கொண்ட புரதம் தாங்கிய நானோ துகள்களைப் புற்றுநோய் மருந்துடன் கலந்து முதலில் எலிக்குச் செலுத்திப் பரிசோதிக்கப்பட்டது. பின்னரே மனிதர்களுக்குப் பயன்படுத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது. இச்செயற்பாட்டை பீட்டர் சிங்கர் குறிப்பிடும்போது ஒரு மனிதன் புற்றுநோயின்போது நாளாந்தம் எவ்வாறு வலிகளை அனுபவித்து மெல்ல மெல்ல இறக்கின்றானோ அவ்வாறே ஒரு பரிசோதனை கூடத்திலிருக்கின்ற எலியின் நிலையும் காணப்படும்.

வில்லியம் ஹார்வி மனிதனின் குருதி சுற்றோட்டத் தொகுதியைக் கண்டுபிடிப்பதற்குத் தவளையை பயன்படுத்தினார். விண்வெளி ஆராய்ச்சிக்கு லைகா நாய் பயன்படுத்தப்பட்டது.

லூயி பாஸ்டர் எனும் விஞ்ஞானி வெறிநாய் கடிக்கான மருந்தினைக் கண்டுபிடிப்பதற்குச் சில குறிப்பிட்ட நாய்களைக் கட்டுப்பாட்டுக் குழு பரிசோதனைமுறைக்கு உட்படுத்தி அம்மருந்தினைக் கண்டுபிடித்தார். அவ்வாறு தான் பல தடுப்புமருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவை மனிதர்களுக்குச் செலுத்தப்படுவதற்கு முன் விலங்குகளுக்கு செலுத்தப்பட்டுப் பரிசோதிக்கப்பட்ட பின்னர் அம்மருந்துகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

ஆய்வுக்காக சிறிய விலங்குகள் முதல் பெரிய விலங்குகளான நாய், பூனை, பன்றி, மாடு, குரங்கு போன்றவைகளும் பயன்படுத்தப்படுகின்றன. சிலவேளைகளில் கோழி, பறவை, தவளை, தும்பி முதலியனவும் ஆய்வின் போது பயன்படுத்தப்படுகின்றன. இதனால் விலங்குகள் நோய்வாய்ப்பட்டு அழிவடைகின்றன.

•தேவைகருதி விலங்குகளைப் பயன்படுத்தல்

போக்குவரத்திற்காகக் கால்நடைகளைப் பயன்படுத்தல். உதாரணம் - மாடுகள், எருதுகள், குதிரைகள், யானைகள், கழுதைகள்.

- **தொழிலின் நிமித்தம் விலங்குகளைப் பயன்படுத்தல்**

உதாரணம் - ஆரம்பகாலங்களில் விவசாயத்தொழிலை மேற்கொள்வதற்கு அதிகமாக எருதுகள் பயன்படுத்தப்பட்டன. பொதி சுமப்பதற்குக் கழுதைகள், எருதுகள் பயன்படுத்தப்பட்டன.

•இனப்பெருக்கத்தைத் தடை செய்தல்

உயிரினங்களின் அடிப்படைப் பண்புகளில் ஒன்றாக இனப்பெருக்கம் காணப்படுகின்றது. உயிர்வாழ் விலங்கினங்கள் அனைத்தும் இனப்பெருக்கத்தினுடாகவே தங்களது இனத்தைப் புதுப்பித்தும், பெருக்கியும் கொள்கின்றன. இதனை மனித சமுதாயம் விலங்குகளுக்குத் தடுப்பூசிகளை ஏற்றுதல், சத்திரசிகிச்சை மேற்கொள்ளல், கருத்தடைகளை நிகழ்த்துதல் முதலிய செயற்பாடுகளை மேற்கொண்டு இனப்பெருக்கத்தைத் தடை செய்கின்றனர். இதனால் விலங்குகள் பல்வேறு வழிகளிலும் தம் இனத்தைப் பெருக்கிக்கொள்ள முடியாதவாறு பாதிப்பை எதிர்நோக்கின்றன.

விலங்குகளுக்கான உரிமைகள் மீறப்படும் சூழல்களைத் தவிர்க்கும் முறைகள்

- ✓ எல்லா மிருகங்களின் உயிரும் மதிக்கப்படல் வேண்டும்.
- ✓ மிருகங்களைச் சிகிச்சைகளுக்குப் பயன்படுத்துதல் தவிர்க்கப்படல் வேண்டும்.
- ✓ விலங்குகளை வதை செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.
- ✓ தவிர்க்கமுடியாத காரணத்தின்போது மிருகங்களை வதை செய்ய வேண்டுமாக இருந்தால் வலி ஏற்படுத்தாமல் வதை செய்தல் வேண்டும்.
- ✓ ஒழுக்கவியல் ரீதியாக இறந்த மிருகம் அடக்கம் செய்யப்படல் வேண்டும்.
- ✓ வீட்டில் வளர்க்கும் மிருகங்களிடம் கடுமையாக வேலை வாங்குதல், துன்புறுத்தல் கூடாது. உதாரணம் : மாடுகள் வயல் நிலங்களை உழுதும் போது அவற்றுக்கு அவசியம் ஓய்வு கொடுக்கப்பட வேண்டும்.
- ✓ மிருகங்கள் உடலியல் ரீதியாக கௌரவிக்கப்பட வேண்டும். உதாரணம் - பாலூட்டிகள்.

- ✓ மிருகங்களின் சோதனையின் போது உடல், உள ரீதியாகத் தீங்கு விளைவிப்பது தவிர்க்கப்படல் வேண்டும்.
- ✓ வனவிலங்குகளை முழுமையாக அழித்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.
- ✓ வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணிகளின் பாதுகாப்பும், வனவிலங்குகளின் பாதுகாப்பும் அரசாங்கத்தால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

துணைநின்றவை

- ❖ அலெக்சாண்டர் பி.சி. 1988, "அறிவியற் களஞ்சியம்", (தொகுதி - 05, 06, 07), அண்ணாமலை, சிவகாமி அச்சகம்.
- ❖ ... (தொ.ஆ.), 1988, "அறிவியற் களஞ்சியம்", (தொகுதி - 05, 06, 07, 10), அண்ணாமலை, சிவகாமி அச்சகம்.
- ❖ அனஸ் எம்.எஸ்.எம்., 2006, மெய்யியல் (கிரேக்கம் முதல் தற்காலம் வரை), கொழும்பு-12, குமரன் புத்தக இல்லம்.
- ❖ இரத்தினசிங்கம் சி.வ., 2008, "உலக மதங்கள் பற்றிய அரிய தகவல்", சென்னை, பான் ராஜா கிராபிக்ஸ்.
- ❖ இரத்தினசிங்கம் வ., 2008, "உலகமதங்கள்", ராஜா கிராபிக்ஸ்.
- ❖ சிவானந்தமூர்த்தி க., 2012, "ஒழுக்க நியமங்களும், அதன் நடைமுறைகளும்"இ லங்கா புத்தகசாலை வெளியீடு.
- ❖ ஞானகுமாரன் நா., 2003, "மெய்யியல்", கொழும்பு-11, சேமமடு புத்தகசாலை வெளியீடு.
- ❖ பாலுசாமி நா., 1987, "வாழ்வியற் களஞ்சியம்", (தொகுதி 02, 04, 12), அண்ணாமலை, சிவகாமி அச்சகம்.
- ❖ ஜமாகீர் பீ.எம்., 2010, "மெய்யியல் பிரச்சினைகளும், பிரயோகங்களும்", கண்டி, நதா வெளியீடு.
- ❖ **Burgh W.G.De., 1937, "To wards a Religious Philosophy , Macdonald& Evance, London**
- ❖ **John, H.Hick, 1990, "Philosophy of Religion", Prentice Hall Foundation of Philosophy Series in India.**
- ❖ **Masih Y., 1971, "Introduction to Religious Philosophy Motial Banarsddass Publishers, Delhi.**
- ❖ **William James, 1902, "The varieties of Religious Experience the modern Library, New York.**

மதிப்பிடப்பெற்றது

இக்கட்டுரை நீக்கப் பெற்றது.

மதிப்பிடப்பெற்றது

விவேகானந்தரின் ஆளுமை பற்றிய சிந்தனைகள்: ஒரு மெய்யியல் ஆய்வு

The thought of the personality by Viveganandar: A Philosophical Approach

தக்ஷஷாயினி ராஜேந்திரன்
விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
thakshaa8184@gmail.com

Abstract: The thoughts of Swami Viveganandar are not standing out only the limitations how builds the personality of a man to the Barath nation but also the whole world. The western philosophers who interprets the personality reveal different theories on personality. Sexual motives by Sigmund Freud, myths by Karl Yunk and society by Eric Ericson are referred those motivations of one personality. Differed from those motivations, Swami Viveganandar emphasized in unique way of Indian tradition that one personality determined by the spiritual power. He said that energy, soul, willpower, intellectual power and spiritual power are the five influencing one personality however spiritual power is determined everything. He brought the spiritual power which one intrapsychic is raising a man to the Indian domestic. He emphasises each have to raise the divine energy and nature. Further, thoughts and actions of a man is decided his present and the future when that thoughts and actions are to be right, clear and strong, the man become a good personality which makes a path for the society and country with good personality. Thoughts for personality by Viveganandar which were not included the time frame of the vision of prophecy are essential needed for the contemporary world. The study explains, today, the thoughts of Veveganadar are seeding to free from the misunderstanding on the personality and to get the attention of the real best personality. The data for the study gathered from secondary sources which had done using analytical method, comparative method and critical method.

Keywords: Personality, Spiritual power, Willpower, Energy, Intellectual strength

ஆய்வுச் சுருக்கம்

சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் ஒரு தனிமனித ஆளுமை எவ்வாறு கட்டமைக்கப்பட வேண்டும் என்பதற்கான சிறந்த வரையறைகளைப் பாரத தேசத்திற்கு மட்டுமன்றி முழு உலகத்திற்குமாகப் பறைசாற்றி நிற்கின்றன. ஆளுமை குறித்து விளக்கமுற்பட்ட மேலைத்தேய சிந்தனையாளர்கள் ஆளுமை குறித்துப் பல்வேறுபட்ட கருத்தாக்கங்களை வெளிப்படுத்தி நின்றனர். சிக்மண்ட் புறொய்ட் பாலியல் உந்தல்களையும், காள் யுங் தொன்மங்களையும், எரிக் எரிக்சன் சமூகத்தினையும் ஒருவரது ஆளுமையினைத்

தீர்மானிக்கின்ற ஊக்கிகளாகக் குறிப்பிடுகின்றனர். சுவாமி விவேகானந்தர் இவை யாவற்றிலும் இருந்து வேறுபட்டு இந்திய மரபிற்கே உரிய தனித்துவமான பாணியில் ஒருவரது ஆளுமையினைத் தீர்மானிப்பது ஆன்மீக பலமே என்பதனை வலியுறுத்தினார். ஒருவரது ஆளுமையைத் தீர்மானிப்பதில் உடல் பலம், உயிர் பலம், மனபலம், அறிவு பலம், ஆன்மீக பலம் எனும் ஐந்து கூறுகள் செல்வாக்குச் செலுத்துவதாகக் குறிப்பிடும் விவேகானந்தர் ஆன்மீக பலமே அனைத்தையும் தீர்மானிப்பதாகக் குறிப்பிடுகின்றார். ஒருவரது உள்ளத்திலே புதைந்து கிடக்கின்ற ஆன்மபலமே ஒருவனை உயர்வடையச் செய்கின்றது. அத்தகைய ஆன்ம பலத்தை இந்திய மக்களுக்கு எடுத்தருளினார்.

ஒவ்வொருவரும் தமது தெய்வீக ஆற்றலையும், இயல்பையும் ஓங்கச் செய்ய வேண்டும் என வலியுறுத்தினார். மேலும் ஒருவனது சிந்தனைகளும், செயல்களுமே அவனது நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் தீர்மானிக்கின்றன என்பதனை எடுத்துக் காட்டினார். எனவே சிந்தனைகளும், செயல்களும் சரியானதாகவும், தெளிவானதாகவும், வலுவானதாகவும் அமைகின்றபோது ஒரு மனிதன் சிறந்த ஆளுமைமிக்க மனிதனாக உருவாகின்றான் என்பதனை எடுத்துக் காட்டியதோடு, சிறந்த ஆளுமை மிக்க தனிநபர்களின் உருவாக்கம், சிறந்த ஆளுமை மிக்க சமூகத்தினதும், நாட்டினதும் உருவாக்கத்திற்கு வழிவகுக்கும் என்பதனையும் தெளிவாக எடுத்துக்காட்டினார்.இத்தகைய கால வரம்பிற்குட்படாத தீர்க்கதரிசனத்தைக் கொண்ட விவேகானந்தரது ஆளுமை குறித்த சிந்தனைகள் சமகால உலகிலும் மிகவும் தேவைப்பாடுடையனவாய் விளங்குகின்றன. இன்றைய உலகில் ஆளுமை என்பது குறித்து காணப்படுகின்ற தவறான புரிந்து கொள்ளல்களில் இருந்து விடுபட்டு, உண்மையான சிறந்த ஆளுமை குறித்த விழிப்புணர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு சுவாமி விவேகானந்தரது சிந்தனைகள் வித்திடுகின்றன என்பதனை இவ்வாய்வு வெளிப்படுத்தி நிற்கின்றது.இவ் ஆய்வுக்குரிய தரவுகள் இரண்டாம் நிலைத்தரவுகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதோடு, இவ் ஆய்வானது பகுப்பாய்வு முறையியல், ஒப்பீட்டு முறையியல், விமர்சன முறையியல் என்பவற்றின் துணைகொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திறவுச் சொற்கள்: ஆளுமை, ஆன்ம பலம், மனபலம், உடல் பலம், அறிவுசார் பலம்.

1. ஆய்வுச் சிக்கல்

ஒரு நிலையான அபிவிருத்தியை நாட்டில் ஏற்படுத்துவதற்குத் தனிநபர் ஆளுமை என்பது இன்றியமையாத ஒன்றாகும். இத்தகைய தனிநபர் ஆளுமையினை விருத்தி செய்வதற்கு ஆளுமை குறித்த சரியான புரிந்துகொள்ளல்கள் அவசியமாகின்றன. ஆனால் இன்றைய இயந்திரமயமான விஞ்ஞான தொழில்நுட்ப உலகில் உண்மையான ஆளுமை என்பது எவ்வாறிருக்க வேண்டும், அதனை எவ்வாறு விருத்தி செய்து கொள்வது? என்பது குறித்துப் பெரும்பாலும் தவறான புரிந்து கொள்ளல்களே காணப்படுகின்றன. இதன் விளைவாக ஒரு சமூகம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதோடு வன்முறைகளுக்கும் இலக்காகின்றது. அத்தோடு சமூகத்தில் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் ஆளுமை குறித்த சரியான விழிப்புணர்வின்மை ஆரோக்கியமான ஆளுமை கொண்ட எதிர்கால சந்ததியின் இருப்புக்கு பெரும் அச்சுறுத்தலாகும். இத்தகைய நிலைப்பாட்டிலிருந்து மீள்வதற்கும்,

ஆளுமை குறித்த சரியான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கும், ஒரு உறுதியான தனிமனித ஆளுமையினைக் கட்டமைத்துக் கொள்வதற்கும், அதன் வழி சமூகத்திலும், நாட்டிலும் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் விவேகானந்தருடைய ஆளுமை குறித்த சிந்தனைகள் சமகாலத்தில் எவ்வளவு பொருத்தப்பாடுடையனவாக உள்ளன என்பதே இவ் ஆய்வின் பிரச்சினையாகும்.

2. ஆய்வின் கருதுகோள்கள்

1. விவேகானந்தருடைய ஆளுமை குறித்த சிந்தனைகள் ஆளுமை என்பது குறித்த சரியான விழிப்புணர்வினை ஏற்படுத்தக்கூடியன.

2. ஒரு சமூகத்தில் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய சிறந்த ஆளுமையினை விருத்தி செய்வதற்கு விவேகானந்தருடைய சிந்தனைகள் வழிவகுக்கக்கூடியன.

3. உறுதியான ஆளுமையினை விருத்தி செய்வதற்கான விவேகானந்தரின் சிந்தனைகள் சமகால உலகில் மீள்வாசிப்புச் செய்யப்பட வேண்டியவை.

3. ஆய்வின் பின்னணியும் முக்கியத்துவமும்

சமகால இந்திய மெய்யியற் சிந்தனையாளர்களில் சுவாமி விவேகானந்தர் முதன்மை வாய்ந்தவராவார். அவர் தன்னுடைய ஆளுமை பற்றிய சிந்தனைகளால் இருளிலும், அறியாமையிலும், சிறுமையிலும், அடிமையிலும் அகப்பட்டு துன்பப்பட்டுக் கொண்டிருந்த பாரதத்தை எழுச்சி பெறச்செய்தார். தனிமனிதனது ஆன்மீக ஆற்றலும்,உள்ளத் துணிவும் எவ்வளவு பரந்ததும், ஆழமானதும் என்பதனை தன்னுடைய சிந்தனைகளாலும், வாழ்க்கையாலும் வெளிப்படுத்தி இந்திய தேசத்தின் விடிவெள்ளியாக பரிணமித்தவர். அவரது ஆளுமை குறித்த கருத்துக்களில் வேத, உபநிடதங்கள் ஆளுமை குறித்து வெளிப்படுத்திய உயர்ந்த எண்ணக்கருக்களும், கருத்தமைவுகளும் செல்வாக்குச் செலுத்தின. எனினும் பழமை என்னும் வேரை நிலத்தில் ஆழமாகவும், வலுவாகவும் ஊன்றிக் கொண்டு மேலெழுந்த புதுமை என்னும் கிளைகளைப் பரப்பி ஆளுமை விருத்தி பற்றிய தத்துவ மரத்தை தளிர்க்க வைத்தார். விவேகானந்தரது ஆளுமை பற்றிய சிந்தனைகள் உண்மையான ஆளுமை எவ்வாறிருத்தல் வேண்டும் என்பதனையும், அத்தகைய உண்மையான ஆளுமையினை விருத்தி செய்து கொள்வதன் வழியாக தனிநபர்களும், அதன் வழியாக சமூகம், நாடும் செழித்தோங்கும் என்பதனையும் வெளிப்படுத்தின. எனவே இத்தகைய பயன்மிக்க சிந்தனைகளை மீட்டெடுக்க வேண்டியது அவசியமாகின்றது. அவ்வாறு மீட்டெடுப்பதன் மூலம் ஆளுமை குறித்த சமகால நிலைமைகளுடன் அவற்றை பொருத்திப் பார்க்க முடியும். இதன் மூலம் பொருத்தமுடையதும், அவசியமானதுமான கருத்தாக்கங்களை மீள்வலியுறுத்த முடியும். மேலும் அவற்றின் இன்றைய தேவை என்ன? அவை சமகால உலகில் ஏற்புடையனவா? அல்லவா? என்பவற்றை ஆராய்ந்து வெளிப்படுத்துவதே இவ்ஆய்வின் முக்கியத்துவமாக அமைகின்றது.

4. ஆய்வுமுறையியலும், தரவு சேகரித்தலும்

ஙஇக்கட்டுரையானது பகுப்பாய்வு முறையியல், ஒப்பீட்டு முறையியல், விமர்சன முறையியல் என்பவற்றின் துணைகொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இக்கட்டுரையில் விவேகானந்தருடைய ஆளுமை குறித்த சிந்தனைகளையும், சமகால உலகின் நிலைப்பாடுகளையும் விரிவாக பகுப்பாய்வு செய்யும் வகையில் பகுப்பாய்வு முறையியலும், ஆளுமை குறித்த பல்வேறு அறிஞர்களது கருத்துக்களுடன் விவேகானந்தரது ஆளுமை குறித்த கருத்துக்களை ஒப்பிட்டு அதன் மேன்மைத் தன்மையினை எடுத்துக்காட்டும் வகையில் ஒப்பீட்டு முறையிலும் பயன்படுத்தப்பட்டு, அக்கருத்துக்கள் விமர்சன ரீதியாக ஆராயப்பட்டு விளக்கப்படவுள்ளன. இக்கட்டுரைக்குத் தேவையான தரவுகள் இரண்டாம் நிலைத்தரவுகளினூடாக பெறப்படுகின்றது. அதாவது விவேகானந்தரால் எழுதப்பட்ட நூல்களையும், விவேகானந்தரது ஆளுமை பற்றிய சிந்தனைகள் குறித்து விமர்சனரீதியாக எழுதப்பட்ட நூல்களையும், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளம் போன்றவற்றில் வெளியான கட்டுரைகளையும் ஆதாரமாக கொண்டு தரவுகள் பெறப்படுகின்றன.

5. ஆய்வுரை

5.1 அறிமுகம்

இந்திய சிந்தனை மரபு ஆளுமை விருத்தி குறித்து உயர்ந்த எண்ணக்கருக்களையும், கருத்தமைவுகளையும் வழங்குகின்றது. இந்தக் கருத்தமைவுகள் வேத உபநிடதங்களில் இருந்து விரிவாக்கம் செய்யப்பட்டவை. அந்தவகையில் விவேகானந்தருடைய கருத்துப்படி ஒரு ஆன்மாவினுடைய எல்லா சக்திகளும், சாத்தியப்பாடுகளும் உயிர் பெறுகின்றபோது ஆன்மீக வாழ்வு விழிப்படைகின்ற போது ஆளுமை விருத்தி ஏற்பட்டு முடிவில் மனிதன் தூய்மையானவனாகவும், பூரணமானவனாகவும் உருவாகின்றான். ஆளுமை என்பது ஒரு நபர் சிந்திக்கின்ற, உணர்கின்ற, நடந்து கொள்ளுகின்ற வழிகளை வெளிப்படுத்தி நிற்கின்ற ஒன்றாகும். ஒரு தாவரம் மண்ணுக்குள் புதையுண்டு மறைந்திருக்கின்ற விதையிலிருந்து தோன்றுகின்றது. ஆனால் அந்த விதையின்றி அந்தத் தாவரம் தோன்ற முடியாது. அது போன்றே விதைகள் போன்று மனதில் மறைந்திருக்கின்ற சிந்தனைகளில் இருந்தே ஒவ்வொரு நடத்தைகளும் தோன்றுகின்றன. அந்த சிந்தனைகளை விடுத்து மனிதனது சிந்தனைகள் அணுகப்பட முடியாதவை. ஒருவருடைய கடந்தகால சிந்தனைகளும், செயற்பாடுகளும் அவருடைய நிகழ்காலத்தை தீர்மானிக்கின்றன. இந்த நிகழ்கால சிந்தனைகளும், செயற்பாடுகளும் எதிர்காலத்தை தீர்மானிக்கின்றன. இந்த விதியே சுவாமி விவேகானந்தருடைய கருத்துப்படி ஆளுமை விருத்தியினை ஆளுகின்ற விதியாகும்.

சுயம் பற்றிய பிரச்சினைகள், ஆன்மா, மனித இயல்பு, மனித இருப்பு மற்றும் அவை யாவை? என்ன பொருள்படுகின்றன? அவை எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றன? போன்ற விடயங்கள் பற்றிய மனித அனுபவமும் மனித வாழ்வில் வெளிப்படுவதோடு அவை ஆளுமை விருத்தியிலும் செல்வாக்குச் செலுத்துவதனை பாரம்பரிய இந்திய தத்துவமரபு விளக்கி நிற்கின்றது. இத்தத்துவமரபு விவேகானந்தரது ஆளுமை விருத்தி பற்றிய சிந்தனைகளிலும் பெரிதும் செல்வாக்குச் செலுத்தின. சிக்மண்ட் புறொய்ட் பாலியல் உந்தல்களையும், காள் யுங் தொன்மங்களையும், எரிக் எரிக்சன் சமூகத்தினையும் ஒருவரது

ஆளுமையினைத் தீர்மானிக்கின்ற ஊக்கிகளாகக் குறிப்பிடுகின்றார். சுவாமி விவேகானந்தர் இவை யாவற்றிலும் இருந்து வேறுபட்டு இந்திய மரபிற்கே உரிய தனித்துவமான பாணியில் ஒருவரது ஆளுமையினைத் தீர்மானிப்பது ஆன்மீக பலமே என்பதனை வலியுறுத்தினார். மனித வாழ்வு என்பது சாதாரணமாக மனம், உடல் ஆகியவற்றின் இணைவு மாத்திரமல்ல என்பது விவேகானந்தரது நம்பிக்கையாக இருந்தது. அதற்கும் மேலாக பல விடயங்கள் மனித வாழ்வில் இணைந்திருப்பதாக அவர் கருதினார். வேதாந்த மெய்யியலின் பிரகாரம் மனித வாழ்வு பின்வரும் ஐந்து வகையான கூறுகளால் ஆனது.

1. உடல் பலம்
2. உயிர் பலம்
3. மன பலம்.
4. அறிவுசார் பலம்
5. ஆன்மீக பலம்

இத்தகைய வேதாந்த கருத்தாக்கத்தின் அடிப்படையில் ஒருவரது ஆளுமையைத் தீர்மானிப்பதில் உடல் பலம், உயிர் பலம், மனபலம், அறிவு பலம், ஆன்மீக பலம் எனும் ஐந்து கூறுகள் செல்வாக்குச் செலுத்துவதாகக் குறிப்பிடும் விவேகானந்தர் ஆன்மீக பலமே அனைத்தையும் தீர்மானிப்பதாகக் குறிப்பிடுகின்றார். அத்தகைய ஆன்ம பலத்தை இந்திய மக்களுக்கு எடுத்தருளினார். நமக்கு, நாம் எத்தகைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என பிறர் வழிகாட்டுவது அவசியமில்லை. உள்வலிமை படைத்து வளர்ந்து வருகின்ற ஒரு மரம் தன் இயல்பையும், தன் வலிமையையும் தானே விளக்குவது போல நாமும் நமது தெய்வீக ஆற்றலையும், இயல்பையும் எவரது உதவியும் இன்றி ஓங்கச் செய்ய வேண்டும் என்கின்றார். ஒவ்வொருவரது சிந்தனைகளும், செயல்களுமே அவர்களது நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் தீர்மானிக்கின்றது என்பதனை எடுத்துக் காட்டினார். சிறந்த ஆளுமை மிக்க நபர்களை உருவாக்குவதன் மூலம் சிறந்த ஆளுமை மிக்க சமூகத்தினதும், நாட்டினதும் உருவாக்கத்திற்கு வழிவகுத்தார்.

5.2 உடல் பலமும் ஆளுமை விருத்தியும்

மனித உடல் இறைவன் தந்த அரிதான பரிசு. சிறந்த உடல்நலம் மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கும், வெற்றிகரமான வாழ்வுக்கும் ஆதாரமாகும். உடலும் மனமும் ஒன்றுக்கொன்று மிக நெருக்கமான தொடர்புடையவை. உடல் நலக்குறைவு மனக் கவலைகளையும், மன அழுத்தங்களையும் ஏற்படுத்துவதோடு வாழ்வில் அடைய வேண்டிய இலக்கினைத் தடைசெய்வதாகவும் அமைகின்றது. இதனையே சுவாமி விவேகானந்தர் எமது வாழ்வில் ஏற்படுகின்ற பெரும்பாலான துன்பங்களுக்கு எமது உடல் பலவீனமே காரணம் எனக் குறிப்பிட்டார். மேலும் அது குறித்துக் குறிப்பிடும் பொழுது "தன்னடக்கம் உள்ள வாழ்க்கையினால் அனைத்து விடயங்களையும் மிகக் குறுகிய காலத்தில் கற்றுக் கொள்ள முடியும்." எனவே சத்துள்ள உனவு, ஒழுங்கு முறையான உடற்பயிற்சி, நல்ல பழக்க வழக்கங்கள், சுய கட்டுப்பாடு என்பன ஆளுமையின் ஒரு பகுதியான உடல் நலத்தை விருத்தி செய்ய உதவுகின்றன. இதனையே விவேகானந்தரது பொன்மொழிகள் நமக்கு வெளிப்படுத்தி

நிற்கின்றன. "சுய வலிமை பெற்ற வீரர்களாக எழுந்து நில்லுங்கள்! நீ வலிமை நிறைந்த ஒரு களஞ்சியமாக உன்னை உருவாக்கிக் கொள்" என்கின்றார். விவேகானந்தருடைய கருத்துப்படி உடல் பலவீனமே நோய் உண்டாவதற்கு முக்கிய காரணமாகும். நம்முடைய உடல் பலவீனப்பட்டு வெளியிலிருந்து வரும் நோய்க் கிருமியை எதிர்க்க முடியாத பலக்குறைவான நிலையில் இருந்தாலன்றி எந்த நோய்க் கிருமிக்கும் நம் உடலில் நோயை உண்டாக்க கூடிய சக்தி கிடையாது. அதுபோல நாட்டின் தேசிய வாழ்க்கை பலவீனமாகும் போது அரச, சமூக, கல்வித் துறைகளில் ஏற்படும் குறைகள் சமுதாயத்தில் நுழைந்து பாதிக்க ஆரம்பிக்கின்றன என விளக்கினார்.

5.3 உயிர் பலமும் ஆளுமை விருத்தியும்

உயிர் பலம் குறித்த அவருடைய சிந்தனைகளும் ஆளுமை விருத்தி குறித்த சிந்தனைகளில் செல்வாக்குச் செலுத்தின. மனிதன் ஒரு ஆன்மா; அதற்கென ஓர் உடல் உண்டு என்பதே விவேகானந்தரின் கருத்தாகும். மனிதன் ஓர் உடல்; அதற்குள் அதனை இயக்க உயிர் உண்டு என்பது மேலைநாட்டுக் கருத்து. அழிவில்லாத ஆன்மா பேரான்மா எனப்படும் இறைவனின் ஒரு சிறு பகுதியே ஆகும். அதில் நிறவேறுபாடோ, மொழி வேறுபாடோ, இன வேறுபாடோ இல்லை என்பதே விவேகானந்தரின் கருத்தாகும். ஆன்மாவாகிய உயிரை நீர் நனைக்காது, ஆயுதம் வெட்டாது, நெருப்பு சுட்டெரிக்காது. இந்த ஆன்மாவுக்கு பிறப்பு இறப்பு இல்லை அது நித்தியமானது. இத்தகைய ஆன்மாவே எமது நியமான சொரூபத்தை உள்ளவாறே ஊட்டுவது. இத்தகைய ஆன்மாவின் சக்தி ஓங்கும் பொழுது நம்முள் புதைந்து கிடக்கும் பேராற்றல்கள் வெளிக்கிளம்பிவிடும். அதனைப் பயன்படுத்தி பெருவாழ்வை நமக்கு நாமே உண்டாக்கிக் கொள்ளலாம். அதாவது ஆன்மா ஆரம்பமும் முடிவும் அற்றது. சர்வ சக்தியும், தூய்மையும் ஞானமும் ஒவ்வொரு ஆன்மாவிலும் புதைந்திருக்கின்றது. ஒவ்வொரு மனித அல்லது மிருகத்தின் உள்ளத்திலும் அவர்கள் எவ்வளவு தாழ்ந்து பலவீனமாக இருந்த பொழுதிலும் அதே மகத்தான சர்வ வல்லமை பொருந்திய ஆன்மா குடிகொண்டிருக்கின்றது. நமக்குள் இருக்கும் வித்தியாசத்திற்குக் காரணம் ஆன்மாவின் வித்தியாசம் அல்ல. ஆன்மாவின் சக்தியை வெளிப்படுத்துவதிலுள்ள வித்தியாசம் தான். இது குறித்து விவேகானந்தர் குறிப்பிடும் பொழுது "எனக்கும் மிகச் சிறிய பிராணிக்கும் உள்ள வித்தியாசம் ஆன்மாவின் சக்தியை வெளிப்படுத்துவதிலுள்ள வித்தியாசம் தான்" என்கின்றார். எனவே மனிதர்களிடையே காணப்படுகின்ற ஆளுமை வேறுபாட்டிற்கு அவர்களது ஆன்மாவின் சக்தியை வெளிப்படுத்துவதிலுள்ள வேறுபாடுதான் காரணமாக அமைகின்றது.

5.4 மன பலமும் ஆளுமை விருத்தியும்

அடுத்து ஒரு சிறந்த ஆளுமை உள்ள மனிதனை உருவாக்குவதற்கு மனபலமும் முதன்மையானதாக உள்ளது என்பது விவேகானந்தரது கருத்தாகும். அவரது கருத்தில் உடல் பலத்தை விட மனபலம் முதன்மையானதாகக் காணப்படுகின்றது. மனம் என்பது எண்ணங்களின் களஞ்சியம். எதிர்மறையானதும், தீயதுமான எண்ணங்கள் பலவீனமாக மனிதனை உருவாக்குகின்றன. பலவீனமானதும், கட்டுப்பாடற்றதுமான மனம் எப்பொழுதும் துன்பங்களை விளைவிப்பதோடு அழிவுகளையும் ஏற்படுத்துகின்றது. தோல்விகளையும்,

வீழ்ச்சிகளையும் மாத்திரமே சிந்திக்கின்ற மனம் எதிர்மறையான எண்ணங்களையே உருவாக்குகின்றன. இத்தகைய பலவீனங்களில் இருந்து மீண்டெழுவதற்கு விவேகானந்தரது சிந்தனைத் துளிகள் உதவுவதாக உள்ளன. விவேகானந்தர் "பலவீனத்திற்குத் தீர்வு பலவீனம் குறித்து சிந்திப்பதல்ல மாறாக பலம் குறித்து சிந்திப்பதே" என்கின்றார். மனதினுடைய முக்கியமான செயற்பாடுகளான உணர்ச்சிகள் ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஒருவர் தனது உணர்ச்சிகள் மீது கட்டுப்பாடுடையவராக இருத்தல் வேண்டும். அது அவரை மகிழ்ச்சியானதும் ஆரோக்கியமானதுமான ஆளுமை உடையவராக உருவாக்கும். உணர்ச்சிகள் பிரதானமாக இருவகைப்படும்.

1. விரும்பத்தக்கவை.
2. வெறுக்கத்தக்கவை.

மரியாதை, அன்பு, நம்பிக்கை, சந்தோசம், இரக்கம், திருப்தி, கௌரவம் போன்ற உணர்ச்சிகள் விரும்பத்தக்கவைகளாகும். மாறாக கோபம், துன்புறுத்துதல், பயம், பொறாமை, அதிருப்தி, வெட்கம் போன்ற உணர்ச்சிகள் வெறுக்கத்தக்கவைகளாகும். ஒரு நபர் கட்டுப்படுத்த முடியாத மனநிலைகளோடு ஒன்றியவராக இருந்தால் அவருடைய ஆளுமை விருத்தியடையாது. எனவே ஒருவர் தன்னுடைய ஆளுமையினை விருத்தி செய்து கொள்வதற்கு உணர்ச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பதனை அறிந்திருத்தல் வேண்டும். அது மனதின் குறுகிய எல்லைகளில் இருந்து உயர்ந்த சுயத்தை உருவாக்கிக் கொள்ள வழிவகுக்கும். இத்தகைய மன பலத்தினை உருவாக்கிக் கொள்வதற்குரிய சிறந்த மார்க்கமாக விவேகானந்தர் தியானத்தினை எடுத்துரைக்கின்றார். "தியானம் நமக்கு எந்த வன்மையையும் தரும்" என்றார்.

விவேகானந்தர் யாழ் இந்துக் கல்லூரியில் ஆற்றிய உரையில் மனதின் சக்தி குறித்துக் குறிப்பிடும் பொழுது "நாம் நினைத்தபடி ஆகின்றோம். உங்களைப் பலவீனர்கள் என்று நீங்கள் நினைத்தால் பலவீனர்களாவீர்கள். பலமுள்ளவர்களென்று நினைத்தால் பலமுள்ளவர்களாவீர்கள். தாழ்ந்தவர்களென்று நினைத்தால் தாழ்ந்தவர் என்று நினைத்தால் தாழ்ந்தவர்களாவீர்கள். பரிசுத்தவான்களென்று நினைத்தால் பரிசுத்தவான்களாவீர்கள். உங்கள் பிள்ளைகளைக் குழந்தைப் பருவத்திலிருந்து தைரியம் கொடுக்கக்கூடிய எண்ணங்களை ஊட்டி வளர்த்து வாருங்கள். பலவீனமாக்குகின்ற கருத்துக்களையும் வழிபாடுகளையும் அவர்களுக்குக் கற்பிக்காதீர்கள். அவர்களைப் பலமுள்ளவர்களாக மாற்றுங்கள். அவர்கள் தன்னம்பிக்கையுடன் ஆண்மையுள்ளவர்களாய் எதையும் ஜயிக்கவும் எதையும் சகிக்கவும் கூடியவர்களாய் இருக்கட்டும்" என்றார். மேலும் அவர் குறிப்பிடுகையில் எல்லா சக்திகளும் எமக்குள்ளேயே உள்ளன என்றும், எம்மால் எந்தவொன்றையும் செய்யமுடியும் எனவும் குறிப்பிடுகின்றார். இதனை வலியுறுத்தும் வகையில் "நாம் அனைவரும் இறைவனின் குழந்தைகள் என்றும், எதையும் செய்யக்கூடிய ஆற்றல் எம்மிடம் இருக்கின்றது" எனவும் குறிப்பிட்டார். நேர்நிலையான சிந்தனைகள், நல்ல நூல்களை வாசிக்கும் பழக்கம், தியானம் செய்தல் என்பவற்றின் மூலம் ஆளுமையின் ஒரு பகுதியான மன பலத்தினை உருவாக்கிக் கொள்ள முடியும்.

5.5 அறிவுசார் பலமும் ஆளுமை விருத்தியும்.

அறிவுசார் பலமானது உடல்பலம், உளபலம் ஆகியவற்றை விட மேலானதாக மதிப்பிடப்படுகின்றது. அத்தோடு ஆளுமையில் அது ஓர் பிரதான பங்கினை வகிக்கின்றது. ஒவ்வொரு மனிதனுள்ளும் அறிவு சார்ந்த பகுதி காணப்படுகின்றது. ஆனால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சரியான அல்லது முறையான அறிவுசார் பயிற்சி இல்லாமையினால் அது செயற்திறன் அற்ற பகுதியாகவே காணப்படுகின்றது. அறிவு ஒன்றுதான் மனிதனை முழுமையாக்கும். ஆனால் அது இன்னொருவர் கூறிய எல்லைக்குள் தன்னாய்வை நீத்து நின்றுவிடுவதில்லை. “அறிவு வலிமையுடையது. அற்றம் காக்கும் கருவி. புத்தியே சகல சக்தியும். அதனைப் பயன்படுத்தும் வழிகள் பற்றியே இடர்கள் தோன்றுகின்றன. வெற்று நூலறிவு உள்நூலைக் காட்டாதவரை பயனற்றதே. உள்ளுணர்வுக் பார்வை வலிமையுடையவனுக்கே வரும். அந்த வலிமை அறிவினால் மட்டுமே விளையும். மேலும் மனிதனுள் ஏற்கனவே புதைந்து கிடக்கும் முழு நிறைவை வெளிக்கொணர்வதே கல்வி” என விவேகானந்தர் ஆளுமையில் அறிவின் வகிபங்கினை விளக்குகின்றார். இயற்கையிலேயே அறிவு எல்லோர்க்கும் உள்ளது. அதனைப் பயன்படுத்திப் பகுத்தறிய வேண்டும். அதையும் தாண்டி உள்ளுணர்ச்சி பெற்று புதைந்துள்ள முழுநிறைவைக் காணவேண்டும். அத்தகைய மெய்யான அறிவை ஒருவன் பெற்றுவிட்டால் அவனுக்கென்று ஒன்றாகக் காணல், தன்னல மறுப்பு, பிறரைத் தூற்றாமை, மற்றோர்க்கும் அருளல் போன்ற சில நற்பண்புகள் தாமாக வந்து அமைந்துவிடும் என்கின்றார்.

இன்றைய காலகட்டத்தில் மனிதன் தொழில்நுட்பத்தின் மிதமிஞ்சிய பயன்பாடு காரணமாக இயந்திரங்களில் தங்கியிருக்கும் நிலைக்கு மாற்றப்பட்டுள்ளான். கணனிகளே அனைத்தையும் சேமித்து வைத்துக் கொள்கின்றன. மாறாக மனிதனுடைய ஞாபக சக்தியும் சிந்தனைத் திறனும் விருத்தியடையாமலே பேணப்படுகின்றது. உண்மைத் தன்மை, படைப்புத் திறன், ஆழ்ந்த சிந்தனை யாவும் மனித இனத்திலிருந்து விடுபட்டுக் கொள்கின்றது. செயற்கையானதும், போலச்செய்வதும், மேலெழுந்தவாரியானதும், ஆழமற்றதுமான சிந்தனைகள் எங்கும் தமது இடத்தினை நிறைத்துக் கொள்கின்றன. இத்தகைய வாழ்க்கை முறைகள் இலகுவான வாழ்க்கை முறைகளை எமக்குத் தருவதாக இருக்கலாம். ஆனால் இவை சரியான வாழ்க்கைப் பாதையினை மாற்றி பிழையானவற்றைச் செய்கின்ற பாதையினை உருவாக்கிவிடக்கூடும். இதனால் அறிவு பலத்தினை சரியான வகையில் விருத்தி செய்து கொள்ள வேண்டும். மனதிலுள்ள தீய எண்ணங்களை அழிப்பதற்கும் சரியான பாதையினைப் பின்பற்றுவதற்கும் அது மிகமிக இன்றியமையாததாகும். எனவே பலமான தீர்மானமான அறிவினை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

5.6 ஆன்மீக பலமும் ஆளுமை விருத்தியும்

விவேகானந்தரது கருத்துப்படி உடல்பலம், உயிர்பலம், உளபலம், அறிவுசார் பலம் ஆகியவற்றுக்கு மேலாக ஆன்மீக பலம் விளங்குகின்றது. அவரது கருத்துப்படி நிலையற்ற இந்த உடலில் அழிவற்ற நிலையான தூய அறிவு நிலையின் இயல்புடைய மகிழ்வான அமைதியான மிகப் பெரிய சக்தியுடைய, அறிவுடைய ஏதோ ஒன்று இருப்பதாகக் நம்பினார்.

அத்தகைய ஒன்று பிறப்பு, முதிர்வு, இறப்பு போன்ற மாற்றங்களுக்கு உள்ளாவதில்லை. அது அன்பு, இரக்கம், சேவை, தூய்மை, உண்மைத் தன்மை, பயமற்ற நிலை போன்ற அனைத்துத் தெய்வீக இயல்புகளையும் பரவலடையச் செய்கின்றது. இதனை பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பகவத் கீதையில் "அனைத்து உடல் உறுப்புக்களும் முழுமையான உடல் மேலானது; உடலுக்கு மனம் மேலானது; மனதிற்கு அறிவு மேலானது; எவ்வாறிருப்பினும் அறிவிற்கும், உடல் உளம் ஆகியவற்றும் மேலானது நம்முள் உள்ளுறையும் ஆன்மீகம்" எனக் குறிப்பிட்டார். ஆன்மீக வாழ்வே தனிமனிதனும், தேசத்தினதும் உயிர் சக்தி அது சரியாக இருந்தால் மற்றெல்லாம் நன்றாக நடைபெற்றுவரும் என விவேகானந்தர் எடுத்துரைத்தார். கடவுள் வழிபாடு நம்மை அளவற்ற சக்தியுள்ளவர்கள் என்று நினைக்கச் செய்கின்றது. அச் சக்தியை நாம் வெளிப்படுத்தாமல் இருக்கலாம் எனினும், அது எம்முள்ளே இருக்கிறது. சர்வ ஞானமும், சக்தியும், தூய்மையும், சுயேச்சையும் எம்முள்ளே இருக்கின்றன. நாம் ஏன் அதை வெளிப்படுத்த முடிவதில்லை? அதைச் சரியாக நம்பாததால். அதை நிச்சயமாக நம்பினால் அது வெளிப்பட்டே தீரும். கடவுள் வழிபாடு நமக்கு இந்த ஞானத்தை அளிக்கின்றது.

இத்தகைய தெய்வீகத் தன்மை வாய்ந்த ஆன்மீகம் எமது இதயத்தினுள் உள்ளுறைகின்றது. ஆனால் அது பற்றிய விழிப்புணர்வு எமக்கு இருப்பதில்லை. இத்தகைய தெய்வீக இயல்பினை விருத்தி செய்து கொள்வதற்கு நான்கு வேறுபட்ட மார்க்கங்கள் உதவுவதாக உள்ளன. அவையாவன

1. பக்தி யோகம்
2. ஞான யோகம்
3. கர்ம யோகம்
4. இராஜ யோகம்

இந்த நான்கு வகையான மார்க்கங்களைப் பயில்வதன் மூலம் எம்முள் உறையும் தெய்வீகத்தை விருத்தி செய்து கொள்வது தனிமனித ஆளுமை விருத்திக்கு உதவுவதோடு, சமூக நலனுக்கும் வித்திடுவதாக அமையும்.

5.7 ஆளுமை குறித்த சிந்தனைகளும் விவேகானந்தரும்

சிக்மண்ட் புறொய்ட் ஆளுமை குறித்துக் குறிப்பிடுகின்றபொழுது அவர் மனித மனம் குறித்த புரிந்துகொள்ளல்களின் அடிப்படையில் விளக்குகின்றார். புறொய்ட் மனதினை நனவு மனம், முன்னனவு மனம், நனவில் மனம் என வகைப்படுத்துகின்றார். இதில் அவர் நனவிலி மனதிற்கு அதிக முதன்மை கொடுத்தார். நனவில் மனம் என்பது விழிப்பு நிலைக்கு அப்பாற்பட்ட நனவு நிலைக்குக் கொண்டுவர முடியாத மனதின் கூறுகளாகும். பயங்கள், ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஆசைகள், சுயநலத் தேவைகள், வெட்கப்படத் தகுந்த அனுபவங்கள், சிறுபராயத்தில் நிறைவேறாத ஆசைகள், அடக்கப்பட்ட உணர்வுகள், பாலியல் இச்சைகள் போன்ற பல்வேறு விடயங்கள் இந்த நனவிலி மனதில் புதைந்திருக்கும். இத்தகைய நனவிலி மனதின் செயற்பாடுகளே ஒருவருடைய ஆளுமையைத் தீர்மானிக்கின்றன என்கின்றார். மாறாக விவேகானந்தர் மனித மனதில் அதி அற்புதமான தெய்வீக ஆற்றல் புதைந்திருக்கின்றது என்றும், அதனைக் கண்டு உணர்ந்து கொள்ள முடியாமையினாலேயே

ஒருவருடைய ஆளுமையில் பின்னடைவு ஏற்படுவதாகவும், அதனைக் உணர்ந்து கொள்ளும் பொழுது ஒருவர் ஆளுமை மிக்கவராகத் திகழ முடியும் எனவும் குறிப்பிடுகின்றார். புறொய்ட் ஆளுமை அடிப்படையில் மனதினை ஐனஇ நுபழஇ ளுரிநச நுபழ என மூன்று வகைப்படுத்தினார். ஐன என்பது மனதின் பண்படா சக்தி எனவும், ளுரிநச நுபழ என்பது உயர்ந்த விழுமியங்கள், தெய்வீகம், ஆன்மிகம், மனச்சாட்சி, ஒழுக்கம் என்பவற்றோடு இணைந்த ஆன்மிகப் பகுதி எனவும், நுபழ என்பது இவை இரண்டையும் சமநிலைப்படுத்தும் மனதின் பகுதி எனவும் குறிப்பிடுகின்றார். விவேகானந்தர் மனதினை ஆன்மிகத் தன்மை உடையதாகவே கண்டுகொண்டு அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்.

மேலும், விவேகானந்தரது கருத்துப்படி மனம் மாத்திரம் ஒருவரது ஆளுமையைத் தீர்மானிப்பதில்லை எனவும், உடல்பலம், உயிர்பலம், மனபலம், அறிவுபலம், ஆன்மிக பலம் என்பவற்றின் சேர்க்கையே ஒருவரது ஆளுமையினை முழுமைப்படுத்துகின்றது எனவும் குறிப்பிட்டதோடு இந்திய தத்துவ மரபிற்கே உரிய பாணியில் ஆன்மிக பலத்திற்கு அதிக முக்கியத்தவம் கொடுத்தார். மேலும் காள்யுங் எமது ஆளுமை தொன்மங்களால் தீர்மானிக்கப்படுகின்றது என்றார். அதாவது எமது முன்னோர்களிடம் இருந்து ஆளுமைக்கூறுகள் கடத்தப்பட்டு எமது ஆளுமை தீர்மானிக்கப்படுகின்றது என்றார். மேலும் எரிக்சன் எமது ஆளுமை எம்மைச் சூழ அமைந்துள்ள சமூகத்தினால் தீர்மானிக்கப்படுவதாக குறிப்பிடுகின்றார். இவர்களது கருத்துப்படி சிறந்த ஆளுமையினை உருவாக்கிக் கொள்வதென்பது குறித்த தனிமனிதனில் மாத்திரம் தங்கியிருப்பதில்லை. ஆனால் இத்தகைய கருத்துக்களில் இருந்து வேறுபட்டு ஒருவனது ஆளுமை அவனுள் உள்ளுறையும் ஆன்மீக பலத்தில் தங்கியிருப்பதாக விவேகானந்தர் குறிப்பிடுகின்றார். இக்கருத்தின் படி ஒரு சிறந்த ஆளுமை ஒருவன் தன் ஆன்மீக பலத்தின் வழி கட்டமைத்துக் கொள்ளக்கூடிய ஒன்றாகின்றது.

6. முடிவுரையும் பரிந்துரைகளும்

தொகுத்து நோக்குகின்ற பொழுது உடல், உயிர், உளம், அறிவு, ஆன்மீகம் போன்ற அனைத்து வகையான பலங்களையும் உருவாக்கிக் கொள்வது பல்துறை சார்ந்த ஆளுமை விருத்திக்கு அத்தியாவசியமானதாகும். அதாவது இவை அனைத்தையும் நிறைவானதாக ஆக்கிக் கொள்ளும் முயற்சி ஓர் உண்மையான ஆளுமை மிக்க நபரை உருவாக்க வல்லதாகும். சிறந்த ஆளுமை மிக்க நபர்களை அதிகளவில் கொண்டிருப்பது ஓர் சிறந்த சமூகத்தை உருவாக்கும். அதுவே சிறப்பும், வாய்ந்த நாட்டினை உருவாக்குகின்றது. தற்காலத்தில் ஆளுமை என்பது சரியாகப் புரிந்துகொள்ளப்படாத வகையில், உடல், உடை, அலங்காரங்களால் ஆளுமை வெளிப்படுவதாக கருதப்படுகின்ற நிலையில் அத்தகைய உண்மைத் தன்மையற்ற, வெளிப்பகட்டான ஆளுமையினால் தனிநபர்களும், சமூகமும் பின்தள்ளப்படுவதனை தவிர்க்க, உண்மையான ஆளுமை குறித்த விவேகானந்தரது சிந்தனைகள் முதன்மை கொடுத்து நோக்கப்பட வேண்டியவை. சிறந்த ஆளுமையினை வளர்த்துக் கொள்வதற்கு வழிகாட்டுகின்ற சிந்தனைகளாக அவை முன்மொழியப்பட வேண்டும். அதன் மூலம் தனிநபர்கள் தமது ஆளுமையினை சீரிய முறையில் வளர்த்துக்கொள்ள முடிவதோடு சமூகமும், நாடும் சிறப்பான முறையில் முன்னேற்றமடையும். இவ்வாறான

உறுதியான ஆளுமையினை விருத்தி செய்வதற்கான சிந்தனைகள் இன்றைய உலகில் நிச்சயமாக மீள் வாசிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டியன. ஆளுமை உடல், உடை, அலங்காரங்களால் வெளிப்படுத்தப்படுவதாக தவறாக கருதப்படுகின்ற நிலையில் சமூகத்தின் கல்வி, கலை, சலாசார, பண்பாடு, பொருளாதாரம் போன்ற அனைத்தும் பின்னடைவினை எதிர்கொள்கின்றன. அதிலிருந்து மீண்டெழுவதற்கு உறுதியான ஆளுமையினை ஏற்படுத்த வல்ல விவேகானந்தரது சிந்தனைகள், பொன்மொழிகள் பெரிதும் உதவுவதாக உள்ளன.

உசாத்துணை நூல்கள்

- Akbar, 2012, ***What is real personality by Swami Vivekananda***
- http://wingswebsolutions.in/health-care/what-is-real-personality-by-swami-vivekananda/
- Avinashalingam, T.S, 1974 ***Educational philosophy of Swami Vivekananda***, Coimbatore: Sri Ramakrishna Mission Vidyalaya.
- Burke M.L., 1984, ***Swami Vivekananda in the West: new discoveries***, 6 vols. Calcutta: Advaita Ashrama
- Hossain M., 1980, ***Swami Vivekananda's philosophy of education***, Calcutta: Ratna Prakashan
- homepage.psy.utexas.edu - ***Psychoanalytic Theory of Personality*** homepage.psy.utexas.edu/homepage/class/Psy301/.../301lecture.ppt
- Maheshwari V.K., 2011, ***Vivekananda - Concept of Personality***, India
- http://www.vkmaheshwari.com/WP/?p=114
- Sheeba Sreenivasan, 2009, ***Personality Development According to Swami Vivekananda***
- http://voices.yahoo.com/personality-development-according-swami-vivekananda 4170203.html?cat=7
- Toyne M., (1983) ***Involved in mankind: the life and message of Vivekananda***, Bourne End, United
- அவினாசிலிங்கம்.தி.சு (1949) ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் அருளிய இந்தியப் பிரசங்கங்கள், சென்னை; ஸ்ரீராமகிருஷ்ண மடம்.
- இ.எஸ்.டி, ஞானன்.செ (1999) தத்துவ தரிசனங்கள், சென்னை; மணிவாசகர் பதிப்பகம்.
- சித்பவானந்தர் (1984) விவேகானந்த விபரணம், திருச்சி; ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம்.
- …, 1997, சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயம், பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்.
- …, 1963, சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம் சுடர் 7, சென்னை; ஸ்ரீராமகிருஷ்ண மடம்.

மதிப்பிடப்பெற்றது

கிராமியக்கலைகளின் மறைவினால் இன்றைய சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

In present society to the problems faced by the disappearance village art

ஜீ.பால்ராஜ் B.A.(Hons)
தற்காலிக விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
0754263201, jevakumarpalraj@gmail.com

Abstract: The Folk arts in early period had a major role in disseminating good relations between people and helped to live in humanitarian manner. Since those arts are rare nowadays, this Research aims to study the Ethical problems which have arisen in the society due to reducing those arts. This research uses historical, descriptive analysis and comparative approaches.

Keywords: disappearance, village art, நாட்டுப்புறப் பாடல், நாட்டுப்புறக் கதைகள், நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்

ஆரம்பகாலங்களில் பின்பற்றப்பட்டு வந்த கிராமியக்கலைகள் மக்களிடத்தில் நல்லெண்ணங்களை வளர்த்தன. மனிதன் சமூகத்தில் மனிதனாக வாழ வழிசமைத்துக் கொடுத்தன. ஆனால் தற்காலங்களில் கிராமியக்கலைகள் அருகி வருகின்றமையால் தனிமனித ஒழுக்கம் கெட்டுச் சமுதாயத்தில் எத்தகைய பிரச்சினைகள் எழுந்துள்ளன என்பதை ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாய்வுக் கட்டுரையானது வரலாற்று ஆய்வு, விவரணப் பகுப்பாய்வு, ஒப்பீட்டு ஆய்வு ஆகிய ஆய்வுமுறைகளின் ஊடாகப் பார்க்கப்படுகின்றது.

ஆய்வு அறிமுகம்

குறித்த ஒரு சமூகம் அல்லது இனம் காலங்காலமாகப் பின்பற்றி வருகின்ற நம்பிக்கை, அறிவு, சட்டம், வழக்காறு முதலியனவும் அச்சமூகத்தில் இருந்து ஒருவன் கற்றுக்கொள்ளுகின்ற இன்ன பிறவும் பண்பாடு எனப்படும். பண்பாட்டின் தலையாய அம்சம்தான் கலையாகும். ஒரு கிராம மக்களது வாழ்வியல் கூறுகளையும், அவர்களது பழக்கவழக்கங்களையும் படம்பிடித்துக் காட்டுவன அவர்களது கிராமியக் கலைகளாகும்.

அதாவது ஒரு நாட்டு மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கம், வரலாறு போன்ற நாட்டு நடப்புக்களை உண்மையான முறையில் படம் பிடித்துக் காட்டுவன நாட்டுப்புற மக்களின் மரபு வழிப்பட்ட கலைகள் ஆகும். இவை சமுதாய வளர்ச்சியைக் காட்டும் கண்ணாடி எனலாம்.

நாட்டுப்புறப் பாடல், நாட்டுப்புறக்கதைகள், நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், நாட்டுப்புறக் கைவினைப் பொருட்கள், நாட்டுப்புற விளையாட்டுக்கள், நாட்டுப்புற மருத்துவம், நாட்டுப்புற நம்பிக்கைகள், பழக்கவழக்கம், சடங்கு, நாட்டுப்புற நடனம் முதலானவை கிராமியக் கலைகளாகும்.

இத்தகைய கிராமியக்கலைகள் இன்று மறைந்துகொண்டே வருகின்றன. காரணம் உலகமயமாக்களின்கீழ் மக்கள் நவீனத்துவத்தை விரும்பிச் செல்கின்றமையால் இக்கலைவடிவங்களை விரும்புகின்றவர்கள் சமூகத்தில் குறைவாகவே காணப்படுகின்றனர். சிறந்த வாழ்வியல் சிந்தனைகளைத் தரும் கிராமியக் கலைவடிவங்களை அவர்கள் மறந்து விடுகின்றனர். இத்தகைய நிலையும் இன்று சமூகத்தில் பாரிய பிரச்சினைகள் எழக் காரணமாக அமைந்துள்ளது என்பதனை விளக்குவதாகவே இந்த ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

கிராமியக் கலைகளின் மறைவினால் இன்றைய சமூகம் ஏதிர்நோக்கும் பிரச்சினைகள்

மனிதனுடைய மனதினைப் பண்படுத்தி வையத்துள் வாழ்வாங்கு வாழக்கூடியவாறு அந்த மனிதனைச் சிறந்த மனிதனாக உருவாக்கிச் சமூகத்திற்குப் பரிசளிப்பதில் கிராமியக்கலைகளின் வகிபங்கு மிகவும் முக்கியமானது. ஆரம்பகாலங்களில் கிராமத்தவர்கள் மட்டுமல்லாது எல்லா மக்களும் இக்கலைவடிவங்களை ஒன்றாகக் கூடி இரசித்து மகிழ்ந்தார்கள். இதனால் சாதி, மத, இன வேறுபாடு இல்லாது ஒழிந்து ஒற்றுமையுணர்வு ஊட்டப்பட்டு நல்லெண்ணங்கள் வளர்க்கப்படும். ஆனால் தற்காலங்களில் மக்கள் மனதைக் கவர்ந்துள்ள நவீன தொழில்நுட்பம் கிராமியக் கலை வடிவங்களை மறையச் செய்துள்ளது. இதனால், கிராமியக் கலைகளினால் பண்பட்ட மனிதன் புண்பட்டுக் கிடக்கிறான்.

சோகத்தில் வாடுகின்ற உள்ளங்களை இனிமைப்படுத்தி மகிழ்ச்சி எனும் வட்டத்திற்குள் கொண்டு வருவதே இசை. கிராமியப்பாடல்களுக்குள் தாலட்டுப் பாடல்கள், குழந்தைப் பாடல்கள், காதல் பாடல்கள் கொண்டாட்டப் பாடல்கள் ஒப்பாரிப் பாடல்கள் முதலியன அடங்கும். இவற்றுள் தாலட்டுப்பாடல்கள் பிரதானமானவையாகும். அதாவது குழந்தையை தொட்டிலில் போட்டு நித்திரையாக்கும் பொருட்டு தாயினால் தாலாட்டுப்பாடல் பாடப்படும். “தாய்மை உலகுக்கு வழங்கிய முதல் இலக்கியப்பரிசுதான் தாலாட்டு” என்று கூறியுள்ளார் தமிழண்ணல்.

நாட்டார் பாடல்களின் அமைப்பைக் கொண்ட தாலாட்டுப்பாடலை முதன்முதலில் தமிழில் பாடியவர் பெரியாழ்வாராவார். இவர் கண்ணனைக் குழந்தையாக உருவகித்து தாலப்பருவம் என்ற பெயரில் தாலாட்டுப் பாடல்களைப் பாடியுள்ளார்.

“மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப்பொன்னால் செய்த வண்ணச் சிறு தொட்டில்
......
வையம் அளந்தானே தாலேலோ”

என்ற திருப்பாசுரத்தில் கண்ணனைத் தாலாட்டுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

குழந்தையை உறங்க வைப்பதற்கும், உணவு ஊட்டுவதற்கும் தாலாட்டுப்பாடல்கள் தாய்மாரினாலும், மற்றவர்களினாலும், இசையுடனும், இனிமையுடனும் பாடப்படுகின்றன.

"குழந்தையை நித்திரையாக்கல், அமைதியாக்கல், பாலூட்டல், உடற்பயிற்சி, இசையுனர்வு, இறையருள் வேண்டல், தாயின் மகிழ்ச்சி வெளிப்பாடு, எதிர்கால இலட்சியம், பரம்பரைப் பெருமை கூறல், அருகில் இருப்போர்க்குத் தமது கருத்தை அறிவித்தல் போன்ற உபயோகங்களை உள்ளடக்கியதே தாலாட்டு" என்ற விரிவான விளக்கத்தை தனது "ஈழத்து நாட்டார் பாடல்கள்" என்ற நூலில் கலாநிதி இ.பாலசுந்தரம் குறிப்பிட்டுள்ளார்.

"ஆராரோ ஆராரோ
ஆரவரோ ஆரவரோ
ஆரடித்து நீயழுறாய்
கண்மணியே கண்ணுறங்காய்

கண்ணையடித்தா ரார்
கற்பகத்தைத் தொட்டாரார்
தொட்டாரைச் சொல்லியழுஇ தோள்
விலங்கு போட்டு வைப்போம்

அடித்தாரைச் சொல்லியழு
ஆக்கினைகள் பண்ணி வைப்போம்
பாட்டி அடித்தாளோ
பாலூட்டுங் கையாலே

அத்தை அடித்தாளோ
அமுதூட்டுங் கையாலே
மாமன் அடித்தானோ
மகிழ்ந்தெடுக்கும் கையாலே
அண்ணன் அடித்தானோ
அணைத்தெடுக்கும் கையாலே

என்ற தாலாட்டுப்பாடலை தாயானவள் இசைக்க, குழந்தை இனிமையாகத் தூங்கும். இத்தகைய தாலாட்டுப் பாடலுக்கேற்ப வளர்கின்ற குழந்தைகள் தாய் அன்பு, தாய் கட்டளை, அமைதி, ஒழுக்கம், கடவுள் பக்தி, தீங்கு செய்யாமை, அறம் முதலான நற்பண்புகளையே பெற்றிருக்கும். அதாவது குழந்தையில் இருந்தே இந்த இனிமையான இசையினை கேட்க கேட்க வளர்கின்ற அக்குழந்தைக்கு இனியவைகளே பிடிக்கும். ஆனால் தற்காலத்தில் இந்த தாலாட்டுப் பாடல்கள் அருகிப் போய்விட்டன. இதனால் இன்றைய சமூகம் பெரும்பாலான குழந்தைகள் இனியவைகளை விட்டு தீயவைகளை நாடிச்செல்கின்றனர். இதனால் சமூகத்தில் பல பிரச்சினைகள் எழுகின்றன. உதாரணமாக தந்தையர் தினத்தன்று வலைத்தளமொன்றில் கண்ட

காட்சி இது அங்கே தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தை அரைத்தூக்கத்தில் கண் விழித்து அழுகின்றது.

இதனைக் கண்ட தந்தையானவர் அக்குழந்தையை மீண்டும் தூங்க வைப்பதற்கு பல சிரமமான முயற்சிகள் எடுத்தும் அது பயனிக்கவில்லை. அக்குழந்தை முரட்டுத்தனமாக அடம்பிடித்து அழுது கொண்டே இருந்ததது. இதற்கு உண்மையான காரணம் இந்த கிராமியத் தாலாட்டுப் பாடல் அருகி வருகின்றமையே ஆகும். அதாவது அங்கே தந்தை தாலாட்டுப்பாடலை அறிந்திருக்கவில்லை. அத்துடன் அக்குழந்தையை ஆரம்பத்திலேயே தாலாட்டுப்பாடல் பாடித்தூங்க வைக்கவில்லை. கிராமப்புறங்களில் பாதி நித்திரையில் எழுந்த குழந்தையை தாலாட்டுப்பாடி மீண்டும் அமைதியாகத் தூங்க வைக்கலாம். இதனால் அக்குழந்தை சமூகத்தில் ஒழுக்கமுள்ள அல்லது ஒரு அமைதியான குழந்தையாகவே வளரும்.

ஆனால் பெரும்பாலான குழந்தைகள் தாலாட்டுப்பாடல் என்ற இனிமைச் சுரங்கத்திற்குள் வாழவில்லை. அக்குழந்தைகளிடம் அமைதி, அன்பு, ஒழுக்கம் முதலான நற்பண்புகள் எப்படி வளரும்? தாலாட்டுப்பாடல் மூலம் ஒரு குழந்தை நற்பண்புகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது உளவியலாளர்களின் கருத்து. இத்தகைய தாலாட்டுப்பாடல்களே இல்லாத சமூகத்தில் வளர்கின்ற குழந்தைகள்தான் இன்று வளர்ந்து சமூகத்தில் முரடர்களாகவும், அன்பற்றவர்களாகவும் மாறுகின்றனர்.

எனவே, தாலாட்டுப்பாடல் என்ற கிராமியக்கலை அருகி வருகின்றமையால் தாய், தந்தை மட்டுமல்லாது வளர்ந்து சமூகத்திற்கு சேவை செய்யக்கூடிய குழந்தைகள்கூட நல்ல பாதையை மறந்து தீய பாதையைத் தேடிக்கொள்கின்றனர். இதனால் இன்றைய சமூகம் பல சவால்களை எதிர்நோக்குகின்றது.

குழந்தை சற்று வளர்ந்ததும் தானாகவே நிமிர்ந்து இருக்கும். அவ்வாறு இருக்கும் குழந்தைக்குச் சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு பாடலைப் பாடும்போது குழந்தை சாய்ந்தாடிக் குதூகலிக்கும். அந்த ஆட்டத்தைப் பார்ப்பவர்கள் யாவரும் பரவசமடைவார்கள்.

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
தாமரைப்பூவே சாய்ந்தாடு
குத்து விளக்கே சாய்ந்தாடு
கோவிற் புறாவே சாய்ந்தாடு
பச்சைக்கிளியே சாய்ந்தாடு
பவளக்கொடியே சாய்ந்தாடு
சோலைக்குயிலே சாய்ந்தாடு
தோகை மயிலே சாய்ந்தாடு
கண்ணே மணியே சாய்ந்தாடு
கற்பகத் தருவே சாய்ந்தாடு
கண்ட தேனே சாய்ந்தாடு
கனியே பாலே சாய்ந்தாடு

என்ற சாய்ந்தாடம்மா பாடலைப் பாடிக் குழந்தையைச் சாய்ந்தாட வைப்பர். இவ்வாறு வளர்கின்ற குழந்தையானது மகிழ்ச்சியான குழந்தையாகவும், திடமான உடல், உள ஆரோக்கியம் உள்ள குழந்தையாகவும் வளரும்.

ஆனால் இன்றைய சமூகத்தில் இச்சாய்ந்தாடம்மா பாடல் பாடிக் குழந்தையை மகிழ்ச்சிப்படுத்துகின்ற நிலை அருகிவிட்டது. இதனால் இன்றைய சமூதாயத்தில் வளர்கின்ற பெரும்பாலான குழந்தைகள் முகமகிழ்ச்சி யற்றவர்களாகவும், அத்துடன் பலவீனமான உடல், உள ஆரோக்கியத்துடனும் வளர்கின்றனர். இவர்கள் வளர்ந்து சமூகத்திற்கு, நாட்டிற்கு தொண்டு செய்யும் போதும் சுறுசுறுப்பற்றவர்களாகவே செயற்படுகின்றனர்.

ஒரு குழந்தை பிறந்தவுடன் முதலில் அறிந்து கொள்வது தாயைத்தான். அதன்பின் அந்தத்தாய் பாடுகின்ற இப்பாடல்கள் மூலம் தான் தந்தை, பாட்டி, மாமன், மாமி முதலியோரை அடையாளம் காண்கிறது. ஆனால் இப்பாடல்களின் இன்றைய மறைவினால் அச்சமூகத்தில் வளர்கின்ற பிள்ளைகளுக்கு தங்களுடைய சொந்த உறவு முறைகளே தெரியாமல் இருக்கின்றது.

அடுத்து இறந்த ஒருவரின் அருமை, பெருமைகளைச் சொல்லிப்பாடுவதே ஒப்பாரிப் பாடலாகும். இப்பாடல்கள் துயரப்படுபவர்கள் தம்மை தேற்றிக் கொள்வதற்காகவும் துயரத்தில் பங்கு கொள்பவர் பிறரைத் தேற்றிக் கொள்வதற்காகவும் துயரத்தில் பங்கு கொள்வதற்காகவும் இறந்த வீடுகளில் பாடப்படுகினறன.

“முத்துப் பதித்த முகமோ
முதலிமார் மதித்த முகமோ
எங்க ராகவே அப்புவடா
தங்கம் பதித்த முகம்
தரணி மார் மதித்த முகம்
……ஓ…..ஓ…….”

ஆனால் தற்காலத்து இறந்த வீடுகளில் இந்த ஒப்பாரிப்பாடல்கள் பாடப்படுவதில்லை. காரணம் அவை வழக்கொழிந்து விட்டன. இதனால் எவ்வளவுதான் பெரிய மனிதர்கள் இறந்தாலும் அவரது அருமை,பெருமைகளைச் சொல்லியழ யாருமில்லை இதனால் இறந்தவர்களின் நற்செயல்களைப் பிறர் அறியாமல் போய்விடுகின்றனர். ஒப்பாரிப்பாடல்கள் துயரப்படுகின்றவர்களைத் தேற்ற வைக்கும். ஆனால் ஒப்பாரிப் பாடல்கள் பாடப்படுகின்றமை அருகிவிட்டதனால் இறந்த வீடுகளில் துயரப்படுபவர்கள் கூட தேறிக்கொள்ள முடியாதுள்ளது.

அடுத்து கிராமியக்கலை வடிவங்களுக்குள் சிறப்பிடம் பெறுவது கிராமிய விளையாட்டுக்களாகும். அதாவது கிராமப்புறங்களில் கிட்டியடிததல், கிளித்தட்டு, வட்டக்காவடி, முதலான விளையாட்டுக்களும் தமிழகத்து கிராமபுரங்களில் ஜல்லிக்கட்டு, சிலம்பாட்டம் முதவான வீர விளையாட்டுக்களும் வழக்கில் இருந்து வந்தது.

இக்கிராமப்புற விளையாட்டுக்களில் உடற்பயிற்சி, உளவலிமை, ஒற்றுமை, கூட்டுணர்வு, விட்டுகொடுக்கும் மனப்பாங்கு முதலானவை நிறைந்திருந்ததுடன் அவ்விளையாட்டுக்களை விளையாடும் கிராமப்புறத்து மக்கள் அத்தனை அம்சங்களையும் பெற்றுக் கொண்டனர்.

உதாரணமாக கிராமப்புரங்களில் சிறுபிள்ளைகள் கிட்டியடித்துவிளையாடி மகிழ்வர். கிட்டியடிக்கும் போது பாடிப்பாடிப் ஒடுவர் மூச்சுப் பிடித்த வண்ணம் ஒவ்வொரு பாட்டின் கடைசி சொல்லை மீண்டும் மீண்டும் பாடுவர். அப்படிப்பாடும் போது மூச்சு விடாமல் சொல்லிக்கொண்டு ஓட வேண்டும்.

''ஆலையிலே சோலையிலே
ஆலங்காடிச் சந்தையிலே
கிட்டிப்புள்ளும் பம்பரமும்
கிறுகியடிக்கப் பாலாறு பாலாறு.....''

என்பதே அந்த கிட்டி விளையாட்டுக்கான பாடல். இந்த விளையாட்டின் மூலமாக மூச்சுப்பயிற்சி, உடற்பயிற்சி, கிரகித்தல் இத்துடன் கூட்டாகசேர்ந்து விளையாடுவதினால் ஒற்றுமையுணர்வும் விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கும், கூட்டாகச் சேர்ந்து ஒரு வேலையினைச் செய்யும் திறனும் வளர்க்கப்படுகின்றன.

ஆனால் இன்று வளர்ந்து வருகின்ற இளம் சமுதாயத்திடம் இந்த கிராமிய விளையாட்டுக்கள் இல்லை. கிராமபுரங்களில் இந்த விளையாட்டுக்கள் இல்லாது போய்விட்ட காரணத்தினால் இன்றைய சமூகம் எநடதளவாரு செயற்பாட்டிலும் ஒற்றுமையாக கைகோர்க்க மறுக்கின்றது. அத்துடன் சமுகத்தில் இன்று வஞ்சகத்தன்மை, பொறாமை, விட்டுக்கொடுக்காத தன்மை, ஒற்றுமையின்மை முதலான தீய செயல்கள் மலிந்து கிடப்பதற்கு காரணம் இந்த விளையாட்டுககளின்; மறைவே ஆகும். அத்துடன் சமுகத்தில் உள்ளவர்கள் உடல் நலமற்றவர்களாகவும், உள்ளம் உறுதியற்றவர்களாகவும், எதையும் தாங்கும் சக்தியற்றவர்களாகவும், அடிக்கடி நோய்க்கு உள்ளாகுபவர்களாகவும் காணப்படுவதற்குக் காரணம் உடலுக்குப் பயிற்ச்சியளித்து உள்ளத்தை உறுதியடைய வைக்கின்ற இந்த விளையாட்டுக்கள் போன்ற கிராமியக்கலைகளின் மறைவே காரணமாகும்.

அடுத்து, கிராமப்புற விளையாட்டுக்களில் சிறுபிள்ளைகள் வீடு கட்டி விளையாடுவதும் வழக்கம். வீட்டிலே செங்கல் அடுப்புப் போட்டு சிறுபொங்கல் பொங்கி, கறி என்பன சமைப்பார்கள். அதாவது இந்த விளையாட்டின் மூலம் எதிர்காலத்து வாழ்க்கையை அறிந்தவர்களாகவும் அதனை நன்கு திட்டமிடுபவர்களாகவும் அவர்கள் விளங்குவர்.

ஆனால், தற்காலத்து பிள்ளைகளிடம் இந்த விளையாட்டுக்கள் மரபொழிந்து விட்டதன் காரணத்தால் தான் சமூகத்தில் அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகி திருமணம் முடித்துவிட்டு அந்த வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாதபடி பலர் தள்ளாடுகின்றனர்.

அடுத்து, கிராமியக்கலைகளில் அம்மக்களது கைவினைப் பொருட்களும் ஒன்றாகும். அதாவது கிராமப்புரங்களில் மக்கள் பனை ஓலை, பண், தென்னை ஓலை முதலியவற்றால்

இயற்கையான பாத்திரம், பாய், சில அலங்காரப்பொருட்கள் தங்களுடைய கைகளால் தயாரிப்பர். இதனைச்செய்து விற்பனை செய்து அந்தப்பணத்தை தங்களுடைய வாழ்வியல் செலவுகளுக்காகவும் செலவிடுவர். இதனால் அது தொழிலாகவும் கருதப்பட்டது.

ஆனால் இன்றைய சமூகததில் இந்த கைவினைப்பொருட்கள் தயாரிப்பது அரிதாகிவிட்டது. அதாவது பிளாஸ்டிக், இரும்பு, அலுமினியம் என்பவற்றால் ஆன பொருட்களையே மக்கள் பயன்படுத்த பழகியுள்ளதால் அவர்கள் மத்தியில் அந்த கிராமியக் கலை மறைந்துவிட்டது. அவர்கள் பயன்படுத்தும் அலுமினியம், இரும்பு, பிளாஸ்டிக் போன்றவற்றாலான பொருட்களினாலே புதிய புதிய நோய்கள் ஏற்படுகின்றன. அத்துடன் இத்தகைய பாவனையினால் தங்களுடைய பாரம்பரிய கைவினைப் பொருட்களை மறந்து விடுகின்றனர். இதனால் அதனைச் செய்து வியாபாரம் செய்யும் தொழிலும் பாதிப்படைகின்றது.

அடுத்து, கிராமியக்கலைகளுள் பிரதானமானது கிராமிய நடனமாகும். இது கிராமப்புறங்களில் கூத்து வடிவில் ஆடப்படுகின்றது. அதாவது புராண, இதிகாசகதைகளுக்கு ஏற்ப வேடம் புனைத்து ஊரின் நடுவில் மேடை அமைத்து கூத்து ஆடப்படும். இது விடியும் வரை இடம்பெறும். இக்கூத்தினை பல மக்களும் வந்து கண்டு களிப்பர்.

அவ்வாறு கூத்துக்கள் மூலம் அன்பு, கருணை, சகோதரபாசம், தீமை செய்யாமை, பிறர்மனை கவராமை, முதலான பல நறசெயல்கள் வெளிப்படுத்தப்படும். இதனால் அம்மக்கள் இந்த நற்கலாசார வட்டத்திற்குள்ளே இருப்பார்கள். இதனால் அவர்கள் வாழுகின்ற சமுதாயமும் நன்னெறி சமுதாயமாக இருக்கும்.

ஆனால் இன்றைய சமூகத்தில் இந்த நடனக் கூத்துக்கலை பெருமளவு மறைந்து விட்டது. இதனால் இன்றைய சமூகத்தில் வாழ்கின்றவர்கள் காட்டுமிராண்டிகளாகவும், பிறர்மனை கவர்கின்றவர்களாகவும், பாசமற்றவர்களாகவும் உள்ளனர். இதனால் இன்றைய சமுதாயமும் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதற்கெல்லாம் முதற்காரணம் அறத்தை வளர்க்கும் இந்த கூத்துக்கலை போன்ற பல கிராமியக்கலைகளின் மறைவேயாகும்.

அடுத்து, கிராமியக்கலைகளுள் மக்களது சடங்குகளும் அடங்கும். கிராமப்புறங்களில் ஒரு பெண் பிள்ளை பூப்படைந்து விட்டால் அங்கே மஞ்சள் குளிப்பு இடம்பெறும். இதனால் பகையானவர்கள் கூட தங்களது பகையை மறந்து உறவு பட்டு விடுவார்கள். அத்துடன் விஞ்ஞான ரீதியாக யோசித்தால் இந்த பூப்படைந்த வீடுகளில் மஞ்சள் குளிப்பானது ஒருவரை நோக்கியே அவர் நனையும் படி இடம்பெறுகின்றது. இதனால் அவரது உடலில் இருக்கும் கிருமிகள் கூட அழிந்து போய் உடலுக்கு ஒருகுளிர்ச்சி ஏற்படும்.

ஆனால் இன்றைய சமூகத்தில் மஞ்சள் குளிக்கும் விளையாட்டு முற்றாக ஒழிந்து விட்டது. இதனால் பெண் பூப்படைந்த இல்லம் கலகலப்பாக கூட இருக்காது. அத்துடன் இக்கலை மறைவினால் மேற்கூறிய பயன் அனைத்தையும் தற்கால சமூகம் இழந்து விடுகின்றது. அடுத்து கிராமப்புறங்களில் ஆலயச்சடங்கில் தெய்வமாடல் இடம்பெறும். தெய்வமாடுகின்ற தெய்வாதி மக்களுக்கு கட்டுச்சொல்லுவார். அதாவது அவர்களுக்கு

நடக்கவிருக்கும் நன்மை, தீமைகளை தெய்வாதி தெய்வமாடி உரைப்பார். இதனை பக்தர்கள் தெய்வவாக்காக நினைத்து அதற்கான பரிகாரங்களை தேடிக்கொள்ளுவர்.

ஆனால் இன்று சமுதாயத்தில் ஆலயங்கள் குடமுழுக்குச் செய்யப்பட்டு சமஸ்கிருதமயமாக்கப்படுகின்ற காரணத்தினால் இக்கலை மறைந்துள்ளது. இதனால் பக்தர்கள் தங்களுக்கு நடக்கவிருக்கும் நன்மை, தீமைகளைத் தெய்வத்திடம் நேரடியாக கேட்டு தெரிந்து கொள்ளாதவர்களாக்கப்பட்டுள்ளனர். அத்துடன் தெய்வம் ஆடுகின்ற பொழுது தெய்வாதி பக்தனுக்குக் கட்டுச் சொல்வதனால் தெய்வத்திற்கும், பக்தனுக்கும் ஒரு நேரடி தொடர்பும், உறவு முறையும் காணப்படும். ஆனால் இன்று இக்கலை மறைந்ததனால் பக்தர்கள் ஆலயங்களில் இறைவனை விக்கிரக வடிவிலே கண்டு வணங்கி விட்டு வருகின்றனர். இதனால் மக்களுக்கும், தெய்வத்திற்கும் உள்ள அந்த நேரடி தொடர்பு இல்லாமல் போகின்றது.

முடிவுரை

ஆகவே, தொகுத்து நோக்குமிடத்து சில வருடங்களுக்கு முன் வீடுகளில் ஒலித்துக்கொண்டிருந்த தாலாட்டுப்பாடல்களும், இளம்பெண்களின் கும்மிப்பாடல்களும், ஊஞ்சல் பாடல்களும், பாட்டிமாரின் விடுகதைகளும், பழமொழிகளும், நாட்டுப்புற மருத்துவ முறைகளும், சிறுவர்களின் விளையாட்டுப்பாடல்களும், கேட்கின்றவர்களின் சிந்தனைகளையும், சொல்லாட்சியையும் வளர்ப்பதில் எவ்வளவு தூரம் பங்கெடுத்துள்ளது என்பதை இப்பொழுது நினைத்துப் பார்த்தால் வியப்பாகத்தான் உள்ளது.

இத்தகைய கிராமியக்கலை வடிவங்களை இன்றைய சமூகம் மறந்து விட்டதனால்தான் சமூகத்தில் அன்பு, அமைதி, ஒழுக்கம், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, சமாதானம் முதலியவை எட்டப்படமுடியாத இலக்குகளாகி விட்டதோடு சமுதாயமும் இன்று சீரழிந்து காணப்படுகின்றது.

ஆகவே, மறைந்த கிராமியக் கலைவடிவங்களுக்குப் புத்துயிர் அளிப்பதன் மூலமே சமுதாயத்தில் எழுகின்ற சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

உசாத்துணை நூல்கள்

- அனந்தராஜ் ந., 2002, "வடபுல நாட்டார் வழக்கு", நந்தி பதிப்பகம், வல்வெட்டித்துறை.
- இளம்பரிதி, 2003, முத்தமிழ் விழாச் சிறப்பு மலர், கலாச்சாரப் பேரவை, பிரதேச செயலகம், கோறளைப்பற்று, வாழைச்சேனை.
- கருணாநிதி மூ., 2001 "நாட்டுப்புறச் சிறுவர் விளையாட்டுக்கள்", தி பார்க்கர் - சென்னை.
- சிவத்தம்பி கா., (ஆ.வி.இ.), தமிழில் நாட்டார் பற்றிய கட்டுரை (பண்பாட்டியல் சஞ்சிகை)

- சுகந்தி சுப்பிரமணியம்., 2006, "மட்டக்களப்பு மாவட்டத்துக் கிராமிய வழிபாட்டுச்சடங்குகளும் அவை தொடர்பான பாடல்களும்", குமரன் புத்தக இல்லம்.
- மௌனகுரு சி., 1998, "மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்", விபுலம் வெளி
- ..., 1993, நாட்டார் வழக்காற்றியல் கட்டுரைகள் இந்து சமயப் ப திணைக்களம்.

நூல் மதிப்பீடு

மதிப்பிடப்பெற்றது

தமிழனின் தத்துவம் திருக்குறள் அறம் (பொருளும் விளக்கமும்) பரிமேலழகர் இங்கே திருத்தப்படுகிறார்

Unspecific: The philosophy of Tamil is the Thirukkural Charity (Meaning and explanation) Parimelazhakar is edited here

முனைவர் பா.கவிதா

2அ, கோமகன் இல்லம், குட்டைத்தயிர்ப பாளையம்

சித்தோடு, ஈரோடு. ilayavantamil@gmail.com



Abstract: *The philosophy of Tamil is the Thirukkural Charity (Meaning and explanation) Paramalakar is edited here the text editor book written by Visweswaran. He disapproving the concept of text editor parimelazhakar. Moreover, reputedly illustrated the present concept.*

Keywords: *Thirukkural*, *Unspecific*, *philosophy*, தமிழனின் தத்துவம், திருக்குறள், அறம், பொருளும் விளக்கமும், பரிமேலழகர், திருத்தப்படுகிறார்

உரைநூல் : தமிழனின் தத்துவம் திருக்குறள் அறம் (பொருளும் விளக்கமும்) பரிமேலழகர் இங்கே திருத்தப்படுகிறார்
ஆசிரியர் : விஸ்வேஸ்வரன்,
பதிப்பாண்டு : 2016 (முதல் பதிப்பு)
வெளியீடு : Notion Press, Old No.38, New No.6, McNichols Road, Chetpet, Chennai - 600 031
பக்கங்கள் : xiii + 303
விலை: உருபாய் 350.

***

"எம்மதமும் இவ்வினமும் என்னாலும்
சம்மதமும் என்று ஏற்கும் தமிழ் வேதம்"

எனும் சுத்தானந்தரின் வாக்கிற்கிணங்க மதம், மொழி, இனம் கடந்த ஈரடி இலக்கியம் திருக்குறள்.

இந்நூல் குறிப்பிட்ட ஒரு மதத்தினர்க்கோ, ஓர் இனத்தினர்க்கோ, ஒரு நாட்டினர்க்கோ, ஒரு மொழியினர்க்கோ என்று செய்யப்படவில்லை. மனித சமூகம் முழுவதற்கும் உலக மக்கள் எல்லோருக்கும் பொதுவாகச் செய்யப்பட்டதாகும். இதனாலேயே இன்று திருக்குறள் உலகப்பொதுமறை என்று கொண்டாடும்படிச் சிறந்து விளங்குகின்றது.

திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் என்னும் அமுதசுரபியை நமது முன்னோர்கள் பல்லாயிரம் ஆண்டுகளாகப் போற்றிப் போற்றிப் பாதுகாத்து வந்துள்ளனர். ஓலைச்சுவடியிலிருந்து காகிதப் பிரதிக்கு ஏற்றம் பெற்று இன்று கணினியில் உலா வருகிறது. இக்கணினியின் உதவியால் பல பதிப்புகள் வெளிவந்து அயல்நாட்டினரையும் கவர்ந்து ஈடு இணையில்லா உலகப்பொதுமறையாக உலாவந்து கொண்டிருக்கிறது. இந்நூல் உலகில் தமிழையும் தமிழரையும் தலைநிமிர வைக்கிறது. முதன்முதலில் 1812 இல் மூலம் மட்டும் அச்சிடப்பட்டு வெளியானது. பின்னர் 1838 இல் திருத்தணிகை சரவணப்பெருமாள் ஐயர் பரிமேலழகரின் உரையுடன் பதம், கருத்து, விசேட உரையுடன் வெளியிட்டுள்ளார். இன்று 250க்கும் மேற்பட்ட பதிப்புகள் வெளிவந்துள்ளன.

தமிழரின் தனிக்கருவூலமான திருக்குறளையும் அதன் உரைகளையும் ஆராய்தல் வேண்டும். இந்நூலுக்கு உரை எழுதிய பண்டைய ஆசிரியர்கள் பதின்மர். இடைக்காலத்தில் கருத்து மாற்றங்களுடன் விளக்கவுரை எழுதியவர்கள் சிலர். பண்டைய பலருரைகளைத் தொகுத்து வெளியிடும் முயற்சியும் அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்குச் சான்றாகத் திருக்குறள் உரைவளம், திருக்குறள் உரைக்களஞ்சியம், திருக்குறள் உரைக்கொத்து ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அழிவற்ற அரிய அமுதசுரபியான திருக்குறளுக்கு இன்றுவரை 150-க்கும் மேற்பட்ட உரைகள் எழுதப்பட்டுள்ளன.

திருக்குறள் என்று கூறிய அளவிலேயே பரிமேலழகரின் உரையும் நம் எண்ணத்தில் பளிச்சிடக் காண்கிறோம். இத்தகைய ஈடும் எடுப்பும் அற்ற உரையை இயற்றியுள்ள உரைகளின் இளவரசர் என்று போற்றப்படுகின்ற பரிமேலழகர் இங்கே திருத்தப்படுகின்றார் என்னும் பொருண்மையில் தமிழனின் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு "திருக்குறள் அறம்" என்னும் நூலை இயற்றி அதற்குத் தமிழ்ச் சமூகம் ஏற்றுக் கொள்ளக்கூடிய புதுமையான விளக்கங்களையும் அறம் சார்ந்த பதிவுகளையும் வகுத்தளித்துள்ள கணிதப் பேராசிரியர் அரி.வே.விஸ்வேஸ்வரன் அவர்களின் புதுமையான முயற்சி அனைத்துத் தமிழ்ச் சமூகத்தினராலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்பதற்கிணங்க பழைமைகளுக்குப் பழக்கப்பட்ட நாம் புதியனவற்றை வரவேற்கும் பக்குவம் பெற்றிட வேண்டும். அவ்வகையில் பரிமேலழகரால் வலிந்து மேற்சொல்லப்பட்ட ஆரிய வேதக் கருத்துக்களை மறுத்து அதனைத் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்ற கருத்துக்களாகத் துணிந்து மாற்றியிருக்கிறார் நூலின் ஆசிரியர்.

பரிமேலழகரின் வடமொழிப் புலமை திருக்குறள் உரையில் பலவிடங்களில் பளிச்சிடக் காண்கிறோம். இதனை ஏற்காதவர்கள் சிலர் அவர் ஆரியக் கொள்கைகளைத் தமிழ் நூலின் உரையில் வரிசை வரிசையாக அடுக்கித் திணித்துள்ளார் என்றும், பரிமேலழகர் வள்ளுவர் உள்ளதை நாம் அறிந்துகொள்ள இயலாத வண்ணம் சில இடங்களில் தாம் அறிந்த கருத்துக்களை வலியக் கொண்டுவந்து புகுத்திக் குழப்பியிருக்கிறார் என்றும் குற்றம் கூறுவர். இதனை, ''நூலாசிரியரின் கருத்தை வெளிப்படுத்துவதே உரையின் ஒழுக்கம். தன் கருத்து எதுவாக இருந்தாலும் இன்னொருவர் எழுதிய நூலில் அதனை ஏற்றிக் கூறலாகாது. அப்படிச் செய்வது உரைவழுவாகும். ஒரு நூலின் கருத்தையோ, பாட்டின் பொருளையோ, காண்பதற்குப் பல அறிவுக் கூறுகள் வேண்டும். இது இன்ன காலத்துத் தோன்றிய நூல் என்ற கால அறிவும், இக்காலத்து இச்சொல்லுக்கு இப்பொருள் என்ற சொல்லறிவும், இன்ன காலத்து இருந்த பழக்கவழக்கங்கள் இவை என்ற சமுதாய அறிவும், இத்தொடர் ஓடிக்கிடக்கும் முறை இது என்ற நடையறிவும், நாட்டின் வரலாற்றறிவும் இன்ன பிறவும் இருந்தால்தான் உரையெழுதும்போது நினைவுக்கு வந்தால்தான் பொருளை முரணின்றிக் காணமுடியும் என்பார் வ.சுப.மாணிக்கம்.

பரிமேலழகர் உரை எழுதிய காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியாகும். அதாவது பிற்காலச் சோழவேந்தர்களின் ஆட்சிக் காலம். வடமொழித் தாக்கம் ஏற்பட்டுவிட்ட காலம். இத்தாக்கம் பரிமேலழகரையும் உந்தித் தள்ளியது. அதனால் அவர் வடமொழியில் உள்ள இலக்கண, இலக்கிய இயல்புகள் ஆகியவற்றைத் திருக்குறள் உரையில் வாய்ப்பு நேரும்போதெல்லாம் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். இதற்குக் கடவுள் வாழ்த்தின் முதற் குறளே சான்று. ''அகர முதல எழுத்தெல்லாம்'' என்னும் முதற்குறளுக்கு உரை வகுக்கும்போது, பரிமேலழகர் தம்முடைய வடமொழிப் புலமையை உணர்த்துவதோடு நேராகவே அதனைச் சுட்டிக்சுட்டிக்காட்டுகின்றார். தமிழெழுத்துக்கேயன்றி வடவெழுத்திற்கும் முதலாதல் நோக்கி எழுத்தெல்லாம் என்றார். ஆதிபகவன் என்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூல் முடிபு என்கிறார். இதனை மறுத்து ஆசிரியர் விஸ்வேஸ்வரன் அவர்கள்.

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'' **(குறள்.1)**

எழுத்தெல்லாம் அகர முதல (அதுபோல்) உலகு ஆதி பகவன் முதற்றே என்றும் ''அ'' என்பது எழுத்துக்களுக்கெல்லாம் முதல், அதுபோல் உலகுக்கு முதலான பகலன், சூரியன் ஆகும் என்கிறார். மேலும் தமிழர் சூரியனை வழிபட்டனர். இதற்குத் தைப்பொங்கல் திருநாள் உதாரணமாகும் என்று நடைமுறையில் உள்ள பழக்கவழக்கத்தை எடுத்துக்காட்டுகிறார். இதனோடு மட்டுமல்லாமல் அதனை வலுப்படுத்த ஓலைச்சுவடியில் ல, வ இரண்டும் ஒன்றுபோல் தெரியும் என்றும்

''பறவை பாட்டு அடங்கினவே
பகல் செய்வான் மறைந்தனனே'' **(சிலம்பு.கானல்:42,236)**

''பகலோனு மெச்சத் திமையோரை'' **(தேவா.574,4)**

என்றும் இலக்கியச் சான்றுகளைக் காட்டிப் பகலன் என்பதே சரியானது என நிரூபித்துள்ளார்.

'தென்புலத்தார்' (குறள்.43) என்னும் குறளுக்கு,

"தன்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" (குறள்.43)

தன்புலத்தார் - இரத்த சம்பந்தமான உறவுகள்
தெய்வம் - இறந்த முன்னோர்
விருந்து - விருந்தினர் (நண்பர், தொழில் அடிப்படையில் பழகியோர் போன்றோர்)
ஒக்கல் - திருமண அடிப்படையில் ஏற்படும் உறவுகள்
தான் - தான்

என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை - என்றவாறு 5 வகையினரை உபசரித்தல் இல்லறவாழ்வின் பொருளாகும்.

திருமண அடிப்படையில் ஏற்படும் உறவுகள், சம்பந்தக்காரர் (சமபந்தம்) என்பது ஒக்கல், ஒத்தவர், சமமானவர் என்று ஆயிற்று. இவ்வாறு இக்குறளுக்குப் புதுமையான விளக்கமளித்திருப்பது ஆசிரியரின் நுண்மையான அறிவைப் புலப்படுத்துகிறது.

திருக்குறளின் கருத்துக்களை எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் ஏற்ற இடங்களில் பழமொழிகளைப் பயன்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

எடுத்துக்காட்டாக,

"புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு" (குறள்.79)

எனும் குறளுக்கு "ஆளைப் பார்த்து மயங்காதே ஊதுகாமாலை" என்றும் "ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம், உள்ளே இருக்குதாம் ஈரும் பேனும் என்றும் விளக்கியுள்ளார்.

"செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்" (குறள்.123)

எனும் குறளுக்கு "அகலக் கால் வைக்காதே" என்பதனையும்,

"வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின்" (குறள்.272)

என்பதற்குப் "பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்" எனும் பழமொழிகளைச் சுட்டிக்காட்டியிருப்பது ஆசிரியரின் ஒப்பீட்டுத் திறனை வெளிக்காட்டுகிறது.

இந்நூல் ஆசிரியர் பல இடங்களில் வேறு பார்வை எனும் நோக்கில் தன்னுடைய கருத்துக்களை மிக அழகாக விளக்கியுள்ளார். சான்றாக (பக்.31,36,48) போன்ற இடங்களில் தன்னுடைய தமிழ்ச் சமூகத்திற்கு ஒப்பான வாதங்களை முன்வைத்துக் கருத்துக்களை விளக்கும் இடங்கள் மிக அருமை.

ஆரிய வேதக் கருத்துக்களை மறுத்துக்கூறி பரிமேலழகரோடு போட்டி போட்டுத் தமிழ் மரபுகளுக்கு உட்பட்டுத் தன்னுடைய கருத்துக்களை விவாதித்து அதில் வெற்றியும் கண்டுள்ளார். சான்றாக சில இடங்கள் (பக்.8,26,92-93). இவ்விடங்களில் அவர் தகுந்த இலக்கியச் சான்றுகளைக் கொண்டு ஆரிய கருத்துக்களை மறுத்துக் கூறியுள்ளார்.

இறுதியாக, ஆசிரியரின் பன்னூல் புலமை நேர்த்தியான ஆங்கில அறிவு, தமிழ் அகராதிகளைக் கையாளுதல், ஒரு குறளுக்கு உரை எழுதும்போது அதற்கு இணையான பிறிதொரு குறளை ஏற்ற இடத்தில் கையாளுதல், பிற இலக்கிய வரிகளை மேற்கோள் காட்டுதல், பகவத் கீதை, மநுதர்மம் போன்ற நூல்களின் வழியாக அறக்கருத்துக்களைக் கூறுதல் போன்றவை ஆசிரியரின் தனித்தன்மைகளாக அமைகின்றன. ஆசிரியரின் தமிழ்ப்பற்றும், தமிழ்ப் பண்பாட்டோடு கூடிய புதுமையான உரையும் இன்றைய தமிழ்ச் சமுதாயத்தினரால் வரவேற்கக்கூடிய ஒன்றாகும். அவ்வகையில் இந்நூல் புதிய முயற்சியாக மட்டும் அமையாமல் ஆர்வலர்களுக்கும் புதிய கருத்துக்களைச் சிந்திக்கத் தூண்டுவதாக அமைந்துள்ளமை பாராட்டத்தக்கது. திருக்குறள் உரைக்குப் பரிமேலழகரையே பார்த்துப் பழகிய நாம் அவரை மறுத்து எழுதி உரையில் புதுமை படைத்த விஸ்வேஸ்வரன் அவர்கள் பொருட்பால், இன்பத்துப்பால் ஆகியவற்றிற்கும் உரையினை எழுதி, ஆர்வலர்களுக்குப் புதுமை விருந்து அளிப்பார் என்று எதிர்பார்ப்போமாக!